**பரீட்சையை சிறப்பாக எதிர்கொள்ளுங்கள் மாணவ மணிகளே!**
இன்று நடைபெறும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றும் மாணவமணிகள் மிகத் திறமையுடன் பரீட்சையை எதிர்கொண்டு சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதற்கு 'உதயன்' தனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறான்.

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 30/= பக்கங்கள்: 56 | சுடர் 31 | கதிர் 269 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஆவணி 05, ஞாயிற்றுக்கிழமை 21.08.2016

## வவுனியாவில் குண்டு மீட்பு



வவுனியா, ஓக. 21
வவுனியா மாவட்டச் செயலக வளாகத்திலிருந்து நேற்றுப் பிற்பகல் 3.40 மணியளவில் குண்டு ஒன்றை மீட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
வவுனியா மாவட்டச் செயலகத்தில் புதிதாக நிர்மாணிக்கப்படும் கட்டட நிர்மாணப் பணியில் ஈடுபட்டிருந்த பணியாளர்கள் வெடிக்காத நிலையிலிருந்த குண்டு ஒன்றை >> 52ஆம் பக்கம்

# ஐ.நாவுடன் மோதினால் அரசுக்கு ஆபத்து



## மகிந்தவுக்கும் அதுவே நடந்தது என்று எச்சரிக்கின்றார் சம்பந்தன்

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 21
ஐநா.வுடனும் பன்னாட்டுச் சமூகத்துடனும் மோதியதால்தான் மகிந்த அரசு புறந்தள்ளப்பட்டது. தற்போதைய அரசு இதனை நினைவில் வைத்துக்கொண்டு, ஐ.நா.வுடனும் - பன்னாட்டுச் சமூகத்துடனும் மோதுவதை நிறுத்தவேண்டும். இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.
"இலங்கையின் சுயாதீனம், தேசிய பாதுகாப்பைப் பலப்படுத்தி ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானத்திலிருந்து நாட்டை விடுவிப்போம். பன்னாட்டுச் சமூகத்துக்கு ஒருபோதுமே அடிபணியோம்' என்று ஜனாதிபதி >> 52ஆம் பக்கம்

## முதலமைச்சர் நிதியச் சட்டம் மீண்டும் ஆளுநருக்கு

யாழ்ப்பாணம், ஓக. 21
இரண்டாவது தடவையாகவும் நிறைவேற்றப்பட்ட முதலமைச்சர் நிதிய நியதிச் சட்டம் ஆளுநரின் அங்கீகாரத்துக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
வடக்கு மாகாண சபையின், முதலமைச்சர் நிதிய நியதிச் சட்டம் மீது ஜூன் மாதம் 14 ஆம் திகதி சபையில் விவாதம் நடைபெற்றது. இதன் பின்னர் இரண்டு மாதங்கள் கடந்துள்ள நிலையிலேயே ஆளுநரின் அங்கீகாரத்துக்கு அது அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
முன்னைய ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறிக்கு 2014 ஆம் ஆண்டு வடக்கு மாகாண முதலமைச்சர் நிதிய நியதிச் சட்டம் அனுப்பி வைக்கப்பட்டது. அதற்கு அவர் அங்கீகாரம் வழங்க வில்லை.
தொடர்ந்து வந்த ஆளுநர் பளிகக்காரவும் அதற்கு அங்கீகாரம் வழங்கவில்லை.
இந்த நிலையில், திருத்தப்பட்ட புதிய முதலமைச்சர் நிதிய நியதிச் சட்டம் சபையில் சமர்ப்பிக்கப்பட்டு, ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
(கு-5)


# வடக்கு முதல்வரின் முட்டாள்தனம்

## சாடுகிறார் அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க

கொழும்பு, ஓக. 21
வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனின் நடவடிக்கைகள் முட்டாள்தனமானவை என்று பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.
முதலமைச்சர் விக்னேஸ்வரனின் தேவைகளுக்கு அமையக் கொழும்பு அரசு ஒருபோதும் செயற்படாது என்றும் அவர் கூறியுள்ளார்.
இரணைமடுவில் புத்தர் சிலை அமைப்பதற்கு எதிர்ப்பை வெளியிட்டு வடக்கு மாகாண சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாகத் தெரிவித்து, கொழும்பு ஊடகம் ஒன்று வினவியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். >> 52ஆம் பக்கம்

# அதிகாலை சிக்கியது 130 கிலோ கஞ்சா

## 2 1/2 கோடி ரூபா பெறுமதியானது வடமராட்சி கிழக்கில் 5 பேர் கைது



யாழ்ப்பாணம், ஓக. 21
வடமராட்சி கிழக்கில் இரு வேறு கடத்தல் நடவடிக்கைகளின்போது இரண்டரைக் கோடி ரூபா பெறுமதியான 130 கிலோ கிராம் நிறையுடைய கஞ்சாப் பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. அவற்றைக் கடத்திய குற்றச்சாட்டில் 5 பேரைக் கைது >> 52ஆம் பக்கம்

## ஊசி விவகாரம்:

# போராளிகளைச் சோதிக்கும் திட்டத்தில் மாற்றம்

யாழ்ப்பாணம், ஓக. 21
புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகளுக்கான மருத்துவப் பரிசோதனை நடவடிக்கையில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சு மாற்றம் மேற்கொண்டுள்ளது. வடக்கின் ஒவ்வொரு மாவட்டங்களிலும் எழுந்தமானமாக 50 பேர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ள முன்னர் தீர்மானிக்கப்பட்டது. தற்போது அதனை விடுத்து அனைத்துப் போராளிகளையும் மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளவும், இதனை 5 வருடங்களுக்கு தொடர்ந்து முன்னெடுக்கவும் வடக்கு மாகாண சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது. >> 52ஆம் பக்கம்

முச்சந்தி முரளி



கிக்கியதே இவ்வளவெண்டா சிக்காதது எவ்வளவு இருக்கும்...

# மக்களின் காணியை விடுவிக்க பொலிஸார் இணக்கம்

யாழ்ப்பாணம், ஓக. 21
வலி.வடக்கில் மக்கள் பாவனைக்கு விடுவிக்கப்பட்டு, பொலிஸாரால் மீளக் கைப்பற்றப்பட்ட காணிகளை விடுவித்து வெளியேறுவதற்குத் தயார் என்று பொலிஸார், மாவட்டச் செயலகத்துக்கு அறிவித்துள்ளதாகத் தெரியவருகின்றது.
பொலிஸாருக்கு காங்கேசன்துறை பிரதேச சபைக் கட்டடத்துக்கு அருகில் காணி வழங்குவதற்கு மாவட்டச் செயலகம் இணங்கியுள்ளது. இதனையடுத்தே பொலிஸார், மக்களின் காணிகளை விடுவித்து வெளியேற இணக்கம் தெரிவித்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.
வலி. வடக்கில் 200 ஏக்கர் காணி கடந்த ஜூன் மாதம் 25ஆம் திகதி பாதுகாப்பு அமைச்சின் செயலர் >> 52ஆம் பக்கம்

சணச அபிவிருத்தி வங்கியின் 19வது ஆண்டு விழாவை முன்னிட்டு

ஆறு மாத நிலையான வைப்புக்களுக்கு விஷேட வட்டி

12%

(வ.தே.வ. 12.36%)

ஏனைய வைப்பக்களுக்கும் கவர்ச்சிகரமான வட்டி

* நிபந்தனைகளுக்குட்பட்டது.

011 5 411 411

SDBL சணச அபிவிருத்தி வங்கி பிஎல்சி

Fitch Rating BB+ (stable), Reg. No: PB62PQ

# மன்னாரில் கால்நடைகளுக்கு நடமாடும் மருத்துவ சேவை

## வடக்கு அமைச்சு முதன்முறையாக நடத்தியது

யாழ்ப்பாணம், ஓக. 21

வடக்கு மாகாண சபை இயங்க ஆரம்பித்து 3 ஆண்டுகள் நிறைவடையவுள்ள நிலையில், வடக்கு மாகாண கால்நடை அமைச்சு முதலாவது நடமாடும் மருத்துவ சேவையை மன்னாரில் நேற்று நடத்தியது.

இது தொடர்பில் வடக்கு மாகாண விவசாய, கால்நடை அமைச்சினால் ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் 34 கால்நடை மருத்துவ நிலையங்கள் இயங்கி வருகின்றன. இந்த மருத்துவ நிலையங்களுக்கு நோயுற்ற கால்நடைகளை எடுத்து வருவதில் கால்நடை வளர்ப்பாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். கால்நடை வைத்திய சேவையை மக்களை நோக்கிக் கொண்டு செல்லும் நோக்கோடு நடமாடும் மருத்துவ சேவையை மாதந்தோறும் நடத்துவது என்று வடக்கு கால்நடை அமைச்சு தீர்மானித்துள்ளது. இதன் அடிப்படையிலேயே, முதலாவது கால்நடை மருத்துவ நடமாடும் சேவை மன்னாரில் இடம்பெற்றது.

கால்நடை மருத்துவ முகாமின் ஊடாகசெயற்கைமுறைச்சினைப் படுத்தல், சினைப் பரிசோதனை, விசர்நாய்த் தடுப்பூசி ஏற்றல், நாய்களுக்குக் கருத்தடை செய்தல், மாடுகளுக்குக் காது இலக்கம் இடல், நோயுற்ற கால்நடைகளுக்குச் சிகிச்சை வழங்குதல் போன்ற பல்வேறு சேவைகள் வழங்கப்பட்டன.

மருத்துவமுகாம் நடைபெற்ற மோட்டைக்கடை பாடசாலைக்கு மன்னார், நானாட்டான், முசலி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான கால்நடை வளர்ப்பாளர்கள் வருகை தந்திருந்தனர். இவர்களது தேவைகளின் அடிப்படையில் கால்நடை வைத்தியக் குழு தேவையான மருத்துவ ஆலோசனைகளையும், மருந்துப் பொருள்களையும் வழங்கிவைத்ததோடு, கால்நடை வளர்ப்பாளர்களின் வீடுகளுக்கும் சென்று சிகிச்சைகளையும் மேற்கொண்டது.

கால்நடை வளர்ப்பாளர்களுக்கு பசுக்களுக்கு உணவாகப் பயன்படுத்தும் கனியுப்புக் கலவை மற்றும் கால்நடைகளுக்குரிய முதலுதவிச் சிகிச்சைப் பொருள்களும் இலவசமாக வழங்கி வைக்கப்பட்டன. வடக்கு கால்நடை அமைச்சர் பொ.ஐங்கரநேசன், போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன், மாகாண சபை உறுப்பினர் ஞா.குணசீலன் ஆகியோர் இவற்றை வழங்கி வைத்தனர்.

இரண்டாவது நடமாடும் கால்நடை மருத்துவசேவை செப்ரெம்பர் மாதம் முல்லைத்தீவு மாவட்டத்தில் உடையார்கட்டுப் பிரதேசத்தில் இடம்பெறும் என அதில் கூறப்பட்டுள்ளது. (வ-5)

# இரகசியங்களை மறைக்கும் மைத்திரியும் குற்றவாளியே

## பந்துல எம்.பி. கூறுகிறார்

இரகசியங்களை வெளியிடாமல் மறைப்பதன் ஊடாக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் ஒரு குற்றவாளியே.

இவ்வாறு தெரிவித்தார் மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன.

மாத்தறையில் நாடாளுமன்ற உறுப்பினர் காஞ்சன விஜேசேகரவின் இல்லத்தில் நேற்று இடம்பெற்ற கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மாத்தறையில் இடம்பெற்ற நல்லாட்சி அரசின் முதலாவது ஆண்டு நிறைவு நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி மைத்திரிபால, புதிய கட்சியை ஆரம்பித்தால் அவர்கள் தொடர்பில் இரகசியங்களை வெளியிட வேண்டி வரும் என்று குறிப்பிட்டார். மறைமுகமாக மகிந்த அணியினரை, ஜனாதிபதி மைத்திரிபால சாடினார். இவ்வாறானதொரு நிலையிலேயே பந்துல இவ்வாறு தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் இரகசியங்களை வெளியிடப் போவதாக ஜனாதிபதி மைத்திரிபால தெரிவித்தமை நகைப்புக்கிடமானது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளராக இருந்த அடிப்படையில் அவரையும் இதன் மூலம் குற்றவாளியாகக் கருதலாம். அத்துடன் இரகசியங்களை தெரிந்திருந்தும் அதனை அவர் வெளிப்படுத்த மறுப்பதன் ஊடாக அவரைக் குற்றவாளியாக இனங்காண முடியும் என்று பந்துல குறிப்பிட்டார். (வ-5)

# அரசமைப்புச் சபை கலந்துரையாடல்: விக்கிக்கும் அழைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 21

நாடாளுமன்றில் நாளை இடம்பெறும் விசேட அரசமைப்புச் சபைக் கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்கினேஸ்வரனுக்கும் அழைப்பு விடப்பட்டுள்ளது.

அரசமைப்புச் சபை செயலகத்தின் செயலாளர் எழுத்து மூலம் இந்த அழைப்பை விடுத்துள்ளார். இந்தக் கலந்துரையாடல் நாளை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது. (த-101)

# புலமைப் பரிசில் பரீட்சைக்கு வடக்கில் 19, 791 மாணவர்கள்

யாழ்ப்பாணம், ஓக. 21

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை இன்று நடைபெறவுள்ளது. வடக்கிலிருந்து 19 ஆயிரத்து 791 மாணவர்கள் புலைமப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர். அவர்களுக்கு வாழ்த்துக்களைக் கூறுவதாக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தெரிவித்தார்.


குழந்தைப் பருவத்தில் பசுமரத்தாணி போன்று கற்கின்ற கல்வியிலே முதன் முதலாகப் பொதுப் பரீட்சைக்கு ஆயத்தமாகி உங்கள் திறமைகளை வெளிப்படுத்தத் தயாராகியுள்ளீர்கள். உங்களின் இலட்சியத்தில் உறுதியுடன் நடைபயின்று பரீட்சையில் சிறப்பான சித்திகளைப் பெற்று உங்களுடைய பெற்றோருக்கும், கல்வியறிவு புகட்டிய ஆசிரியர்களுக்கும் பாடசாலைகளுக்கும் மற்றும் மாகாணத்துக்கும் பெருமை சேர்த்துக் கல்வி உலகில் புகழ் பூத்து நிற்க வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, புலமைப் பரிசில் பரீட்சை நடைபெறும் வளாகத்துக்குள் பெற்றோர் எக்காரணம் கொண்டும் செல்ல முடியாது. பரீட்சைப் பணிக் குழுவினர் மற்றும் பரீட்சார்த்திகள் தவிர்ந்த வேறு எவரும் பரீட்சை நடைபெறும் நேரத்தில் உட்செல்வது தடை செய்யப்பட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பெற்றோர்கள், ஆசிரியர்கள் இதனைக் கவனத்தில் கொண்டு செயற்பட வேண்டும் என்று மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் தெரிவித்தார். (த-ரி)

# ஈழத்துப் படைப்பாளிகள் இன்று பல வழிகளில் சிதறியுள்ளனர்

## இணுவையூர் திருச்செந்திநாதன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஓக. 21

நீண்ட போராட்ட வரலாற்றுக் காலத்தில் கொள்கைக்காக ஓர் வழியில் நின்ற படைப்பாளிகள் இன்று தேவைக்காக பல வழிகளில் சிதறியுள்ளனர் என மூத்த எழுத்தாளரான இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் தெரிவித்தார்.

மூத்த எழுத்தாளர் நா.யோகேந்திரநாதனின் 'நீந்திக் கடந்த நெருப்பாறு' நூல் அறிமுக விழா, நேற்றுமாலை நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் தலைமையுரை ஆற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் தெரிவித்ததாவது:

நீண்ட போராட்ட வரலாற்றுக் காலத்தில் கொள்கைக்காக ஓர் வழியில் நின்ற படைப்பாளிகள் இன்று தேவைக்காக பல வழிகளில் சிதறியுள்ளனர். அந்த வகையில் சக படைப்பாளிகள் மீதும் அவதூறல்கள் தொடர்கின்றன. படைப்பாளிகளான எம்மிடத்தில் ஒற்றுமையின்மையே இதற்கான காரணம்.

தற்போது இலக்கியம், அரசியல் என்பன தன்பாட்டில் இயங்கு பவையாகவும், கொள்கை -கோட்பாடுகள் என்பது சந்தர்ப்பவாதமாகவும் ஆகிவிட்டன. இவை அனைத்திற்கும் அடி அத்திபாரமாக இருப்பவர்கள் இங்குள்ள மக்களே. இலக்கியம், அரசியல், கொள்கை, கோட்பாடு என்று எத்தனை விடயங்களைப் பட்டியல் போட்டாலும் அடிப்படை மக்கள் தான்.

இத்தனை ஆண்டு போராட்ட காலத்திலும் சரி, போராட்டத்தின் பின்னரான காலங்களிலும் சரி இடர்களை எதிர் கொள்பவர்கள் மக்களே. இந்த மக்களே இலக்கியத்தின் பாடு பொருளாகவும் உள்ளனர். இவர்களைப் பற்றியே இலக்கியம் படைத்து நாம் விருதுகளையும், பட்டங்களையும், பதக்கங்களையும் பெறுகின்றோம். அதேபோல் புலம்பெயர் தேசத்தில் வசதியாக இருந்து இவர்களின் அவல வாழ்வை இலக்கியமாக்கி பவுண், டொலர் செலவு செய்து புத்தகமாக்கி விருதுகளையும் சிறப்புக்களையும் பெற்றுக் கொள்கின்றார்கள்.

புலம்பெயர் தேசத்தில் படைக்கப்படும் இலக்கியங்கள் எங்கள் மத்தியில் எத்தனை மக்களால் அறியப்படுகின்றன என்பனவும் கேள்வியாகவே உள்ளது - என்றார். (வ-5-101)

# அனுமதியின்றி ஏற்றிவந்த மரக்குற்றிகள் பறிமுதல்

யாழ்ப்பாணம், ஓக. 21

அச்சுவேலி, ஆவரங்கால் பகுதியில் சட்டவிரோதமாகக் கடத்தி வரப்பட்ட மரக்குற்றிகளுடன் இரு வாகனங்களை நேற்றையதினம் கைப்பற்றிதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்ததாவது:

பிற இடங்களில் இருந்து ஏற்றி வரப்பட்ட மரக்குற்றிகளுடன் பயணித்த இரு பார ஊர்திகளைச் சோதனை இட்டபோது, அனுமதிப்பத்திரமின்றிக் கொண்டு வரப்பட்டமை கண்டறியப்பட்டது.

இவ்வாறு சட்ட விரோதமாகக் கொண்டு வரப்பட்ட மரக்குற்றிகளும், அதனை ஏற்றி வந்த வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டன. அத்துடன் வாகனச் சாரதிகளும் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட இரு சாரதிகளும் இன்று மல்லாகம் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்படுவர் - என்றனர் பொலிஸார். (வ-101)




சிங்கர் நிறுவனம் நடத்தும் யாழ்.சிங்கர் கொண்டாட்டம் நேற்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் ஆரம்பமானது. உலகத் தரம் வாய்ந்த 40 இற்கும் மேற்பட்ட வர்த்தக நாமங்களின் கீழான உற்பத்திகள் இந்த நிகழ்வில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வரை இது இடம்பெறும். (த-101)

# காணாமற்போனோருக்கு நடந்ததை கண்டறியவே சட்டம் நிறைவேறியது

## அமைச்சர் கிரியெல்ல தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 21

காணாமற்போனோர் அலுவலகம் அமைக்கப்படும் சட்டத்தை நிறைவேற்றியதன் நோக்கம், குற்றவாளிகள் யார் என்பதைக் கண்டறிவதற்காக அல்ல. காணாமற்போனவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அவர்களின் உறவுகளும் நண்பர்களும் கண்டறிவதற்காகத்தான். இவ்வாறு தெரிவித்தார் உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரும், சபை முதல்வருமான லக்ஸ்மன் கிரியெல்ல.

கிழக்கு மாகாணத்திற்கு பயணம் மேற்கொண்டிருந்த அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தனது அமைச்சு சார்ந்த நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு உரையாற்றினார். இதன்போது அவர் தெரிவித்ததாவது:

வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடு செய்ய வரவேண்டும் என்று நாம் விரும்புகின்றோம். இது தொடர்பாக இராஜதந்திரிகளுடன் பேசி வருகின்றோம். இலங்கையில் முதலீடு பெருக வேண்டுமானால், சட்டப்படியான ஆட்சி நடைபெற வேண்டும் என்று அவர்கள் வற்புறுத்துகின்றார்கள். இது யதார்த்தமானது. 19ஆவது அரசமைப்புத் திருத்தம் ஊடாக அனைத்து துறைகளும் சுதந்திரமாக இயங்கக் கூடிய சூழல் உருவாக்கப்பட்டது.

இலங்கையில் மாணவர்கள் உட்பட ஆள்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்படுவதற்கு சட்டத்தின் ஆட்சியில் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தில் கூச்சல்களுக்கும் குழப்பங்களுக்கும் மத்தியில் காணாமற்போனோர் அலுவலகம் தொடர்பான சட்டம் நிறைவேற்றப்பட்டது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் மட்டுமல்ல, தெற்கில் 1971 மற்றும் 1989ஆம் ஆண்டு கிளர்ச்சிகளின்போது ஆள்கள் காணாமல் போனார்கள். அவர்களுக்கும் என்ன நடந்தது என்று கண்டறியப்படவேண்டும் - என்றார். (வ-5)

# சுவாசக்குழாயில் உணவு சிக்கியதால் குடும்பத்தலைவர் பரிதாபச் சாவு

சுவாசக்குழாயில் உணவு சிக்கியதால் இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவர் பரிதாபமாக உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. கந்தர்மடம் பகுதியைச் சேர்ந்த ஐயக்கோன் உதயகுமார் (வயது-38) என்பவரே உயிரிழந்தவராவார். கடந்த 18ஆம் திகதி மதிய உணவு சாப்பிட்டுவிட்டு பகல் தூக்கத்திற்கு சென்றுள்ளார். மாலை ஆறு மணியாகியும் அவர் தூக்கத்தினால் எழும்பாததன் காரணமாக மனைவி தட்டி எழுப்பியுள்ளார். உடல் மூச்சுப் பேச்சு அற்று இருந்துள்ளது. யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்து சென்றபோது, ஏற்கனவே உயிரிழந்தமை உறுதிப்படுத்தப்பட்டது. சட்டவைத்திய அதிகாரியின் உடற்கூற்று பரிசோதனையின் போது குடும்பத்தலைவரின் சுவாசக் குழாயில் உணவுப் பதார்த்தம் சிக்கியதால் மூச்சுத்திணறல் ஏற்பட்டு உயிரிழந்தமை தெரிய வந்தது. (வ-107)

SUPER BALL
சுப்பர் போல்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 539
சீட்டிழுப்பு திகதி 2016.08.20
வெற்றி இலக்கங்கள்
10 25 62 65 K
ரூ. 46,586,440/=

வேலைவாய்ப்பு

யாழ். மாநகரில் இயங்கும் பட்டப்படிப்புக் கல்லூரிக்கு தகைமையுடைய நிர்வாக உத்தியோகத்தர் தேவை. வயதெல்லை 19- 30 இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும்.

நேர்முகத் தேர்வு

| இடம் | திகதி | நேரம் |
| --- | --- | --- |
| 377, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். | 21.08.2016 (ஞாயிறு) | 01.30 Pm -5.30 pm |
| 021 722 3773 | 22. 08.2016 (திங்கட்கிழமை) | 09.00 am -4.00 pm |

# புனரமைப்பின்றி பாழடைந்து தூர்ந்துபோயுள்ளன கேணிகள்

யாழ்ப்பாணம், ஓக.21

வலி. கிழக்குப் பிரதேசத்தில் அநேகமான கேணிகள் தூர்ந்து பாழடைந்த நிலையில் உள்ளன. கால்நடைகளின் குடிதண்ணீர் பயன்பாட்டுக்காக அமைக்கப்பட்ட இந்தப் பழமை வாய்ந்த கேணிகள் பயன்பாடின்றி உள்ளன.

கேணிகளில் தண்ணீர் நின்றாலும் மேய்ச்சலில் ஈடுபடும் கால்நடைகள் தமது குடிதண்ணீர் தேவையை நிறைவேற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. கால்நடைகள் கேணிகளுக்குள் இறங்கிக் குடிதண்ணீரை குடிப்பதற்காக உள்ள படிகள் உடைந்து தூர்ந்த நிலைல் உள்ளன. அதனைவிடச் சில கேணிகளுக்குள் மக்கள் தமது சுற்றாடல் கழிவுகளை போட்டு அசிங்கப்படுத்தியும் வருவதாகக் கூறப்படுகின்றது.

குறிப்பாக, கோப்பாய் பூதர் மடத்தடியில் உள்ள பழைமை வாய்ந்த கேணி குப்பை மற்றும் கழிவுகளால் நிரம்பியும் காணப்படுகின்றது.

இந்தக் கேணிகளைப் பாதுகாப்பதற்கு வலி. கிழக்குப் பிரதேச சபையினர் முன்வரவேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக வலி. கிழக்குப் பிரதேச சபைச் செயலாளருடன் தொடர்புகொண்டு கேட்டபோது, இந்தக் கேணிகள் புனரமைப்புக் குறித்து சபை இதுவரை முடிவெடுக்கவில்லை.

கால்நடைகளின் குடிதண்ணீர் பயன்பாட்டுக்காக அமைக்கப்பட்ட இந்தப் பழமை வாய்ந்த கேணிகளைச் சபை உரிய முறையில் பாதுகாப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும்- என்றார். (த-17)

# மைத்திரி சொன்னது எனக்கில்லை மகிந்த சூசகம்

நாம் சரியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கையில் உள்ளவர்கள். எமக்கும் ஜனாதிபதி மைத்திரியின் அறிவிப்புக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

புதிதாகக் கட்சியை உருவாக்குபவர்களின் இரகசியங்கள் பகிரங்கப்படுத்தப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுமுன்தினம் கூட்டு எதிர்க் கட்சியிலுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கு எச்சரிக்கை விடுத்திருந்தார். இது தொடர்பில் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்டபோதே மகிந்த ராஜபக்ச மேற்கண்டவாறு கூறினார். (வ-5)

தகுந்த விலைக்கு பெற்றுக்கொள்ளப்படும்



பழமைவாய்ந்த தமிழ் நூல்கள், நாணயங்கள், ஓலைச்சுவடிகள் (ஏடுகள்) தகுந்த விலைக்கு பெற்றுக்கொள்ளப்படும்.

தொடர்புகளுக்கு

குமார் – 071 521 31 54

# உயர் கல்வி அமைச்சரின் வருகைக்கு தென் கிழக்கு பல்கலையில் எதிர்ப்பு

மட்டக்களப்பு, ஓக.21

உயர் கல்வி அமைச்சரின் வருகையைக் கண்டித்து தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த மாணவர்கள் கறுப்பு உடை அணிந்திருந்தனர்.

பல்கலைக்கழகத்தில் உள்ள பொலிஸ் கடவையை உடனே நீக்கவேண்டும், பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் குறை மற்றும் விடுதியில் காணப்படும் குறைகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டும், போன்ற கோரிக்கைகளை மாணவர்கள் முன்வைத்தனர்.

இந்தக் கோரிக்கைகளுக்கு பதில் தர மறுக்கும் பட்சத்தில் உயர் கல்வி அமைச்சர் லக்ஸ்மன் கிரியல்லவை பல்கலைக்கழகத்தினுள் உள்நுழைய விடுவதில்லை என்ற கருத்தையும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட மாணவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, முஸ்லிம் மஸிதிஸ், தமிழ் மாணவர் சங்கம் ஆகியன உயர் கல்வி அமைச்சர் வருகையை வரவேற்பதுடன், அதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்து கொண்டிருப்பதாக பல்கலைக்கழக முஸ்லிம் மாணவர்கள் தெரிவித்தனர்.

மேலும் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் அபிவிருத்திகளை விரும்பாத சில சக்திகளே ஒரு குழுவாக செயற்பட்டு அமைச்சரின் வருகையை தடுத்து நிறுத்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுகின்றனர் என அவர்கள் குற்றஞ்சாட்டினர்.

இதனை மனிதாபிமானமுள்ள அனைத்து மாணவர்களும் இந்த ஆர்ப்பாட்டத்தை வன்மையாக கண்டிக்கின்றோம் எனவும் முஸ்லிம் மாணவர்கள் தங்களது கருத்துக்களை பதிவு செய்துள்ளனர். (வ-5)

# ஐ.எஸ்ஸின் கணக்குகளை நீக்கியது டுவிட்டர்

கொழும்பு, ஓக.21

ஐ.எஸ். தீவிரவாதிகளின் 2 லட்சத்து 35 ஆயிரத்துக்கும் அதிகமான டுவிட்டர் வலைத்தளக் கணக்குகள் டுவிட்டர் நிறுவனத்தால் முடக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

டுவிட்டர் வலைத்தளம் ஊடாகவே ஐ.எஸ் தீவிரவாத அமைப்பு ஆள்களை சேர்க்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வந்ததாக பன்னாட்டுப் புலனாய்வு பிரிவு தெரிவித்தது.

இந்த தீவிரவாத அமைப்பின் மேலும் பல வலைத்தளங்கள் சுயமாகவே இணையங்களில் இருந்து விலகிதாகவும் டுவிட்டர் நிறுவனம் தெரிவித்தது. (வ-5)

பணிப்பெண் தேவை

சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கி இருந்து பணிபுரிவதற்கு பணிப்பெண் ஒருவர் தேவை. தொடர்பு - 077 2626944

SINGER FINANCE

முச்சக்கரவண்டிக்கான குத்தகை வசந்தகாலம்

பதிவுசெய்யப்பட்ட முச்சக்கரவண்டிகள் தொடர்பில்




தொடர்புகளுக்கு

சஜுந்தன் 077 7 391 449
தர்ஷன் 077 7 009 666
தனு 077 9 357 124

இல.86, கே.கே.எஸ், வீதி, யாழ்ப்பாணம்

### வீடு வாடகைக்கு தேவை
02 பேர் கொண்ட குடும்பத்திற்கு வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு: 077 072 4810

### உதவியாளர் தேவை
கொக்குவில் கிழக்கு, கொக்குவிலில் வதியும் வயோதிபப் பெண்ணுடன் தினசரி காலை 7.00 மணியிலிருந்து மாலை 4.00 மணிவரை தங்கியிருந்து பணிபுரிய 40வயதிற்கு மேற்பட்ட பெண் உதவியாளர் தேவை.
கவர்ச்சியான சம்பளம் வழங்கப்படும்.
077 172 8353/ 075 042 2906

### கணித வகுப்பு
Personal / Group Class For Grade 6 to 11 (Maths) Tamil / English Medium
076 558 7181 - திருநெல்வேலி

### காணி தேவை
யாழ்ப்பாணம், நல்லூர், நாவலர் வீதிப் பகுதியில் வீடு கட்டுவதற்கு ஏற்ற சூழலில் 1 ½ பரப்புக்கு உட்பட்ட காணி தேவை.
(தரகர் தேவையில்லை)
077 461 8002

### தேவை
யாழ்ப்பாணத்தில் உள்ள வயோதிப தம்பதியருடன் அனுசரணையாகவும், உதவியாகவும் இருப்பதற்கு ஒருவருமற்ற 45 வயதுக்கு மேற்பட்ட பெண் தேவை.
இன்றிலிருந்து ஒருகிழமைக்குள் கீழ்வரும் முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்.
விளம்பர இல.5111, மே/ பா.உதயன் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### மணமகள் தேவை
யாழ். இந்து கௌரவகுடும்பம், 1985, விசாகம் 2, கி.பா 46, உயரம் 5' 7" Doctor(M.B.B.S) மணமகனுக்கு உயர்கல்வித் தகைமையுடைய அழகிய மணமகள் தேவை.
தொடர்பு: 077 918 4466

### மணமகள் தேவை
யாழ். இந்து கௌரவகுடும்பம், 1987, கார்த்திகை முதலாம் பாதம் கி.பா29, உயரம் 5' 7" பிரான்ஸ் (P.R) மணமகனுக்கு பொருத்தமான அழகிய மணமகள் தேவை.
தொடர்பு: 077 480 6654

### Online Job's
வீட்டில் இருந்தவாறே இணையத்தினூடாக மாதாந்தம் 30 000/= இற்கு மேல் பணம் சம்பாதிப்பதற்கான ஓர் அரிய வாய்ப்பு
தகைமை:
- கணினி அறிவு
- இணைய வசதி
- ஆங்கில அறிவு (ஓரளவு)

மேலதிக விவரங்களுக்கு : ஜெரி பெஷன் ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு.
076 600 0056

### விஷேட பல் வைத்திய சேவை
- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்
- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

சன்றைஸ் மெடி கிளினிக்
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

றோயல் மெடிக்கல் சென்ரர்
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

### தேவை
வட்டுக்கோட்டை, மாவடி சந்தியில் புதிதாக அமைக்க இருக்கும் Net cafe, Stationary கடைக்கு Computer அனுபவம் உள்ளவர்களும் Phone Repairing அனுபவம் உள்ளவர்களும் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
077 679 2275

### காணி விற்பனைக்கு
மிருசுவில் A9 வீதியை முகப்பாக கொண்ட 18½ பரப்பு காணி முழுமையாகவோ, பகுதிகளாகவோ கொடுக்கப்படும்.
077 607 9340

### மணமகள் தேவை
யாழ். இந்து கௌரவ குடும்பம் வசிப்பிடம் கொழும்பு 1980 ரோகினி 8 இல் செவ்வாய் UK (PR) டிவோஸ் மணமகனுக்கு சிவந்த அழகிய மணமகள் தேவை.
077 583 2828

### கடை வாடகைக்குண்டு
வேம்படி மகளிர் கல்லூரிக்கு எதிரில் கடை வாடகைக்குண்டு.
077 968 7677

### வீடு வாடகைக்கு உண்டு
அரியாலை, நாவலடியில் சகல வசதிகளுடன் வீடு வாடகைக்கு உண்டு.
077 804 2848

### காணி விற்பனைக்கு
யாழ். கொக்குவில் கிழக்கு, இல. 60, உடையார் லேனில் 3¼ பரப்பு வெற்றுக்காணி சுற்று மதிலுடன் விற்பனைக்குண்டு.பகுதியாகவும் கொடுக்கப்படும்
076 9613189, 021 221 3632, 077 751 3872

### வாடகைக்கு உண்டு
யாழ்ப்பாணம், அரசடி வீதியிலுள்ள சகல வசதிகளும் கொண்ட மேல் மாடி வீடு வாடகைக்குண்டு.
3 அறைகள், 02 குளியலறைகளுடன்
071 847 4185

### வீடு வாடகைக்குண்டு
யாழ்ப்பாணம், கே.கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கு அருகில் மூன்று அறைகளுடன் சகல வசதிகளையும் கொண்ட வீடு வாடகைக்குண்டு. " அரச, வங்கி உத்தியோகத்தர்க்கு மட்டும்
இல.831/34, கே.கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 021 222 1781

### காசாளர், காவலாளி தேவை
நகரில் இயங்கும் குளிர்பான நிலையத்திற்கு காசாளர், இரவுக் காவலாளி தேவை.
குறிப்பு: காவலாளி 50 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும். உடன் தொடர்பு கொள்ளவும்.
072 699 4681

### பணிப்பெண் தேவை
வீட்டில் சமையல் வேலை செய்வதற்கு பெண் ஒருவர் தேவை. சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கலாம்.
தொடர்பு - கந்தர்மடம், யாழ்ப்பாணம்
076 8514296

### வீடு விற்பனைக்கு
ஆனைக்கோட்டை, உயரப்புலம், பாரதி சனசமூக நிலையம் முன்பாக உள்ள ஒழுங்கையில் 6 பரப்புக் காணியுடன் சகல வசதிகளையும் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு.
077 614 6434

### காணி விற்பனைக்கு
முதலியார் கோயிலடி, கொக்குவில் மேற்கில் (K.K.S வீதியிலிருந்து 50m தூரத்தில் சேச் முன் ஒழுங்கை) 1 ½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
077 636 6308/ 077 952 2027

### வீடு வளவு விற்பனைக்கு உண்டு
மீசாலை வடக்கு,வீரசிங்கம் மத்திய கல்லூரிக்கு அருகில் சகல வசதிகளுடன் உடன் குடியமரக் கூடிய நல்ல நிலையில் உள்ள 4 பரப்புக் காணி வளவு விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு
நவம்- 077 6474639
தவம்- 077 5977210

### IPS
இணைய கணினி, ஆங்கில வகுப்புகள்
க.பொ.த (உ/த) பரீட்சைகளுக்குத் தோற்றும் மாணவர்களுக்கான வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
ஆரம்பம் : 03.09.2016 சனிக்கிழமை
முற்பகல் 10.30am பிற்பகல் 4.00 pm
குறிப்பு:- * பதிவுகளினை 22.08.2016 இலிருந்து மேற்கொள்ள முடியும்
* வரையறுக்கப்பட்ட மாணவர்கள்
* பெறுமதிமிக்க சான்றிதழ்
* காலம் - 3 மாதங்கள்
IPS
076 685 2529

# இலங்கை மத்திய வங்கி ஊழியருக்கு வரலாறு காணாத சம்பள அதிகரிப்பு

## நிதி மோசடி விசாரணைப் பிரிவில் முறைப்பாடு

கொழும்பு, ஒக. 21

இலங்கை மத்திய வங்கியின் ஊழியர்களுக்குக் கடந்த வருடம் வரலாறு காணாத மிதமிஞ்சிய சம்பள அதிகரிப்பு வழங்கப்பட் டுள்ளது. இது தொடர்பில் உடன் விசா ரணை நடத்த வேண்டும் என்று ஜனாதிபதி மற்றும் நிதி மோசடி தொடர்பான பொலிஸ் விசாரணைப் பிரிவு என்பவற்றுக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மத்திய வங்கியில் சேவையாற்றி ஓய்வு பெற்ற அதிகாரிகளால் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பள அதிகரிப்பு, மத்திய வங்கியின் வரலாற்றில் மாத்திரமன்றி இலங்கை அரச வரலாற்றில் அரச நிறுவனங்கள் எதிலும் மேற்கொள்ளப்படாத ஒன்று எனவும் முறைப்பாட்டில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மத்தியவங்கியின் பிரதிஆணையாளரின் சம்பளம் 2 லட்சத்து 67 ஆயிரம் ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும், இது அடிப்படைச் சம்பளத்திலும் பார்க்க 110 வீத அதிகரிப்பு எனவும் முறைப்பாட்டாளர்கள் சுட்டிக்காட்டினர். இதேபோன்று ஏனையவர்களுக்கும் சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

மத்திய வங்கி பல வருடங்களாக நட்டத்தில் இயங்கும் நிறுவனமாக இருக்கும் போதும் இவ்வளவு அதிகமான சம்பள அதிகரிப்பானது ஊழல், மோசடியுடன் தொடர்பான ஒரு நடவடிக்கை எனவும் ஓய்வுபெற்ற அதிகாரிகள் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர். (ற-4)

### வேலையாள் தேவை
யாழ்.நகரில் உள்ள பிரபல பாட்டா கடைக்கு வேலையாள் தேவை.
077 661 5973, 021 222 3525

### பணிப்பெண் தேவை
சிறிய குடும்பம் ஒன்றில் தங்கி நின்று வேலை செய்யக் கூடிய பெண் ஒருவர் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
076 942 8825

### கார் விற்பனைக்கு
NP KA XXXX எனும் இலக்கம் கொண்ட Maruthi suzuzuki WaganR மரூன் கலர் கார் விற்பனைக்குண்டு.
077 625 4067

### காணி விற்பனைக்கு
சாவகச்சேரி நகருக்குள் அமைந்துள்ள கென்மன்ஸ் ஒழுங்கையில் கிணற்றுடன் கூடிய 4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
077 075 9582

### Windows Formatting Home/ office visit
Upgrade your PC/Laptop to windows 10, windows 10 / 8.1 / 8 / 7 / Vista /xp, Ms office 2016/2013/2010/2007 Anti virus, Adobe Softwares
Rs.1000/= | 077 770 7358

### சிமெந்துக்கல் விற்பனைக்கு
தரமான சிமெந்துக்கற்கள் மலிவு விலையில் விற்பனைக்குண்டு.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி பகுதிகளுக்கு விசேட விலைக்கழிவு உண்டு.
075 039 1980

MAJESTIC CINEPLEX
A CEYLON THEATRES CINEMA Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்




மஜெஸ்டிக் ப்ளாட்டினம் 10.00 a.m / 1.00 p.m
கபாலி 4.00 p.m / 7.00 p.m
Fri/Sat/Sun 9.30 p.m



சில்வர் 10.15 / 1.15 / 4.15 / 7.15
பிரொன்ஸ் 10.30 / 1.30 / 4.30 / 7.30
Fri/Sat/Sun 9.30 p.m
விசாரணை 021- 2227712
CeylonTheatres
www.ceylontheatres.lk

## சிறிலங்கா சுதந்திரக் கட்சியை பிளவுபடுத்திவிட்டார் மைத்திரி

### குற்றஞ்சாட்டுகின்றார் மகிந்த



கொழும்பு, ஒக. 21

பலம் பொருந்தியவர்கள் மட்டுமன்றி, பிரபலமான தொகுதி மற்றும் மாவட்ட அமைப்பாளர்களை நீக்கியதன் ஊடாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிளவு படுத்தி விட்டார்.

இவ்வாறு முன்னாள் ஜனாதிபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது-

சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதி அமைப்பாளர்களான பவித்ரா வன்னியாராச்சி, கெஹலிய ரம்புக்வெல, சி.பி.ரத்நாயக்க, காமினி லொக்குகே, ரோஹித அபேகுணவர்த்தன, மஹிந்த யாப்பா அபேவர்த்தன உள்ளிட்டவர்கள் அமைப்பாளர்கள் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர். இது ஒன்றிணைந்த எதிர்க்கட்சியுடன் இணைந்து செயற்படும் சுதந்திரக் கட்சி உறுப்பினர்களைப் பழிவாங்கும் புதிய முறையாகும்.

சுதந்திரக் கட்சியை இல்லாதொழிக்கும் படிமுறையின் இரண்டாவது கட்டத்தையே நாங்கள் கண்டுகொண்டிருக்கின்றோம். இதன் முதலாவது கட்டம், சுதந்திரக் கட்சியால் நிர்வகிக்கப்பட்டு வந்த அனைத்து உள்ளூராட்சி மன்றங்களும் கலைக்கப்பட்டமையாகும்.

ஆட்சி அதிகாரத்தில் இருந்த உள்ளூராட்சி மன்றங்கள் கலைக்கப்பட்டதன் மூலம், ஐக்கிய தேசியக் கட்சிக்கு தெளிவான நன்மைகள் கிடைத்திருக்கின்றன. ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினரைப் பழிவாங்குகின்றோம் என்ற நோக்கில், ஐக்கிய தேசியக் கட்சியையே, சிறிலங்கா சுதந்திரக் கட்சி வளர்த்துக் கொண்டுள்ளது - என்றார். (ற-4)

# நெருக்கடிக்குள் சிக்கியுள்ளது கடற்றொழில் திணைக்களம்

## தொழிற் சங்க ஒன்றியம் கூறுகின்றது

கொழும்பு, ஓக. 21

இலங்கைக் கடற்றொழில் திணைகளம் கடும் நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளது என்று இலங்கை கடற்றொழில்திணைக்களத்தொழிற் சங்க ஒன்றியம் தெரிவித்தது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கடற்றொழில் திணைக்களத் தொழிற் சங்கத் தலைவர் ரத்னா கமகே இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

கடற்றொழில் திணைக்களமானது மூடப்படவோ அல்லது தனியார் மயப்படுத்தப்பட வேண்டிய நிறுவனமோ அல்ல. கடந்த காலத்தில் அரசியல் தலையீடு காரணமாகப் பணியாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. 745 பணியாளர்களே திணைக்களத்திற்கு தேவைப்பட்டுள்ள நிலையில், தற்போது ஆயிரத்து 200 இற்கும் அதிகமான பணியாளர்கள் தொழில் புரிந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது கடற்றொழில் திணைக்களம் பெரும் நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளது. திணைக்களத்தின் அபிவிருத்தியை முன்னெடுப்பதற்குப் பதிலாகப் பொய்யான பரப்புரைகள் முன்னெடுக்கப்படுகின்றன – என்றார். (ந-4)

## வீதியில் உள்ள குழிகளுக்கு கற்கள் இட்டு நிரவும் மக்கள்

சாவகச்சேரி, ஓக.21

சாவகச்சேரி டச்சு வீதியில் உள்ள குழிகளை உடைந்த ஓடுகளையும் கற்களையும் இட்டுப் பொதுமக்கள் நிரவி வருகின்றனர்.

இந்த வீதியின் பல இடங்களில் குழிகள் ஏற்பட்டு போக்குவரத்து செய்ய முடியாத நிலைமை காணப்படுகின்றது. மழை ஆரம்பித்தால் வீதி இன்னமும் மோசமாகும் என்பதைக் கருத்தில் கொண்டு முன்னாயத்த நடவடிக்கையாக வீதியோரங்களில் குவிக்கப்பட்டிருக்கும் ஓடுகள், கற்களை தமது செலவில் வாகனங்களில் ஏற்றி மக்கள் நிரவுகின்றனர்.

சாவகச்சேரி சந்தியிலிருந்து டச்சு வீதி தனங்களப்பு வீதி போன்றவற்றில் சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரம்வரை திருத்தப்பட்டுள்ளது. திருத்தப்படாதுள்ள வீதியில் பள்ளங்கள் ஏற்பட்டு வாகனச் சாரதிகள் பெரும் சிரமத்தின் மத்தியில் தமது வாகனங்களைச் செலுத்தி வருகின்றனர். சில பள்ளங்களில் தேங்கும் மழை வெள்ளம் வீதிப்போக்குவரத்தையே பாதிக்கும் அளவுக்குக் காணப்படுவதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகப் பள்ளங்களை மூடும் பணிகளை மக்கள் மேற்கொண்டுள்ளனர். (ந-9)

DUTCH(Netherlands)

மொழியை இலகுவாக கற்கவும் Embassy இனால் நடாத்தப்படும் விசாவுக்கான பரீட்சையில் சிறப்பாக சித்தியடையவும் நெதர்லாந்து நாட்டிலிருந்து வருகை தந்த ஆசிரியரினால் Audio,Video மற்றும் தமிழ் விளக்கங்களுடன் கற்பிக்கப்படுகிறது

Netherland அரசாங்கத்தினால் Nov - 2014 லிருந்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ள M.V.V விசா பரீட்சைக்கான புதிய பாடத்திட்டத்திற்கமைய புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளது ஏற்கனவே Netherland தூதரக பரீட்சையில் சித்தியடையாதவர்களுக்கும்,கூடிய கவனம் தேவைப்படுகிறவர்களுக்கும், விசேட வகுப்புக்களும் மாதிரிப் பரீட்சைகளும் தமிழ் விளக்கத்துடன் உண்டு

Netherland தூதரகத்தினால் நீண்ட கால நம்பத்தகு ஒரே International Language Academy

குறிப்பு : இலங்கையில் எமக்கு வேறு கிளைகள் கிடையாது. குறிப்பாக யாழ்ப்பாணத்தில் எமக்கு கிளைகள் கிடையாது.

Dutch Lanka Academy
#69 -2/1,Galle Road,Dehiwala(Colombo).
Tel : 0777251332,011 271 8811

நெதர்லாந்து தூதரக பரீட்சையில் சித்தியடைவதற்கு 100 % உத்தரவாதம் அளிக்கப்படும். **Condition Apply

ஜீவகவாத நிவாரணி

தலைவலி, காதுவலி, பல்வலி, தடிமல், இடுப்பு வலி, முதுகு வலி, தசை வலி, கெண்டை பிறள்வு, முழங்கால் வலி மற்றும் வீக்கம், முடக்கு வாதம், விரல்கள் கைகால் விறைப்பு, உளுக்கு, வீக்கம், கழுத்துச் சுழுக்கு, குத்துவலி, கொழுக்கல், நரம்புசார் வலிகள், பக்கவாதம், கீழ் பாதம் அரிப்பு மற்றும் வீக்கம், வாதம், விறைப்பு வாதம் என்பவற்றின் போது வெளிப்பூச்சுக்குப் பொருத்தமான உடன் நிவாரணம் தரும் கை கண்ட ஔடதமாகும்.

கண்களிலோ, புண்களிலோ பூசுவதைத் தவிர்க்கவும்

Manufactured by:
Jeewaka Herbal Products (pvt)Ltd, Yakkala.

சந்தைப்படுத்துவோர் - சிவா நறுமணப் பூங்கா
021 222 2567
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திரச்சந்தி சிக்னல் லைற்றுக்கு அருகில்)

மணமகள் தேவை

வடமராட்சியைச் சேர்ந்த 47 வயது மணமகனுக்கு இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணமகள் தேவை. மணமகள் 35- 40 வயதுக்கும் உட்பட்டவராக இருத்தல் வேண்டுமென அவரது தாயார் எதிர்பார்க்கின்றார். தற்போது மணமகன் மத்திய கிழக்கு நாட்டில் வேலை பார்க்கின்றார். எதிர்பார்க்கும் மணமகள் அரச உத்தியோகத்தில் இருந்தால் விரும்பத்தக்கது.

குறிப்பு:- சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் தொடர்பு கொள்ளவும் .கிழமை நாள்களில் இரவு 7.00-9.00 மணிவரை தொடர்பு கொள்ளலாம்.

தொடர்பு.072 309 6117

உடற்பருமன் கொண்டோருக்கு ஓர் அற்புதமான செய்தி (2 வாரங்களில்)

ஆண்,பெண் இருபாலாருக்கும் உகந்தது. 2 வாரத்தில் நல்ல அழகான மேனியுடன் திகழ

ஆயுர்வேத கெர்வல் ஔடதம்
(பால்மா, குளிசை, டொனிக், கிறீம்)
விலை 3500/=, 5500/=, 9000/=

உடல் எடை கூட்டுதல், குறைத்தல், ஊளைச்சதை, மார்பு கூட்டுதல், குறைத்தல், வயிற்றுக் கோளாறு, நாட்பட்ட அஜீரணம், மலச்சிக்கல் அனைத்துக்குமான ஆயுர்வேத மருந்து விற்பனைக்கு உண்டு.

ஆச்சரியம் வயிறு, மார்பு 10 நாள்களில் குறைக்கும் கிறீம் எம்மிடம் உண்டு

எங்களிடம்

மேலும், முகப்பரு, கண்கருவளையம், முகச்சுருக்கம், உதடு கறுப்பு, முதுகு, கழுத்து, கை, கால், கறுப்பு நீக்கும் கிறீம், முகம் தாடைகளில் தேவையற்ற ரோமங்கள் மற்றும் காயங்கள் அகற்றும் கிறீம் விற்பனைக்கு உண்டு.

விலை 2500/= 5500/=

தலைமுடி வளரச்செய்யும் ஆயுர்வேத எண்ணெய் விற்பனைக்குண்டு.

077 210 6155,
221, நாவலர் றோட் (பிறவுண் றோட் சந்தி அருள் கொமினிகேஷன் அருகில்) யாழ்.

வாழ்க்கையைக் கட்டியெழுப்பும் இடம்

British Way® English Academy

எந்த மாற்று வழியுமில்லை British Way

இலங்கையின் முதலாவது ஆங்கிலத்துக்கான பயிற்சிப்பட்டறை

நிட்டம்புவ 033 302 19 19
யாழ்ப்பாணம் 033 33 40 600
காலி 033 302 11 11
மாத்தறை 033 302 12 12
அநுராதபுரம் 033 302 13 13
நுகேகொட 033 302 14 14
கம்பஹா 033 302 15 15
நீர்கொழும்பு 033 302 16 16
கண்டி 033 302 17 17
குருநாகல் 033 302 18 18
கிரிபத்கொட 077 325 77 67
இரத்தினபுரி 0333 555 315

DAkkS Deutsche Akkreditierungsstelle D-ZM-18590-01-00
ISO 9001:2008 CERTIFIED

இவ் இரண்டு மாத காலப் பயிற்சியின் பின்னர் 180 நாடுகளில் அங்கீகரிக்கப்பட்ட ETS TOEFL Junior மற்றும் ETS TOEIC USA தரத்திலான சர்வதேச சான்றிதழ்கள் வழங்கப்படும்

UNIVERSITY of CAMBRIDGE ESOL Examinations
ICDL
abe
SQA

இரண்டு மாத காலப் பயிற்சி

02 Months

காலை 8.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணி வரை திங்கள் முதல் வெள்ளி வரை இரண்டு மாத காலப் பயிற்சி வழங்கப்படும்.

இப்பயிற்சியானது பிரித்தானியா மற்றும் அனேக நாடுகளில் கையாளும் விதத்தில் இரண்டு மாதத்திற்குள் ஆங்கில அறிவே இல்லாத ஒருவருக்கு கற்பிக்கும் முறைமைக்கேற்ப் இலங்கையிலும் விசேடமாக யாழ் மண்ணிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியின் மூலம் 100% ஆங்கிலத்தை சரளமாக பேச வைக்க முடியுமென இக்கல்வியகம் உத்தரவாதம் அளிக்கின்றது.

02, September, 2016 முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

வார இறுதி வகுப்புகள்

04 Months

காலை 8.30 முதல் 4.00 மணி வரை பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில்

வார இறுதி வகுப்புகள் ஞாயிறு காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4,00 மணி வரை நான்கு மாத காலம் நடைபெறும். தொழில் செய்பவர்களுக்கு இப்பயிற்சிநெறி மிகவும் உகந்ததாகும்.

04, September, 2016 முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

British Way English Academy


Contact (Jaffna Branch) : 033 33 40 600

நிட்டம்புவ | Tel: 033 302 19 19 | Fax: 033 2297912 | E-mail: info.britishway@gmail.com | Web: www.britishway.lk

No.15, Kannathiddy, Jaffna. (In front of the Shivan Kovil)

## 31ஆம் நாள் நினைஞ்சலி

அமரர்
**காசிப்பிள்ளை லோகேஸ்வரன்**
(ஓய்வுபெற்ற லிகிதர் - இ.போ.ச.)



தோற்றம்
01.10.1942

மறைவு
22.07.2016

எம் அன்புத் தந்தையே!
நீங்கள் எம்மைப் பிரிந்து மாதமொன்று கழிந்தாலும்
என்றும் உங்கள் நினைவுகளுடன்
ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

586, நாவலர் வீதி,
அரியாலை.

குடும்பத்தினர்.

## எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **லீலறோஜினி இராஜகோபாலு**
(புவனம்)
திதி: திருதியை (21.08.2016)

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 12 | 19 |
| 12 | 08 |
| 1944 | 2008 |

**எட்டு ஆண்டுகள் கடந்தாலும் எங்கள்
நெஞ்சில் அழியாத சித்திரமாய்
நிறைந்திருக்கும் எங்கள் அன்புத் தாயின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்**

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

மீனாட்சி அம்மன் கோயிலடி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

## தனியார் பஸ் நடத்துநர் மீது தாக்குதல்; மூவர் கைது

கொழும்பில் இருந்து மன்னாருக்குப் பயணிகளுடன் வந்த தனியார் பஸ் ஒன்றின் நடத்துநர் மீது தாக்குதல் மேற்கொண்ட குற்றச்சாட்டில் நேற்று 3 பேர் கைது செய்யப்பட்டனர் என்று மன்னாரப் பொலிஸார் தெரிவித்தனர். பஸ்ஸிலிருந்து பயணிகளை இறக்குவதற்காக மன்னார் தனியார் பஸ் தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்டபோது இளைஞர் குழு ஒன்று தடிகளுடன் பஸ்ஸைச் சூழ்ந்து அதன் நடத்துனரைத் தாக்கியது என்று தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பில் மன்னார்ப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ந-21,56)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**தருமலிங்கம் பிரதீப்**
[குட்டி]



| அவனியின் அழைப்பில் | அவலத்தின் இழப்பில் |
|---|---|
| 1997.01.29 | 2015.09.02 |

வருடம் ஒன்று நிறைவு கண்டதோ
முடிவும் இல்லாக் கவலை கொண்டதோ

துணுக்காய்ச் சந்தியில் தோய்ந்த குருதியால்
கணக்கை முடிக்கும் காலம் வந்ததோ
வீ(வி)தி ஒழுங்கின் விபரம் இன்மையால்
சாரதி உன்னைச் சதுராடி விட்டானோ

எதைத்தான் நினைத்து ஏங்கித் தவிப்பது
பிணத்தை மாற்றி பிறவி கொள்ளும்
கணத்தை எமக்கு காலன் தந்தால்
அடுத்த பிறவியில் அன்பாய்ப் பழகுவோம்

அறுகம் புல்லின் அடியிதழ் கூட
விரதம் இருக்கும் பிரதீப் என்றால்
பருவம் அறியும் இளமை வயதில்
தெருவில் பிணமாய் தேய்ந்தேன் வீழ்ந்தாய்

மங்கையர்க்கரசியின் மடியில் வளர்ந்து
மாண்புறும் சைவவித்தியில் தவழ்ந்து
மத்திய கல்வியின் சொத்தெனக் கூறும்
மகுடங்கள் எல்லாம் மலை ஏறிப்போச்சா

தேர்வில் மிகவும் தெளிவாய் இருந்தாய்
தெருவில் பிணமாய் ஏன்தான் சரிந்தாய்
பரீட்சை முடிவுகள் பாதியில் நிற்க
விருட்சம் ஒன்று வீழ்ந்தது ஏனோ?

நட்பின் தேர்வில் நல்லாய் உயர்ந்ததை
சுற்றயல் தோழரின் சோகங்கள் சொல்லின
இறுதி ஊர்வல நாளிலும் கூட
பெருகிய கண்ணீர் பேரெடுத்தாறாய்

குட்டி அண்ணா குட்டி அண்ணா
கூவி அழைக்க யார்இனி எமக்கு
கட்டிலில் கிடந்து கைகளால் வருடிய
பட்டறி ஞாபகம் பகல் கானல் தானா?

எங்கே எங்கே இன்முகம் எங்கே
ஏங்கி தவிக்கிறோம் இதுநாள் வரையும்
வருடம் ஒன்று நிறைவு கண்டதோ
முடிவும் இல்லாக் கவலை கொண்டதோ

சிவநகர்,
உருத்திரபுரம்.
077 501 8241

என்றும் இதயத்தில்
சித்தப்பா:- ப.கேதீஸ்வரன், சித்தி:- கே.தயாநிதி
தங்கைகள்: துவாரகா, துஷாரா

## நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
**தில்லையம்பலம் சுதந்திரபாலன்**
( ஓய்வுபெற்ற பிரதம கணக்காளர் )

23.07.2016 சனிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் தில்லையம்பலம் சுதந்திரபாலன் அவர்களின் பிரிவு கேட்டு உள்நாடு மற்றும் வெளிநாடுகளிலிருந்து தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும்அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் நேரில் வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும் கண்ணீர்அஞ்சலிப்பிரசுரங்கள். பதாகைகள் பிரசுரித்தவர்களுக்கும் மலர்வளையங்களை அனுப்பிவைத்தவர்களுக்கும் மற்றும் பலவழிகளில் பிரிவுத்துயரைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்து நிற்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (22.08.2016) திங்கட் கிழமை அவரது இல்லத்தில் மு.ப 10.00 மணியளவில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளில் கலந்து கொண்டு அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் பங்கேற்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு மேற்படி நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு தயவுடன் வேண்டி நிற்கின்றோம்.

ஆடியபாதவீதி,
(ஞானபண்டித வித்தியாசாலை முன்பாக)
கொக்குவில் மேற்கு.

குடும்பத்தினர்.
021 222 2314

## மரண அறிவித்தல்

**திருமதி கருணாவதி (சாந்தி) செல்வநாதன்**



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 27.04.1962 | 19.08.2016 |

52/10. பாரதி வீதி. கச்சேரி கிழக்கைப் பிறப்பிடமாகவும், 18/4-1 சீனியர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கருணாவதி (சாந்தி) செல்வநாதன் 19.08.2016 வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-இராசமணி தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான சுந்தரம்-பசுபதம் தம்பதியரின் அன்பு மருமகளும், செல்வநாதன் (ஓய்வுநிலை நிர்வாக கிராம உத்தியோகத்தர்- காரைநகர்) அவர்களின் பாசமிகு மனைவியும். விஜிந்தினி, வினோத்குமார் (ஆசிரியர்-யா/ இந்து ஆரம்ப பாடசாலை). திலக் (ஆசிரியர்-கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி, ஞானோதயம்). டினோசன், கபில்ராஜ், றபீசன் ஆகியோரின் அன்புத் தாயும், பிரபாகரன், பிரதீபா (தாதிய உத்தியோகத்தர் - யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் மாமியும், சினமிக்காவின் அன்புப் பேர்த்தியும், கலாதேவி, சந்திரசேகர், இராஜசேகர், உதயசேகர், வத்சலாதேவி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற பழனிநாதன் மற்றும் பஞ்சாட்சரம், ஸ்ரெல்லா, பபிதா, கலாராணி ஆகியோரின் மைத்துனியும், தர்மலிங்கம், காலஞ்சென்ற நற்குணம் மற்றும் செல்வரட்ணம், சிவராசா ஆகியோரின் மருமகளும், மகேஸ்வரி, இராஜேஸ்வரி (சந்திரா) ஆகியோரின் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.08.2016) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 2.30 மணிக்கு தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

18/4-1, சீனியர் லேன்,
கலட்டி.

தகவல்: குடும்பத்தினர்.

(C25009) (10,17,18)

# வாக்காளராகப் பதிவு செய்ய இம்மாதம் 26 வரை வாய்ப்பு

## தவறாது அதனைப் பயன்படுத்துமாறு அமைச்சர் டெனீஸ்வரன் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக. 21
வாக்காளர் பதிவுகளை மேற் கொள்வதற்கு விசேடமாக மீண் டும் ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட் டுள்ளது. அந்தக் கால எல்லை எதிர்வரும் 26 ஆம் திகதியுடன் நிறைவடைகிறது. இந்தச் சந் தர்ப்பத்தை விட்டு விடாது ஜன நாயகத்தை நிலைநாட்ட வாக் குரிமையை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

இவ்வாறு வடக்கு மாகாண கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் வேண்டுகோள் விடுத்தார்.

வாக்காளர் பதிவுகளை மேற் கொள்ளுமாறு மாவட்ட செயல கங்கள் மற்றும் பிரதேச செயல கங்கள் விழிப்புணர்வுச் செயற் றிட்டங்களை முன்னெடுத்தன. கிளிநொச்சி மாவட்ட செய ல கத்துக்கு தேர்தல்கள் ஆணை யாளர் நேரடியாகச் சென்று விழிப்புணர்வுச் செயற்றிட் டத்தை ஆரம்பித்தார். வடக்கு மக் களது வாக்கு வீதம் குறைவ டைந்துள்ளது என்றும், அத னால் நாடாளுமன்ற உறுப்பினர் களின் எண்ணிக்கை குறை வடையலாம் என்று செய்திகள் வெளி யாகியிருந்தன.

> வாக்காளர் பதிவுகளை மேற் கொள்ளுமாறு மாவட்ட செயல கங்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் விழிப் புணர்வு செயற்றிட்டங்களை முன் னெடுத்தன. கிளிநொச்சி மாவட்ட செயலகத்துக்கு தேர்தல்கள் ஆணையாளர் நேரடியாகச் சென்று விழிப்புணர்வுச் செயற் றிட்டத்தை ஆரம்பித்தார்.

இது தொடர்பில் வடக்கு அமைச்சர் டெனீஸ்வரன் அறிக்கை விடுத் துள்ளார். அதில் தெரிவிக்கப்பட்ட தாவது:

எதிர்வரும் 26ஆம் திகதிக்குள் வாக் காளர்களாகப் பதிவுகளைச் செய் யவும். இலங்கை யர்களின் வாக் குரிமையை உறு திப்படுத்திக் கொள்ள ஏற்கனவே வாக் காளர்களை வாக்காளர் இடாப் பில் பதிவுசெய்யும் கால எல்லை கொடுக்கப்பட்டு அது நிறை வடைந்தது. சம்பந்தப்பட்ட திணைக்களத்துடன் தொடர்பு கொண்டபோது பெரும்பாலா னோர் தமது பதிவை மேற்கொள் ளாமல் இருப்பதை அறிய முடி கின்றது. அவ்வாறு பதிவுகளை மேற்கொள்ளத் தவறியவர்கள் எதிர் வரும் 26 ஆம் திகதிக்கு முன் பாக தத்தமது கிராம அலுவலர் களைத் தொடர்புகொண்டு வாக் காளர் இடாப்பில் பதிவுகளை மேற் கொள்ளுங்கள்.

பதிவுகளை மேற்கொள்வதால் மாத்திரமே நமது ஜன நாயக உரிமையான வாக்களிக்கும் உரிமையைக் கொண்டு எதிர் காலத்தில் நமது நாட்டின் சிறந்த ஆட்சியாளர்களைத் தீர்மானிக்க முடியும். தவறாது விசேடமாக வழங்கப்பட்டுள்ள குறித்த காலத் தினுள் அசட்டையாக விட்டு விடாது பதிவுகளை மேற்கொள் ளுங்கள் – என்றுள்ளது. (ரு-21)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக. 21
யாழ்ப்பாணத்தின் தொன்மை யான பாரம்பரியக் கலைகளை ஆவணப்படுத்தல் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சி களில் பங்கு பற்றுதல் தொடர் பான கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். பிரதேச செயலக மண் டபத்தில் நடை பெறவுள்ளது. ஆர்வமுள்ள வர்கள் நிகழ்வில் கலந்து கொண்டு பயனடைய முடியும் என்று பிரதேச செய லாளர் பொ.தயானந்தன் தெரிவித்தார். (ரு)

## தெய்வீக நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக. 21
நல்லூர் ஆலய பெருந்திரு விழாவை முன்னிட்டு ஆலயச் சூழலில் தெய்வீக இசை நிகழ்ச் சிகள் மற்றும் ஆன்மிக உரை கள் நடைபெறுகின்றன.

இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள 14 ஆம் நாள் திருவிழாவில் நல்லூர் முத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் மெஞ்ஞானம் காட்டும் விஞ் ஞானம் எனும் தலைப்பில் சைவப் புலவர் ஸ்ரீநந்திரனின் தெய்வீக சொற்பொழிவு மாலை 5 மணி முதல் இரவு 7.30 மணி வரை நடைபெறும்.

நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் துர்க்காதேவி இல்லத்தின் அனுசரணையில் தெய்வீக இசையரங்கம் மாலை 6.45 மணி முதல் இரவு 8 மணி வரை நடைபெறும்.

நல்லை ஆதீன மண்டபத்தில் மொடேர்ண் சர்வதேச இந்து ஆகம கலை, கலாசார நிறுவ னத்தின் தெய்வீக இசைச் சங் கமம் இரவு 7 மணிமுதல் 8 மணி வரை நடைபெறும். (ரு-ரி)

## நல்லூர் கந்தன் தேரை முன்னிட்டு விடுமுறை அறிவிக்க வேண்டும்

### இந்து சமயப் பேரவை கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக.21
வரலாற்றுப் புகழ்மிக்க நல்லூர் கந்தசுவாமி கோயிலின் தேர்த் திருவிழா எதிர்வரும் 31 ஆம் திகதி புதன்கிழமை நடை பெறவுள்ளது. அன்று அரச மற் றும் தனியார் நிறுவனங்களுக்கு விடுமுறை வழங்க வேண்டும் என்று இந்து சமய பேரவை யாழ்.மாவட்டச் செயலரைக் கோரியுள்ளது.

இது தொடர்பில் பேரவை அனுப்பியுள்ள செய்திக்குறிப் பில் தெரிவிக்கப்பட்டதாவது:

தேர்த் திருவிழாவில் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் மக்கள் மதவேறுபாடின்றி கூடி முருகப் பெருமானை வழிபட்டு வருவது வரலாற்றுக் காலம் தொட்ட மரபு. அந்நியர் ஆட்சிக் காலத்தில் இருந்து 2000க்கும் மேற்பட்ட யாத்திரிகர்கள் இந்த ஆல யத்தில் தங்கி வழிபடுவர் என்று அப்போதைய மாவட்டச்செயலர் அறிக்கை வெளியிட்டமை இந்த நேரத்தில் ஞாபகமூட்டத்தக்கது. இத்தகைய புனிதமான நிகழ்வில் ஏனைய மாவட்ட மக் கள் கூடுவதோடு யாழ். மாவட்ட மக்கள் முழுமையாக முருகப் பெருமானை வழிபட்டு வரு வதால் யாழ். மாவட்டத்தில் உள்ள அரச, அரச சார்பற்ற நிறுவனங்களை மூடி விடுமுறை நாளாகப் பிரகடனப்படுத்த தங்களுக்குள்ள அதிகாரத்தைப் பிரயோகிக்க வேண்டும். – என்றுள்ளது. (ரு-4)



2016ஆம் ஆண்டுக்காக சிறுபோக அறுவடை ஆரம்பித்துள்ள நிலையில் நேற்றுச் சனிக்கிழமை முல்லைத்தீவில் வயல்விழா கொண்டாடப்பட்டது. வயல் விழா முல்லைத்தீவு பன்னி ரெண் டாம் கண்டலில் நேற்றுக் காலை ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக நடைபெற்றது. நிகழ்வுக்கு வட மாகாண பிரதி விவசாய பணிப் பாளர், மேலதிக விவசாய பணிப்பாளர் (ஆராய்ச்சிப் பிரிவு), முல்லைத்தீவு பிரதி மாகாண விவசாய பணிப்பாளர், பரந்தன் நெல்லாராய்ச்சி நிலைய மேலாளர், விவசாயிகள், கமக்கார அமைப்புக்கள், தண்ணிமுறிப்பு விவசாயிகள் சம்மேளன உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ரு-21)

## ரயில் மோதி 6 மாடுகள் உயிரிழப்பு

தென்மராட்சி, ஒக.21
மிருசுவில் உசன் பகுதியில் தண்டவாளத்தைக் கடந்த ஆறு மாடுகளை ரயில் மோதி யது. மாடுகள் உடல் சிதறி சாவடைந்தன.

இந்தச் சம்பவம் நேற்றுமுன் தினம் மாலை நடந்துள்ளது.

அந்தப் பகுதியில் உள்ள வயல் களில் மேய்ச்சலுக்கு விடப்பட்ட மாடுகள் தண்டவாளத்தைக் கடக்கமுற்பட்டபோதுவிபத்துநடந் துள்ளது. சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான மாடுகளே உயிரிழந்தன. (ரு-9)

## மக்கள் நடமாடும் சேவையில் 600க்கும் மேற்பட்டோர் பயன்



யாழ்ப்பாணம், ஒக. 21
யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரியில் நேற்று இடம்பெற்ற நடமாடும் சேவையில் வெளி மாவட்டங்களில் வசிக்கும் யாழ். மாவட்ட முஸ்லிம் மக்கள் அதி களவில் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணம், சாவகச்சேரி, வேலணை ஆகிய மூன்று பிர தேச செயலகப்பிரிவுகளையும் உள்ளடக்கி நடமாடும் சேவை நடத்தப்பட்டது.

புதிய மீள்குடியேற்றப் பதிவுகள், காணி அற்றோர் காணிகளை கோருவதற்கான பதிவுகள், வீட்டுத் திட்டத்துக்கான பதிவுகள், வாழ்வாதார உதவிகளுக்கான பதிவுகள், யாழ் மாநகரசபை அலு வலகத்தின் சோலைவரி மதிப் பீடுகள், வீடமைப்புக்கான அனு மதி தொடர்பிலான பதிவுகள் போன்ற சேவைகள் அதில் வழங் கப்பட்டன. நடமாடும் சேவையில் சுமார் 600க்கும் மேற்பட்ட மக் கள் கலந்து கொண் டனர்.

நடமாடும் சேவையில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, வட மாகாண சபை உறுப்பினர் அய்யூப் அஸ் மீன், இமானுவெல் ஆனோல்ட் ஆகியோரும் கலந்து கொண் டனர். (ரு-4)

## முன்னாள் போராளிகள் தைரியத்துடன் மருத்துவ சோதனை செய்ய வேண்டும்

### வடக்கு சுகாதார அமைச்சர் கோரிக்கை

முல்லைத்தீவு, ஒக. 21
முன்னாள் போராளிகள் மனம் தளராது மன தைரியத்துடன் வடக்கு மாகாண சுகாதார அமைச் சால் முன்னெடுக்கப்பட்டுள்ள மருத்துவ பரிசோதனைகளில் கலந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாண சுகா தார அமைச்சர் ப.சத்தியலிங்கம் கோரினார்.

முல்லைத்தீவு மூங்கிலாறு பிர தேச வைத்தியசாலையில் புதி தாக நிர்மாணிக்கப்பட்ட வெளி நோயாளர் பிரிவுக் கட்டடத் தொகு தித் திறப்பு விழா நேற்றுமுன் தினம் நடைபெற்றது. அதில் உரை யாற்றும்போது இவ்வாறு தெரி வித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

முன்னாள் போராளிகள் புனர் வாழ்வு நிலையங்களில் சிகிச் சைக்கு உட்படுத்தப்பட்டிருக்க லாம். ஊசிபோடப்பட்டிருக்கலாம். தற்போது ஊசி விச. ஊசியாக இருக்கலாமா? என சந்தேகம் அவர்கள் மத்தியில் ஏற்பட்டுள் ளது. அவர்களை நம்பி அவர் களின் குடும்பங்கள் உள்ளன. அவர்களுக்கு எந்தவிதமான வேலைவாய்ப்பும் இல்லை. கடின உழைப்பின் மத்தியில் வாழ்ந்து வரும் அவர்களை இவ்வாறான செய்திகள் மனதள வில் பாதிப்புக்குள்ளாக்கியுள் ளன என்று கருதுகின்றேன்.

அன்று போராளிகளாக இருந் தவர்கள் பின்னர் சிறைக்கைதி களாக மாற்றப்பட்டனர். அவர் கள் உயிருடன் மீண்டு வரு வோமா என்று காத்திருந்த வர்கள். இன்று உயிருடன் வந்தி ருக்கின்றார்கள். முன்னாள் போராளிகள் உயிரிழந்திருந் தால் அவர்கள் தொடர்பான தக வல்களை வழங்குமாறு அறி வித்துள்ளோம், அப்போது தான் அவர்கள் எந்த வைத்தியசாலை யில் உயிரிழந்தார்கள் என் பதையும் அவர்களின் மருத்துவ அறிக்கைகளையும் ஆராய முடியும். 5 மாவட்டங்களிலும் உள்ள முக்கிய வைத்தியசாலை களில் முன்னாள் போராளி களுக்கு அடிப்படைப் பரிசோத னைகளை மேற்கொள்வதற் கான ஏற்பாடுகளை செய்திருக் கின்றோம். அவற்றில் அவர்கள் பங்குகொள்ள வேண்டும் – என் றார். (ரு-21)

# 2 மாதங்களில் ஐரோப்பாவுக்கு 600 தொன் மீன்கள் ஏற்றுமதி

கொழும்பு, ஓக.21

இலங்கை மீது விதிக்கப்பட்டிருந்த மீன் ஏற்றுமதித் தடையை ஐரோப்பிய ஒன்றியம் நீக்கியதை அடுத்து கடந்த 2 மாதங்களில் 600 தொன் மீன்கள் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. கடந்த ஜூன் மாதம் 21ஆம் திகதி முதல் ஓகஸ்ட் மாதம் 14ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இந்த மீன் ஏற்றுமதி இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு கடற்றொழில் மற்றும் நீரியல்வள அபிவிருத்தி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டதாவது- பன்னாட்டு ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட வழிமுறைகளைப் பின்பற்றுமாறு முன்னைய அரசு மீது 2014ஆம் ஆண்டின் ஓகஸ்ட் மாதம் 14ஆம் திகதி ஐரோப்பிய ஒன்றியம் அறிவுறுத்தல் விடுத்திருந்தது. அந்த அறிவுறுத்தலைப் புறக்கணித்தமையால் 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கான இலங்கையின் மீன் ஏற்றுமதிக்குத் தடை விதிக்கப்பட்டது.

> பன்னாட்டு ரீதியாக அங் கீகரிக்கப்பட்ட வழிமுறைகளைப் பின்பற்றுமாறு முன்னைய அரசு மீது 2014 ஆம் ஆண்டின் ஓகஸ்ட் மாதம் 14 ஆம் திகதி ஐரோப்பிய ஒன்றியம் அறிவுறுத்தல் விடுத்திருந்தது. அந்த அறிவுறுத்தலைப் புறக்கணித்தமையால் 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கான இலங்கையின் மீன் ஏற்றுமதிக்குத் தடை விதிக்கப்பட்டது.

தற்போதைய அரசு ஆட்சிக்கு வந்த ஒருவருட காலத்திற்குள் அது குறித்து உடனடியாகச் செயற்பட்டு, ஐரோப்பிய ஒன்றியத்துடன் பேச்சு நடத்தி, மீன் ஏற்றுமதிக்கானதடையைத் தளர்த்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டது.

கடந்த ஜூன் மாதம் 21 ஆம் திகதி இலங்கை மீதான மீன் ஏற்றுமதித் தடையை ஐரோப்பிய ஒன்றியம் நீக்கியது. இந்த வருடத்தின் ஜனவரி மாதம் தொடக்கம் ஓகஸ்ட் மாதம் வரையான காலப்பகுதியில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் உட்பட ஏனைய நாடுகளுக்கு 7 ஆயிரத்து 490 தொன்கள் மீன்களை இலங்கை ஏற்றுமதி செய்துள்ளது - என்று தெரிவிக்கப்பட்டது. (ற-4)




# வடக்கு எழுத்தாளர்களின் நூல்களை உள்ளூராட்சிச் சபைகளுக்கு வழங்குக

## எழுத்தாளர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 21

வடக்கு மாகாணத்தில் உள்ள எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் விதத்தில் மாகாண சபையினர் எழுத்தாளர்களின் நூல்களைக் கொள்வனவு செய்து உள்ளூராட்சிச் சபைகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாணத்தில் உள்ள எழுத்தாளர்கள் கேட்டுள்ளனர்.

அவர்கள் தெரிவித்ததாவது:

அண்மைக்காலமாக பல்வேறு எழுத்தாளர்களால் எழுதப்பட்ட நூல்கள் வெளியாகி வருகின்றன. அவற்றைச் சந்தைப்படுத்தக்கூடிய வாய்ப்புக்கள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. வட மாகாண உள்ளூராட்சிச் சபைகளின் கீழ் 50க்கும் மேற்பட்ட பொது நூல் நிலையங்கள் காணப்படுகின்ற போதிலும் வெளியிடப்படும் நூல்களைக் கொள்வனவு செய்ய உள்ளூராட்சி சபைகள் முன் வருவதில்லை.

உள்ளூர் எழுத்தாளர்களை ஊக்குவிக்க நூல்களைக் கொள்வனவு செய்ய வேண்டுமென அந்தந்த உள்ளூராட்சி உதவி ஆணையாளர்களால் உள்ளூராட்சிச் சபைகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. நூல்களுடன் செல்லும் எழுத்தாளர்களிடம் நிதிப் பற்றாக்குறையாக உள்ளது எனக்கூறி அவர்களிடம் நூல்களைக் கொள்வனவு செய்ய உள்ளூராட்சிச் சபைகள் பின்னடிக்கின்றன. மாகாணத்தில் உள்ள அனைத்து உள்ளூராட்சிச் சபைகளுக்கும் அலைந்து நூல்களை விற்பனை செய்ய முடியாமல் ஏமாற்றமடைகின்றோம்.

எழுத்தாளர்களை ஊக்குவித்து மேலும் பல நூல்கள் உருவாகவேண்டுமெனில், அவர்களால் வெளியிடப்படும் நூல்கள் விற்பனை செய்யப்பட வேண்டும். பொது மக்கள் நூல் நிலையங்களில் நூல்களைப் பெற்று வாசித்து வருவதால் புதிதாக வெளியிடப்படும் நூல்களை கொள்வனவு செய்ய பொது மக்கள் முன்வருவதில்லை. மாகாணத்தில் உள்ள பொது நூலகங்களில் போடுவதற்கு உள்ளூராட்சிச் சபைகளும் கொள்வனவு செய்வதில்லை. புதிய எழுத்தாளர்கள் பெரும் நிதி நெருக்கடிக்கு உள்ளாகின்றனர். வட மாகாண சபை எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் செயற்பாடாக பொது நூலகங்களுக்கு வழங்கவென எழுத்தாளர்களிடமிருந்து ஒரு தொகுதி நூல்களைக் கொள்வனவ செய்து அவற்றை உள்ளூராட்சிச் சபைகள் ஊடாக பொதுநூலகங்களுக்கு வழங்க முன்வரவேண்டும் - என்றனர். (ற-9)

# வளர்த்த கடாக்கள் பாய்ந்ததால் தனியே பணியாற்றுகின்றேன்

## அமைச்சர் ரிசாத் தெரிவிப்பு

மன்னார், ஓக. 21

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் நாங்கள் வளர்த்த கடாக்கள் எங்கள் மார்பிலே பாய்ந்ததால் நாம் எதிர்பார்த்த இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களை அடைய முடியாத நிலை உருவாகியது. தற்போது தன்னந்தனியனாக நின்று பணியாற்றுகின்றேன்.

இவ்வாறு அமைச்சர் ரிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

முசலிப் பிரதேச வெள்ளிமலை மன்-பதியுதீன் மகா வித்தியாலத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

வடக்கிலே போராலும் அதன் விளைவுகளாலும் பாதிக்கப்பட்டு நிர்க்கதியாகி நிற்கும் மக்களின் வேதனைகளைப் போக்குவதற்காகவே மீள்குடியேற்றச் செயலணி உருவாக்கப்பட்டுள்ளது. அதில் எந்த விதமான குறுகிய நோக்கங்களும் கிடையாது.

நீண்டகாலமாக அகதிகளாக வாழும் தமிழ், முஸ்லிம் மக்களின் வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்பி, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த வேண்டுமென்ற உயரிய நோக்கிலேயே இந்தச் செயலணியை அமைப்பதற்கான யோசனை ஒன்றை நாம் கொண்டுவந்தோம்

பாதிக்கப்பட்ட மக்களின் விடிவுக்காகப் பல்வேறு பிரயத்தனங்களைமேற்கொண்டு கஷ்டங்கள் சிரமங்களுக்கு மத்தியில் இந்தச் செயலணியை உருவாக்கினோம். அதற்கு முட்டுக்கட்டை போடுவது தர்மமல்ல. நாங்கள் யதார்த்தத்தை விளக்கி முறையாக அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்ததாலேயே அதை அங்கீகரித்து என்னையும் அதில் இணைத் தலைவராக்கினார்கள். நான் எந்தவொரு மதத்துக்கோ எந்த ஓர் இனத்துக்கோ. எந்தவொரு பிரதேசத்துக்கோ அநீதி இழைத்தவன் அல்லன். அவர்களின் நல்வாழ்வுக்காக மனப்பூர்வமாக உழைத்திருக்கின்றேன்.

என்னை வீழ்த்த வேண்டும், எனது செயற்பாடுகளை முடக்க வேண்டும், எனது வேகத்தைக் குறைக்க வேண்டும், அவமானப்படுத்த வேண்டும், பணிகளைச் சீர்குலைக்க வேண்டும் என்ற நோக்கிலே ஒரு கூட்டம் மூர்க்கத்தனமாக அலைந்து திரிகின்றது. நான் சார்ந்த சமூகத்திலும் ஒருசிலர் என்னைப் பழிவாங்குவதற்காக துடித்துக் கொண்டுள்ளனர் - என்றார். (ற-21,56)

# காணாமற் போனோர் பணியகம் பன்னாட்டு வரவேற்பைப் பெறவே

## பிரதியமைச்சர் அஜித் பீ பெரேரா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 21
சர்வதேசத்தின் வரவேற்பைப் பெற்றுக்கொள்வதற்கே காணாமற்போனோர் விவகாரங்களைக் கையாளும் அலுவலகம் உருவாக்கப்பட்டது.
இவ்வாறு பிரதியமைச்சர் அஜித் பீ பெரேரா தெரிவித்தார்.
செய்தி ஊடகத்துக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
காணாமற் போனோர் பிரச்சினை தொடர்பில் விரைவில் தீர்வு அவசியம். அவர்களின் உறவினர்கள் இதனை எதிர்பார்த்துள்ளனர்.
காணாமற் போனோரின் உறவினர்களின் நம்பிக்கையை வெற்றிகொள்ளக்கூடிய வகையில் இது தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். காணாமற்போனோர் தொடர்பான விடயத்தில் சர்வதேசத்தின் நம்பிக்கையை வெல்வது அவசியம் – என்றார்.
(ற-4)



பதின்மூன்றாம் நாள் உள்வீதியுலா

## பதின் நான்காம் திருவிழா

### நல்லைப் பதிக்கரசே

நல்லைப் பதிக்கரசே நல்லைப் பதிக்கரசே
நல்ல வழிகாட்டி நாயேனை யாண்டிடடா
கல்லை நிகர்த்தமனங் கரையவருள் தந்திடடா
எல்லையில்லா வின்பத்தே யெனையிருத்தி வைத்திடடா
ஆன்மாவை நித்தியமென் றறியவரந் தந்திடடா
வீண்பா வனையெல்லாம் விலக்க வருள்தாடா
மாயப் பிணியகல மருந்தெனக்குத் தந்திடடா
காயங் குலையுமுன்னர் காண வருள்தாடா
சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டிடடா
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டிடடா
எல்லா ரையுமீச னிடத்திலே காட்டிடடா
எல்லா ரிடத்திலும் ஈசனைக் காட்டிடடா
கொல்லா வரமெனக்குக் குவலயத்தில் வேணுமடா
எல்லா ரிடத்துமன்பாய் இருப்பதெனக் கிச்சையடா
என்றும் மறவா வரமெனக்கு வேணுமடா
குன்றுபோ னிற்கக் குருவே வரந்தாடா

தவத்திரு சிவயோக சுவாமிகள்

### மயிலேறி விரைந்து வந்திடு

அல்லல்தனை அகற்றி அவலநிலை போக்கி
பொல்லாத வினையனைத்தும் பொடிப்பொடியாக்கிவிடும்
தொல்லூராம் நல்லூரில் இல்லாள் இருவரொடு
பல்காலம் அரசாளும் பார்போற்றும் வடிவேலா
கல்லாதோர் மனமும் உனைப்பாடக் கனிந்துருகும்
எல்லோரும் உனைக்கண்டு உவகையொடு பூரிப்பர்
மல்லாரி நாதமது மங்களமாய் ஒலித்துநிற்க
வல்லோனே! மயிலேறி விரைந்துவா துயர்களைய...

சு. சித்திராங்கன், தாவடி.

### சின்னச்சின்ன காவடி சிங்காரக்காவடி

வேல்முருகா வேல்முருகா வேல்முருகா வேல்
வேல்முருகா வேல்முருகா வேல்முருகா வேல்
தோள்களில் காவடிகள் ஏறி ஆடுதே
என்வாழ்வுக்கருள் பவனை எண்ணி ஆடுதே
உலகிலே நாங்கள் செய்த பாவம் யாவுமே
பஞ்சாப் பறக்கும் என்றுபரவி ஆடுதே
சின்னசின்ன காவடி சிங்காரக்காவடி
சின்ன வண்ண முருகனுக்கு சின்ன சின்ன காவடி
வண்ண வண்ணக்காவடி வந்தாடும் காவடி
வள்ளி மணவாளனுக்கு வண்ணமயில் காவடி

செல்வி அபிராமி கனகசபை

## வலி நிவாரண மாத்திரைகள் விற்ற இருவர் கைது

கொழும்பு, ஓக. 21
புற்றுநோயாளர்களுக்கு மாத்திரம் கொடுக்கப்படும் உயர் வலி நிவாரண மாத்திரைகளைப் போதை மாத்திரைகள் என விற்பனை செய்து வந்த குற்றச்சாட்டில் சிலாபத்தில் 2 பேரைக் கைது செய்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அவர்களிடமிருந்து அந்த மாத்திரைகளும் கைப்பற்றப்பட்டன.
புத்தளம் மாவட்ட உணவு ஆய்வாளர்கள் மற்றும் இந்த முற்றுகையை மேற்கொண்டதாகக் கூறப்பட்டது.
இந்த முற்றுகையின் போது 800 மாத்திரைகள் கைப்பற்றப்பட்டதுடன், 10 மாத்திரைகளை 2 ஆயிரத்து 500 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளமையும் தெரியவந்துள்ளது.
இந்த மருந்துகள் தனியார் மருந்தகங்களில் விற்பனை செய்வதற்குத் தடை செய்யப்பட்டுள்ளதுடன், அரச மருந்தகங்களில் மாத்திரம் விற்பனை செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக மேலதிக விசாரணைகளில் தெரியவந்தது.
சந்தேக நபர்கள் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர்.
(த-4)



அருட் தந்தை ஜோர்ஜ்ஜின் குருத்துவ வெள்ளிவிழா திருப்பலி வழிபாடு கிளிநொச்சி புனித திரேசா ஆலயத்தில் நேற்று நடைபெற்றது. குருத்துவத்தில் வெள்ளி விழாக்காணும் அருட் தந்தைகள் அழைத்து வரப்பட்டதைத் தொடர்ந்து ஆலயத்தில் விசேட வழிபாடு இடம்பெற்றது. அதில் யாழ்.மறைமாவட்டஆயர் பேரருட் திரு. ஜஸ்ரின்பேனாட் ஞானபிரகாசம் கலந்து கொண்டார். பெருந்திரளான அருட்பணியாளர்கள், திருச்சபை மக்கள் நிகழ்வில் கலந்துகொண்டனர். (ற)

## கணபதி ஹோமப் பெருவிழா இன்று

யாழ்ப்பாணம், ஓக. 21
நீர்வேலி ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் ஆலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு கணபதி ஹோமப் பெரு விழா இடம்பெறும்.
இதனையொட்டி இன்று ஆலயத்தில் விசேட பூசைகள், அபிசேகங்கள் நடைபெறும்.
(கு-17)

# தேசிய அரசை எதிர்த்ததாலேயே அமைப்பாளர்கள் நீக்கப்பட்டனர்

## தினேஷ் குணவர்த்தன சாடுகின்றார்

கொழும்பு, ஓக. 21
ஐக்கிய தேசிய கட்சியினதும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினதும் தேசிய அரசு என்ற திருமணத்தை எதிர்த்த ஒரே காரணத்துக்காகவே சுதந்திரக் கட்சியின் முக்கிய அமைப்பாளர்களே நீக்கப்பட்டுள்ளனர். இது பல்வேறு விடயங்களை எடுத்துக் காட்டுகின்றது.
இவ்வாறு கூட்டு எதிரணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது–
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஊடாக நாடாளுமன்றம் பிரவேசித்துள்ள சுதந்திரக் கட்சி அமைப்பாளர்கள் சிலரின் பதவிகள் நீக்கப்பட்டுள்ளன. பிரபலமான மற்றும் அர்ப்பணிப்புமிக்கவர்களைக் கொண்டே ஒரு கட்சியின் வளர்ச்சி தீர்மானிக்கப்படுகின்றது. கட்சிக்கான வாக்குகளை அதிகரிப்பதில் அமைப்பாளர்கள் முக்கிய பங்காற்றுகின்றனர்.
சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர்கள் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளோரும் கட்சிக்காக கடும் உழைப்பையும் அர்ப்பணிப்பையும்வெளிப்படுத்தியுள்ளனர். ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரின் கீழான தேசிய அரசில் சுதந்திரக் கட்சியினர் இடம் பெற்றதை எதிர்த்த ஒரே காரணத்துக்காக இந்த அமைப்பாளர்கள் நீக்கப்பட்டுள்ளனர். வேறு ஒரு காரணமும் இருப்பதாக தெரியவில்லை. இதுகடும்பாதிப்புகளை ஏற்படுத்தும் – என்றார்.
(ற-4)

# உலகின் பாரம்பரியத் தளங்களில் தம்புள்ள தங்க ஆலயம் உண்டு

## யுனஸ்கோ தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 21
உலகின் பாரம்பரிய தளங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள எட்டு தளங்களில் ஒன்றான தம்புள்ள தங்க ஆலயம் பட்டியலில் இருந்து எக்காரணம் கொண்டும் அகற்றப்படவில்லை.
இவ்வாறு யுனஸ்கோ அறிவித்துள்ளது.
ஐந்து சரணாலயங்களைக் கொண்ட சிறந்த முறையில் பாதுகாக்கப்பட்ட குகைக் கோவிலை 1991ஆம் ஆண்டு யுனஸ்கோ உலகின் பாரம்பரிய பிரதேசங்களில் ஒன்றாக பிரகடனப்படுத்தியிருந்தது. இரண்டாயிரத்து 100 சதுர மீற்றர் விஸ்தீரணத்தைக் கொண்ட இந்த பிரதேசத்தில் 157 சிலைகள் உள்ளன.
இது தொடர்பில் வெளியாகிய மாறுபட்ட தகவல்களை விளக்கும் நோக்குடன் அண்மையில் செய்தியாளர் சந்திப்பு ஒன்று நடத்தப்பட்டது. அதில் யுனஸ்கோவின் இயக்குநர் நாயகம் இரீனா பொக்கோவா மேற்கண்டவாறு தெரிவித்தார்.
தம்புள்ளை தங்க ஆலயம் சிறந்த முறையில் பாதுகாக்கப்படவேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார். இந்த விடயத்துக்கு யுனஸ்கோ பூரண ஆதரவை வழங்கத் தயாராக உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். பொலன்நறுவை, சிகிரியா மற்றும் கண்டி ஆகிய நகரங்களில் உள்ள கலாசார முக்கியத்துவம் வாய்ந்த முக்கோணத்திட்டம் என்பனவும் மேம்படுத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது. (ற-4)



# Abans

Authorized Reseller | Authorized Service Provider



ரு.2,500/- முதல் மாதாந்தம் செலுத்தி

iPhone 5 S ஒன்றை

இன்றே பெற்றுக்கொள்ளுங்கள்

ரு.49,999/-

*மாதமொன்றிற்கு ரு.2,500 + சம்பத் வங்கி கடனட்டைதாரர்க்கு 20 மாதம் வட்டியின்றிய கொடுப்பனவு மற்றும் ஒரு தவணைக்கட்டணம் இலவசம். ஸ்மார்ட் கைப்பேசிகளுக்கு கடனட்டை இல்லையெனினும் ஒரு தவணைக்கட்டணம்இலவசம்

நாடளாவிய ரீதியிலான அபான்ஸ் காட்சியறைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

துரித அழைப்புக்கு : 011-5999000

சங்கானை - 0212250106, சுன்னாகம் RC1- 0212240440, யாழ்ப்பாணம் RC1 - 0212220981, யாழ்ப்பாணம் RC2 - 0213202421, வவுனியா RC1 - 0242224878இ மன்னார் RC1 - 0232251193, மட்டக்களப்பு RC1 - 0652227895, மட்டக்களப்பு RC2 - 0652224218, கல்முனை RC1 - 0672229089, திருகொணமாளை RC1 - 0262226371

LG Life's Good

## பாரிய ஆடைசலவையில் ஈடுபட்டுள்ள உங்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான மிகச்சிறந்த தீர்வு

## LG கொமேர்சியல் வோசர்ஸ் அன்ட் டிரையர்ஸ்



upto 15 kg

F1069FD3S
ரு. 325,999

FH0C7FD3
ரு. 473,999

RV1329A4S
ரு. 190,999




### ஆயுள் நீடித்த பாவனை

- இன்வெர்டர நேரடி இயக்கி™,
- மல்டி டாம்பர் வைப்பிரேசன் ரிடக்சன்
- பிரீமியம் பவுடர் பூசப்பட்டது
- ஸ்டீல் கண்ரொல் பனல்
- ஸ்டெயின்லஸ் ஸ்டீல் டிரம்
- உறுதியான கண்ணாடி
- பல வெப்ப சிகிச்சை

### அறிவுதிறன்

- இலகுவாக திருத்தக்கூடிய அமைப்பு
- தளிப்பயனாக்கல் செயல்முறை திட்டம்
- எளிதான புரோகிரமிங்

### திறன்

- ஆற்றல் சேமிப்பு
- அடோமைசிங் அமைப்பு
- டியுப் சுத்திகரிக்கும் அமைப்பு
- போறிக்கப்பட்ட உள் டிரம்

HOTLINE 011 5 999 000 Abans.com us at www.facebook.com/abans

Abans

## மனைவி தாக்கி கணவன் சாவு

கொழும்பு, ஓக. 21
அப்புத்தளையில் கணவனைக் கொலை செய்த குற்றச்சாட்டில் 28 வயதுடைய பெண் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கணவன் மனைவிக்கு இடையில் இடம் பெற்ற கடுமையான வாய்த்தர்க்கத்தில்மனைவி தடி ஒன்றால் கடுமையாகக் கணவனைத்தாக்கியுள்ளார். கணவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுப் பின்னர் உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிய வந்துள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

(ற-4)

### பசுப்பால் விநியோகஸ்தர் தேவை

கலாசாலை வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள யாழ்கோ பாற்பண்ணையிலிருந்து யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேசசெயலர்,பிரிவுக்குட்பட்ட வீடுகளுக்கு காலை, மாலை இருநேரங்களும் பால், பைக்கற்பால் விநியோகிப்பதற்கு விநியோகஸ்தர்கள் தேவை. நேரில் தொடர்பு கொண்டு மேலதிக விவரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

(c 24994) (14,17,18)

021 321 2926
077 386 8572

பொதுமுகாமையாளர்.

### Russian Government Medical Colleges Admission 2016

Be a Highly Qualified DOCTOR



Smolensk State Medical University

- Recognized by - WHO / SLMC / BMC
- 100% English medium education
- Exclusive officials in Sri Lanka

Semminar and Enrollement with Univercity officials on 28th August at 9.30 a.m at Med Ed Consultancy

Further details :- Dr Silvester Persy 07777 48 405

No .250,Temple Road, Colombo 10
E mail :- mededconsult@gmail.com
Web :- mededcosult.com

Med Ed Consultancy

Tel / Fax :- 011 267 90 97
Mobile :- 077 699 66 62

### அசத்தலான , ஆடிமாத ஆடைத்தள்ளுபடி
## த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ் ஸ்தாபனத்தின்

வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க இம்மாத இறுதிவரை ஆடித்தள்ளுப்படி நீடிக்கப்பட்டுள்ளது. இன்றே விரையுங்கள் உங்கள் தெரிவுகளுக்கு



- சாறி (பட்டு கல்லுவைத்தது) 2500/=
- நெற்சாறிகள் 1000/=
- சாறிகள் 1500/=
- ஸ்கேட் வகைகள் 500/=
- பிளவுஸ் வகைகள் 250/=
- T. சேட் வகைகள் 250/=
- பஞ்சாபி வகைகள் 500/=
- ஜீன்ஸ்வகைகள் 500/=
- சேட் வகைகள் 500/=
- கொட்டன் சாறிவகைகள் 500/=
- 01 M சலஞ்சர்துணி 44" 100/=

மற்றும் அனைத்து ஆடை தினுசுகளுக்கும் விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படுகின்றன.

என்றும் எங்கும் இல்லாதவாறு புதுப்புது டிசைன்களில்

44, 42, பெரியகடை , யாழ்ப்பாணம்.

giz Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit (GIZ) GmbH

## SRI LANKAN - GERMAN DEVELOPMENT COOPERATION
## Admin & Finance Officer - Jaffna

The Deutsche Gesell schaftfür Internationale Zusammenarbeit (GIZ) is an international cooperation enterprise for sustainable development with worldwide operations. As a federally owned enterprise, we support the German Government in achieving its objectives in the field of international cooperation for sustainable development. GIZ has been working in Sri Lanka on behalf of the German Federal Ministry for Economic Cooperation and Development (BMZ) since 1956.

**Project Description:**

The Sri Lankan-German SME Development Programme is a multi-faceted programme jointly implemented by the Ministry of Finance, Sri Lanka, and GIZ. The SME sector has been identified by the Government of Sri Lanka as a catalyst for economic growth, job creation and regional development. The sector is therefore a key development priority of the Sri Lankan government. The Dairy Development Project Northern Province aims at improving milk production and income for dairy farmers in selected areas of Northern Province. Farmers in the area will be advised on techniques that will help them increase milk yield.

The project invites applications from highly motivated and committed professionals possessing a background in Admin & Finance, Tamil speaking and familiar with the dairy sector.

**A. Sphere of responsibility:**

- Attend to all administrative matters related to the dairy development project
- Support the project coordinator in report preparation for GIZ Sri Lanka
- Communicate on administrative issues with representatives of Cargills or other parties interested in the project
- Maintain proper Inventory Control System
- Correspond with the Project Advisor and the GIZ Country Office in Colombo as required
- Fund Management & Management Information
- Book Keeping
- Implementation of GIZ Financial Rules & Regulation
- Maintaining Relations with GIZ Officers and other related third party organizations

**B. Candidate Profile**

**Education:**

- Specialization in either Administration or Management
- CIMA/ ICA / ACCA part qualification (AAT completion)

**Knowledge and Experience:**

- 5+ years proven ability and admin experience (some exposure to dairy)
- Excellent working knowledge of MS Office
- Advanced knowledge in the use of financial software
- Good command of English and excellent command of Tamil
- Work with a high degree of independence and excellent interpersonal and customer service skills. Capable of multi-tasking and being a team player
- Ability to effectively and efficiently handle multiple tasks

**The successful candidate will enjoy a friendly and creative working environment, open corporate culture, competitive benefits, compensation and good policies of training and development.**

Qualified female applicants are strongly encouraged to apply.


**How to apply:**

Interested candidates should send a cover letter and comprehensive CV explaining their interest in the position, what they can bring to the job and the names and addresses (including telephone and email) of three referees who are knowledgeable about the candidate's professional qualifications and work experience to HR Unit, GIZ Office Colombo, 6, Jawatta Avenue, Colombo 5 or email togiz-hrsrilanka@giz.debefore cob **02 September2016**.

*We thank all applicants but only the short listed candidates will be contacted.*

(C/24990) (11.17.18)

# கண்ணீர் அஞ்சலி



பிறப்பு
21 . 05 . 1969

இறப்பு
18 . 08 . 2016

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை
வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர் வினாசித்தம்பி விக்னேஸ்வரன் (குலம்)**

எங்கள் அன்புத் தெய்வமே!
நீங்கள் எங்களுடன் வாழ்ந்தவரை எங்கள் குடும்பத்துக்கு இழப்புக்கள் எதுவுமில்லை
ஆனால் என்று எங்களை விட்டு உயிர் பிரிந்தீர்களோ
அன்றுடன் இழப்பதற்கே எங்களிடம் எதுவுமில்லை
மீண்டும் எங்கள் குடும்பத்துக்குள் ஓர் உயிரின் உறவாக வந்திடுவீர்களென்று
விழி நீர் சொரிய நாம் காத்திருக்கின்றோம்.....

பிரிவால் துயருறும்
இ.சிவலிங்கம் (சோமு)
நாகேஸ்வரி (இந்திரா) குடும்பத்தினர்.

ஸ்ரேசன் வீதி,
சாவகச்சேரி.

(வெ/3909) (11.18.)

# நீங்கா நினைவலைகள்

**7 ஆம் ஆண்டு** — **முதலாம் ஆண்டு**



**கணபதிப்பிள்ளை தம்பையா** — **சிந்தாமணி தம்பையா**

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் ஆனைப்பந்தி
யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட சிந்தாமணி
தம்பையாவின் ஓராண்டு நினைவஞ்சலியும் கண பதிப்பிள்ளை
தம்பையாவின் ஏழாம் ஆண்டு நினைவஞ்சலியும்

எம் அன்புத் தெய்வங்களே உங்கள் இருவரின் ஆத்மாக்கள் நல்லூரானின் திருவிழாவில் இறைவனடி சேர்ந்த காட்சியை எங்களால் மறக்க முடியவில்லையே! இறைவனடி சேர்ந்து ஓராண்டு ஆனாலும் ஏழாண்டுகள் ஆனாலும் உங்களின் அரும் பெரும் அன்புச் சேவைகள் எங்கள் மனதைவிட்டு அகல முடியாது உங்களின் ஆத்ம சாந்திக்காக இந் நினைவு நாளில் நல்லூரானின் அருள்வேண்டி பிரார்த்திக் கின்றோம்.

நாரந்தனை.

நாகலிங்கம்
குடும்பத்தினர்.

(கே. 3713) (45.7.3)

# விழிநீர் சொரியும் ஆறாம் (6) ஆண்டு நினைவலைகள்

## அமரர் சந்தணம் ஆச்சாரி சவுந்தரராஜன் ஆச்சாரி

(உரிமையாளர் - துர்க்கா நகைப்பூங்கா)




மண்ணில் 12.10.1954

விண்ணில் 28.08.2010

திதி: அபரபக்ஷ் சதுர்த்தி (21.08.2016)

அன்பிலே சிறந்தவராய் மண்ணிலே உதித்து
அமைவுற்ற வாழ்வினில் நறுமணம் பரப்பி
இல்லத்தின் விருட்சமாய் பாசநிழல் தந்தையாய்
உறவுகள் பேணிடும் கருணை வடிவமாய்
உரிமையாய் உணர்வை அன்பாய்ப் பகிர்ந்தே
விண்ணக வாழ்வை நாடியே சென்றீர்கள்
ஆறு ஆண்டுகள் பறந்தோடிச் சென்றதனால்
என்றென்றும் அவர் பாசம் போற்றியே பணிந்திடுவோம்



**குடும்பத்தினர்.**

**38, கில்னர் ஒழுங்கை,**
**கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.**

(சி.24991)(13.18)

## உடனடி வேலைவாய்ப்பு

கொழும்பில் உள்ள காட்சியறைகளுக்கும் தொழிற்சாலைகளுக்கும் ஆண் / பெண் உதவியாளர்கள் தேவை. ஒருநாள் சம்பளம் 1000/= முதல் 1500/= சம்பளம் இருவாரங்களுக்கு அல்லது மாதாந்தம் வழங்கப்படும். உணவு, தங்குமிடம் மிக குறைந்த விலையில் ஏற்பாடு செய்து தரப்படும். (c.25261) (14,17,18)

**077 378 4684/ 072 412 2851**
**077 089 1129/ 076 768 5724**

## சிறந்த வேலை வாய்ப்புகள் !

**ஆண், பெண் இருவருக்கும்**

தங்குமிடம், உணவு, பாதுகாப்புவசதி தொழில் வாய்ப்புகள் உண்டு. நாள் சம்பளம் 900 - 1500/= வழங்கப்படும். துறைமுகம், விமானநிலையம், யோகட்,ஐஸ்கிறீம், மேசன் நிறுவனங்களுக்கு வேலையாள்கள் தேவை. மாதசம்பளம் 25000 - 35000/= வேலை அடிப்படையில் வழங்கப்படும். (c.7888) (14,17,18)

**சக்யா 103 ஸ்ரேசன்றோட், வவுனியா.**
**077 843 0179 / 077 683 8226**

## பணியாளர்கள் தேவை

யாழ்நகரில் கையடக்கத்தொலைபேசி விற்பனை நிலையத்துக்கு பின்வரும் வேலையாள்கள் தேவை

* **விற்பனையாளர்** * **சீட்டை எழுதுனர்** * **கணக்காளர்**
* **மேற்பார்வையாளர்** * **கணினி** மற்றும் போட்டோ பிரதி வேலைதெரிந்தவர்

தகைமைகள் (G.C.E.O.L, A/L)
ஆண் - பெண் இருபாலாரும்

தொடர்பு: **யாழ்போன் சொப்**
(சி.2500) **இல.09, நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி,யாழ்ப்பாணம்.**
(13.18) **தொ.பே. 021 222 3817, 077 361 1282**

## சாயி சங்கீதா




சகல விதமான இசைக்கருவிகள், உதிரிப்பாகங்கள் உண்டு.

U.G. 53, பீப்பல்ஸ் பார்க், கேஸ் வேர்க் வீதி, கொழும்பு 11.
தொலைபேசி: 0112 384222 / 0727 834 834

**உங்கள் மனங்கவரும் சங்கீதக் கருவிகளை யாழ் நகரிலும் பெறலாம்.**

## இதோ உங்கள் அனைவருக்கும் ஒரு அரிய சந்தர்ப்பம்

## Floence Nighhtingaate (F.N.R)

# தாதியர் பாடசாலை

இப்பொழுது புத்தம் புதிதாக அனைத்து வசதிகளுடனும் மருதனார் மடத்தில் குறுகிய காலத்தில் மிகக் குறைந்த கட்டணத்தில் தாதியர் ஆகி தொழில் புரிய முடியும்.



**படித்துவிட்டு வேலை இன்றி இருக்கின்றீர்களா?**

**நிச்சயமாகத் தொழிலை இலக்காகக் கொண்ட பாடநெறி. ஒரு வருட பாடநெறி.**

- 3 மாதங்கள் தனியார் வைத்தியசாலையில் பயிற்சிகள். பின் தனியார் வைத்தியசாலையில் நிரந்தர வேலை வாய்ப்பு.
- இப்பாடநெறி ஊடாக வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதை அறியத் தருகின்றோம்
- தகைமைகள்:-
  O/L ஆறு பாடம் சித்தி.
  16 - 35 வயதுவரை.

**நேரம் :- திங்கள் முதல் வெள்ளி வரை**
**முற்பகல் 9.00 - பிற்பகல் 2.30 வரை**

**கிழமையில் இரண்டு நாள்கள் மட்டுமே வகுப்புகள் நடைபெறும்.**
**முந்திக்கொள்ளும் முதல் 10 பேருக்கு முற்பணம் குறைக்கப்படும்.**

- **MLT வகுப்புக்களும் நடைபெறும்.**
- தகைமைகள்:-
  A/L விஞ்ஞானம் (Bio Science)

**மேலும்**

- **அரசாங்க வைத்தியசாலை ஓய்வுபெற்ற தாதியர் மூலம் சிறந்த ஆலோசனை வழங்கப்படும்.**

தொடர்புகளுக்கு:- 077 718 6438 (ஜெ/3893) (11.18)
**web:- fnighingale.com**
கே.கே.எஸ்.றோட், மருதனார் மடம், யாழ்ப்பாணம்,
குறிப்பு:- ஆஞ்சநேயர் கோயில் அருகில் (RDB - BANK இற்கு மேல்)

## வாடகைக்கு
### தனியார் /களஞ்சிய சாலைக்கு

A9 வீதிக்கும் கேர தீவு வீதிக்கும் இடையில் கைதடிப் பிள்ளையார் கோயிலிலிருந்து 1km தூரத்தில் அமைந்துள்ள சுற்று மதிலுடன் கூடிய நன்கு விசாலமான வீடு வாடகைக்கு உண்டு தனியார் / களஞ்சியசாலைக்கு உகந்தது.

**தொடர்பு.0777493841**

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1979 கார்த்திகை 4 இல் பிறந்த பல்கலைக்கழக விரிவுரையாளருக்கு படித்த பண்பான மணமகள் தேவை. பாவம் 72 செவ்வாயில்லை. குறுகிய காலத்தில் விவாகரத்தானவர். (c 25258) (14,17,18)

**077 784 0262**

## CAREER OPPORTUNITY

We, Sarukaya construction (Pvt) Ltd is looking for suitable candidates against following positions for building /Treatment Plants Project.

01. Site Engineer (civil)
   (Degree Holder with 3 years Experience)
02. Technical Officer
   (NDT/HNDE/NCT Civil 3 year Experience or Equivalent)

**Your CV and Covering letter must be send to**
Email : **sarukaya10@gmail.com** Before 24th August 2016

Address: No.207, Navalar Road,Jaffna.
Fax No: 021 221 3663 (J 3857)(12.18)

## கல்வி நிலைய வேலைவாய்ப்பு

**9 கிளைகளைக் கொண்டு இயங்கி வரும் கல்வி நிறுவனத்திற்கு பின்வரும் பதவிகளுக்கு ஆள்கள் கோரப்படுகின்றனர்.**

* முன்பள்ளி ஆங்கில ஆசிரியர் (முன்பள்ளி Diploma முடித்தவர்கள், பழக விரும்புபவர்கள் விரும்பத்தக்கது)
* முன்பள்ளி தமிழ் ஆசிரியர் (முன்பள்ளி Diploma முடித்தவர்கள், பழக விரும்புபவர்கள் விரும்பத்தக்கது)
* முன்பள்ளி மேற்பார்வையாளர் (முன்பள்ளி அனுபவம் உள்ளவர்)
* கணினி நிலைய போதக ஆசிரியர் (Full Time,Part Time பெண் பிள்ளைகள் மட்டும்)
* Microsoft Office, Dtp,Tamil & English Typing (அனுபவம் உள்ளவர்கள், பழக விரும்புபவர்கள் விரும்பத்தக்கது)
* பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் (Full Time, Part Time தரம் - 1 தொடக்கம் தரம் 5 வரை கற்பிக்க கூடியவர்கள்)
* சிங்கள ஆசிரியர் (Full Time, Part Time)

மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கு பருத்தித்துறை வீதி புத்தூர், கே.கே.எஸ்.றோட் தெல்லிப்பழை, கே.கே.எஸ்.றோட், இணுவில் கே.கே.எஸ்.றோட், மல்லாகம் போன்ற இடங்களுக்கு ஆள்கள் தேவைப்படுகின்றனர். (சி.3926) (18.13)

**நேர்முகத் தேர்வு நடைபெறும் திகதி: 25.08.2016 வியாழக்கிழமை காலை 9.00 மணிமுதல் ந.ப.12.00 வரை நடைபெறும்.**

நேர்முகத் தேர்வுக்குரிய இடம்: Children's world (Preschool), Little Masters'Montesoori,Institute of Computer Studies சிவபதி, கே.கே.எஸ். றோட், இணுவில்.
(இணுவில் மத்திய கல்லூரிக்கு அருகில்)

நேர்முகத் தேர்வுக்கு சமுகமளிக்கும் போது தவறாது சுயவிவரக் கோவையும் கல்வித் தகைமை சான்றிதழ்களும் கொண்டு வருதல் வேண்டும். தொடர்புகளுக்கு: **077 747 4741**



# VACANCIES
## @ICBT JAFFNA CAMPUS

ICBT Campus is the leading private sector education service provider in Sri Lanka offering a range of International qualifications in association with some of the best universities and education service providers in UK.

- **Business Management Lecturer** (Full Time)
- **QS & Civil Lecturer** (Full Time)
- **English Lecturer** (Full Time)

**Requirements**

- Ideal candidate should hold a Degree in relevant field
- Master's Degree or Post Graduate Qualification and Previous experience in lecturing will be an added advantage
- Excellent command in English language
- Industrial experience will be an added advantage
- Good Presentation skills

**Applicants Should be Able to work on weekends**

Attractive remuneration package above industrial rates and host of other benefits await the right candidates. Please apply with a comprehensive resume with a photo and details of two non-related referees within 7 days of this advertisement. Please mention the position applied for on the subject line of the e-mail or on the top left corner of the envelope.

ICBT CAMPUS
**HR Manager**
No. 36, De Krester Place,
R.A. De Mel Mawatha, Colombo 04
hr@icbtcampus.edu.lk

## மரண அறிவித்தல்கள்

### நல்லதம்பி முத்துலிங்கம்



புங்குடுதீவு கிழக்கு, 11 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது நல்லூர் சங்கிலியன் வீதியில் வசித்து வந்தவருமான நல்லதம்பி முத்துலிங்கம் 18.08.2016 வியாழக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் அன்னலெட்சுமியின் (அன்னம்) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் அரவிந்தன்(கனடா), அன்பரசன்(கனடா), அருளானந், பிரமிளா, சுகந்தா ஆகியோரின் ஆருயிர்த் தந்தையும் ஜெயகுமாரி, பத்மலதா, நிசாந்தினி, அகிலன், செந்தூரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் பிரவீன், மகிழன், கிரிஷான், கபிலேஷ், டயனிதா, பரணீத், அக்ஷயா, டக்ஷிகா, தனிஷ், தேனுஷா, யாழவன் ஆகியோரின் பாசமுள்ள பேரனாரும் காலஞ்சென்றவர்களான மருதாம்பாள், விஜயரெத்தினம் மற்றும் மனோன்மணி, கருணாகரன், சிவபாக்கியம் ஆகியோரின் மூத்த சகோதரரும் காலஞ்சென்ற பரமசாமி மற்றும் நித்தியானந்தன், சரஸ்வதி, தங்கமலர், மகாலிங்கம், யோகநாயகி, மகாலிங்கம், நடனலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் அமரசிங்கம், பவளராணி, ஜெகதீஸ்வரி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.08.2016) ஞாயிற்றுக்கிழமை பி.ப ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**393/15, கோயில்வீதி,**
**நல்லூர்.**


**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 990 9721 / 077 737 4874**

### கனகரட்ணம் விஜயரட்ணம்

(Rtd.Research officer - Agriculture dept, ex-staff of Santhiyakam - Jaffna, ex-Consultant ministry of Agriculture Northern Province)

**தோற்றம்**
**07 . 09 . 1938**



**மறைவு**
**20 . 08 . 2016**

மாத்தளையைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரட்ணம் விஜயரட்ணம் நேற்று (20.08.2016) சனிக்கிழமை காலை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரட்ணம் - விஜயலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராசையா - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும், கமலாதேவியின் அன்புக் கணவரும், விஜயனியின் அன்புத் தந்தையும், அரவிந்தனின் அன்பு மாமனாரும், மகிழ்யாவின் அன்புப் பேரனும்,காலஞ்சென்றவர்களான விஜயாம்பிகை - தியாகராசா மற்றும் விஜயநாதன் - திரிசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், சோதிநாதன் - காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் வசந்தா தேவி - முருகையா ஆகியோரின் அன்பு மைத்துனரும், ராஜன், தம்பா பவானி, சாந்தி, சபேசன் ஆகி யோரின் அன்பு மாமனாரும், சாமினி, சுகந்தி, மினி ஆகியோரின் பெரிய சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.08.2016) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிற்பகல் ஒரு மணியளவில் கொக்குவில் இந்துமாயனத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**86/6, சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு,**
**கொக்குவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**அரவிந்தன் -077 756 6071**

(1/3927)
(11.18)

## மரண அறிவித்தல்கள்

### பூதப்பிள்ளை சுப்பிரமணியம்

(ஓய்வு பெற்ற விரிவுரையாளர் - ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி - அளுத்கம,
NIE - ஆரம்பப்பிரிவு தமிழ் பணிப்பாளர்,
GTZ - கல்விப்பிரிவு ஆலோசகர்)



**பிறப்பு**
**24.12.1940**

**இறப்பு**
**17.08.2016**

மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் மஹரகமவை வசிப்பிடமாகவும் கொண்ட பூதப்பிள்ளை சுப்பிரமணியம் 17.08.2016 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பூதப்பிள்ளை - மயிலு தம்பதிகளின் அன்புப் புதல்வனும் நாகேந்திரம் - அருமைமுத்து தம்பதியரின் அருமை மருமகனும் நந்தாவதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான தெய்வானை, நாகலிங்கம், சங்கரப்பிள்ளை, வேலுப்பிள்ளை மற்றும் கந்தையா ஆகியோரின் அன்புச் சகோதரனும் திலகவதி, அருமைரத்தினம், நவரத்தினம், குலரத்தினம் மற்றும் திலகரத்தினம் ஆகியோரின் மைத்துனரும் உமாசுதன், கோபி சுதன், சர்மிளா ஆகியோரின் அன்புத் தந்தையும் கன்னியா குமாரி, காயத்ரி, பார்த்தீபன் ஆகியோரின் மாமனாரும் காருண்யா, அச்சுதன், ஆராதனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 18.08.2016 வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மஹரகம மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**429, மங்கள மாவத்தை,**
**மஹரகம.**

**தகவல்:**
**மகன்கள்: உமாசுதன்,**
**கோபிசுதன்**

**077 350 6707**

### சின்னத்தம்பி அருள்பிரகாசம்

(Former Samuel & Sons Ltd.)



கட்டைவேலி கிழக்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வைமன் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி அருள்பிரகாசம் கடந்த (15.08.2016) திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான K.V.சின்னத்தம்பி (ஆசிரியர்) - நல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான M.A கந்தப்பு(ஆசிரியர்) - அனா சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகனும் கிருபாநிதியின் (கிருபா) அன்புக் கணவரும் பிரியதர்ஷினி(பிரியோ - கனடா), அருள்நேசன்(நேசன் - பாதுகாப்பு உத்தியோகத்தர் United moters & LB Finance) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மகேந்திரராஜா(கனடா), அனுஜா(Rainbow Kids' School Kopay - Principal) ஆகியோரின் அன்பு மாமனாரும் லக்ஷிதா - அகிலன்(லண்டன்), சலுஜா - யாலேந்திரன்(கனடா), பிரசன்னா மகேந்திரராஜா(கனடா), டினோகா ஷோன்(கனடா), பென்ஜமீன் அருள்நேசன் (Sampath Bank Vavuniya), றோதா அனுடிலிஷியா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேரனும் திருமதி அருள்ராஜா(பராநிதி - கொழும்பு), Dr.பரமோதயன்(லண்டன்), Dr.திருமதி நந்தன் (தயாநிதி - லண்டன்) திரு. ஞானோதயன் (தெல்லிப்பழை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தற்போது இவரின் மகனின் இல்லத்தில் (கோப்பாய் வரதராசன் Sir)வைக்கப்பட்டுள்ளது. இவரது நல்லடக்க ஆராதனை நாளை (22.08.2016) திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக கொட்டடி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கோப்பாய் தெற்கு,**
**கோப்பாய்.**

**தகவல்:**
**அ.அருள்நேசன்(மகன்)**

**021 223 0133/ 075 737 9238**

## மாதகல் கிராம வளர்ச்சி குறித்து கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக 21

மாதகல் கிராமத்தின் வளர்ச்சி தொடர்பாக தமிழரசுக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசாவுடன் கலந்துரையாடல் ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4. 30 மணிக்கு மாதகல் அரசடி சித்தி விநாயகர் கோயில் அருகாமையில் உள்ள மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழரசுக்கட்சியின் மாதகல் ஒருங்கிணைப்பாளா வி.சுப்பிரமணியம் இதனைத் தெரிவித்தார்.

ஒருங்கிணைப்பாளர் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கலந்துரையாடலில் மாதகல் கிராமத்தின் வளர்ச்சி பற்றியும், கிராமத்துக்குத் தேவையான அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்றித் தரும்படியும் கலந்துரையாடப்படவுள்ளது என்றும், மாதகல் பிரதேசத்தில் பல்வேறு அமைப்புக்களில் அங்கம் வகிப்போர் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொள்வர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ற-ரி)

## மாநாட்டுக்கு வராவிட்டால் உறுப்புரிமையும் பறிக்கப்படும்

கொழும்பு, ஓக. 21

சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதி மற்றும் மாவட்ட அமைப்பாளர் பதவிகளிலிருந்து நீக்கப்பட்டுள்ள உறுப்பினர்கள் கட்சியின் எதிர்வரும் 65 ஆவது வருட விழாவில் கலந்துகொள்ளாது போனால் அவர்களின் கட்சி உறுப்புரிமையும் பறிக்கப்படும் என அந்தக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

குருணாகலில் நடைபெறவுள்ள சுதந்திரக் கட்சியின் 65 ஆவது வருட நிறைவு விழாவுக்கு அமைப்பாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்டவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

அவர்கள் கூட்டத்தில் கலந்துகொள்கின்றார்களா? இல்லையா? என்பது குறித்துக் கட்சி அவதானமாக இருக்கின்றது என்றும், அவர்கள் சமுகமளிக்காவிட்டால் அவர்களது கட்சி உறுப்புரிமை நீக்கப்படும் என்றும் அந்தக் கட்சியின் முக்கிய அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

(ற-4)


விட
24
அம்சங்கள்
அதிகமாக
Hero
Hero DASH
வைப்ரண்ட் ஓரேஞ்
ஸ்போர்ட்ஸ் செட்
டெக்னோ ப்லூ
227,999* ரூபாவிலிருந்து
சிறப்பு வசதிகள்
1.மேலதிகமான எரிபொருள் நிரப்பி
2.இணை லொக் எரிபொருள் கட்டுப்படுத்தி மூடி மற்றும் இருக்கை திறப்பு
3.USB சார்ஜிங் போர்ட்
4.ப்பூட் லேம்ப்
5.சேவிஸ்குரிய இண்டிகேட்டர்
6.தலைக்கவசம் தொங்கவிடும் சாதனம்
7.முன்னால் பொருள் வைப்பதற்கான கொக்கி
8.இரு ஸ்பிரிங் முக்கிய ஸ்டேண்ட்
அதி சிறந்த வடிவமைப்பு
9.அலோய் சக்கரங்கள்
10.டிஜிட்டல் அனலொக்குடைய வேகமானி
11.டைட்டானியம் மப்பர் கவர்
12.இரு நிறங்களில் வெளிப்பாட்டு கண்ணாடிகள்
13.LED டைல் லேம்ப்
14.இரு விதமான சீட் அமைப்பு
அற்புதமான பயண வசதி
15.டெலிஸ்கோப்பிக் போர்ட் ப்ரண்ட் சஸ்பென்சன்
16.12" பெரிய முன் சக்கரம்
உயர் பாதுகாப்பு
17.நகர்த்த இயலாது
18.பாஸ் ஸ்விட்ச்
19.எப்பொழுதும் ஹெட் லைட் இயக்கத்தில் காணப்படும்
20.சிறந்த வடிவமைப்பு மற்றும் பாதுகாப்பிற்கான பொசிசன் லேம்ப்
ஏனையவை
21. 5 வருடகால உத்தரவாதம்.
22. 12V 5Ah ஆற்றல் வாய்ந்த பெற்றரி
23. ஹெட் லேம்ப் பொசிசன்
24. உயர் ஆற்றலுடைய 8.3BHP,111CC இயந்திரம்
Hero Cup
SRI LANKA VS AUSTRALIA ODI SERIES 2016
5
WARRANTY
0115777000
Facebook.com/HeroMotoCorpSriLanka
நாடளாவிய ரீதியிலுள்ள அபான்ஸ் - ஹீரோ காட்சியறைகள்
மற்றும் அங்கீகாரம் பெற்ற ஹீரோ முகவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.
Abans


பழைய TV ஐ புதுப்பிப்பதற்கு
இப்பொழுது செலவாவது
Sri Lanka Telecom
ரூ. 2,500/-
மட்டுமே.
திகில் நிறைந்த Movies, துணிகரச் செயல்கள் நிறைந்த Sports, குடும்பப் பாங்கான Teledrama போன்ற நூற்றுக்கணக்கான நிகழ்ச்சிகள் மற்றும் பல வசதிகளுடன்...
இச்சலுகை 2016 செப்டம்பர் 15 வரை மட்டுமே.
CATCH UP TV
VIDEO ON DEMAND
PICTURE IN PICTURE
RAIN PROOF
PEO TV
TV பார்க்க சிறந்த வழி
1212
Follow us on
*நிபந்தனைகளுக்கு உட்பட்டது.




## நாமலின் நிறுவன பணிப்பாளரை கைது செய்ய இன்டர்போல் உதவி

### பெற்றுக்கொள்ளுமாறு கொழும்பு நீதிமன்று உத்தரவு

கொழும்பு, ஓக. 21

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவுக்குச் சொந்தமான கவர்ஸ் கோப்பரேட்டர்ட் கம்பனியின் பணிப்பாளராகச் செயற்பட்டுத் தற்பொழுது வெளிநாட்டில் தலைமறைவாகியுள்ளார் என்று கூறப்படும் இரோஷ டி சில்வா என்பவரைக் கைது செய்வதற்கு இன்ரர்போல் (சர்வதேச பொலிஸார்) உதவியைப் பெற்றுக் கொள்ளுமாறு கொழும்பு நீதிமன்று உத்தரவிட்டது.

நிதி மோசடி தொடர்பான பொலிஸ் விசாரணைப் பிரிவு முன்வைத்த காரணங்களை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட கொழும்பு மேலதிக நீதிவான் நிஷாந்த பீரிஸ் நேற்றுமுன்தினம் உத்தரவை விடுத்துள்ளார்.

நாமலுடைய நிறுவனத்தில் மற்றுமொரு பணிப்பாளராகக் கடமையாற்றும் சுஜானி போகொல்லாகமவின் மருத்துவ அறிக்கையொன்றை நீதிமன்றத்துக்குச் சமர்ப்பிக்குமாறும் நீதிபதி உத்தரவிட்டார்.

கடந்த அரசின் காலத்தில் நாமலின் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின்போது அரசுக்கு 45 லட்சம் ரூபா நட்டம் ஏற்படுத்தப்பட்டது என்று தெரிவிக்கப்படும் வழக்கு தற்பொழுது விசாரணையில் உள்ளது. இதன் தொடராக நேற்று இடம்பெற்ற வழக்கு விசாரணையின் போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ற-4)

## பதவி விலகுவேன் என்று அமைச்சர் நவீன் எச்சரிக்கை

### நிதி அமைச்சுடன் ஏற்பட்ட முரண்பாட்டால்

அமைச்சுப் பதவியை விட்டு விலகப் போகின்றேன் என்று பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் நவின் திஸாநாயக்க எச்சரித்துள்ளார்.

தேயிலைச் சபைக்கு வழங்கிய 60 மில்லியன் ரூபா நிதியை தமது அமைச்சுக்கு பாரப்படுத்தும் நிதியமைச்சின் நடவடிக்கைகளைக் கண்டித்தே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

தேயிலை சபையில் இருந்து நிதி அமைச்சு நிதியைப் பெற்றுக்கொண்டு அதனைத் தமது அமைச்சின் ஊடாகச் செலுத்தக் கூறுகின்றமையை ஏற் றுக் கொள்ள முடியாது. இவ்வாறான நிலையில் அமைச்சுப் பதவியைத் தொடர முடியாது. தேயிலைச் சபையின் விளம்பரத்துக்காகப் பெறப்பட்ட இந்த நிதியானது செஸ் வரியின் மூலம் பெறப்பட்டது.

இது அரசின் நிதியல்ல. இது சிலோன் முத்திரையைக் கொண்ட தேயிலையை பிரசித்தப்படுத்துவதற்காகவே பயன்பட்டது. அதுதான் நல்லாட்சியின் கொள்கையாக இருந்தால் அதற்கு நாம் உடன்படப் போவதில்லை - என்றார். (ற-4)




Anchor
மேன்மையை
நோக்கிச் செல்வோம்
முடியாது என்பதைத் தவிர்ப்போம்!
சிறந்த எதிர்காலத்திற்கு வழி கூறும்
பிரமாண்டமான நிகழ்ச்சியில்
நீங்களும் இணைந்து கொள்ளுங்கள்!
2016
ஓகஸ்ட்
28
பி.ப. 4.00 மணி முதல் காலி முகத்திடலில்
அனுமதி இலவசம்!
பிரபல நட்சத்திரங்கள் பங்குபற்றும் வேடிக்கை வினோத நிகழ்வுகள்
உலகை வென்ற சாதனையாளர்களை நேரடியாக சந்திப்பதற்கு
தொழில்நுட்பம் நிறைந்த விசித்திர அனுபவங்கள் ஏராளம்
காற்றாடி கண்காட்சி மற்றும் போட்டிகள்

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ஐந்தாமாண்டு புலமைப்பரிசில் பரீட்சை; அரசின் அவதானம் மிக அவசியம்

இன்று ஞாயிற்றுக்கிழமை, இருபத்தொராம் திகதி, ஐந்தாம் ஆண்டு மாணவர்களுக்குப் புலமைப் பரிசில் பரீட்சை. அதனை முன் னிட்டு பத்துவயதான மாணவர், மாணவிகள் பாடசாலைகளில் "பிழிந்து" எடுக்கப்படுகிறார்கள் என்று பெற்றோர்கள் மனம் வெதும்புகிறார்கள்.

மாணவர்களின் கெட்டித்தனத்தைச் சோதிக்கும் வகையில், பாடவிதானம் தவிர்ந்த பொது அறிவு சார்ந்த விடயங்களே பரீட்சை வினாக்களில் கனத்துப் பெருத்து நிற்கின்றன.

அதனால் பாடசாலைகளில் மட்டுமன்றி, தனியார் கல்வி நிலையங்களில் நடத்தப்படும் விசேட வகுப்புகளிலும் பயில வேண்டிய தேவை கட்டாயம் என்றாகிவிட்டது.

அவற்றின் விளைவு சிறுவர்களுக்குப் போதிய ஓய்வில்லை. பயிற்றுவிக்கப்படும் பாடங்களை பரீட்சையில் ஒப்புவிக்கும் தேவையே அவர்களின் முதன்மைச் செயற்பாடாக மாறும் பாதிப்பு ஊதிப் பெருக்கிறது.

அதேவேளை--

தமது பிள்ளைகளை எப்பாடு பட்டும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெறச் செய்தாக வேண்டும் என்ற வேகமான மனநிலை பெற்றோர்களைத் தொற்றிக் கொள்கிறது.

அதனால்--

மாணவர்கள் மட்டுமன்றி, அவர்களின் பெற்றோர்களும் ஆலாய்ப்பறந்து அல்லாடுகிறார்கள். தனது பிள்ளை, புலமைப் பரிசில் பரீட்சையில் அதிக புள்ளிகள் பெற வேண்டும் என்பதற்காக "ஓடித்திரிகிறார்கள்." எனலாம்!,

ஒரு வகையில், தமது பிள்ளைகள் பரீட்சையில் தோற்றுவிடக் கூடாது என்ற ஓர்மத்துடன் தமக்குள்ள சகலவகை சார்ந்த வளங்களையும் பயன்படுத்துகின்றனர்.

இந்த நாட்டின் கல்விமுறையும், பொது அறிவுத்தேடலும், மாணவர்களை வெறும் புத்தகப் பூச்சிகளாகவே வைத்திருந்தன; வைத்துள்ளன. பரீட்சைகளில் அதிக புள்ளி கிடைத்தால் போதும், வாழ்வியல் சார்ந்த வேறு விடயங்களில் அக்கறையுடன் செயற்பட வேண்டும் என்பதில் அலட்சியமாக, காலத்தை ஓட்டுகிறார்கள்.

அரசு, கடந்தவாரத்தில், ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கு-ஐந்தாம் வகுப்புப் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு -- தனியார் வகுப்புகள் நடத்துவதற்கு பிரத்தியேக வகுப்புகள் நடத்துவதற்குத் தடைவிதிக்கப்படும் என்று அறிவித்திருந்தது.

அந்தக் கடைசிநேர அறிவுறுத்தல் குறித்து மாணவர்களின் பெற்றோர்களுக்கு போதிய தகவல் கிடைத்திருக்குமோ என்பது பெரும் சந்தேகத்துக்கு உரியதே!

கல்வித்துறை சார்ந்த கல்வியியலாளர்களில் பெரும்பான்மையினர், ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை நிறுத்தப்பட வேண்டும் என்று கருத்து வெளியிட்டு உள்ளதும் இங்கு தொட்டுக் காட்டப்பட வேண்டியதாகும்.

இனிவரும் காலத்திலாவது அது கருத்தில் கொள்ளப்பட்டு, செயல்முறைக்கு வந்தாக வேண்டும்.

நல்லாட்சி அரசு, இப்போதிருந்தே தனது செயற்பாட்டைத் தொடங்கும் என்று எதிர் பார்க்கலாமா?

# கவனிப்பாரில்லாத நிலையில் வீணாகும் வடபகுதியின் இயற்கை வளங்கள்

சேரலாதன்

> அரசு நினைத்தால் வட பகுதியைச் செழிக்க வைத்துவிடலாம். அநுராதபுரம் வரை வந்து விட்ட மகா வலி நீரைத் தெற்குப் பக்கமாகத் திறந்து விடுவது பெரிய காரிய மல்ல. ஆனால் அதற்கு மனம் இருக்க வேண்டும்.

இலங்கையின் வட பகுதியில் காணப்படுகின்ற இயற்கை வளங்கள் பல பயன்படுத்துவற்கு எவருமில்லாத நிலையில் வீணாகிப் போவதைக் காண முடிகின்றது. இவற்றைச் சிறப்பாக பயன்படுத்துவதன் மூலமாக வருவாயை ஈட்ட முடியுமென்பதுடன், பலருக்குத் தொழில் வாய்ப்பையும் வழங்க முடியும்.

இலங்கை வித்தியாசமான சீதோஷ்ண நிலைகளைக் கொண்டதொரு நாடு. மலை நாட்டில் அமைந்திருக்கும் நுவரெலியா, ஹற்றன் மற்றும் இவற்றோடு இணைந்த பிரதேசங்கள். அதிக குளிரான பிரதேசங்களாகும். வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் தமது ஓய்வு காலத்தை இனிமையாகக் கழிப்பதற்கு இந்தப் பிரதேசங்களை நாடிச் செல்கின்றனர். இதனால் இந்த இடங்கள் மிகச் சிறந்த சுற்றுலாத் தலங்களாகவும் மாறிவிட்டன.

ஆனால் இலங்கையின் வடபகுதி வெப்ப வலயமாகக் காணப்படுகின்றது. இங்கு மலைகள், ஆறுகள், நதிகள் என்பன இல்லை. மழை நீரை எதிர்பார்த்துக் காத்திருக்கும் குளங்கள் மட்டுமே காணப்படுகின்றன. மழை நீர் இல்லாவிட்டால் இந்தக் குளங்கள் வறண்டு போய் விடுகின்றன. நெற்செய்கை கூடமழை நீரை நம்பியே மேற்கொள்ளப்படுகிறது.

அரசு நினைத்தால் வடபகுதியைச் செழிக்க வைத்துவிடலாம். அநுராதபுரம்வரை வந்துவிட்ட மகாவலி நீரைத் தெற்குப் பக்கமாகத் திறந்துவிடுவது பெரிய காரியமல்ல. ஆனால் அதற்கு மனம் இருக்கவேண்டும்.

வட பகுதியின் வறண்ட மண்ணுக்கு இயற்கை அளித்த பெரும் செல்வம் பனை வளமாகும். பனைகளால் கிடைக்கின்ற பயன்கள் ஏராளமானவை. மழை காலத்தில் விதைகளை நட்டு வைத்தால் போதும். பின்னர் நீர் இறைக்கத் தேவையில்லை. ஆண், பெண் என்ற இரண்டு வகையாக பனை மரங்கள் காணப்படுகின்றன. பெண்பனைகள் காய்களைத் தருகின்றன. இந்தக் காய்கள் ஓரளவு பருவத்துக்கு வந்ததும் அவற்றிலிருந்து இதமான சுவையான நுங்கு கிடைக்கின்றது. ப்னம் பாளைகளிலிருந்து பெறப்படுகின்ற கள் மருத்துவக் குணங்களைக் கொண்டிருப்பதாகக் கூறுகின்றனர். தற்போது பனங்கள் போத்தல்களில் அடைக்கப்பட்டு விற்பனைக்கு விடப்படுவதையும் காணமுடிகின்றது. மேலும் பனங்கள்ளிலிருந்து பனஞ் சாராயமும் தயாரிக்கப்படுகின்றது. இதில் குறைந்த அளவிலேயே மதுசாரம் உள்ளதால் தீமையும் குறைவாகவே உள்ளது. பதநீர் பருகுவதற்கு மிகவும் இனிமையாக இருக்கும். சிறுவர் முதல் பெரியவர்கள் வரை இதை விரும்பிப் பருகுவார்கள் . பனம் பழத்தைப் பிசைந்து எடுக்கப்படும் கழி பல்வேறு வகையான உணவுப் பதார்த்தங்களைத் தயாரிப்பதற்குப் பயன்படுகின்றது. பனங்கழியிலிருந்து பனாட்டும் தயாரிக்கப்படுகின்றது. பனங்கழியை எடுத்ததும் பனம் விதைகள் பாத்தியில் இட்டுப் பராமரிக்கப்படுகின்றன. பனங்கிழங்குகள் இந் தப் பாத்திகளிலிருந்துதான் கிடைக்கின்றன. பனங்கிழங்கு உண்பதற்கு மிகவும் சுவையுடையது. இதைப் பச்சையாகக் காயவைத்து ஒடியல் தயார் செய்யப்படுகின்றது. இந்த ஒடியலைக் கொண்டு தயாரிக்கப்படும் கூழ் மிகவும் பிரசித்தமானது. மேலும் ஒடியலை இடித்து மாவாக்கி பிட்டு போன்ற உணவுகளும் தயாரிக்கப்படுகின்றன. அவித்த பனங்கிழங்கைக் காயவைத்துப் பெறப்படும் புழுக்கொடியல் பலராலும் விரும்பி உண்ணப்படுகின்றது. பனையிலிருந்து கிடைக்கும் பதநீரைக் கொண்டு கருப்பட்டி தயாரிக்கப்படுகின்றது. மருத்துவக் குணங்கள் பலவற்றை இது கொண்டுள்ளது.

அனைத்துக்கும் மேலாக பனை ஓலை மற்றும் ஈர்க்கிலிருந்து ஏராளமான பொருள்கள் தயாரிக்கப்படுகின்றன. இவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலமாகப் பெருமளவு அந்நியச் செலாவணியைச் சம்பாதிக்க முடியும்.

பனையின் பயன்கள் முழு அளவில் பெறப்படுவதாகத் தெரியவில்லை. பனையின் அபிவிருத்திக்கென ஒரு சபை இயங்கி வருகின்றபோதிலும் அதன் செயற்பாடுகள் பெயரளவுக்கு மாத்திரமே இடம்பெறுவதை அவதானிக்க முடிகின்றது.

வறண்ட பிரதேசமாக இருந்தாலும் இலங்கையின் வடபகுதி இயற்கை வளங்களால் நிரம்பிக் காணப்படுகின்றன. இவை சுற்றுலாப் பயணிகளை பெரிதும் கவரக்கூடியன. சுற்றுலா மையங்கள் அமைக்கப்படுமானால், இங்கு பலர் அவற்றின் மூலமாக வருமானத்தை ஈட்ட முடியும்.

முன்பெல்லாம் பருத்தித்துறை கிழக்குப் பகுதியில் அபரிமிதமாகக் காணப்படுகின்ற மணலை மூலப்பொருள்களைக் கொண்டு கண்ணாடிப் பொருள்களைத் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அது கைகூடிவரவில்லை.

இதைவிட நாட்டின் ஏனைய பகுதிகளைவிடச் சிறந்த கடல் வளம் வடபகுதியில் காணப்படுகின்றது. முறையான திட்டங்க்ள் வகுக்கப்பட்டு மீன்பிடித் தொழில் ஊக்குவிக்கப்படுமாயின், இங்கிருந்து வெளிநாடுகளுக்கு மீன்களை ஏற்றுமதி செய்ய முடியும்.

வடபகுதியில் கிடைக்கின்ற பழவகைகளுக்கு நாட்டின் ஏனைய பகுதிகளில் மட்டுமல்ல வெளிநாடுகளிலும் பெரும் கிராக்கி உண்டு. அதிலும்யாழ்ப்பாணத்து மாம்பழங்கள் தனித்துவமான மதிப்பைக் கொண்டுள்ளன. ஆனால் மாமரங்கள் இங்கு முறையாக அமைக்கப்பட்டு பராமரிக்கப்படுவதில்லை. இதனால் மாம்பழங்களின் விளைச்சலும் குறைவாகவே காணப்படுகின்றது. இதிலும் கவனம் செலுத்துவதன் மூலமாகப் பெரும் பயனைப் பெறமுடியும்.

இவ்வாறு வடபகுதியில் குவிந்து கிடக்கின்ற வளங்களை உரிய வகையில் பயன்படுத்தமுடியுமாயின் இந்தப்பகுதியில் வாழ்கின்ற மக்கள் தொழில் வாய்ப்புக்களைப் பெறுவதோடு அதிக வருமானத்தையும் ஈட்டிக் கொள்ள முடியும்.





> கடந்த பொதுத் தேர்தலில் ரணில் தலைமையிலான ஐ.தே.கட்சியுடன் போட்டியிட்டுத் தமது பொதுஎதிரணித் தரப்பு தோல்வி கண்ட வேளை, தாம் அந்தத் தோல்விக்குப் பொறுப்பேற்பதாக மகிந்த தெரிவித்திருந்தார்.

சிங்களமூலம்
மவ்பிம
தமிழில் வீ.எஸ்.ரீ

# நீல யானைகள் எந்தத் தரப்பில்...?

**1977** பொதுத் தேர்தலில் சிறிமாவோ தோல்வியுற்றதன் பின்னர் அவர் கலந்து கொண்ட கூட்டத்தில் ஜே.வி.பியினர் குண்டுத்தாக்குதல் மேற்கொண்டனர்.

இதனால் சிறிமாவோ அச்சமடைந்ததென்னவோ உண்மைதான். ஜே.ஆருடன் பேசி பாதுகாப்பை மேலும் பலப்படுத்துவிக்குமாறு உறவினர்கள் கேட்டுக் கொண்ட போதிலும், தாம் ஜே.ஆரிடம் ஒருபோதும் மண்டியிடப் போவதில்லை எனக்கூறி சிறிமாவோ அந்த யோசனையை ஏற்க மறுத்துவிட்டார். 1980ஆம் ஆண்டில் தமது பிரஜா உரிமையைப் பறிக்க ஜே.ஆர் நடவடிக்கையை மேற்கொண்ட வேளையிலும் முன்வைக்கப்பட்ட அதேவித யோசனையை, சிறிமாவோ கண்டிப்புடன் மறுத்து விட்டார். 1965ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தல் தோல்வியையடுத்தும் சிறிமாவோ தங்குவதற்கு வசதியான இடம் இல்லாதிருந்த வேளையில், அவரை அலரிமாளிகையில் தங்குமாறு டட்லி சேனநாயகா கூறியபோதிலும், தாம் தமது எதிரிகள் எவரிடமும் உதவிபெறப்போதில்லை எனக்கூறி சிறிமாவோ மறுத்து விட்டார்.

தமது ஜனாதிபதிப் பதவியை இழந்த பின்னர், மகிந்த, தமக்குத் தேவைப்படும் அனைத்தையும் ரணிலுடன் பேசியே பெற்று வருகிறார். ஜனாதிபதித் தேர்தலில் தோற்றபின்னர் மகிந்த, ரணிலையே தொடர்பு கொண்டு பேசினார். ஆனால் உண்மையில் நீண்ட காலமாக தமது அரசியல் உயர்வுக்காக ஒத்துழைப்பு வழங்கிச் செயற்பட்ட மைத்திரிபால சிறிசேனவுடன்தான் அவர் தொடர்பு கொண்டு பேசி இருக்க வேண்டும். ஆனால் அவர் ரணிலுடன் தொடர்பு கொண்டு போக்குவரத்து வசதியை ஏற்படுத்திக் கொண்டு தமது சொந்த ஊருக்குச் சென்று அங்கு வைத்துத் தாம் ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளை ஏற்றுக் கொள்ளவில்லை என்று கருத்து வெளியிட்டிருந்தார்.

கடந்த பொதுத் தேர்தலில் ரணில் தலைமையிலான ஐ.தே.கட்சியுடன் போட்டியிட்டுத் தமது பொதுஎதிரணித் தரப்பு தோல்வி கண்ட வேளை, தாம் அந்தத் தோல்விக்குப் பொறுப்பேற்பதாக மகிந்த தெரிவித்திருந்தார். அது மட்டுமன்றி, கனவான் தனத்துடன் ரணில் பிரதமராகப் பதவியேற்ற நிகழ்விலும் மகிந்த கலந்துகொண்டார். இலங்கையின் அரசியல் வரலாற்றில் தேர்தலில் வெற்றி யீட்டிய கட்சியின் தலைவர் பதவிப்பிரமாணம் மேற்கொண்டு பதவி ஏற்ற நிகழ்வில், தேர்தலில் தோல்வியுற்ற எந்தவொரு கட்சியின் தலைவரும் கலந்து கொண்டதில்லை. 1956ஆம் ஆண்டுக்குப் பின்னர் 2005 ஆம் ஆண்டு வரையான கால இடைவெளியில் இடம் பெற்ற தேர்தல்களில் வெற்றிபெற்றோரது பதவியேற்பு நிகழ்வுகளில், அவர்களை எதிர்த்துப் போட்டியிட்டுத் தோல்வியைத் தழுவிக் கொண்டோர் பங்கு கொண்டதில்லை. ஆனால் கடந்த ஆண்டில் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் வெற்றியீட்டிய ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் அதன் தலைவர் ரணில் பிரதமராகப் பதவிப் பிரமாணம் செய்த நிகழ்வில் மகிந்த கலந்து கொண்டிருந்தார். மகிந்தவின் ஆதரவாளர்களால் சிங்கம் என வர்ணிக்கப்படும் மகிந்த, இந்த விதம் ரணிலின் முன்னால் மண்டியிட்டதேன்? என்ற கேள்வி பல தரப்புக்கள் மத்தியிலிருந்தும் எழுப்பப்பட்டன.

தமது மகனான நாமல் பொலிஸாரால் கைது செய்யப்பட்டபோது, மகிந்த அது குறித்து ரணிலுடனேயே பேசினார். தமது பாதயாத்திரையின் முடிவில் கூட்டம் நடத்துவதற்கு மைதானம் ஒதுக்கித் தருமாறு மகிந்த ரணிலையே கோரினார். ஆயினும் அவரது கூட்டு எதிரணியினர் இரவு பகலாக ரணிலின் ஆட்சியைக் கவிழ்ப்போம் எனக் கூக்குரலிட்டு வருகின்றனர். பாதயாத்திரையின் நோக்கம்கூட ரணிலின் அரசை வீழ்த்துவதேயாகும்.

உண்மையில் மகிந்த தமது தேவைகள் குறித்த மைத்திரிபாலவிடமே கோரிக்கைகளை முன்வைத்திருக்க வேண்டியதே நியாயமாகும். சுதந்திரக் கட்சியின் தலைவரான மைத்திரிபால சிறிசேனவிடம், கட்சி யின் போசகரான மகிந்த உதவி கோராமல், சுதந்திரக் கட்சியின் எதிரியாகக் கொள்ளப்படும் ரணிலிடம் உதவி கோரியமை குறித்துப் புரிந்துகொள்ளாத சுதந்திரக் கட்சிக்காரர் உண்மையான சுதந்திரக் கட்சிக்காரரே அல்லர். ஜே.ஆரிடம் எந்தவொரு உதவியும் கோரமாட்டேனென அன்று உறுதியாயிருந்த சிறிமாவோவின் துணிச்சலைப் பாராட்டிய சுதந்திரக் கட்சிக்காரர்கள், இன்று ரணிலிடம் பாதயாத்திரைக் கூட்டம் நடத்த மைதானம் வழங்கக் கோரிய மகிந்தவுடன் பாதயாத்திரை மேற்கொண்டனர் என்பதை நம்ப இயலாதுள்ளது.

சரி, இந்த நிலையில், ரணிலுடன் தொடர்புகளைப் பேணி உதவிபெற்றுக் கொண்டு, ரணிலின் தலைமையிலான இன்றைய அரசைக் கவிழ்ப்பதெப்படி? மைத்திரி தரப்பில் இருந்துகொண்டு, ரணிலின் தலைமையிலான அரசில் அமைச்சுப் பதவிகளை வகிக்கும் சுதந்திரக் கட்சியின் பழைய புள்ளிகளைக் கூட்டு எதிரணியினர் நீலயானைகள் என விமர்சித்துக் கேலி செய்கின்றனர். மகிந்தவால் சுதந்திரக்கட்சித் தலைவராக ஏற்றுக் கொள்ளப்பட்ட மைத்திரிபால மற்றும் கட்சியின் மத்திய செயற்குழு மேற்கொண்ட தீர்மானம் காரணமாகவே அவர்கள் அந்தவிதம் அமைச்சர் பதவிகளை ஏற்றுள்ளனர். மகிந்த அந்தத் தீர்மானத்துக்கு எதிராக நீதிமன்றம் செல்லவில்லை. இரு கட்சிகளும் இணைந்து தேசிய அரசை நிறுவி ரணில் பிரதமராகப் பதவியேற்ற நிகழ்வில் மகிந்தவும் கலந்து கொண்டிருந்தார். அதற்குத் தமது எதிர்ப்பை அவர் வெளிப்படுத்தவில்லை. இந்த அரசில் அமைச்சுப் பதவிகளை வகிக்கும் சுதந்திரக் கட்சி பிரமுகர்கள், ரணிலிடம் எத்தகைய உதவிகளையும் கோருவதில்லை. அவர்கள் ஜனாதிபதியிடமே தமது தேவைகள் குறித்துப் பேசுகின்றனர். மகிந்தவும் அவரது பொது எதிரணித் தரப்பினருமே ரணிலின் பின்னால் உதவி கோரிச் செல்கின்றனர். அந்த வகையில் முற்றுமுழுதான நீலயானைகள், கூட்டு எதிரணித் தரப்பிலேயே உள்ளனர். சுதந்திரக் கட்சியின் தீவிர ஆதரவாளர்கள் அது குறித்து உணர்ந்து கொள்ளும்வேளை வெகுதொலைவில் இல்லை.

## வெற்றியை மட்டுப்படுத்திய ரீதியில் கொண்டாடுதல் சிறப்பு

இன்று நாடளாவிய ரீதியில் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை நடைபெறுகிறது. பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவச் செல்வங்கள் கடந்த பல மாதங்களாக, குறித்த பரீட்சைக்கான தயார்ப்படுத்துதல்களில் தம்மை ஈடுபடுத்தி வந்துள்ளனராயினும், அவர்களது வயதைக் கருத்தில் எடுக்கையில் அத்தகைய தயார்ப்படுத்தல்கள் அனைத்தும் பெற்றோர்களதும், ஆசிரியர்களதும் வழி காட்டுதல்களின் மூலமே முன்னெடுக்கப்பட்டன என்பது கண்கூடு.

அவர்களுக்கு குறித்த பரீட்சைக்கான கற்பித்தல் பயிற்சிகளை, செயற்பாடுகளை முன்னெடுத்த ஆசிரியர்களது எதிர்பார்ப்பு, குறிக்கோள், எந்த விதத்திலாவது தாம் கற்பிக்கும் பாடசாலையூடாகப் பரீட்சையில் தோற்றும் மாணவர்களில் பெரும்பாலோர் குறித்த பரீட்சைக்கான வெட்டுப் புள்ளிக்கு மேல் புள்ளிகள் பெற்றுச் சித்தியடைவதன் மூலம் தாம் கற்பிக்கும் பாடசாலைக்குப் பெயரும் புகழும் பெற்றுத் தருவார்கள் என்பதுடன், தமது தனிப்பட்ட புகழுக்கும் வழி வகுப்பார்கள் என்ற எதிர்பார்ப்பும் அவர்களிடம் இருப்பதை உணர இயலும்.

அதே வேளை குறித்த மாணவர்களது பெற்றோர்களது எதிர்பார்ப்போ, அதி விசாலமானது. எவ்விதமாவது தமது பிள்ளைகள் குறித்த பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்றுச் சித்தியடைந்து தமது கௌரவத்தைக் காப்பாற்றிவிட வேண்டுமென்ற பெரு விருப்பு அவர்களைத் தொடர்ச்சியாக பரீட்சையில் தோற்றவுள்ள தமது பிள்ளைகளை இரவு பகல் எந்த நேரமும் உற்சாகப்படுத்தியோ, கரைச்சல் கொடுத்தோ, கண்டித்தோ பரீட்சைக்கு அவர்களைத் தயார்ப்படுத்தும் முனைப்பில் தமது பசி தூக்கத்தையும் மறந்து செயற்பட வைப்பதைக் காண முடிகிறது.

ஆனால் பாவம், அந்தச் சின்னஞ்சிறிசுகள் தமது எதிர்கால கல்வி உயர்ச்சி குறித்த அக்கறை ஊட்டப்பட்டாலும், இயற்கையாகவே அவர்களது வயதுக்கு ஏற்ற வகையில் அமையும் விளையாட்டு, ஓய்வு என்பவற்றின் மீதான அவர்களது விருப்பு வலோற்காரமாக மழுங்கடிக்கப்படுவதால், மனோநிலை ரீதியில் அவர்கள் ஒரு சோர்வு மனப்பான்மைக்கும், எரிச்சல் உணர்வுக்கும் உட்பட நேர்வதாக விமர்சனங்கள் அந்தந்த வேளைகளில் எழுவதுண்டு. ஆயினும் கல்விப் புலத்தில் ‘இளமையில் கல்வி சிலையில் எழுத்து’ என்ற முதுமொழிக்கமைய, இளம் வயதில் கற்றலில் ஏற்படுத்தப்படும் ஆர்வம்,ஊக்கம் மாணவர்களை அவர்களது உயர் கல்வியில் திறமையும் தேர்ச்சியும் பெற ஊன்றுகோலாய் அமையும் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டியதும் நியாயமானதே.

நான் இந்த வாசகர் கடித மூலம் ஆசிரிய சமூகம், மற்றும் பெற்றோர் தரப்பினருக்கு விடுக்க விரும்பும் வேண்டுகோளைக் குறிப்பிடவே இத்தனை பீடிகைகளும்.

பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களில் குறிப்பிட்ட ஒரு சதவிகிதத்தினரே, தேவையான வெட்டுப்புள்ளிக்கு மேலாக புள்ளிகள் பெற்று அதனால் பயனடைகின்றனர். அந்த விதம் புள்ளிகளை ஈட்டாத மாணவச் செல்வங்கள் திறமை குறைந்தவர்களெனவோ, பாடங்களைக் கிரகிப்பதில் மட்டமானவர்களென்றோ எடைபோடுதல் தவறான தொன்றாகும். எனவே பரீட்சையில் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சியைப் பெற்ற மாணவர்களை ஹீரோக்கள் ஆக்கிப் பார்க்க முயல்வதை விடுத்து, அவர்களது வெற்றியை கட்டுப்படுத்தப்பட்ட, மட்டுப்படுத்தப்பட்ட விதத்தில் கொண்டாடுவதன் மூலம், குறித்த பரீட்சையில் எதிர்பார்க்கப்படும் மட்டத்தை எட்டத் தவறுவதன் மூலம் மனச்சோர்வு, மன வெப்பியாரத்துக்கு உள்ளாகும் ஏனைய மாணவச் செல்வங்களது மன நிலையில் ஏமாற்ற உணர்வு தலைதூக்குவதைத் தவிர்ப்பதற்கு மேற்குறிப்பிட்ட தரப்பினர் முயல்வது நியாயமானதும், இன்றைய காலத்தின் தேவையும் என்பதை யாவரும் ஏற்றுக் கொள்வீர்கள் என்பது எனது நம்பிக்கை.

பொ.பரராசா
கோண்டாவில்.

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர். முகவரி. தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.



SINGER
யாழ்
FIESTA
ஓர் அற்புதமான அனுபவம்
50% வரை
கழிவு
கண்காட்சியும் வர்த்தக சந்தையும்
ஆகஸ்ட்
20
21
22
23
காலை 09.30 - இரவு 09.00 வரை
யாழ்ப் பாணம்
வீரசிங்கம் மண்டபம்
நுழைவு
இலவசம்

சூரியகாந்தி
தினக்குரல்



தப்பிச் செல்லும் ஐ.எஸ்

39



சூரியப் பயணங்கள்

சமியின் சகாப்தம் முடிந்தது

42



# காணாமற் போனோருக்கான அலுவலகம்

- வலுக்குறைக்கப்பட்ட சட்டமூலமும் வலுக்கும் சந்தேகங்களும்!




ஸ்டோ ஸ்வாமி

ஒன்றிணைந்த எதிரணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கடந்த வியாழக்கிழமை சபாநாயகர் கருஜெயசூரியவைச் சந்தித்து சர்ச்சைக்குரிய காணாமல் போனவர்களுக்கான அலுவலக சட்ட வரைவுக்கு இருக்கக்கூடிய சட்டபூர்வத்தன்மை தொடர்பில் கலந்துரையாடியுள்ளனர். குறித்த சட்டவரைவுக்கு இன்னமும் சபாநாயகர் ஒப்புதல் வழங்காத நிலையிலேயே இந்தச் சந்திப்பு இடம்பெற்றிருக்கின்றது. மறுபுறத்தில், காணாமல் போனவர்களுக்கான அலுவலகம் அமைப்பதற்குரிய சட்டவரைவு பெரும் களேபரத்தின் மத்தியில் நாடாளுமன்றில் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டதையடுத்து அதனைச் செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. இதன் பிரகாரம், குறித்த அலுவலகத்திற்கான தலைவர் உள்ளடங்கலான 7 அங்கத்தவர்கள் அரசியலமைப்புச் சபையின் பரிந்துரையின் கீழ் ஜனாதிபதியினால் நியமிக்கப்படவுள்ளனர்.



> போருக்கு பின் தோன்றி மறைந்த ஆணைக் குழுக்கள், அறிக்கைகள், திட்டங்கள், திரட்டல்கள் என்ற பலதரப்பட்ட அமைப்புகள், கத்தரித் தோட்டத்தின் மத்தியில் நின்று காவல் புரிகின்ற சேவகனை ஒத்து ஓய்ந்த வேளையில்தான் மனித உரிமைகள் கவுன்சிலில் ஒத்துக்கொண்டமைக்கு அமைவாக அலுவலகம் ஒன்றினை ஸ்தாபிக்க நேரம் கைகூடி வந்திருக்கின்றது. காணாமல் போனோர் தொடர்பான விவரங்களையும் அவர்களின் உறவினர்களின் கண்ணீர்க் கதைகளையும் காகிதத்தில் பதிந்து வைக்கும் காரியத்தினை நோக்காகக் கொள்ளாமல், பாதிக்கப்பட்ட தரப்பு மாத்திரமல்லாமல் சர்வதேச தரப்பும் கோரும் பொறுப்புக் கூறல் பொறிமுறைக்கான நகர்வாக இந்தப் பணியகம் அமையுமெனில் அது சந்தேகங்களை தவிர்க்க துணை செய்யும்.

கொழும்பைத் தலைமையிடமாகக் கொண்டியங்கவுள்ள இந்த அலுவலகத்திற்கு நியமிக்கப்படும் அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் மூன்றாண்டு பதவிக்காலத்தைக் கொண்டிருப்பர்.

கடந்த ஆண்டு செப்ரெம்பரில் ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத்தொடரில் இலங்கை அரசு உறுதியளித்துக்கொண்டமைக்கு அமைவாக மேற்படி அலுவலகத்திற்கான முன்னாயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

**மேற்குலகின் வரவேற்பு**

காணாமற்போனவர்களுக்கான அலுவலக சட்டவரைபு நாடாளுமன்றத்தைக் கடந்ததையிட்டு மேற்குலகத் தரப்பினரால் வரவேற்பு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அமெரிக்காவின் தெற்காசிய மற்றும் மத்திய ஆசியாவுக்கான உதவி இராஜாங்கச் செயலாளர் நிஸா பிஸ்வால், தனது ருவிட்டர் பதிவில் உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான இலங்கையின் நகர்வில் இது ஒரு சுவடு என்றிருக்கின்றார். இலங்கைக்கான அமெரிக்காவின் தூதுவர் அதுல் கெசாப், நல்லிணக்கப்பாதையில் இது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மைல்கல் என்று பதிவிட்டிருக்கின்றார். பிரித்தானியாவும் இதனை வரவேற்று அறிக்கை ஒன்றினை வெளியிட்டிருக்கிறது. இதேவேளை, லண்டனைத் தளமாக கொண்டியங்கும் உலகத்தமிழர் பேரவையும் இலங்கையின் தேசிய சமாதானப் பேரவையும் இந்தப் புதிய அலுவலகத்திற்கான முன்னெடுப்பினை வரவேற்றிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. கடந்த 11ஆம் திகதி நாடாளுமன்றில் களம் கண்ட இந்த சட்ட வரைவு அங்கு பெருத்த அமளிதுமளியை ஏற்படுத்தியிருந்தது. குறித்த சட்டவரைவு நாடாளுமன்றைக் கடப்பதனைத் தவிர்ப்பதற்கு அல்லது தாமதப்படுத்துவதற்கு தம்மாலான முயற்சிகள் அனைத்தையும் முடுக்கி விட்டிருந்தனர் ஒன்றிணைந்த எதிரணி தரப்பினர். எனினும் அவர்களின் சூழ்ச்சி பலிக்கவில்லை.

**ஜே.வி.பி.யின் பங்கேற்பு!**

தற்போதைய அரசின் செயற்பாடுகளை விமர்சித்துக்கொண்டும் அதேவேளை ஒன்றிணைந்த எதிரணியிலும் பங்கு வகிக்காத மக்கள் விடுதலை முன்னணி, குறித்த சட்ட வரைவுக்கு ஆதரவு தெரிவித்திருந்தது.

எனினும் குறித்த அலுவலகத்திற்கு வழங்கப்பட்டுள்ள ஆணை மற்றும் இயலுமை தொடர்பில் முரண் எதிர்வினையை வெளியிட்டிருக்கிறது. அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க இது சம்பந்தமாகக் கருத்துத் தெரிவிக்கையில், காணாமல் போனோர் தொடர்பான அலுவலகத்தினால் காணாமற் போனோர் தொடர்பான விவரங்களை மாத்திரமே சேகரிக்க முடியுமே தவிர எந்தவொரு நபருக்கோ நிறுவனத்துக்கோ எதிராக வழக்கு தொடரவோ தண்டனை வழங்கவோ முடியாது எனத் தெரிவித்திருக்கின்றார்.

தெற்கில் இடம்பெற்ற அரசியல் கிளர்ச்சிகளில் தமது கட்சியின் முன்னாள் தலைவர் மற்றும் செயலாளர் உட்பட பல உறுப்பினர்களை காணாமல் போனோர் பட்டியலில் வைத்திருக்கிறது அக்கட்சி. 1988-1989 காலப்பகுதிக் கிளர்ச்சிகளில் பறிகொடுத்த தமது அங்கத்தவர்கள் தொடர்பில், அமைக்கப்படவுள்ள இந்த அலுவலகத்தில் உத்தியோகபூர்வமாக முறைப்பாடு செய்யவும் ஆர்வமாக இருக்கிறதாம் ஜே.வி.பி. தரப்பு.

**பெட்டி பியத்தல் பிடுங்கல் வாய்க்கட்டு திறம்**

நாடாளுமன்றச் சம்பிரதாயங்களுக்கு அப்பால் இந்த சட்டவரைவு நிறைவேற்றப்பட்டாலும் அது கொண்டிருக்கக் கூடிய கனாகனம் விமர்சனத்துக்குரியதாகவே இருக்கின்றது. வெறும் அறிக்கையிடல் ஒன்றையே இலக்காக கொண்டு இந்த உத்தேச சட்டம் நிறைவேறியிருக்கிறதா என்றும் கேள்வி எழுந்திருக்கின்றது. குறித்த சட்டவரைவு நாடாளுமன்றில் திருத்தங்களை எதிர்கொண்டபோது படைத்தரப்பினருக்குப் பிரதிகூலம் விளைவிக்கக் கூடிய உட்கூறுகள் சட்டவரைவிலிருந்து அகற்றப்பட்டிருக்கிறது. இதனை அமைச்சர் மஹிந்த சமரசிங்கவின் உரையும் தெளிவுபடுத்தியிருக்கிறது. முன் வைக்கப்பட்ட சட்டவரைவில் மொத்தமாக 17 திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, குறித்த அலுவலகத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் விசாரணையின் பொருட்டு தடுப்பு முகாமிற்கோ, காவல்நிலையத்துக்கோ அல்லது சிறைச்சாலைக்கோ செல்வதாயின் அங்குள்ளவர்களை விசாரணை செய்வதாயின் நீதி அமைச்சின் வழிகாட்டலின்படியே அது செய்யப்பட வேண்டும் என பணிக்கப்பட்டிருக்கிறது. தேடுதல் நடவடிக்கை எதனையாவது குறித்த அலுவலகம் முன்னெடுக்க முற்பட்டால், அது தொடர்பில் பொலிஸ்மா அதிபருக்கு 48 மணி நேரத்துக்கு முன்பாக அறிவிக்கப்பட வேண்டும் என ஜே.வி.பி. ஆலோசனை தெரிவித்திருக்கிறது. பிமல் ரத்நாயக்க குறிப்பிட்டிருப்பது போன்று தண்டனை வழங்கவோ வழக்கு தொடரவோ ஏது நிலை இல்லாதவிடத்து அதனுடைய செயற்பாட்டுத் திறன் வலுக்குறைந்ததாகவே அமையப் போகின்றது. குறித்த அலுவலகத்துக்கான நிதி திரட்டும் முறையிலும் திருத்தம் முன்மொழியப்பட்டிருக்கிறது. குறித்த பணியகத்துக்கென இலங்கைக்கு வெளியிலிருந்து நிதி உதவி கிடைக்கப்பெறும்போது, அது சில ஒழுங்குமுறைகளைப் பின்பற்றியே வந்து சேர வேண்டும் என்பதும் திருத்தமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

போருக்குப்பின் தோன்றி மறைந்த ஆணைக் குழுக்கள், அறிக்கைகள், திட்டங்கள், திரட்டல்கள் என்ற பலதரப்பட்ட அமைப்புகள், கத்தரித்தோட்டத்தின் மத்தியில் நின்று காவல் புரிகின்ற சேவகனை ஒத்து ஓய்ந்த வேளையில் தான் மனித உரிமைகள் கவுன்சிலில் ஒத்துக்கொண்டமைக்கு அமைவாக அலுவலகம் ஒன்றினை ஸ்தாபிக்க நேரம் கைகூடி வந்திருக்கின்றது. காணாமல் போனோர் தொடர்பான விவரங்களையும் அவர்களின் உறவினர்களின் கண்ணீர்க் கதைகளையும் காகிதத்தில் பதிந்து வைக்கும் காரியத்தினை நோக்காகக் கொள்ளாமல், பாதிக்கப்பட்ட தரப்பு மாத்திரமல்லாமல் சர்வதேச தரப்பும் கோரும் பொறுப்புக் கூறல் பொறிமுறைக்கான நகர்வாக இந்தப் பணியகம் அமையுமெனில் அது சந்தேகங்களைத் தவிர்க்க துணை செய்யும்.



றெ.மலராஜிதன்,
தரம் - 5,
மு/அணிஞ்சயங்குளம் அ.த.க. பாடசாலை.



ர.சுருதிகா,
தரம் - 3,
யா/புனித ஜோன்ஸ் பொஸ்கோ வித்தியாலயம்.

# அழகினால் எப்போதும் ஆபத்து

தெல்லியூர்த்தேவி

மரத்திலிருந்து பிரிந்து செல்லும் கிளைகள்போல தன் தலையில் கொம்புகளைக் கொண்டுள்ளது கலைமான். நீங்கள் இந்தக் கலைமானைப் படங்களிலும் உயிரியல் பூங்காக்களிலும் சினிமாக்களிலும் ஏன் இன்று இணையங்களிலும் பார்த்திருப்பீர்கள்.

ஒரு காட்டில் இந்தக் கலைமான் ஒன்று உல்லாசமாகச் சுற்றித் திரிந்தது. ஒரு நாள் வயிறு நிறைய இலை தழைகளைத் தின்றுவிட்டு தண்ணீர் குடிக்க நீரோடை ஒன்றுக்கு வந்தது. நீர் குடிக்கும்போது தண்ணீரில் பிரதிபலித்த தன்னுருவத்தை ஒருமுறை பார்த்தது.கலைமான் தன்னுருவத்தைத் தண்ணீர் குடிக்கும் போதெல்லாம் பார்ப்பதுண்டு. ஆயினும் அதனது கஸ்டகாலம் இன்று தன் உடலமைப்பைச் சற்றுக் கவனம் எடுத்துப் பார்த்தது. என்னே அழகு! கொம்புகள் எனது கம்பீரத்தையும் ஆண்மையையும் எடுத்துக் காட்டுகின்றன. கண்களில் கூட ஒரு காந்த ஈர்ப்புச் சக்தி காணப்படுகிறது.



ஆனால் இந்த நான்கு கால்களும் எனது உடலமைப்புக்கு ஏற்றவாறு இல்லையே! இப்படித் தட்டைக்குச்சியாக ஒல்லியாக இருப்பது சிறிது சதைப்பிடிப்பாக இருந்தால் இந்த உடலிற்குப் பொருத்தமாக இருக்கும். ச்சே.... என் கால்களைப் பார்க்க எனக்கே பிடிக்கவில்லை எனக் குறைபட்டுக் கொண்டது.

அப்போது அதன் பின்னே மெலிதாக ஏதோ நடந்து வரும் ஓசை கேட்கவே கலைமான் திரும்பிப் பார்த்தது. அதன்மேல் பாய்வதற்குத் தயாராக வாயைத்திறந்தபடி ஒரு சிங்கம் வந்துகொண்டிருந்தது.

அவ்வளவு தான் அடுத்த கணமே கலைமான் ஒரு துள்ளுத்துள்ளி வில்லில் இருந்து புறப்பட்ட அம்புபோல பாய்ந்து ஓடத்தொடங்கியது. அதன் கால்கள் அசுர வேகத்தில் இயங்க மான் காட்டை நோக்கிப் பாய்ந்தது.

அதேசமயம் அகோரப்பசியுடன் வந்த சிங்கமும் பின்னால் ஓடிக்கொண்டே இருந்தது..

அடர்த்தியான மரங்களின் இடையே புகுந்து புகுந்து கலைமான் ஓட சிங்கமும் துரத்தியது.

அப்போது கலைமான் ஒரு மரத்தின் மீது மோத அடர்த்தியாக இருந்த மரக்கிளை களில் அதன் கொம்புகள் மாட்டிக் கொண்டன.

இதென்னடா கஸ்டம் என்று முனகிய கலை மான் தனது கொம்பு களை விடுவிக்க முயன்றும் முடியாமல் போவதை உணர்ந்தது. அப்போது பின்னால் துரத்தி வந்த சிங்கம் அதன் மேல் பாய்ந்தது. கலைமானால் தப்பிக்க முடியவில்லை. இறக்கும் இறுதிநேரத்தில் நினைத்தது நான் எத்தனை சுயநலக்காரன். எனது கால்கள் அழகாயில்லை என நானே நினைத்தேன். இந்தக் கால்கள் தானே இத்தனை தூரம் ஓடி சிங்கத்திடம் இருந்து என்னைக் காப்பாற்றின.

ஆனால் பாழாய்ப் போன இந்தக் கொம்புகள் எத்தனை அழகானவை. ஆண்மையைப் பறைசாற்றுகின்றன என்றெல்லாம் ப்கழ்ந்து பெருமிதம் அடைந்தேன். அவை தானே இப்பொழுது என்னைச் சிங்கத்திடம் மாட்டிவிட்டன.

இந்தக் கொம்புகள் மட்டும் இல்லாதிருந்தால் இந்தக் கால்கள் நிச்சயம் என்னை சிங்கத்திடம் இருந்து காப்பாற்றி இருக்கும் என நினைத்தபோது அதன் உயிர் பிரிந்தது.

தம்பி, தங்கைகள்! குட்டிச் செல்வங்களே! நாங்கள் அழகாக இல்லையே என நினைத்துக் கவலைப் படாதீர்கள். ஆண்டவன் எல்லோரையும் அழகாகத் தான் படைத்திருக்கிறான். அவனின் படைப்பின் நோக்கம் நிறைவேறக்கூடிய விதத்தில் ஒவ்வொருவருக்கும் தேவைப்படும் அழகைக் கொடுத்துள்ளான். எனவே அழகைப் பற்றி அதிக கவனம் தேவையில்லை. ஆனால் கல்வி மற்றும் விளையாட்டில் உங்கள் திறமைகளைக்காட்டி மற்றவர்களால் மதிப்படையுங்கள். உங்கள் புகழ் உலகெல்லாம் பரவும்.



## வரலாற்றில் இன்றைய தினம்

1770 - கிழக்கு ஆஸ்திரேலியாவுக்கான உரிமையை பெரிய பிரித்தானியாவுக்குக் கோரிய ஜேம்ஸ்குக் அதற்கு நியூ சவுத் வேல்ஸ் எனப் பெயரிட்டார்.

1778 - பிரான்ஸின் குடியிருப்பை பிரிட்டிஸ் படை இந்தியாவின் பாண்டிச் சேரியில் முற்றுகையிட்டது.

1821 - எலிசா பிரான்சஸ் கப்பல் மாலுமிகளால் ஜார்விஸ் தீவுகள் கண்டு பிடிக்கப்பட்டது.

1831 - கறுப்பு அடிமைகளை விடுவிக்கும் நடவடிக்கையில் வேர்ஜினியா சதம்ரன் மாநிலத்தில் நற்ரேணர் தலைமையில் இடம்பெற்ற புரட்சியில் 55-65 வரையான வெள்ளையர் உயிரிழுந்தனர்.

1888 - முதலாவது வெற்றிகரமான கூட்டல் கருவி அமெரிக்காவில் வில்லியம் சுவேட் பறப்பினால் காப் புரிமம் பெறப்பட்டது.

1897 - ஓல்ட் மொனபல் எனும் வகை அமெரிக்க தானியங்கி மோட்டார் வாகனம் உருவாக்கப்பட்டது.

1901 - தேசிய வர்த்தக யூனியன் மையத்தின் சர்வதேச செயலகம் கொப்பன்கேஹனில் உருவாக்கப்பட்டது.

1911 - மொனலிசா ஓவியம் லவ்றே அருங்காட்சியக ஊழியர் ஒருவரால் திருடப்பட்டது.

1942 - இரண்டாம் உலகப் போர் ககாஸஸின் அதிக உயர்ந்த மலையான எல்பரஸ் சிகரத்தின் உச்சியில் நாஸி ஜேர்மனியின் கொடிபறக்க விடப்பட்டது.

1957 - கண்டம் விட்டுக் கண்டம் பாயும் நீண்ட தூர பலஸ்ரிக் ஏவுகணை ஆர் - 7 செமியோர்காவை பரிசோதித்துப் பார்த்தது.

1968 - அமெரிக்க கடற்படையில் பணியாற்றிய ஜேம்ஸ் அன்டேர்சன் தனது சாவுக்குப் பின்னான கௌரவ விருதைப் பெற்றதன் மூலம் இவ்விருதைப் பெற்ற முதல் ஆபிரிக்க அமெரிக்கரானார்.

1983 - பிலிப்பைன்சின் எதிர்க்கட்சித் தலைவர் பெனிஞ்ஞோ அக்கினோ மணிலா சர்வதேச விமான நிலையத்தில் படுகாலை செய்யப்பட்டார்.

1986 - கமெரோன் லேக் நையோஸ் எரிமலை வெடிப்பில் எழுந்த காபனீரொட்சைட் வாயுவால் 20 கி.மீ சுற்றளவிலிருந்த 1800 பேர் உயிரிழந்தனர்.

1988 - 6.9 அளவிலான நிலநடுக்கம் நேபாளத்தில் ஏற்பட்டதில் நேபாள இந்தியா எல்லையில் 709 - 1450 பேர் வரை உயிரிழந்ததோடு ஆயிரக் கணக்கானோர் காயமடைந்தனர்.

1993 - செவ்வாய் அவதான விண்வெளி ஓடத்துடனான நாசாவின் தொடர்பு துண்டிக்கப்பட்டது.

2001 - முன்னாள் யூகோஸ்லேவியா குடியரசின் மெஸிடோனியாவுக்கு அமைதிகாக்கும் படையை அனுப்ப நேட்டோ தீர்மானித்தது.

- ராஜிகிஸ்தானில் ஏற்பட்ட பஞ்சத்தை அடுத்து ராஜிகிஸ்தான் மற்றும் உஷ் பெகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கான நிதி உதவியை செஞ்சிலுவைச் சங்கம் கோரியது.

2005 - கதிர்காமர் கொலை விசாரணைக்கு உதவ அமெரிக்கா - பிரிட்டன் தயாரெனத் தெரிவிப்பு.

2006 - செஞ்சிலுவைச் சங்க பணியாளர் வவுனியாவில் சுட்டுக்கொலை.

2013 - சிரியா கௌடா பகுதியில் இராசாயனத் தாக்குதலில் நூற்றுக் கணக்கானோர் கொல்லப் பட்டதாக அறிவிக்கப்பட்டது.

## பாலைக்கொடுக்கும் பசு

பாலைக் கொடுக்கின்ற பசுவே நீ
ஒரு பாட்டுப் பாடுவாயா
பாலகர்கள் நாங்கள் பாடி
மகிழ்ந்திட பாட்டுப் பாடுவாயா
வெள்ளைப் பாலைத் தருகின்ற பசுவே
கறுப்பு நிறமா நீ – உன்
உள்ளம் வெள்ளை என்பதாலே
உன் பாலும் வெள்ளையா
பாலர் நாங்கள் அருந்துவதால்
பலனும் பெறுகின்றோம் – உடல்
நலனும் பெறுகின்றோம்
நாலும் மூன்றும் ஏழென நாங்கள்
நாவால் சொல்கின்றோம் – அதை
நாமும் சொல்ல தைரியம்
தந்தது உந்தன் பாலல்லோ



# நுழைவுவிசைவு

## பேற வழிகாட்டும்

# வலைத்தளம்

■ சுர்ஜீவா

வெளிநாட்டுப் பயணங்களைத்திட்டமிடும்போது எழக்கூடிய முக்கிய கேள்வி, நுழைவுவிசைவு பெறுவது எப்படி? இந்தக் கேள்விக்குப் பதில் தெரியக் கொஞ்சம் இணைய ஆராய்ச்சி தேவை.

முதலில் நாம் பயணம் செல்ல உள்ள நாட்டுக்கு நுழைவு விசைவு தேவையா? எனத் தெரிந்து கொள்ளவேண்டும். அதன்பிறகு நுழைவு விசைவுக்கு விண்ணப்பிப்பது எப்படி என அறியவேண்டும். ஒரு சில நாடுகளுக்கு நுழைவு விசைவு தேவையில்லை. ஒரு சில நாடுகளுக்கு அங்கே போய் இறங்கியவுடன் நுழைவுவிசைவுவாங்கிக்கொள்ளலாம். பெரும்பாலான நாடுகளைப் பொறுத்தவரை முன்கூட்டியே நுழைவு விசைவு பெறவேண்டும். நாடுகளுக்கு நாடு இது மாறக்கூடியது. குறிப்பிட்ட சில நாடுகள் மட்டும் நுழைவு விசைவு இன்றி வரும் சலுகையை வழங்குகின்றன. இப்படி நுழைவு விசைவுக்கான நடைமுறைகள் பல இருக்கின்றன.

இந்தத் தகவல்களை எல்லாம் தேடி இணையத்தில் அங்கும் இங்கும் அல்லாடாமல், ஒரே இடத்தில் தெரிந்து கொள்ள விசாமேப்பர். கெம் (http://www.visamapper.com) என்ற வலைத்தளம் உள்ளது.

எந்தெந்த நாடுகளுக்கு எல்லாம் நுழைவு விசைவு இல்லாமல் செல்லலாம், எந்தெந்த நாடுகளுக்கு எல்லாம் அங்கேபோய் சாவகாசமாக நுழைவு விசைவு வாங்கலாம் போன்ற தகவல்களை இந்தத்தளம் தருகிறது. அதுவும் எப்படி..., அதிகம் தேடாமல் எடுத்த எடுப்பிலேயேதெரிந்துகொள்ளும் வகையில் அழகாக உலக வரை படத்தின் மீது நுழைவு விசைவு விவரங்களைப்புரிய வைக்கிறது.

இந்தத் தளத்தில் தோன்றும் உலக வரை படத்தில் நாடுகள் பல்வேறு வண்ணங்களில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. அந்த வண்ணங்களுக்கான அர்த்தம் அருகே உள்ள கட்டங்களில் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த வண்ணங்களை வைத்தே குறிப்பிட்ட ஒரு நாட்டின் நுழைவு விசைவு நடைமுறையைத் தெரிந்து கொள்ளலாம். உதாரணத்துக்குப் பச்சை வண்ணத்தில் குறிக்கப்பட்ட நாடுகளுக்கு அங்கே போய் நுழைவு விசைவு பெறலாம். மருன் நிறம் என்றால் முன்னதாகவே நுழைவு விசைவு பெறவேண்டும். வெளிர்பச்சை என்றால் நுழைவு விசைவே வேண்டாம். மஞ்சள் வண்ணம் என்றால் இணையம் மூலம் விண்ணப்பிக்கலாம். சிவப்பு என்றால் நுழைவு விசைவே கிடையாது. ஆக, இந்த வரைபடத்தைப் பார்த்தே ஒருவர் பயணம் செய்ய உள்ள நாட்டுக்கான நடைமுறை என்ன என அறிந்து கொள்ளலாம். இந்த வரைபடத்தில் மேலும் ஒரு சிறப்பம்சம், நீங்கள் தேடக்கூட வேண்டாம், அதுவாகவே விவரங்களைக் காட்டுகிறது என்பதுதான். அதாவது இந்தத் தளத்தில் நுழைந்ததுமே, பயணாளி எந்த நாட்டிலிருந்து விவரங்களைத் தேடுகிறார் எனப் புரிந்துகொண்டு அந்த நாட்டுக்கான நுழைவு விசைவு நடைமுறையை வரைபடமாகக் காட்டுகிறது. உதாரணத்துக்கு இலங்கையில் இருந்து பயன்படுத்தும்போது, இலங்கைக்கான இடம், குடியிருக்கும் நாடு எனக் காட்டப்படுகிறது. இவர்களுக்கு மற்றைய நாடுகள் எப்படி நுழைவு விசைவு தருகின்றன என்பது வண்ணங்களாக காட்டப்படுகிறது. ஆக, பயணாளி வேறு நாட்டில் இருந்து அணுகும்போது அவரது நாட்டுக்கான நுழைவு விசைவு வரைபடம் தோன்றும்.

அதே நேரத்தில் வரைபடத்தின் மீது உள்ள, 'நான் இந்த நாட்டுக் குடிமகன்' எனக் குறிக்கும் கட்டத்தில் ஒருவர் தனக்கான நாட்டைத் தேர்வு செய்து பார்த்தால் அந்த நாட்டுக்கான உலக நுழைவு விசைவு நடைமுறையைத் தெரிந்து கொள்ளலாம். இந்தப் பகுதியில் பல்வேறு நாடுகளை கிளிக் செய்து பார்த்தால் எந்த எந்த நாடுகள் எந்தெந்த நாடுகளுக்கு நுழைவு விசைவு சலுகை அளிக்கின்றன போன்ற தகவல்களையும் தெரிந்து கொள்ளலாம். உலக அரசியலை அறிவதற்கான சின்ன ஆய்வாகவும் இது அமையும். உலக அரசியல் யாதார்த்தத்தையும் இதன் மூலம் அறிந்து கொள்ளலாம்.

நுழைவு விசைவு பற்றி அறிய விரும்புகிறவர்களுக்கு இந்தத் தளம் நிச்சயம் உதவியாக இருக்கும். ஆனால் ஒன்று, இது ஒரு வழிகாட்டித்தளமே. இதில் உள்ள விவரங்களை அதிகாரபூர்வமானதாகத் கொள்வதற்கில்லை. தகவலை எளிதாகத்தெரிந்துகொண்டு அதனை அதிகாரபூர்வத் தளங்களின் வாயிலாக உறுதி செய்து கொள்வதுநல்லது. மேலும் இந்தத் தளத்திலேயே, விடுபட்டிருக்கும் நாட்டைச் சேர்க்க அல்லது பிழையான தகவலைச் சரி செய்யும் வசதிகள் போன்றன கொடுக்கப்பட்டுள்ளது. இதைப் போலவே விசாமேப்.நெட் (http://www.visamap.net) எனும் வலைத்தளமும் நுழைவு விசைவுதொடர்பான தகவல்களை வரைபடம்மூலம்தருகிறது. நுழைவு விசைவு தகவல்களோடு அவை கிடைக்கும். தூதரக அலுவலகங்கள்எங்கேஉள்ளனபோன்றதகவல்களையும் அளிக்கிறது. நுழைவு விசைவுநோக்கில் பிரபலமான நாடுகளின்பட்டியலும்இருக்கிறது. கைபேசிகளுக்கான செயலி வடிவங்களும் இருக்கின்றன. ஆனால் இந்தத் தளமும் வழிகாட்டி நோக்கிலானது தான். இதில் உள்ள தகவல்களை உறுதிசெய்துகொள்ள வேண்டும். வெளிநாட்டுக்குப் போக ஆசைப்படுபவர்களுக்கும், போக இருப்பவர்களுக்கும் இந்தத் தளங்கள் பயனுள்ளவைகளாக இருக்கின்றன.

> எந்த எந்த நாடுகளுக்கு எல்லாம் விசா இல்லாமல் செல்லலாம். எந்த எந்த நாடுகளுக்கு எல்லாம் அங்கே போய் சாவகாசமாக நுழைவு விசைவு வாங்கலாம் போன்ற தகவல்களை இந்தத்தளம் தருகிறது.




## தாய்ப்பால் வாரம் ஏனோ!



கருவிலே வைத்துக் காதலித்தவள்
உருவு தந்து அவனியில்
உலாவவிட்டவள்
அவன் உறங்க விழித்திருந்தாள்
அவனது நோய்க்குப் பத்தியம் காத்தாள்
அவன் வளர ஆசையை வளர்த்தாள்
தமிழ்இசை குழைத்துப் பாலூட்டினாள்
அவன் உயர ஏணிப்படிகளிலே
காலைப்பிடித்து ஏற்றி விட்டவள்
அவனது சாதனைகளின் முதல் ரசிகை
பருவத்தே பயிர் செய்ய வேண்டுமென்று
விரும்பியவனோடு வாழவிட்டுக்
கொடுத்தவள் இது தாய்..............
தலையணை மந்திரத்தில் தடுமாறிய தாயை
முதியோர் இல்லத்தில் சேர்த்த மகன்
கடைசி மூச்சுக்களைக் கணக்கிடும் போதும்
கனத்த கண்களோடு காத்திருந்தாள்
கண்களை மூடிப் பிணமாயினாள்
அவன் வரவில்லை
தாய்ப்பால் ஊட்ட தாய்மார் தயங்குவது
அறிவியல் உலகில் இதனால் தானோ?
அப்படியானால்.....
தாய்ப்பால் வாரம் என்பதும் ஏனோ ?

*கலாபூசணம் சு.சிவராசா,*


# சிரிக்க சிந்திக்க...



மருத்துவர்: நான் கொடுத்த உடற்பலம் தரும் குளிசைகளை எடுத்தபின் உடம்பு எப்படியிருக்கு?
நோயாளி: வேலையில்லை
மருத்துவர்: ஏன்?
நோயாளி: குளிசைப் போத்தல் மூடியைத் திறக்க பலம் இல்லையே!
மருத்துவர்: ? ? ?

பொலிஸ்காரர் முறைப்பாட்டுக்காரரை நோக்கி, உங்கள் வீடு தீப்பற்றி எரிந்து சாம்பலாகும் வரை அதை அணைக்காமல் என்ன செய்துகொண்டிருந்தீர்கள் எனக் கேட்க, முறைப்பாட்டுக்காரர் கபாலி படம் ரி.வியில் பார்த்துக்கொண்டிருந்தோம் சேர்- என்றார். அதற்கு பொலிஸ்காரர் தவறு உங்களுடையதுதான் எச்சரிக்கையாக இருந்திருக்கலாம் எனக்கூற முறைப்பாட்டுக்காரர் சேர் அப்பா அடிக்கொரு தடவை நெருப்புடா நெருப்புடா எனக் கத்த படத்தில் உள்ள வசனம் என இருந்துவிட்டேன் - என்றார். அதற்கு பொலிஸ்காரர் கோபமாக என்கால் செருப்புடா செருப்புடா - என்றார்!






# தினசரி பத்திரிகை

சி.சந்திரவதனா

அந்த நாற்காலி மட்டும் வெறுமையாய் இன்று காட்சியளித்துக் கொண்டிருக்கின்றது. அதைப் பார்த்ததும் முகம் வாடிய நான், சோகத்தில் ஆழ்ந்துவிட்டேன். ஏன் என்றால் எனது அயல் வீட்டிலுள்ள அந்த நாற் காலியில் அமர்ந்து இருப்பவர் வேறு யாருமல்ல கணபதி தான். நான் ஒவ்வொரு நாளும் காலையில் வேலைக்குச் செல்லும்போது, அந்த நாற்காலியில் இருந்து பத்திரிகை வாசித்துக் கொண்டிருப்பார் அவர்.

கணபதிக்கு சுமார் 75 வயது இருக்கும். அவரது மனைவி கனகம்மா. இவர்களுக்கு இரு பெண்பிள்ளைகள். இருவரும் திருமணம் முடித்து வெளிநாடு சென்றுவிட்டார்கள். கணபதியும் மனைவியும் மட்டுமே தனித்து இருந்தார்கள். கணபதி தினம் தோறும் கால் நடையாகச் சென்று பக்கத்துக் கடையில் பத்திரிகை எடுத்து வந்து அவரது வீட்டின் ஓரத்தில் மாமரத்தின் கீழ் இருக்கும் அந்த நாற்காலியில் அமர்ந்து அதனைப் படிப்பது வழக்கம்.

கணபதி என்ற பெயருக்கு ஏற்ற மாதிரியே கணீரென ஒலிக்கும் குரலால் எல்லோருடனும் இனிமையாகப் பழகுவார். அந்தக் குரல் தான் பக்கத்து வீட்டில் இருந்த என்னையும் ஈர்த்ததுவோ தெரியவில்லை. ஒவ்வொரு நாளும் பத்திரிகை வாசிப்பதில் ஆர்வம் உடையவர் அவர். அதுமட்டுமல்ல அதிலை இருக்கிறவிடயங்கள் எல்லாவற்றையும் அலசி ஆராய்ந்து சரி பிழை என்ன வென்று கதைக்கக் கூடிய மனிசன். வேலைக்குச் செல்வதால் என்னால ஒழுங்காகப் பத்திரிகை வாசிக்க முடியிறது இல்லை. வேலைச்சுமை, வீட்டுச் சுமை, பொறுப்புக்கள் என என் தலையில் சுமைகள் அதிகம். அதனால் ஒவ்வொரு நாளும் வேலை முடிஞ்சதும் கணபதி ஐயா வீட்டுக்குப் போனால் அன்றாடப் பத்திரிகைச் செய்திகளைச் சொல்லுவார். எனக்கு நேரமில்லாதபோது அவரே எனது வீட்டுக்கு வந்து "என்னடா தம்பி அந்தப் பக்கம் உன்னை இண்டைக்கு காணெல்ல" என்று கூறி பத்திரிகையில் இருக்கிற விடயங்களை எனக்குச் சொல்லுவார். அதனால் நான் தினசரி பத்திரிகை படிக்கா விட்டாலும்கூட, பத்திரிகைச் செய்திகள் ஒவ்வொரு நாளும் கணபதியின் வார்த்தைகள் மூலம் என் காதுகளை இனிமைப்படுத்தும். அத்தோடு எனக்கும் அவருக்கும் நல்லதொரு தந்தை மகன் உறவும் இருந்து வந்தது.

ஆனால் இன்று அந்த நாற்காலியில் கணபதி இல்லாதது எனக்கு எதையோ தொலைத்ததைப் போன்ற ஓர் உணர்வாக காணப்படுகிறது. நேற்றிரவு 10 மணியிருக்கும் கணபதிக்கு நெஞ்சுவலி என்று கூறி கனகம்மா என் வீட்டுக் கதவைத் தட்டினாள். பக்கத்து வீட்டில் இருப்பதால் நான் அவர்களை என் தாய் தந்தையாகவே மதித்துப் போற்றி நடப்பவன். அதைக் கேட்டதும் எனக்குத் தலையைச் சுற்றுவதுபோல் இருந்தது. உடனே ஒரு ஓட்டோவைப் பிடித்து செல்லப்பாவை வைத்தியசாலைக்கு கொண்டு சென்று சேர்த்து விட்டு இரவு முழுவதும் அவரோடே இருந்து விட்டு அதிகாலை வீட்டுக்கு வந்து குளித்து விட்டு, வேலைக்குச் செல்லும்போது, கணபதியின் வீட்டில் இருந்த நாற்காலி இன்று வெறுமையாகக் காட்சியளிப்பதைப் பார்க்கையில், அந்த நாற்காலி உன் தினசரி பத்திரிகை எங்கே என்று என்னைக் கேள்வி கேட்பது போல் உள்ளது.

# ஓலைக்கயிறும் பறியும்...

ஜெ.காயா



ஆழ்கடல் தொழிலாளியான எங்கள் ஐயா, உடல் தளர்ந்து விட்டபின், அது இயலாமல் போகத் தன் கடைசிக் காலத்தில கரையோரங்களிலதான் கால்நடையாகத் தொழில் செய்தார். ஐயா செய்த அந்தத் தொழில்களில ஒண்டுதான் 'ஓலைக்கயிறு'. அதைச் சரிக்கட்டுறதும் ஐயாதான். அதுக்கு நாங்களும் உதவி செய்வம். ஐயா தாற அந்த இழக்கயித்து நுனியைப் பிடிச்சுக் கொண்டு முத்தத்துப் பனைகள் இரண்டைச் சுத்தி ஓடி, அந்தக் கயித்தைச் சுத்திக் கட்டி விடுவம். அப்பதான் அந்தக் கயித்தின்ர முறுக்கு எடுபடுமாம். ரெண்டு மூண்டுநாள் கழிச்சு அதை அவிழ்த்து, ஏற்கனவே கிழிச்சுக் காயவைச்சிருக்கிற குருத் தோலைகளை அடிக்கு ஒவ்வொன்றாக, அந்தக் கயித்து முறுக்குக்குள்ள ஓட்டிக் கட்டுவார் ஐயா. அதுதான் அந்த 'ஓலைக்கயிறு'. அதைத் தன் தோளில் லாவகமாக ஏந்தக்கூடியவாறு வளைத்து வைத்திருப்பார். தன் இடுப்பின் ஓரப்பக்கத்திலதான் அந்தப் பறியையும் கட்டியிருப்பார் ஐயா. இது கரைப் பகுதிகளில அதுவும் முழங்காலுக்குக் கீழுள்ள தப்புத் தண்ணிக்க நடந்து திரிந்து மீன் பிடிக்கும் ஒரு முறையாகும். அரைவட்டமாக விரித்துப் போடப்பட்ட ஒரு துண்டு வலையின் ஒரு முடிவில் ஊண்டப்பட்ட தடி ஒண்டில தான் அந்த ஓலைக்கயித்தின்ர ஒரு பக்கத்த தண்ணி மட்டத்தோட முட்டியவாறு கட்டியிருப்பார். கட்டியதும் சத்தமில்லாமல் மெல்ல நடந்து கயிறு முடியும் தூரம் வரை சென்றபின் கூச்சலிட்டவாறு தண்ணியைக் கலக்கிச் சத்தமிட்டபடியும் அந்தக் கயித்த இழுத்தபடியே கரையை நோக்கி நடந்து வந்து, வட்டமிட்டபடியே வலையின் மறுமுனையை நோக்கிப் போவார். அந்த நேரம் நாங்களும் கத்திக்கூச்சலிட்டவாறு தண்ணிக்க விழுந்தெழும்பியும் ஓடித்திரிவம். ஓலைக்கயித்த இழுத்து முடித்து வளைத்த ஐயா, விரித்துப் போடப்பட்ட வலையை வளைத்து அதில் சிக்கியும் அதன ருகில் புதைந்தும் கிடக்கும் மீன் குஞ்சுகளைப் பிடித்துத் தன் இடுப்பிலுள்ள பறிக்குள் போட்டு விட்டு சத்தமில்லாமல் வேறிடம் நோக்கி நடப்பார். இன்று அந்தத் தொழில் அரிதாய்ப் போய் விட்ட அந்த ஓலைக்கயித்தையும் பறியையும் ஏந்தியபடி இன்னொரு பாடு வைப்பதற்காக.

# இந்த வாரம்

21.08.2016 முதல் 27.08.2016 வரை

உங்களுக்கு எப்படி?



## மேடம்

சுக்கிரன், கேது ஆதாய பலன் தருவர். அந்தஸ்து மிக்கவர்களின் அறிமுகமும், உதவியும் கிடைக்கும். வாகனப் பராமரிப்புச் செலவு அதிகரிக்கும். பிள்ளைகளின் எதிர்கால வளர்ச்சிக்கான, நற்செயலில் ஈடுபடுவீர்கள். உறவினர் வருகையால், நன்மை உண்டாகும். உடல்நிலை சுமாராக இருக்கும். மனைவியால் குடும்பத்தில் ஒற்றுமை சிறக்கும். தொழில், வியாபாரத்தில் இடையூறு குறுக்கிட்டாலும் ஆதாயத்திற்கு குறைவிருக்காது. பணியாளர்கள் விரும்பிய பணி, இடமாற்றம் கிடைக்கப் பெறுவர். பெண்கள் மனம் போல ஆடை, ஆபரணம் வாங்குவர். மாணவர்களுக்கு படிப்பில் அதிக அக்கறை தேவை.



## இடபம்

புதன், சுக்கிரன், குரு, சந்திரனால் அளப்பரிய நன்மை உண்டாகும். புதிய முயற்சிகள் சிறப்பாக நிறைவேறும். உடன்பிறந்தவரின் அன்பும், அரவணைப்பும் கிடைக்கப் பெறுவீர்கள். புதிதாக வீடு, வாகனம் வாங்க யோகம் உண்டாகும். பிள்ளைகள் படிப்பு, வேலை வாய்ப்பில் முன்னேற்றம் காண்பர். பூர்வீகச் சொத்து மூலம், வருமானம் கிடைக்க வாய்ப்புண்டு. மனைவி, உங்களின் கருத்துக்கு மதிப்பளித்து நடப்பர். பணியாளர்கள், எதிர் பார்த்த சலுகை விரைவில் கிடைக்கும். பெண்கள் உறவினர்களை உபசரித்து மகிழ்வர். தேவை அனைத்தும் தாராள செலவில் நிறை வேறும். மாணவர்கள் படிப்பில் சிறந்து விளங்குவர்.



## மிதுனம்

பெரும்பாலான கிரகங்கள், சாதகமான இடத்தில் அமர்ந்துள்ளனர். மனதில் உற்சாகம் மேலோங்கும். புதிய முயற்சிகளில் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள். உறவினர் வருகையால், வீட்டில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். வாகனப் பயணத்தால் இனிய அனுபவம் ஏற்படும். பிள்ளைகள் உங்களின் சொல்லுக்கு மதிப்பு கொடுப்பர். தொழில், வியா பாரத்தில் வியத்தகு வளர்ச்சி உண்டாகும். சேமிக்கும் விதத்தில் இலாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் விரும்பிய சலுகை கிடைக்கப் பெறுவர். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். மாணவர்கள் சிறந்த தரத் தேர்ச்சி காண்பர்.



## கடகம்

சுக்கிரன், சந்திரன் மட்டுமே நற்பலன் தருவர். கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற முயல்வீர்கள். வாகனப் பயணத்தால், இனிய அனுபவம் உண்டாகும். பிள்ளைகளின் செயற்பாடு திருப்தியளிக்கும். நோய் தொந்தரவு, மருத்துவ சிகிச்சையால் குறையும். மனைவியின் கருத்தை ஏற்றுக் கொள்வது நல்லது. வெளியூர் பயணம் பயன் அறிந்து மேற்கொள்ளவும். தொழில், வியாபாரத்தில் மிதமான லாபம் கிடைக்கும். தொழிலுக்காக அதிக நிபந்தனையுடன் கடன் வாங்கு வதை தவிர்க்கவும். பணியாளர்கள், பணிச்சுமைக்கு ஆளாக நேரிடலாம். பெண்கள் செலவில் சிக்கனத்தைக் கடைபிடிப்பது நல்லது. மாணவர்களுக்கு படிப்பில் முன்னேற்றம் காண்பர்.

## சிங்கம்

சுக்கிரன், குரு அதிகளவில், நன்மை தர காத்திருக்கின்றனர். குடும்பத்தினர் கருத்துக்கு மதிப்பு அளிப்பீர்கள். சமூகத்தில் அந்தஸ்து கூடும். வாழ்க்கைத் தரம் நாளுக்குநாள் உயரும். வீட்டில் தகுந்த பாதுகாப்பும், வாகனத்தில் மிதவேகமும் பின்பற்றுவது நல்லது. பிள்ளைகளின் செயல்பாடு திருப்தி தரும். உறவினர் வருகையால், குடும்ப மகிழ்ச்சி நிலைக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிக்கான வாய்ப்பு கிடைக்கும். பணியாளர்கள் பொறுப்புணர்வுடன் பணிபுரிந்து சலுகை கிடைக்கப் பெறுவர். பெண்கள், உறவினர் வீட்டு சுபநிகழ்ச்சிக்கு உதவி செய்வர். மாணவர்களுக்கு படிப்பில் விடாமுயற்சி தேவைப்படும்.



## கன்னி

பெரும்பாலான கிரகங்கள், அனுகூல அமர்வில் உள்ளனர். நற்செயல்களில் ஈடுபட்டு, சமூகத்தில் புகழ் பெறுவீர்கள். தம்பி, தங்கையரின் அன்பைக் கண்டு மனம் நெகிழ்வீர்கள். எதிர்பார்ப்பு ஒவ்வொன்றாக நிறைவேறும். வீடு, வாகன வகையில் பராமரிப்புச் செலவு ஏற்படும். பிள்ளைகள் உற்சாகமுடன் படித்து முன்னேற்றம் காண்பர். உடல்நலம் சீராக இருக்கும். வழக்கு, விவகாரத்தில் சாதகமான தீர்வு கிடைக்கும். மனைவி குடும்பநலனில் அக்கறையுடன் செயல்படுவார். குடும்ப தேவை தாராள செலவில் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் மறைமுகப் போட்டி குறுக் கிடலாம். பணியாளர்கள் சக ஊழியர்களுடன் விவாதத்தில் ஈடுபட வேண்டாம் கவ னம். பெண்கள் புத்தாடை, நகை வாங்குவர். மாணவர்கள் படிப்பில் முன்னேற்றம் காண்பர்.

## துலாம்

புதன், ராகு, சூரியன் சுக்கிரனால் நன்மை அதிகரிக்கும். நண்பரின் ஆலோசனையால், நன்மை பெறுவீர்கள். மனதில் எண்ணிய திட்டம், செயல்வடிவம் பெறும். வாகனத்தில் பராமரிப்புச் செலவு உயரும். பிள்ளைகளின் தேவையை, தாராள செலவில் நிறைவேற்றுவீர்கள். எதிரித் தொல்லை விலகும். உடல்நிலை திருப்தியளிக்கும். மனைவியின் ஆலோசனையை ஏற்று முன்னேறுவீர்கள். அடிக்கடி குடும்பத்துடன் சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் தாராள பணவரவு கிடைக்கும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்க வாய்ப்புண்டு. பெண்கள், தாய் வீட்டாரின் உதவியைப் பெறுவர். மாணவர்களுக்கு நண்பர்களுடன் சேர்ந்து படிப்பர்.



## விருச்சிகம்

புதன், சூரியன், குரு, சந்திரன் நற்பலன் தருவர். குடும்ப சூழ்நிலை உணர்ந்து செயற்படுவீர்கள். தாமதமான பணிகளைப் புதிய முயற்சியால் நிறைவேற்றுவீர்கள். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். பிள்ளைகள் கல்வி, வேலைவாய்ப்பில் மேம்படுவர். நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல்நலனில் அக்கறை தேவை. விசப் பிராணிகளிடம் விலகுவது நல்லது. மனைவியுடன் கருத்து வேறுபாடு கொள்ள நேரிடலாம் கவனம். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டி குறையும். இலாபம் சீராகும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்க வாய்ப்புண்டு. பெண்கள், குடும்பநலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள் படிப்பில் மட்டும் கவனம் செலுத்தவும்.



## தனுசு

சுக்கிரன், கேது, சந்திரன் வியக்கும் விதத்தில் நன்மை வழங்குவர். சிறு பணியைக் கூட நேர்த்தியாக செய்து முடிப்பீர்கள். தாய்வழி உறவினர்களுடன் இணக்கம் அதிகரிக்கும். பிள்ளைகளின் பிடிவாத குணத்துடன் செயல்படலாம்; நிதானம் தேவை. குடும்பத்திற்கான பணத்தேவை அதிகரிக்கும். மறைமுக எதிரிகள் இடம் விலகிச் செல்வர். விருந்து விழாவில் பங்கேற்று மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிக்கான வாய்ப்பு தேடி வரும். லாபம் படிப்படியாக உயரும். பணியாளர் கள் கடின உழைப்பால் நற்பெயரை பாது காத்திடுவர். பெண்கள், பிள்ளைகள் நலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள் கண்ணும், கருத்துமாகப் படிப்பர்.



## மகரம்

செவ்வாய், சுக்கிரன், புதன், சனீஸ்வரர், சுப பலன்களை தருவர். உடன்பிறந்தவர்களுக்கு உதவி செய்து மகிழ்வீர்கள். புதிய வழிகளில் வருமானம் வர வாய்ப்புண்டு. மனதில் தன்னம்பிக்கை மேலோங்கும். சமூகத்தில் அந்தஸ்து கூடும். பிள்ளைகள் நற்செயல்களில் ஈடுபட்டு, பெருமை தேடித் தருவர். எதிரிகள் சொந்த சிரமங்களால் விலகிச் செல்வர். குடும்பத்தில் சுபவிடயம் குறித்த பேச்சு நடக்கும். மனைவி குடும்ப ஒற்றுமைக்கு துணை நிற்பார். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட இலாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் சென்று ஆதாயத்துடன் திரும்புவர். பெண்கள் சிக்கனத்தால் சேமிக்க முயல்வர். மாணவர்கள் படிப்பில் ஆர்வமுடன் ஈடுபடுவர்.



## கும்பம்

சந்திரன் மட்டுமே நன்மை தருவார். செலவுக்கான பணத் தேவை அதிகரிக்கும். பிறரின் விமர்சனத்தால், மனதில் தளர்ச்சி உண்டாகலாம். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவது நல்லது. பிள்ளைகளின் செயற்பாடு கண்டு, அதிருப்திக்கு ஆளாகலாம். குடும்பத்தில் ஒற்றுமை காப்பது அவசியம். ஒவ்வாத உணவு உண்பதை தவிர்க்கவும். மனைவியின் உடல்நலத்திற்கு, மருத்துவச் சிகிச்சை தேவைப்படலாம். தொழில், வியாபாரத்தில் இருக்கிற அனுகூலம் பாதுகாக்கவும். இலாபம் சுமார். பணியாளர்கள் எதிர்பார்த்த கடனுதவி கிடைப்பதில் தாமதம் உண்டாகும். பெண்கள் நகை, பணம் இரவல் கொடுப்பதை தவிர்க்கவும். மாணவர்கள் படிப்பில் மட்டும் கவனம் செலுத்துவது நல்லது.



## மீனம்

புதன், சூரியன், ராகு, குரு அளப்பெரிய நற்பலன் தருவர். மனதில் புத்துணர்வு நிறைந்திருக்கும். பணிகளை திட்டமிட்டு விரைந்து நிறைவேற்றுவீர்கள். உங்களை புகழ்ந்து பேசுபவரிடம் விழிப்புடன் இருக்கவும். பிள்ளைகளின் எதிர்கால வளர்ச்சிக்கு துணைபுரிவீர்கள். பூர்வீகச் சொத்து மூலம் வருமானம் கிடைக்கும். நோய் தொந்தரவு மருத்துவச் சிகிச்சையால் குறையும். மனைவியிடம் கருத்து வேறுபாடு வராமல் பார்த்துக் கொள்ளவும். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் அதிகரிக்கும். மாணவர்களுக்கு படிப்பில் ஈடுபாடு அதிகரிக்கும். புத்தாடை, நகை வாங்குவர். மாணவர்க ளுக்கு படிப்பில் ஈடுபாடு அதிகரிக்கும்.



# பனம்பழ பருவகாலம்

ந.ஜெயதாஸ்





யாழ்ப்பாணம் கொண்ட கொடைகளில் ஒன்றுதான் கோடைகாலத்தில் பருவமாகும் பனம் பழங்கள். பனைகள் நிறைந்த தேசமாதலால் அவை கொண்ட பழங்களும் நிறைந்துள்ளன. ஆம்! யாழ்ப்பாணப் பனைகளில் தற்போது காய்த்துக் குலுங்குகின்றன சிவந்த கருங்கட்டிகளாய்ப் பனங்காய்கள். வானை நேக்கி நீண்ட பனை மரக் கூட்டங்களிடையே இப்போது மனிதர்களும் கால்நடைகளும் உலாவத் தொடங்கி விட்டன. காரணம் வீழ்ந்ததும் மணம் கமழும் அவற்றைச் சுவைப்பதற்கும் சேகரிப்பதற்குமாக அவைகளிடையே நிலவும் போட்டியே.

கற்பகதருவெனும் பனை மரம் நமது மண் தந்த செல்வ விருட்சம். அது பயன் பல தந்துதவும் தன்மையுடையது. வருடம் முழுவதும் அது தரும் வளங்கள் குறைவற்றவை. ஓலைகள், மட்டைகள், நார்கள், விறகுகள், பதநீர், கள்ளு, நுங்கு, பனம்பழம், கிழங்கு எனத் தன்னிலிருந்து உதிர்த்து விடும் பயன் நிறை வளங்களைக் கொண்டது. இத்தகைய கொடை கொண்ட பனை மரத்தின் பனம் பழங்கள் உதிரத் தொடங்கி விட்டன. "தொப் தொப் பென்று" எந்தநேரமும் தொடர்ந்து விழும் அவற்றின் சத்தங்கள் பனங்கூடல்கள் எங்கும் நிறைந்து விட்டன. பனங்காய்க் காலமென்றால், கால்நடைகளுக்குத்தான் (மாடுகள்)வேட்டை. கோடைகால வறட்சியையும் இலைகுழைகளின் பற்றாக்குறையையும் ஈடுசெய்து கொள்கின்றன இந்தப் பனம் பழங்கள். மனிதர்கள் எந்த நேரமும் அவற்றைச் சேகரிப்பதில் அக்கறை கொள்வதில்லை அதற்கு அதிக தேவையுமிருப்பதில்லை. ஆனால் கால்நடைகள் அவ்வாறில்லை, பனையிலிருந்து பனங்காய் ஒன்று வீழ்ந்ததும் அதன் சத்தத்தை உணர்ந்து உடனடியாக அந்தத் திசை நோக்கிச் சென்று அவற்றைச் சுவைத்து விடுகின்றன. தமக்குள் போட்டியிட்டு முந்திக்கொள்ளும் அவை பனம்பழப் பருவ காலம் ஆரம்பித்ததும் தூக்கமின்றிக்கூட இரவு பகல் பாராது பனம்பழங்களைச் சுவைப்பதில் கவனம் கொள்கின்றன.

மனிதர்கள் முன்புபோல இல்லாமல் தற்போது அவற்றின் பயன்களை அனுபவிப்பதில் அவ்வளவாய் அக்கறை கொள்வதில்லை. வீழ்ந்த மண் ஒட்டாது எடுத்த பனம் பழங்களைச் சேகரித்து அவற்றின் தோலுரித்து பிழிந்தெடுத்த களியைக் காய்ச்சிப் பனம் ஓலைகளால் இழைக்கப்பட்ட பாயில் ஒன்று, இரண்டு, மூன்று என்ற படிமுறைகளில் ஊற்றித் தடிப்பாக்கிக் காயவைத்துப் பிரித்தெடுத்தனர் பனாட்டாக. பனங்களியுடன் மாவும் சீனியும் சேர்த்துப் பனங்காய்ப் பணியாரமும் செய்தெடுத்தனர். ஆனால் இன்று இவற்றிலீடுபடும் மக்களைக் காண்பதரிதாயுள்ளது. வியாபார நோக்கிலீடுபடும் வறிய கிராம மக்கள் சிலரைத் தவிர. ஆதலால் கால்நடைகளுக்குக் கொண்டாட்டமாகி விட்டது இம்முறை பனம்பழப் பருவ காலம். முன்னோர் பனம்பழங்களைக் கால்நடைகள் நெருங்க விடுவதில்லை. தமது தேவைக்குப் போக எஞ்சியவற்றையே கால்நடைகளுக்கு உணவாக்கினர். ஆனால் இப்போது கால்நடைகள் கட்டாயமாக உண்ண வேண்டும் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. ஏனெனில் வீழ்ந்த பனம் பழம் அப்படியே பனையடியில் கிடந்து காய்ந்து போய்விட்டால், கிழங்கு விளைவிப்பதற்கு அவற்றைப் பாத்தியிலிடும்போது அவற்றின் விதைகளை ஒவ்வொன்றாகச் சிரமப்பட்டுப் பிரித்தெடுக்க வேண்டியிருக்கும். அத்தகைய சிரமத்தைப் போக்கிக் கொள்ள வேண்டுமெனில் கால்நடைகளை உண்ண வைத்தால் அவை விதைகளைப் பிரித்து வேறாக்கிவிடுகின்றன. இதனால் சில மூடிஅடைக்கப்பட்ட காணிகளில் கால்நடைகள் வலிந்து அடைக்கப்படுவதுமுண்டு. அவ்வாறு அடைக்கப்பட்டாலும் அதுவும் அவைகளுக்கு மகிழ்ச்சி தரும் ஒன்றுதான். ஆகமொத்தம் மனிதர்களுக்கும் மாடுகளுக்கும் இம்முறை பனம்பழப் பருவம் ஒரு திண்டாட்ட காலம் தான்.



## நேசிக்கும் நாய்....!

பிரேசிலில் உள்ள ரூத் கார்டோசோ வைத்தியசாலையைச் சுற்றிச் சுற்றி வந்துகொண்டிருக்கிறது நேகோ என்ற கறுப்பு நாய். 8 மாதங்களுக்கு முன்பு ஒருவர் உடல்நலம் பாதிக்கப்பட்டு, காவுகை வண்டி மூலம் வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டார். அவருடன் தான் அந்த நாயும் வந்தது. தன்னை வளர்த்தவர் திரும்பி வருவார் என்று பல நாள்களாக வைத்தியசாலையில் காத்துக் கொண்டிருக்கின்றது. ஆனால் அவர் இறந்துவிட்ட விடயம் நேகோவுக்குத் தெரியவில்லை. ஒவ்வொரு முறையும் காவுகை வண்டி வரும்போதும் ஆர்வத்துடன் ஓடும். அதில் அவர் உள்ளாரா? என்று ஆர்வத்துடன் பார்க்கும். அதில் அவர் இல்லாததால் ஏமாற்றத்துடன் திரும்பிவிடும். வைத்தியசாலையில் கிடைக்கும் உணவு களை உண்டு, அங்கேயே 8 மாதங்களாகத் தங்கியிருக்கிறது. நேகோவின் அன்பைக் கண்டு மருத்துவமனைக்கு வந்த செல்வந்தர்கள் சிலர் ஒருவாறு அதனை அழைத்துச் சென்றனர். அவர்கள் நேகோவை எவ்வளவு தொலைவுக்கு அழைத்துச் சென்றாலும் மறுநாளே மருத்துவமனைக்கு வந்து சேர்ந்துவிடுகிறது நேகோ. பல முயற்சிகளுக்குப் பிறகு மருத்துவமனை நிர்வாகம், நேகோவைப் பராமரிக்க முடிவு செய்தது. ஆனாலும் தன்னை வளர்த்த வரைத் தேடுவதை மட்டும் அது நிறுத்திக்கொள்ளவே இல்லை. காவுகைவண்டிச் சத்தம் கேட்டாலே பாய்ந்து சென்று பார்த்துக்கொள்கிறது. நேகோவைப் பற்றி அதிகமானோர் இணையத்தில் பதிவேற்றி வருகிறார்கள். விதம் விதமாகப் படங்கள் எடுத்து வெளியிடுகிறார்கள். இதனால்உலகம் முழுவதும் பல லட்சக்கணக்கான மக்களின் மனத்தில் இடம் பிடித்துவிட்ட நேகோ இன்றுவரை காத்திருக்கிறது.






கொஞ்சம் நையாண்டியும் நிறையக் கோபமுமாக ஓர் அரசியல் படம். வணிக அம்சங்களைத் தவிர்த்து சமூக அக்கறையுடன் இப்படி ஒரு படத்தைக் கொடுத்த துணிச்சலுக்காகவே இயக்குநர் ராஜு முருகனைப் பாராட்டலாம்.

தருமபுரி மாவட்டம் பாப்பி ரெட்டிப்பட்டி கிராமத்தில் வசிக்கும் சமானியக் குடிமகனான சோமசுந்தரத்தின் வீட்டில் ஒழுங்காக ஒரு கழிப்பறைகூடக் கிடையாது. ஆனால் அவர் தன்னை இந்திய ஜனாதிபதியாகக் காட்டிக் கொண்டு செயல்படுகிறார். அரசு அதிகாரிகள், காவல் துறையினரிடம் ஜனாதிபதிக் குரிய தோரணையுடன் பேசுகிறார். பொதுப் பிரச்சினைகளுக்காகப் போரா டுகிறார், உத்தரவுகள் பிறப்பிக்கிறார்.

யார் இந்த ஜனாதிபதி, அவருக்கு என்ன பிரச்சினை என்பதற்கான பதில்கள் சோமசுந்தரத்தின் பின்கதையில் உள்ளன. தனியார் தண்ணீர் நிறுவனத்தில் வேலை பார்க்கிறார் சோமசுந்தரம். ரம்யா பாண்டியனை அவருக்குப் பெண் பார்க்கிறார்கள். "வீட்டில் கழிப்பறை இருந்தால்தான் திருமணம் செய்து கொள்வேன்" என்கிறார் ரம்யா. அரசின் மானியத் திட்டத்தில் கழிப்பறை கட்ட முயல்கிறார் சோமசுந்தரம். அமைச்சர் தொடங்கி அதிகாரிகள்வரை ஊழலில் தின்றதுபோக நாயகனுக்குக் கிடைப்பது கழிப்பறைக் கோப்பை மட்டுமே. அதன் பின்பு என்ன நடந்தது? ஊழல் புரையோடிய அரசு, சோம்சுந்தரத்தின் வாழ்க்கையை எப்படிப் புரட்டிப்போடுகிறது என்பதுதான் மீதிக் கதை.

அதிகப்படியான பிரச்சினைகளால் மனநிலை பிறழ்ந்த ஒருவரால்தான் ஜனாதிபதியாகப் பதவிப் பிரமாணம் செய்து கொள்ள முடியும்; விதவிதமான போராட்டங்களைத் தொய்வில்லாமல் தொடர்ந்து மேற்கொள்ள முடியும் என்பதாகக் காட்டுவது பொருத்தமாக இருக்கிறது. அரசியல் நாற்றமெடுக்கும் ஊழல்கள், ஆழ்துளைக் கிணறுகளில் குழந்தைகளின் சாவுகள், ஆறுகளில் மணல் கொள்ளை இவற்றை எல்லாம் நமது பொதுச் சமூகம் இயல்பாகக் கடந்து செல்லப் பழகிவிட்டது. ஆனாலும் விதிவிலக்காகச் சிலர் போராடத்தான் செய்கிறார்கள். யாருக்காக இவர்கள் போராடுகிறார்களோ அவர்களே இவர்களைக் கேலிப் பொருளாக்குவதும் புறக்கணிப்பதும் வழக்கமாகிவிட்டது. யாரும் கண்டுகொள்ளாத இந்த விடயத்தைச் சாட்டையடியாகச் சொன்ன விதம் தமிழ் சினிமாவுக்குப் புதிது!

**அதிகப்படியான பிரச்சினைகளால் மனநிலை பிறழ்ந்த ஒருவரால்தான் ஜனாதிபதியாகப் பதவிப் பிரமாணம் செய்து கொள்ள முடியும்; விதவிதமான போராட்டங்களைத் தொய்வில்லாமல் தொடர்ந்து மேற்கொள்ள முடியும் என்பதாகக் காட்டுவது பொர்ருத்தமாக இருக்கிறது.**

படத்தின் பலவீனம் நிதானமான நகர்வு. மக்கள் வஞ்சிக்கப்படுகிறார்கள் என்கிற மையப் பிரச்சினையை முன்வைத்து மேற்கொள்ளப்படும் அடுத்தடுத்த போராட்டங்கள் ஒரே காட்சியைத் திரும்பத் திரும்பப் பார்க்கும் உணர்வைத் தருகின்றன. சில காட்சிகளில் தெரியும் நாடகத் தன்மை உறுத்துகிறது. ஜனாதிபதி கிராமத்துக்கு வரும் காட்சி மிகவும் பலவீனமானது.

அரசியல் கூட்டங்களுக்கு ஆள் பிடிப்பது, குக்கிராமங்களின் நிலை, மக்கள் நலத் திட்டங்களின் நிஜமுகம் ஆகியவை யதார்த்தமாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. காதல் அத்தியாயம் இயல்பாகவும் அழகாகவும் சித்திரிக்கப்பட்டுள்ளது.

சோமசுந்தரம் (மன்னர் மன்னன்) அபாரமான நடிப்பை வெளிப்படுத்தியுள்ளார். அப்பாவி இளைஞராகக் காதலியைப்பின் தொடர்வது, மனம் பிறழ்ந்த நிலையில் ஜனாதிபதியாக அதிகார தோரணை காட்டுவது, நீதி மன்றத்தில் கதறுவது என முக பாவனையிலும் உடல் மொழியிலும் அசத்தியிருக்கிறார்.

கிராமத்து ஏழைப் பெண்ணாக வரும் ரம்யா பாண்டியன், நாயகனைப் பார்த்து முதலில் விலகுவதும், பிறகு அன்பில் கரைவதுமாக இயல்பாக நடித்திருக்கிறார்.

ராஜுமுருகன், முருகேஷ் பாபுவின் எழுத்திலமைத்த "நகைக் கடைக்காரன் புரட்சி பண்ற நாட்ல, ஜனாதிபதி புரட்சி பண்ணக் கூடாதா?, சகாயம் பண்ணுங்கனு சொல்லலை.. சகாயம் மாதிரி பண்ணுங்கனுதான் சொல்றோம்!" என வசனங்கள் நன்றாயுள்ளன. வசனம், இசை, ஒளிப்பதிவு ஆகியவை படத்தின் மிகப் பெரிய பலம். கிராமத்தின் சூழலை அருமையாகக் காட்சிப் படுத்தியுள்ளார் ஒளிப்பதிவாளர் செழியன். இசையமைப்பாளர் ஷான் ரோல்டன், செல்லம்மாவில் உருகவைக்கிறார். என்னங்க சார் உங்க சட்டம், பாடலில் நிமிரவைக்கிறார். அழுத்தமான செய்தியைக் கூர்மையாகச் சொல்லும் படம். அதை முழுமையான திரைப்பட அனுபவமாக மாற்றுவதில் முழு வெற்றி பெற வில்லை. எனினும் எடுத்துக் கொண்ட விடயத்துக்காகவும் அதைச் சொல்லும் விதம் கொண்ட துணிச்சலுக்காகவும் இந்தப் படத்தைப் பாராட்டலாம்.






ஜெ.றியா

இயற்கையோடு ஒன்றி வாழ்ந்த மூதாதையர் சமூகம் ஒன்று அன்றிருந்தது. இன்று தோன்றியுள்ள தொழில்நுட்பங்களையும் நாகரிகங்களையும் அறிந்திருக்காத அவர்கள் தாம் இயற்கையை நேசித்த வாசிகள். அதனாலே நீண்டகால ஆயுள் கொண்டோராக இயற்கையிடமிருந்து வரம்பெற்றிருந்தார்கள், நாம் காணும் புறோயிலர்க் கோழிகளை அவர்களுக்குத் தெரியாது. இரசாயனம் விசிறப்பட்ட அறுவடைகளை அறிந்திலர். இயந்திரம் சமைக்கும் உணவு வகை கண்டிரார். பச்சை அரிசிச்சோறும் ஊர்க்கோழிக் குழம்பும் இயற்கை விளை பயிர்களையும் உண்டு வளர்ந்த அந்த வைரவான்களின் வாரிசுகளான நாம் ஏன் இன்று நோய்வாய்ப்பட்டுள்ளோம்? நமக்கேன் புதுவித நோய்கள்? இவைதான் நவீனமும் நாகரிகமும் செயற்கையும் தந்தவை. அப்போ எமது பிள்ளைகளின் நிலை..?



விக்ரம் பிரபு நடனம், சண்டைக் காட்சிகளில் குறை வைக்காமல் பரிமளித்தாலும், அவர் உணர்ச்சிபூர்வமான காட்சிகளைச் சிறப்பாகக் கையாள்வதைப் பார்க்க இன்னும் சில படங்கள் நாம் காத்திருக்க வேண்டும்.

# வாகா

உப்புச் சப்பற்ற காரணத்துக்காக எல்லைக் காவல் படையில் சேரும் வாசு (விக்ரம் பிரபு), எல்லைப் பகுதியான 'வாகா' என்னும் இடத்தில் வேண்டா வெறுப்பாக வேலை செய்துகொண்டிருக்கும்போது, ஒரு அழகான பெண்ணைச் சந்திக்கிறார். பெயரே தெரியாத அந்தப் பெண்ணுக்கு காஜல் (ரன்யா ராவ்) எனப் பெயரிட்டு மகிழ்கிறார். அந்தப் பெண் பாகிஸ்தானைச் சேர்ந்தவள் என்பது தெரியும்போது அதிர்ச்சிக்கு ஆளாகும் விக்ரம் பிரபு, பாகிஸ்தான் இராணுவத்திடம் மாட்டிக் கொண்ட அவளைக் காப்பாற்ற தானும் பாகிஸ்தான் இராணுவத்திடம் மாட்டிக்கொள்கிறார். தன் உயிரையும் காதலையும் அவர் எப்படிக் காப்பாற்றிக் கொள் கிறார் என்பதே கதை. தேசப் பற்றுடன் கலந்த காதல் கதை என்ற களத்தைத் தேர்ந்தெடுத்திருக்கும் இயக்குநர் ஜி.என்.ஆர்.குமர வேலன், அதைச் சொன்ன விதத்தில் நம்மைச் சோதித்திருக்கிறார். நாயகனின் காதலும் தேசப்பற்றும் அழுத்தமும் சுவாரஸியமும் இன்றி அடுத்தடுத்த காட்சிகளாக மட்டும் வந்து போகின்றன. ஹரிதாஸ் எடுத்த இயக்குநரின் படம்தானா இது என யோசிக்க வைக்கிறது படம் எடுக்கப்பட்டுள்ள விதம்.

நாயகன் இராணுவத்தில் சேருவதற்கான காட்சிகள் எரிச்சலூட்டுகின்றன. வாகாவில் நடக்கும் நிகழ்வுகள், காதல் அரும்புவது, எல்லைப் பகுதியின் நிலவரம் ஆகியவற்றைச் சித்திரித்திருக்கும் விதம் ஏமாற்றம் அளிக்கிறது. தேசப் பற்று வசனங்கள் மட்டும் போதும், மக்கள் புல்லரித்துப் போவார்கள் என இயக்குநர் நம்பியிருப்பார் போல. கடுமையான துப்பாக்கிச் சண்டையில் நாயகன் தப்புவதைப் பார்த்திருக்கும் நமக்கு, ரொக்கெட் லாஞ்சர் தாக்குதலில் இருந்து தப்புவது புதுமையாக இருக்கலாம்.

இந்திய இராணுவ வீரர்கள் காணாமற்போவது குறித்த தொலைக்காட்சி விவாதம் இந்திய பாகிஸ்தான் எல்லையில் நடக்கும் பல பிரச்சினைகள் குறித்த கேள்விகளை எழுப்புகிறது. இவற்றுக்கான பதில்களாகத் திரைக்கதை விரியும் என்னும் எதிர்பார்ப்பை அடுத்தடுத்த காட்சிகளில் குலைத்துவிடுகிறார் இயக்குநர். எல்லை விவகாரங்களில் பொதுப் புத்தியில் படிந்த வாதங்களே முன்வைக்கப் படுகின்றன. இந்திய, பாகிஸ்தான் இராணுவத்தினரின் போக்குகள் குறித்த சித்திரிப்பிலும் இதே தன்மைதான் தெரிகிறது.

விக்ரம் பிரபு நடனம், சண்டைக் காட்சிகளில் குறை வைக்காமல் பரிமளித்தாலும், அவர் உணர்ச்சிபூர்வமான காட்சிகளைச் சிறப்பாகக் கையாள்வதைப் பார்க்க இன்னும் சில படங்கள் நாம் காத்திருக்க வேண்டும். கதாநாயகி ரன்யா ராவுக்கு நடிக்கவெல்லாம் பெரிய வாய்ப்பு இல்லை. தன் கண்ணெதிரில் குடும்பமே சுட்டுக்கொல்லப்படும்போது, அவர் வெடித்து அழும் காட்சி மட்டும் மனதில் நிற்கிறது. சத்யன், கருணாஸ் நகைச்சுவை முயற்சிகள் புன்சிரிப்பை வரவழைக்கவும் கஷ்டப்படுகின்றன. டி.இமான் இசையில், பாடல்கள் தனியாகக் கேட்டால் நன்றாக இருக்கலாம். பின்னணி இசை இரைச்சல். சதீஷ்குமார் ஒளிப்பதிவு, ராஜா முகமது படத் தொகுப்பு இரண்டும் தம்மால் முடிந்தவரை படத்தைத் தூக்கி நிறுத்துகின்றன. படம் ஆரம்பித்த 10 நிமிடங்களில், ஆணியே புடுங்க வேணாம் என்ற பாடலைப் பாடிக்கொண்டு நாயகன் நடனமாடுகிறார். படம் முடிந்த பிறகு




# "நல்லதோர் உலகம் வேண்டும்" ஐ.நாவில் ஏ.ஆர்.

70ஆவது இந்திய சுதந்திர தினவிழா மற்றும் பாரத ரத்னா விருதுபெற்ற கர்நாடக இசைக் கலைஞர் எம்.எஸ். சுப்புலட்சுமியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, ஐக்கிய நாடுகள் சபையில் ஒஸ்கர் நாயகன் ஏ.ஆர் .ரஹ்மானின் இசைக்கச்சேரி நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இது ஐ.நாவில், ஐ.நாவுக்கான இந்தியாவின் நிரந்தரத் தூதரகம் மற்றும் சங்கர நேத்ராலயா சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதில், . எம்.எஸ். சுப்புலட்சுமியை நினைவுகூரும் வகையில் அவரின் பாடல்கள் இசைக்கப்பட்டன. இது 3 மணித்தியாலங்கள் இடம்பெற்றது. இந்திய பாரம்பரிய உடையை அணிந்து கலைஞர்கள் இசை நிகழ்ச்சியை வழங்கினர்.

புறக்கணிக்கப்பட்ட நிலையில் உள்ள குழந்தைகளுக்காக உருவாக்கப்பட்ட ஏ.ஆர். ரகுமானின் சன்சைன் ஆர்க்கெஸ்ட்ரா மாணவர்களின் இசைக்கச்சேரியும் நடைபெற்றது. அப்போது, "இனி யும் நீங்கள் பின்தங்கியவர்கள் அல்லர்; முன்னுரிமை பெற்றவர்கள்" என ஊக்குவிக்கும் வகையில் ரகுமான் வாழ்த் தினார். இந்த நிகழ்வில் ரகுமானின் இரு சகோதரிகள், ஜாவேத் அலி போன்ற புகழ்பெற்ற பாடகர்கள், டிரம்ஸ் சிவமணி ஆகியோர் பங்கேற்றனர்.தில்சே, பாம்பே உள்ளிட்ட திரைப்படங்களின் பாடல்கள், தத்துவப் பாடல்கள் , வந்தே மாதரம் போன்றனவும் ரகுமானுக்கு ஒஸ்கர் விருது பெற் றுத் தந்த 'ஜெய் ஹோ' பாடலும், பார்வையாளர்கள் ஆராவார நடனத்துடன் அரங்கேறியது. நிகழ்ச்சியின் முடிவில் உரையாற்றிய ஏ.ஆர். ரகுமான், "உயிர்க் கொலை உலகப் பிரச்சினைக்குத் தீர்வாகாது. நாம் அனைவரும் ஒன்றாக இணைந்திருப்போம். ஒருவரையொருவர் கொலை செய்யாமல், பிரச்சினைகளுக்கு வேறு நல்ல தீர்வுகளைக் கண்டறியும் உலகை என் வாழ்நாளில் காண விரும்புகிறேன். இன, மதவேறு பாடுகளை மீறி உயரத்தை அடைய வேண்டும்" - என்றார்.



# பாத வெடிப்புக்கு



# வேப்பிலையும் பப்பாளியும்

பாதணிகள் அணியாமல் நடக்கும்போதும், உடல் எடையால் ஏற்படுத்தும் அழுத்தம் காரணமாகப் பாதத்தில் உள்ள தோல்கள் அகன்று விடுகின்றன. இதனால் குதிக்கால்களில் வெடிப்பு ஏற்படுகிறது. நாம் அதிக எடையாக இருந்தாலும், குறைந்த எடையாக இருந்தாலும்சரி முழு எடையையும் தாங்கிக் கொள்வது பாதம் மட்டுமே. நம்மைத் தாங்கிக் கொள்ளும் பாதத்தை நாம் பராமரிக்க மறப்பதாலேயே இவ்வாறான வெடிப்புக்கள் ஏற்படுகின்றன. இதனால் பாதத்தின் அழகு கெடுவதோடு தாங்க முடியாத வலியும் ஏற்படுகிறது. தொடர்ந்தும் அதைக் கவனிக்காமல் விட்டால் வெடிப்பு அதிகமாகி, அதிக வலியை ஏற்படுத்துகிறது. மேலும் வெடிப்பு ஏற்பட்ட இடத்தில் குருதி ஓட்டம் சீராக இல்லாததால் இந்த வெடிப்பு நீடிக்கும்.

**இதற்குத் தீர்வு**

வீட்டருகே உள்ள வேப்ப மரத்தில் இருந்து, கொஞ்ச வேப்பம் இலை போதுமானது. ஓய்வு நேரத்தில் இளம் சுடுதண்ணீரில் பாதங்களை 5 நிமிடம் ஊறவைத்து அரைத்த வேப்பிலையை 15 நிமிடங்கள் ஊறவைத்து, இளம் சுடுநீரில் கழுவி வந்தால் பாதங்கள் ஆரோக்கியமாக இருக்கும். வாரம் இருமுறை இவ்வாறு பாதங்களைக் கவனித்துக் கொள்ளலாம். இதேபோல், பப்பாளியைப் பயன்படுத்தியும் குதிக்கால் வெடிப்பைப் போக்கலாம்.

நன்கு மசித்த பப்பாளியைக் குதிக்கால்களில் தடவி 10 நிமிடங்கள் கழித்து காய்ந்தவுடன் அகற்ற வேண்டும். இவ்வாறு தொடர்ந்து செய்து வந்தால், பிளவு ஏற்பட்ட பகுதியில் தோல்கள் ஒன்று சேர்ந்து புதிய தோல்கள் போல தோற்றமளிக்கும். மருந்துக் கடைகளில் வெடிப்புகளைப் போக்க விற்கப்படும் மருந்துகளைத் தடவினா லும் வீண்தான். பாதம் வழுவழுப்பாவதோடு செலவும் வீணாகிறது. மருந்துகளை மாற்றி, மாற்றி முயற்சி செய்வதைத் தவிர்த்து இயற்கையான முறைகளைக் கையாளுங்கள்.



# பலாச்சுளை பாயசம்

பலாப்பழத்துக்குப் புகழ்போனது எமது யாழ்ப்பாணமே. யாழ்ப்பாணப் பலாவுக்குத் தனிச்சுவையும் மணமும் உண்டு. அத்தகைய பலாப் பழத்தைப் பயன்படுத்தி பாயசம் காய்ச்சுவது எவ்வாறு என்று பார்ப் போம். ஏனெனில் எமது வழமையான சவ்வரிசிப் பாயசத்திலிருந்து வேறுபட்டுத் தித்திக்கும் புதுவித சுவையைத் தரக்கூடியது இது.

**தேவையானவை:**

பலாச்சுளைகள் - 20
தேங்காய்ப்பால் - 2 கப்
சீனி - 150 கிராம்
ஏலக்காய் - 06
கஜு, பிளம்ஸ் - தேவையான அளவு

விதைகள் நீக்கப்பட்ட பலாச்சுளைகளை நீரூற்றி வேகவைத்து அவை ஆறியபின் அரைத்துக்கொள்ளவும். கரைத்தசீனித்தண்ணியைக் கொதிக்கவைத்து மசித்த, பலாச்சுளைகளைப் போட்டுச் சிறிது நேரம் கழித்து தேங்காய்ப் பாலூற்றிக் கொதிக்கவைத்து கஜு, பிளம்ஸ், ஏலக்காய்த் தூள் போட்டு இறக்கிக் கொள்ளவும். இறுதியில் சிறிது நெய் விட்டால் இன்றும் சுவை தரும்.



# பேரீச்சம் பழம் தரும் பயன்கள்

பேரீச்சம்பழத்தில் புரதச்சத்து, நார்ச்சத்து, கால்சியம்,மாங்கனீசு, பொட்டாசியம், மக்னீசியம், இரும்புச்சத்து, விற்றமின்கள் போன்ற சத்துக்கள் மற்றும் குளுக்கோஸ், பிரக்டோஸ்,சுக்ரோஸ் போன்ற சத்துக்களும் நிறைந்து காணப்படுகிறது.

**மருத்துவப் பயன்கள்**

- மாலைக்கண் நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் பேரீச்சம்பழத்தை தேனுடன் கலந்து ஊறவைத்துச் சாப்பிட்டு வந்தால் உடலுக்குத் தேவையான எல்லாச் சத்துக்களும் கிடைத்துக் கண் பார்வைக் கோளாறுகள் நீங்கும்.
- மாதவிலக்குக் காலங்களில் பெண்களுக்கு ஏற்படும் ஒழுங்கற்ற மாத விலக்கை நிவர்த்தி செய்யப் பேரீச்சம்பழம் நல்ல மருந்தாகப் பயன்படுகிறது. ஆண்களுக்கு ஆண்மைத் தன்மையை அதிகரிக்க தேனுடன் பேரீச்சம்பழத்தைச் சாப்பிட்டு வந்தால் நல்ல பயன் கிடைக்கும்.
- உடலின் எடையை அதிகரிக்கத் தினமும் காலையில் பேரீச்சம் பழம் சாப்பிட்டு வருவதால்,அந்தப் பழத்தில் இருக்கும் விற்றமின், ஊட்டங்கள் மற்றும் புரதம் போன்றவை உடல் எடையை அதிகரிக்கின்றது.
- பேரீச்சம்பழத்தில் நிறைய விற்றமின்கள் இருப்பதால், இவை சருமத்தை மிருதுவாக்கி,சருமத்தில் உள்ள சுருக்கங்கள் மற்றும் தழும்புகள் மறைவதற்கு பயன்படுகிறது.
- பொட்டாசியம் மற்றும் மக்னீசியம் குருதி அழுத்தத்தைக் கட்டுப்பாட்டில் வைத் துக் கொள்ள உதவுகிறது.
- பேரீச்சம்பழத்தில் இருக்கும் இரும்புச்சத்து மற்றும் விற்றமின்கள் போன்றவை குருதியில் உள்ள ஈமோகுளோபின் அளவைச் சீராக வைத்துக் குருதிச் சோகைப் பிரச்சினையைத் தீர்க்கிறது.
- முதியவர்களுக்கு உண்டாகும் கை,கால் மூட்டு வலி போன்றவற்றை இந்தப் பேரீச்சம்பழம் குணப்படுத்துகிறது.
- சளி, இருமல் போன்ற பிரச்சினைகளுக்கு பேரீச்சம்பழத்தைப் பாலில் போட்டு காய்ச்சிய பின் அதைக் குடித்து வந்தால் அவை குணமாகும். கர்ப்பிணிப் பெண்கள் இந்தப் பேரீச்சம்பழத்தைத் தினமும் சாப்பிட்டு வந்தால் குழந்தை மற்றும் தாய் நல்ல ஆரோக்கியத்தைப் பெறலாம்.

# சட்டம் பெருகின் குற்றம் பெருகும்

தவபாரதி

இலத்தீன் மொழியில் "சட்டம் பெருகின் குற்றம் பெருகும்" என்ற சொற்றொடர் ஒன்று உண்டு. இப்போது எமது நாட்டுக்கும் இதன் கருத்துப் பொருந்துவதாயுள்ளது. பிற மொழிகளை விடத் தமிழில் அற இலக்கியங்களும் பக்தி இலக்கியங்களும் மிகக் கூடுதலாகவே எழுச்சிபெற்றுள்ளன. அதனைப் பெருமையாகக் குறிப்பிடும் நம்மவர்கள், அவை கூறும் அறக்கருத்துக்களைக் கடைப்பிடிப்பதில்லை. அவ்வாறெனின் தமிழில் கூடுதலாக அவை தோன்றியிருப்பதில் என்ன பெருமை? தமிழர் தம் அனுபவத்தை வைத்துப் பார்க்கும்பொழுது, பெருமை இல்லை. காரணம் அவற்றை நாம் கடைப்பிடிப்பதில்லை என்பதே பொருத்தமானது. ஒன்றுகூடிக் கரையும் காக்கையைவிடத் தரங்குறைந்தவனாகி விட்டான் தமிழன். அவனிடத்தே ஒற்றுமையில்லை, விட்டுக் கொடுப்பில்லை மாறாகக் காட்டிக் கொடுப்புக்களும் துரோகங்களும் நிறைந்த மனப்பாங்குடனேயே காணப்படுகின்றான். தமிழர்கள் இவ்வாறேயென்றால் சிங்களவர்கள் இதற்கு மேலாக ஒருபடி தாண்டிக் காணப்படுகின்றனர். உயிர் கொல்லுதல் கூடாது என்பதை மையமாக வைத்தே கி.மு. ஐந்தாம் நூற்றாண்டு அளவில் ஜைன மதம் தோன்றியது. இதனைப் பரப்ப மகாவீர வர்த்தமானர் தேசங்கள் தோறும் நடந்தே பயணம் செய்தார். முழுமையாக இல்லா விட்டாலும் ஏறத்தாழ இவர் வழியைப் பின்பற்றிய கௌதம புத்தரும் இக்கருத்தையே பரப்பினார். புத்தருடைய கருத்துக்கள் எமது நாட்டைத் தாண்டிச் சீனா, ஜப்பான் முதலான நாடுகளுக்கும் பரவின.

இக்கருத்துக்கள் கேட்கப்பட்டு, பரவலாகப் பேசப்பட்டு சித்தாந்தமாகி பௌத்த மதம் உருப்பெற்றது. நல்ல குணங்களுடன் மனிதன் வாழவேண்டும் என உரைத்தது. ஆனால் இவற்றை அவர்கள் கடைப்பிடிப்பதில்லை. மதம் தோன்றக் காரணமாக இருந்தனவே தவிர இவை மக்களால் பின்பற்றப்படுவதில்லை. ஏனெனில், உயிர்களைக் கொன்று குவித்தும் 'நான்' என்ற அகங்காரத்துடன் மற்றவர்களை மதிக்காதவர்களாகவும் காணப்படுகின்றனர் கௌதம புத்தர் வழிஒழுகுபவர்கள்.

நல்வழி நடக்காததால் தற் போதெல்லாம் மக்களைக் கண்காணிக்கவும் குற்ற மிழைப்பின் தண்டனை வழங்கவும் வேண்டியிருக்கின்றது.

இந்தத் தேவை எல்லா நாடுகளிலும் இருப்பதில்லை. இது தொடர்ந்து செல்லுமானால் இறுதியாய் எஞ்சப் போவது மனிதர்களற்ற உலகமே. நமக்குத் தெரியத் திருவள்ளுவர் காலம் தொடங்கி, மதுவை எதிர்த்துப் பிரசாரம் செய்யப்படுகிறது. ஆனால், பின்பற்றப்படுவதில்லை. இது இன்று யாழ்ப்பாணத்தில் உச்சம் கண்டுள்ளது. இதன் பின்னணியில் யாருள்ளார்கள்? என்ற அரசியல் ஒருபுறமிருக்க சுயசிந்தனையற்றவர்கள் உள்ளார்கள் என்பதுவும் தெளிவாகின்றது. தவறும் அத்தவறுக்குரிய தண்டனையும் உடனுக்குடன் நிகழவேண்டும். தள்ளிப்போகுமானால், தவிர்க்கப்படுமானால், அத்தவறுகள் தொடர்ந்து நீடிக்கும் என்பது கண்கூடானது. சிலப்பதிகாரத்தில் கோவலன் கொலை செய்யப்பட்டதை அறிந்து அதிர்ந்த கண்ணகி அரசனைச் சந்தித்து நீதி கேட்கிறாள். "கள்வனைக் கொல்லுதல் கடுங்கோல் அன்று" என்று அரசன் பதிலிறுக்கிறான். இதிலிருந்து அக்காலத்தில் கள்வர்களுக்கு அளிக்கப்பட்ட தண்டனை மரண தண்டனை என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது.

இதில் கோவலன் குற்றமிழைத்தவனா? என்று விசாரித்திருக்க வேண்டும் என்ற கருத்து ஒருபுறமிருக்கட்டும் , திருடியிருந்தால் மரண தண்டனை என்ற கருத்துக்கு மறுப்பில்லை என்பது வெளிச்சமாகின்றது. இத்தகு நிலை எந்த நாட்டில் எந்தச் சமுதாயத்தில் விதிவிலக்கின்றி கடைப்பிடிக்கப்படுகிறதோ அந்தச் சமுதாயம் தான் இறுதியிலாவது நற்பண்புள்ள மனிதர்களைக் கொண்டமையும்.

அன்று மதபோதனைகளையும் நீதி நூல்களையும் பின்பற்றாமல் அநியாயங்கள் தோன்ற ஆரம்பித்தன. இன்று சட்டங்கள் வரையறைகள் தகர்க்கப்பட்டுக் குற்றவாளிகள் உருவாகின்றனர். இதிலிருந்து தெளிவாகுவது " சட்டம் பெருகின் குற்றம் பெருகும்" என்பதே. பணமிருந்தால் நீதிமன்றத்தைத் தீர்மானிக்கலாம். நீதியைத் தீர்மானிக்கலாம். அகப்படாமல் விடுதலை பெறலாம். அனைத்துச் சுகங்களையும் குற்றம் செய்த பிறகும் அனுபவிக்கலாம் என்ற நிலை நீடிக்கும் வரை, இந்நாட்டில் நீதியை நிலைநாட்டுவது என்பது குதிரைக்கொம்பே.



# தேவையில்லை முப்பரிமாண கண்ணாடிகள்



இப்போதெல்லாம் சாதாரண திரைப்படங்களைப் பார்ப்பதைவிட முப்பரிமாணத் திரைப் படங்களைப் பார்ப்பதைத்தான் அதிகளவானோர் விரும்புகின்றனர். அதிலும் அனிமேஷன் செய்யப்பட்ட ஹொலிவூட் படங்களின் வண்ணமும் காட்சிகளும் முப்பரிமாணத் தொழில்நுட்பத்திலிருந்தால் நம் கண்களை ஈர்க்கின்றன. முப்பரிமாணப் படங்களின் யதார்த்தக் காட்சிகள் தரும் அனுபவத்துக்கு ஈடு இணையே கிடையாது. முப்பரிமாணத் தொழில்நுட்பத்தின் மூலமாகக் கிடைக்கின்ற அனுபவம் வித்தியாசமானது. திரையில் காட்சிப்படுத்தப் பட்டுள்ள ஐஸ்கிரீம்களை எடுப்பதற்காகக் கைகளை நீட்டி முன்னாலுள்ள இருக்கையுடன் தடக்குப்படுபவர்கள். திரைப்படத்தில் வரும் பாத்திரம் கையை நீட்டிக் குத்தினால் மிகவும் இயல்பாக இருக்கையிலிருந்து பின்னால் நகர்பவர்கள் எனப் பலவித உணர்வுகளைப் பார்வையாளர்களிடம் ஏற்படுத்தி விடுவனதான் இந்த முப்பரிமாணத் திரைப் படங்கள் .இவையெல்லாம் முப்பரிமாணத் தொழில்நுட்பம் தருகின்ற அனுபவங்கள்.

முப்பரிமாணத் தோற்றத்தில் திரைப்படங்களைப் பார்வையிடுவதானால் அது வெற்றுக் கண்களால் முடியாது. அதற்கெனத்தயாரிக்கப்பட்ட கண்ணாடிகளை அணிந்தாலே அது சாத்தியம். திரையரங்குகளில் அந்தப் படத்தைப் பார்ப்பதற்குத் தரப்பட்ட கண்ணாடியை அவர்களுக்குத் தெரியாமல் வீட்டுக்குக் கொண்டுவந்து அவற்றை அணிந்து சாதாரண காட்சிகளைப் பார்த்தால் அவை முப்பரிமாணத் தோற்றத்தில் காட்சியளிக்காது இதனால் ஏமாற்றமடைந்தவர்களும் உண்டு.

இப்போது முப்பரிமாணப் படங்களைப் புார்ப்பதற்கு அதற்கெனத் தயாரிக்கப்பட்ட கண்ணாடிகளை அணிய வேண்டும் என்ற கட்டாயம் இல்லை . ஆம் இனி நீங்கள் முப்பரிமாணப் படங்களைப் பார்க்கக் கண்ணாடி அணிய வேண்டியதில்லை. முப்பரிமாணப் படங்களை அதற்குரிய கண்ணாடிகளை அணியாமலேயே பார்க்கலாம் . அது எவ்வாறு என எண்ணுகிறீர்களா? வெற்றுக் கண்களால் பார்த்தாலே முப்பரிமாண அனுபவத்தைத் தரும் திரையை உருவாக்கிவிட்டார்கள் விஞ்ஞானிகள். இந்தத் திரைத் தொழில்நுட்பத்தால் முப்பரிமாணப் படத்தின் அனுபவம் எந்த வகையிலும் குறைந்துவிடாது. முப்பரிமாணக் கண்ணாடியை அணிந்து படம் பார்க்கும்போது கிடைக்கும் அதே காட்சியனுபவம் இந்தத் திரையை வெற்றுக் கண்களால் பார்க்கும் போதே கிடைத்துவிடுகின்றது .

அமெரிக்காவின் தொழில்நுட்ப நிறுவனம் ஒன்றும் இஸ்ரேலின் அறிவியல் நிறுவனம் ஒன்றும் இணைந்து இந்தத் தொழில்நுட்பத்தைக் கண்டறிந்திருக்கின்றன. பல வில்லைகளையும் கண்ணாடிகளையும் ஒன்றாக இணைத்து முப்பரிமாணக் காட்சியை உருவாக்கக் கூடிய இந்தத் திரையை உருவாக்கியிருக்கின்றன. இதனால் திரையரங்கின் எந்தத்திசையிலுள்ள இருக்கையில் இருந்தாலும் முப்பரிமாணப் படம் தெரியுமாம்.

முப்பரிமாணத் தொழில்நுட்பத்துடன் கூடிய ஒரேயொரு திரையரங்கைக் கொண்ட எமது ஊரில் இந்தத் தொழில்நுட்பம் இப்போதே கிடைத்துவிடும் எனப் பகல் கனவு காண ஆரம்பித்துவிடாதீர்கள். இதை அமைக்கக் கடும் செலவுபிடிக்கும். பல சிக்கலான வேலைகளைச் செய்ய வேண்டியிருக்குமாம். அப்படியானால் இது நடந்த மாதிரி தான் எனவும் எண்ணிக் கொள்ளலாம். இன்றில்லாவிட்டாலும் நாளை இந்தத் தொழில்நுட்பம் நமக்குக் கிடைத்து விடும். அப்போது எமது ஊரில் பல முப்பரிமாணத் திரையரங்குகள் தோன்றினாலும் சந்தேகத்துக்கில்லை.

# பழமையே பலம்!

ஜெயநிஷா



ஆதிகால மனிதன், விலங்குகளை வேட்டையாடிச் சாப்பிட்டு வந்தான். காலப்போக்கில், விவசாயம் செய்து உண்ணக் கற்றுக் கொண்டான். அன்றிலிருந்து இன்று வரை பயிர்ச்செய்கையே மனிதனது உணவுத் தேவையைப் பூர்த்தி செய்தது. உணவே மருந்து' என்று அவன் உணர்ந்திருந்தான். அவை எல்லாம் அவனோடே அருகிவிட்டன. இன்று நாம் உண்ணும் உணவே விஷமாகிவிட்டது. அவற்றால் உண்டாகும் பல இனம் புரியாத நோய்கள் மனிதனை ஆட்கொண்டுள்ளன.

அவர்கள் காலத்தில், நெல்விதைப்பதற்கு முன், வயலோரம் வளர்ந்து கிடக்கும் காட்டுச்செடிகளை வெட்டி, வயலில் போட்டு, உழுத பிறகு, நெல்லை விதைத்தனர். இவை தான், நெல்லுக்கான இயற்கை உரம். பிறகு சிறிது நாள் கழித்து, மக்கிப்போன குப்பைகளையும், மாட்டுச்சாணத்தையும் மேல் உரமாக இட்டனர். நெல் வளர்ந்த பிறகு, பூச்சிக்கொல்லியாக வேப்பம் விதைகளை இடித்துக் கரைத்துத் தெளித்தனர். மரக்கறிப் பயிர்கள், மிளகாய், வெங்காயம் போன்றவற்றை விளைவிக்கவும் இவ்வாறான இயற்கை முறைப் பராமரிப்புக்களைத்தான் மேற்கொண்டிருந்தனர். இன்று உள்ள பல்வேறு வகையான பூச்சிக்கொல்லிகள் அன்று கிடையாது. விளைந்த பயிர்களை, ரசாயனக் கலவை கொண்டு பாதுகாக்கும் பழக்கம், அன்று இல்லை. நெற்பயிர் மட்டுமன்றி எந்தக் காய்கறிகளும் இரசாயனப் பொருள்களைக் கண்டதில்லை. விதைப்பு முதல் அறுவடை வரை இரசாயன உரங்களைப் பயன்படுத்தியது கிடையாது. இயற்கை விவசாயம்தான் எம் முன்னோர்களின் வாழ்வியலோடு ஒன்றித்திருந்தது.

எல்லாமே வேகம் என்ற இந்தக் காலத்தில், விவசாயமும் செயற்கை முறைக்குமாறி வேக மெடுத்து விட்டது. அதிகரித்து வரும் சனத்தொகைக்கு ஏற்ப அதிக விளைச்சல்கள் வேண்டி செயற்கை முறையில் அறுவடைகள் பெறப்படுகின்றன.

இன்று இரசாயன உரங்களும், பூச்சிக்கொல்லி மருந்துகளும் இல்லாமல், விவசாயம் இல்லை என்ற நிலை வந்துவிட்டது. விளை நிலத்தில் இருந்து, மனிதனின் உடல்வரை, ஆபத்தை ஏற்படுத்தக்கூடியனவாக அவை காணப்படுகின்றன. பல வகை இரசாயனப் பொருள்கள் இன்றைய உணவுகளிலுள்ளன. வாசனைக்கு, நிறத்துக்கு, பதப்படுத்த எனப் பல வழிகளில் அவை சேர்க்கப்படுகின்றன.

இன்று இயற்கை விவசாயம் என்பது கிடையாது. இயற்கை விவசாயம் என்பது, இரசாயனம் கலக்காமல், நிலமும், வளமும் பண்படுத்தப்படும் வரை காத்திருந்து விவசாயம் செய்யும் முறையாகும். அது மண்ணின் நச்சுப்பொருள்களின் அளவைக் குறைத்து இயற்கையோடு இணைந்ததாலால் நன்மை தரக்கூடியது.



இவ்வாறு உரங்களும் இரசாயனங்களும் பயன்படுத்துவது ஒருபுறமிருக்க இவற்றால் விளைந்த உணவைப் பலநாள்கள் வைத்துச் சாப்பிடுவது என்பது, இன்னொரு மோசமான முறை. உணவுப்பொருள்கள் சமைத்த உடனேயே உட்கொள்ளக்கூடியவை எனினும் குறிப்பிட்ட நேரம்வரையும் பேணிக்கொள்ளலாம். அதையும் மிஞ்சி குளிர்சாதனப் பெட்டியில் வைப்பதால், அதிலிருந்து உருவாகும் பக்கவிளைவுகளும் எம்மையே சாரும். நிலத்தில் விளைபவை ஆரோக்கியமற்றவை என்று அசைவ உணவுக்கு மாறலாம் என்றால், அதிலும் பல செயற்கைக் கலப்புக்கள். பழங்கால மனிதன் வேட்டையாடி உண்டான். அப்போது அவனும் ஓட வேண்டும். அவனிடமிருந்து காத்துக்கொள்ள, விலங்கும் ஓட வேண்டும். அதனால், அன்றைய அசைவஉணவு ஆரோக்கியமானதாயிற்று. ஆனால் இன்றைய மனிதன் தானும் செயற்கையாகக் குளிரூட்டப்பட்ட அறைகளில் இருந்து கொண்டு, பல வேண்டாத உணவு களைக் கொடுத்து வளர்க்கப்பட்ட, கொழு கொழு கோழியைத் தின்று, நோய்வாய்ப்பட்டு மடிகிறான். இவ்வாறான புதுமைகளிலிருந்தே எம் முன்னோரின் ஆயுள் இரகசியம் புரிகிறதல்லவா?



## ஒரு கண உவகை...

பருவமழை பெய்து ஓய்ந்திருந்தது; ஆனால்
தவளைகள் விட்டுக்கொடுப்பதாய் இல்லை
அது ஐந்தாறு வயல்களின் நடுவே இருக்கும்
சிறு பள்ளம்...

வரம்பை மீறிய வெள்ளம் வழிந்து
தேங்கியது ( ம் ) நிரம்பியது
அச்சிறு பள்ளம்...

ஆனந்தம் ஒரு பக்கம்
அலங்கோலம் மறுபக்கம்
தவளைகளுக்கு;
அவை கிணற்றுத் தவளைகளில்லை; ஆதலால்
பள்ளத்து நீரில் குதித்தும் நீந்தியும் குதூகலித்தன.

ஓய்ந்த மழையோடு அமைதியாய் விடிந்தது
அடுத்த நாள் அதிகாலை,
மழை ஓய்ந்து இன்றோடு மூன்று நாட்கள்.
பள்ளத்தில் நிறைந்தேயிருந்தது நீர்.
தவளைகளின் சத்தம்?
தவளைகளின் சத்தம் இல்லாமலயே போய்விட்டது.

எட்டிப் பார்த்தால்...
வயிறு வீங்கியும் தலை கவிழ்ந்தும் மிதந்தன
ஏராளம் தவளைகளும் குஞ்சுகளுமாய்.
இவைகளுடன் சேர்ந்தே மிதந்தது
வயலுக்கு விசிறிய அந்த மருந்துக் கலன்.

ந.தூரன்



# இனி ஒரு யுகம் செய்வோம்

உலகில் பல இலட்சம் கிலோக்கணக்கான உணவுகள் தினமும் வீணாகின்றன. இன்னொரு பக்கம் மக்கள் உணவு கிடைக்காமல் பட்டினியில் வாடுகிறார்கள். இதை ஓரளவாவது சரி செய்வதற்கு முயன்றுள்ளனர் இங்கிலாந்தைச் சேர்ந்த கிறிஸ் வில்சன், ஜாமிக்ரும்மி இருவரும். இணையம் மூலம் தேவையான உணவுகளைக் கேருவோரைச் சில தடங்கல் காரணமாக அவை சென்றடைவதில்லை. அந்த உணவுகள் அப்படியே வீணாகி விடுகின்றன.

அதேபோல சமைக்கப்பட்ட உணவுகள் அனைத்துமே அன்றே விற்பனையாகி விடுவதில்லை. எஞ்சுபவையும் வீணாகின்றன. இந்த உணவுகளை விடுதிகளில் இருந்து இவர்கள் பெற்றுக்கொள்கிறார்கள் . சுற்றுச்சூழலுக்குத் தீங்குதராத பெட்டிகளில் அடைத்து, மிகக் குறைந்த விலையில் உணவுகளைத் தேவைப்படுவோருக்குக் கொடுத்து விடுகிறார்கள். இதனால் உணவுகள் வீணாவதில்லை. உணவு வாங்க இயலாதவர்கள் பட்டினி கிடக்க வேண்டியதும் இல்லை. ஹங்கேரியில்தான் இவர்கள் இந்தச் சேவையை முதன்முதலில் ஆரம்பித்தார்கள். தற்போது லண்டனில் உள்ள 95 உணவகங்களில் இவ்வாறு செய்து வருகிறார்கள். இவர்களின் 2010ஆம்ஆண்டு அறிக்கையின்படி பிரிட்டனில் மட்டும் ஒரு வருடத்தில் 6 இலட்சம் தொன் உணவுகள் வீணாகின்றன. இப்போது இவர்கள் Too good to go என்ற பெயருடைய மென்பொருள் ஒன்றை உருவாக்கியிருக்கிறார்கள். இது உணவு வீணாவதைத் தடுப்பதற்காக உருவாக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# சூரியப் பயணங்கள்

ஜோதா

ஜூலை மாதத் தொடக்கத்தில் நாஸாவின் விண்வெளித் துழாவியான ஜூனோ வியாழன் கோளின் சுற்றுப்பாதையில் நுழைந்தது. ஐந்தாண்டுப் பயணத்தை, அதாவது 180 கோடி மைல் தூரத்தை, அப்போது நிறைவு செய்தது. இதன் காரணமாக நாஸாவின் மற்ற விண்வெளித் திட்டங்களுக்கும் நீடிப்பு கிடைத்திருக்கிறது.

இந்தத் தருணத்தில், சூரியக் குடும்பத்தைத் துழாவுவதற்கு நாஸா அனுப்பி யிருக்கும் விண்கலங்களைப் பற்றிய ஒரு பார்வை:

**செவ்வாய்த் தேடல்கள்**

செவ்வாயின் மணல் மேடுகளிலும் பள்ளங்களிலும் திரிந்துகொண்டிருப்பது வேறு எதுவுமல்ல, ஆப்பர்சூனிட்டி, கியூரியாசிட்டி ஆகிய உலாவிகள்தான் . இந்த இரண்டு உலாவிகளிலும் மூத்தது ஆப்பர்சூனிட்டிதான். இது 2004-லிருந்து செவ்வாயில் உலவிக் கொண்டிருக்கிறது. மூன்று மாதங்கள் மட்டும்தான் அது நீடிக்குமென்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அது 12 ஆண்டுகள் தாக்குப்பிடித்திருக்கிறது. இந்தக் காலகட்டத்தில் புழுதிச் சூறாவளிகளையும், தொன்மையான அமில ஏரிகளையும் அங்கே கண்டுபிடித்திருக்கிறது. 2012இல் அங்கே தரையிறங்கிய கியூரியாசிட்டி உலாவி செவ்வாயின் தரையைத் துளையிட்டுப் பார்த்து உயிர் வாழ்க்கைக்கு அவசியமான உயிர்ம வேதிப் பொருட்களை அங்கே கண்டறிந்தது.

தரையில் இந்த உலாவிகளின் ஆட்சி என்றால் செவ்வாயின் சுற்றுப் பாதையிலோ மார்ஸ் ரிகானிஸன்ஸ் ஆர்பிட்டர், மார்ஸ் ஒடிஸி, மேவன் ஆகியவை சுற்றிக்கொண்டிருக்கின்றன. இந்தத் துழாவுகலங்கள் எல்லாமே செவ்வா யின் மிகத் தொன்மையான காலத் தைப் பற்றி அறிந்துகொள்வதற்கு ஏதுவாக அதன் தரையிலும் காற்று மண்டலத்திலும் ஏதாவது வேதிப் பொருள்களின் தடயங்கள் கிடைக்கின்றனவா? என்று தேடிக்கொண்டிருக்கின்றன. நாஸா அனுப்பிய இந்தச் சிப்பாய்கள் எல்லாம் தேடிக் கண்டுபிடித்த தகவல்கள் மூலம் முன்பு ஈரப்பதத்துடன் இருந்த செவ்வாய்பிற்பாடு எப்படி வறண்டும் வெறிச்சோடியும் போனது என்பதை நம்மால் தெரிந்துகொள்ள முடிகிறது.

**செவ்வாயில் பிற நாடுகள்**

செவ்வாயில் தேடல் வேட்டை நடத்துவதென்பது ஏதோ அமெரிக்காவுக்கு மட்டும் ஏகபோகம் அல்ல. அந்த செங்கோளுக்கு மேலே இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் மார்ஸ் ஆர்பிட்டர் மின்கலம் சுற்றிக் கொண்டிருக்கிறது. 2013 இல் ஏவப்பட்ட இந்தக் கலம் 2014-லிருந்து செவ்வாயைச் சுற்றிக்கொண்டிக்கிறது. இந்த ஆண்டின் இறுதியில் ஐரோப்பிய விண்வெளி நிறுவனமும் ரஷ்ய ஃபெடரல் விண்வெளி நிறுவனமும் இணைந்து தங்களுக்கென ஒரு துழாவியை அனுப்ப முடிவெடுத்திருக்கின்றன.

**இன்றும் அதே நிலா**

நிலவுக்கு மனிதர்களை அமெரிக்கா அனுப்பிப் பல தசாப்தங்கள் ஆகின்றன. என்றாலும் நிலவின் மீது வைத்த கண்ணை நாஸா எடுத்துவிடவில்லை. நாஸாவின் லூனார் ரிகானிஸன்ஸ் ஆர்பிட்டர் சில சமயங்களில் நிலவின் தரைப் பகுதியிலிருந்து வெறும் 12 மைல்கள் உயரத்தில் வட்டமடித்துக் கொண்டிருக்கிறது. 2009-ல் செலுத்தப்பட்ட கலம் அது. அன்றுமுதல் தனது லேஸர் கருவிகள், தொலைநோக்கிகள், உணர்மானிகள் போன்றவற்றைக் கொண்டு நிலவின் துருவங்கள், பள்ளங்கள், மலையுச்சிகள் போன்றவற்றில் பனிக்கட்டிகளைத் தேடிக்கொண்டிருக்கிறது இந்தத் துழாவி.

2013-லிருந்து சீன விண்வெளி நிறுவனத்தின் சாங்-ஈ 3 யூடு உலாவி நிலவின் தரையில் குறுக்கும்நெடுக்குமாக உலவிக்கொண்டிருக்கிறது. தனது உலாவலில் நிலவின் எரிமலைப் பாறைகளை அது கண்டறிந்திருக்கிறது.



**விண்கற்களைக் கவனித்தல்**

நியோவைஸ் விண்வெளித் தொலைநோக்கிதான் நாஸாவின் விண்கல் வேட்டை நாய். 300 அடிகளுக்கு மேல் சுற்றளவு கொண்ட விண்கற்கள் பூமியின் சுற்றுப் பாதையில் 50 லட்சம் மைல் தூரத்துக்குள் வருமென்றால் அவற்றை இந்தத் தொலைநோக்கி கண்டறிந்துவிடும். அதுபோன்ற விண்கற்கள் பூமியுடன் மோதினால் மிகமிக மோசமான அழிவை நாம் சந்திக்க நேரிடும்.

வைஸ் மினின் ஒரு பகுதியாக 2009இல் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது. ஆரம்பத்தில் ஒட்டுமொத்த வானத்தையும் நோட்டமிட்டு 20 லட்சம் அகச்சிவப்பு ஒளிப்படங்களை அது எடுத்தது. 2011இல் இந்தத் தொலைநோக்கியின் செயல் பாடு நிறுத்தப்பட்டது. செயல்பட்ட காலத்தில் 11 நொடிகளுக்கு ஒரு படம் என்ற வீதத்தில் வைஸ் எடுத்திருந் தது. இரண்டாண்டுகள் உறக்கத் துக்குப் பிறகு 2013இல் மீண்டும் நியோவைஸ் என்ற பெயரில் அது தயார்ப்படுத்தப்பட்டது. இந்தத் தொலைநோக்கி அளித்த தரவுகளை வைத்துப் பார்க்கும்போது பூமிக்கு ஆபத்து ஏற்படுத்தக் கூடிய விண்கற்கள் குத்துமதிப்பாக 4,500 வரையில் இருக்கலாம். இதில் 1,350 விண்கற்களை நியோவைஸ் கண்டறிந்திருந்தது.

**ஹப்பிள் எடுத்த படங்கள்**

வானத்தில் எந்நேரமும் விழித்திருக்கும் கழுகுக் கண் எதுவென்று பலருக்கும் தெரியும். ஆம், ஹப்பிள் தொலைநோக்கிதான் அது. வியாழனின் ஒளிக்கோலம், செவ்வாய்த் துருவங்களின் உறை பனி, நெப்டியூனின் கருஞ் சூறா வ்ளிகள் என்று சூரியக் குடும் பத் துக்குள் தன் பார்வையை ஓட்டி எண்ணற்ற ஒளிப்படங்களை ஹப் பிள் நமக்கு அனுப்பியிருக்கிறது.


1990-ல் செலுத்தப்பட்டதிலிருந்து அண்டவெளியில் 10 லட்சத்துக்கும் மேற்பட்ட விடயங்களைக் கண்டறிந்து நமக்குச் சொல்லியிருக்கிறது. நமது சூரியக் குடும்பத்தைத் தாண்டி அது எடுத்த குதிரைத்தலை நெபுலா, ஜனனத்தின் தூண்கள் போன்ற புகைப்படங்கள் மிகவும் புகழ்பெற்றவை. ஹப்பிள் தொலைநோக்கி கண்டறிந்த விடயங்களை வைத்து 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அறிவியல் ஆய்வுக் கட்டுரைகள் எழுதப்பட்டிருக்கின்றன. ஹப்பிளை இயக்குவதற்கான ஒப்பந்தத்தை நாஸா மேலும் ஐந்தாண்டுகள் நீட்டித்திருக்கிறது.

வானத்தில் எந்நேரமும் விழித்திருக்கும் கழுகுக் கண் எதுவென்று பலருக்கும் தெரியும். ஆம், ஹப்பிள் தொலைநோக்கிதான் அது. வியாழனின் ஒளிக்கோலம் (Aur ora), செவ்வாய்த் துருவங்களின் உறைபனி, நெப்டியூனின் கருஞ் சூறாவளிகள் என்று சூரியக் குடும் பத்துக்குள் தன் பார்வையை ஓட்டி எண்ணற்ற ஒளிப்படங்களை ஹப்பிள் நமக்கு அனுப்பியிருக்கிறது.

**விண்கற்களின் பகுதிகள்**

செவ்வாய்க்கும் வியாழனுக்கும் இடைப்பட்ட பிராந்தியத்தில் உள்ள விண்கற்கள் பகுதியில் கோடிக்கணக்கான பாறைகள் மிதக்கின்றன. இந்தப் பிராந்தியத்துக்கு நாஸாவின் டான் விண்கலம் வருகை புரிந்திருக்கிறது. இந்தப் பகுதியின் மிகப் பெரிய இரண்டு பொருள்களான சியரீஸ் குறுங்கோளையும் வெஸ்டா என்ற குழந்தைக்கோளையும் டான் துழாவி பார்த்திருக்கிறது.

2011இல் தொடங்கி 2012 வரை 14 மாதங்கள் வெஸ்டாவைச் சுற்றியதுதான் டானின் முதல் பணி. இப்போது அது சிரீஸைச் சுற்றுகிறது.




இந்த விண்கல் பகுதியை நோக்கி ஜப்பானிய விண்வெளி மையத்தின் ஹயபுஸா -2 வந்துகொண்டிருக்கிறது. ஜூலை 2018இல் ஒரு விண் பாறையை அது சந்திக்கவிருக்கிறது. அங்கிருந்து ஆய்வு மாதிரிகளைச் சேகரித்துக் கொண்டு பூமிக்கு அந்தக் கலம் திரும்பும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**போய்வருகிறேன் சனியே**

2004இலிருந்து சனிக்கோளைச் சுற்றிக்கொண்டிருப்பது களீனி விண்கலம். 1997இல் ஏவப்பட்ட இந்தக் கலம் சனிக் கோளைப் பற்றியும் அதன் நிலைகளைப் பற்றியும் நாஸா கொண்டிருந்த புரிதலை விரிவுபடுத்தியது. சனியின் வளையங்கள் தொடர்ந்து உருமாறிக்கொண்டிருப்பது ஏன் என்றும் களீனியால் தெளிவுபடுத்தியுள்ளது.

களீனி சனியின் நிலவுகளுக்கு அருகே பலமுறை பறந்ததன் மூலம் என்செலடஸ் நிலவில் தெரியும் பனிக்குழம்பு, டைட்டன் நிலவின் மீதேன் கடல்கள் போன்றவற்றைப் பற்றி நமக்குத் தெரியவந்தது. 2005இல் டைட்டன் நிலவில் ஹைகன்ஸ் விண்துழாவியை களீனி வெற்றிகரமாகத் தரையிறக்கியது. தற்போது, தனது இறுதிப் பயணத்துக்காகத் தன்னை முடுக்கிக் கொண்டிருக்கிறது. அந்தப் பயணத்தின் இறுதியில் சனிக் கோளுக்குள் அது மூழ்கி ஆவியாகிவிடும்.

**வெள்ளி வீதியில் ஒரு நீண்ட பயணம்**

சூரியக் குடும்பத்தின் இரண்டாவது கோளான வெள்ளியைச் சுற்றி ஆராய்வதற்காக 2010இல் ஏவப்பட்ட ஜப்பானின் அகட்சுகி (Akatsuki) விண் துழாவி வெள்ளியைத் தவறவிட்டு சூரியனை ஐந்தாண்டுகளாகச் சுற்றியது. ஒருவழியாகக் கடந்த ஆண்டு சரியான பாதைக்கு அது திருப்பப்பட்டது. வெள்ளியின் வளிமண்டலத்திலிருந்தபடி அந்தக் கோளை ஒளிப்படம் எடுத்தும் அகட்சுகி அனுப்பியது.

**புளூட்டோவுக்கும் அப்பால்**

கடந்த ஜூலை மாதத்தில் வியாழனைக் குறித்த ஆய்வுகளில் குதூகலத்திலிருந்தது நாஸா. கடந்த ஆண்டோ புளூட்டோவை முன்னிட்டு குதூகலித்தது. 2015இல் நியூ ஹொரைசான்ஸ் விண்கலம் குறுங்கோளான புளூட்டோவைக் கடந்த வரலாற்றுச் சம்பவம் நிகழ்ந்தது. ஒன்பது ஆண்டுகள், 300 கோடி மைல்கள் கடந்து அந்தத் துழாவுகலம் புளூட்டோ என்ற உறைந்துபோன உலகத்தின் மேல் தன் பார்வையைச் செலுத்தியது. புளூட்டோவைக் கடந்தபோது நியூ ஹொரை சான்ஸ் எடுத்த ஒளிப்படங்களைப் பார்த்தால் புளூட்டோவில் இதய வடிவில் ஒரு தழும்பு தெரிகின்றது. உறைபனி மலைகளையும் புளூட்டோவில் அது கண்டறிந்தது. புளூட்டோவின் நிலவான கேரனையும் ஒளிப்படங்கள் எடுத்தது. கால நீடிப்பு வழங்கப்பட்ட நாஸாவின் திட்டங்களில் நியூ ஹொரைசான்ஸும் ஒன்று. சூரியக் குடும்பத்தின் புறநகர்ப் பகுதிகளில் பனிக்கிடங்காகவும் விண் கற்களின் களஞ்சியமாகவும் இருக்கும் கைப்பர் பகுதியை நோக்கி நியூ ஹொரைசான்ஸ் தற்போது விரைந்துகொண்டிருக்கிறது. கைப்பர் பிராந்தியத்தின் பொருள்களுள் ஒன்றான 2014 எம்.யூ.69 என்ற சிறிய, குளிர்ந்த பாறையை 2019இல் இவ்வாறு நியூஹொரைசான்ஸ் ஒளிப்படம் எடுக்கும். அண்டவெளி ஆராய்ச்சிகள் நீள்கின்றன.

*நன்றி : த இந்து*

> செவ்வாய்க்கும் வியாழனுக்கும் இடைப்பட்ட பிராந்தியத்தில் உள்ள விண்கற்கள் பட்டையில் கோடிக்கணக் கான பாறைகள் மிதக்கின்றன. இந்தப் பிராந்தியத்துக்கு நாஸா வின் டான் விண்கலம் வருகை புரிந்திருக்கிறது. இந்தப் பட்டையின் மிகப் பெரிய இரண்டு பொருள்களான சியரீஸ் குறுங் கோளையும் வெஸ்டா குழந்தைக் கோளையும் டான் துழாவிப் பார்த்திருக்கிறது. 2011இல் தொடங்கி 2012 வரை 14 மாதங்கள் வெஸ்டாவைச் சுற்றியது தான் டானின் முதல் பணி. இப்போது அது சியரீஸைச் சுற்றுகிறது.



# கொலோசியம்

இத்தாலிநாட்டின் உரோம் நகரில் அமைந்துள்ள கொலோசியம் உலக அதிசயங்களில் ஒன்று. இது ஒரு பிரம்மாண்டமான அரங்கம். போர்வீரர்களின் சண்டை, விலங்குகளின் சண்டை, குற்றவாளிகளுடன் விலங்குகள் சண்டை, போர் நாடகங்கள், மரண தண்டனைகள் போன்ற பல அம்சங்கள் அரங்கேறிய இடம். மேற்கூரையில்லாத இந்த வட்ட வடிவக் கட்டடத்தின் நடுவில் உள்ள களத்தில் தான் சண்டைகள் நடைபெற்றன. களத்தைச் சுற்றி உள்ள வட்ட வடிவப் படிகளில் மக்கள் உட்கார்ந்து அங்கே நடப்பவற்றைப் பார்ப்பார்கள்.

இது பிளேவியன் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டது. அதனால் இதை பிளேவியன் 'ஆம்பி தியேட்டர்' என்று முதலில் அழைத்தார்கள். கொலோசஸ் ஆப் நீரோ என்றழைக்கப்படும் நீரோ மன்னனின் பிரம்மாண்டமான சிலையின் பக்கத்தில் இந்த அரங்கம் அமைந்ததால் இதற்குக் 'கொலோசியம்' என்ற பெயர் பின்னாளில் வந்தது.

இந்தக் கொலோசியம் பேரரசர் வெஸ்பாசியனால் கி.பி. 72ல் கட்ட ஆரம்பிக்கப்பட்டது. பின் அவருடைய மகன் டைட்டஸ் கி.பி. 81ல் கட்டி முடித்தார். ஆறு ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இந்தக் கொலோசியம், 620 அடி நீளம், 512 அடி அகலம், 158 அடி உயரம் கொண்டது. மொத்தம் ஒரு இலட்சம் கண மீற்றர் அளவுள்ள மார்பிள் கற்களைப் பயன்படுத்திக் கட்டப்பட்டது.

இதில் மொத்தம் நான்கு பிரிவுகளைக் கொண்ட இருக்கைப் பகுதிகள் கட்டப்பட்டன. முதல் பகுதியில் அரசரும் அவரது குடும்பத்தினரும்; இரண்டாம் பகுதியில் பிரபுக்களும் முக்கிய விருந்தினரும்; மூன்றாம் பகுதியில் குடிமக்களும் போர் வீரர்களும்; நான்காம் பகுதியில் பெண்களும் அடிமைகளும் உட்காருவார்கள். இதோடு கீழே சுரங்கப் பாதைகளும், நிலவறைகளும் அமைக்கப்பட்டிருந்தன. அவை ஆயுதங்கள் வைக்கும் இடமாகவும், அடிமைகள், விலங்குகள் அடைக்கப்படும் இடமாகவும் பயன்படுத்தப்பட்டன.

இங்கே நடத்தப்படும் சண்டையில் ஒருவர் மட்டுமே வெற்றி பெற முடியும். மற்றவர்கள் சிறை பிடிக்கப்படுவார்கள். கைதியொருவர் வென்றால், அவருக்கு விடுதலை கொடுப்பது வழக்கம். இங்கே நடத்தப்படும் போட்டிகளில், பட்டினி போடப்பட்ட சிங்கம், புலி ஆகியவற்றைக் கொண்டும் மனிதர்களோடு சண்டைபோட வைப்பார்களாம்.

இந்தக் கொலோசியம் பயன்பாட்டில் இருந்து வந்த 390 ஆண்டுகளில் இதில் நடைபெற்ற போட்டிகள், சண்டைகளில் நான்கு லட்சத்துக்கும் அதிகமானோர் இறந்துள்ளார்கள். சுமார் பத்து இலட்சம் விலங்குகள் கொல்லப்பட்டுள்ளன. இவ்வாறு நிறைந்த பல அம்சங்களையுடைய கொலோசியம் தற்போது உரோம் நகரின் முக்கிய சுற்றுலாத் தலமாக உள்ளது. ஒவ்வோர் ஆண்டும் இலட்சக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் இங்கே தடம்பதிக்கின்றனர்.



# பொய் முகம்



தேவி பரமலிங்கம்

சிலுவைராசா ஆண்பிள்ளைதான். அதில் எந்தவித சந்தேகமும் இல்லை! அளவாகத்தறித்து விட்ட கேசம், அரும்பு மீசை அவ்வப்போது மழித்து விடக்கூடியதாக அரும்புகின்ற தாடி மயிர் இவ்வளவும் அவன் ஆண்பிள்ளை என்பதை நிரூபிக்கத்தக்க புறத் தோற்றங்கள்.

இவற்றைவிட சிறுபராயத்தில் இருந்தே அவனை இனம் கண்டு கொள்ளப் பெற்றோர் சூட்டி இருக்கும் பெயரிலும் ஆண்பால் தொனி விழுகிறது. உறவினர்களும் அயலவர்களும் அவன் ஆண்பிள்ளை என் பதைச் சிறுவனாக அரையில் துணி கட்டாமல் வீதிப்புளுதிகளில் குளித்துத்திரிகையில் கண்டு கொண்டதால் உறுதியாகவே நாமும் அவன் ஆண்பிள்ளைதான் என்பதை ஏற்றுக் கொள்வதில் எவ்வித சந்தேகங்களும் கொள்ளத் தேவையில்லை. சிலுவை ராசா ஆண்பிள்ளைதான் என்பதை ஏற்றுக் கொண்டுள் ளவர்களின் இதயங்களிலும் அவன் ஆண்தானா? என்னும் சந்தேகம் முளைப்பதுவும் தவிர்க்க முடியாத ஒன்றுதான். "இஞ்சேரும் என்ரை அவர் வந்தவரே வெளிக்கிட்டுக்கனநேரம் ஆளை இன்னும் காணேல்ல.."

பெண்ணொருவள் வாயிலிருந்து இந்த வார்த்தைகள் வந்தால் புதுமை ஒன்றுமில்லை. தோற்றத்தில் ஆண்பிள்ளையாக இருக்கும் சிலுவைராசாவுடைய வாயால் வருவதால் அவனுடன் கூடப்பிறந்தவர்களுக்கே சிலவேளைகளில் அவன் ஆண்பிள்ளை தானா? என்ற கேள்விக்குறி தோன்றுகையில் மற்றவர்களுக்கு அந்த எண்ணம் தோன்றத் தடைகள் எதுவும் இல்லையல்லவா?

சிலுவைராசாவின் வாழ்க்கையில் குறுக்கிட்ட சிநேகிதன் பொன்ராசா. அவர்களுடைய சிநேகித வாழ்க்கை பத்துவருடங்களாக நீடித்தது. அந்தப் பத்துவருடங்களிலும் அவர்களது நடத்தைகளும் வாழ்க்கை முறையும் இருவரையும் மற்றவர்களின் பார்வையில் புருசன் பெண்சாதி என்ற உணர்வையே விதைத்து விட்டமை என்னவோ உண்மைதான்.

என்னதான் புறத்தோற்றங்கள் ஆண்பிள்ளையாகச் சிலுவைராசாவை மற்றவர்களுடைய பார்வையில் சித்தரித்தபோதும் உள்ளத்தால் பெண்ணாக வாழ்வதையே அவன் விரும்புகிறான் போலும்? பொன்ராசாவுக்கு அவனுடைய சிநேகிதம் கிடைத்தது ஒரு வரப்பிரசாதந்தான். பொன்ராசாவினுடைய அன்றாடத் தேவைகள் அனைத்தையும் நிறைவேற்றி விடுவதால் திருமணத் தேவையைப் பொன்ராசா மறந்து வாழ்ந்த நாள்கள்தான் எத்தனை?

சிலுவைராசா கதைக்க விரும்பும் மனிதர்கள் அதிகமாகத் தன்னைப் பெண்பாலாக்கிக்கதைப்பவர்களுடன் மட்டுமே. அவனுடைய குணாதிசயத்தைப் புரிந்து கதைப்பதற்கும் இவனோடொத்த வாலிபர் ஓரிருவர் இருக்கத்தான் இருக்கிறார்கள்.

அவர்களும் சிலுவைராசாவினுடைய மனோபாவத்தைக் கொண்டவர்களாகவும் இருக்கலாம். அப்படியானவர்கள் அவனது அயலில் இல்லாது விட்டாலும் சிநேகிதர்களாகக் கிடைத்தே இருந்தனர். எப்போதாவது சந்தித்துக் கொள்ளும் வேளையில் இருவரும் சம்பாதித்துக் கொள்வதும் "ஒருவகை அலாதிதான். என்னடி.. உன்ரை அவர் உன்னைவிட்டு பிரிஞ்சிட்டாராமடி....." பொன்ராசாவுக்கு சமீபத்திலே திருமணம் நடந்து முடிந்திருந்தது. அதைத் தெரிந்திருந்த இவனுடைய சிநேகிதன் ஒருவன் இவ்வாறு கேட்டு வைத்தான். அந்தக் கேள்வியின் அழுத்தம் மனதில் பதிந்ததுமே எங்கிருந்தோ ஒரு வெறுமை வந்து அவனது மன தைச் சூழ்ந்து கொண்டதான அனுபவத்தால் சோர்ந்தே போனான் சிலுவைராசா. அவனுக்கு எப்படி என்று விளக்கிக் கூறமுடியாத துக்கக் கலக்கம் தோன்றி மனதைக் கௌவிக் கொண்டது.

"கவலைப் படாதேடி... என்ரை அவரும் ஒருநாளைக்கு உப்புடி என்னை விட்டுப்பிரியத் தானேடி போறார்..."

சிலுவைராசாவினுடைய நிலைமையை உணர்ந்து கொண்ட சிநேகிதனும் தன்னை ஒப்புக்கு இழுத்துக் கொண்டு அவனுடைய மனக்கவலையைத் தேற்றுவதற்காக அப்படிச் சொல்லிக் கொண்டான். வாழ்க்கையில் எந்தவிதப்பற்றுகளும் இல்லாமல் வாழ்ந்த பொன்ராசாவுக்குச் சிலுவைராசாவினுடைய சிநேகம் இன்றியமையாததாய் இருந்தது. சுகவீனம் அடைந்த தாயுடன் சிலுவைராசாவினுடைய வீட்டின் அறையில் பொன்ராசா தங்கிக் கொள்ள வந்த பத்து வருடங்கள் பழமையான சம்பவம். ஏனோ இன்று சிலுவைராசாவுக்கு பொன்ராசா திருமணம் செய்து கொண்டதும் நினைவுக்கு வருகின்றது.

அவனுக்கு பொன்ராசாவினுடைய பிரிவைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. நாளாந்தம் அதிகாலையிலே எழுந்து தேனீர் வைத்து வந்து பொன்ராசாவை துயில் எழுப்புவதில் ஆரம்பிக்கின்ற பணிவிடைகள் காலைச்சாப்பாடு, குளிக்க வைப்பது, தொழிலுக்கு அனுப்பி வைப்பதாய் நீளத் தொடங்கி இருக்கும்.

இவைகளை எல்லாம் அனுபவித்து வந்ததால் பொன்ராசாவுக்குத் திருமணவாழ்வு ஒன்று தேவை என்பதே மறந்து போயிருந்தது. சிலுவைராசாவும் சகலதுக்கும் தன் னையே தேட வைத்துக் கொண்டதால் அந்தப் பத்துவருட சிநேகமும் இருவருக்கும் இடையில் இறுக்கத்தைத் தோற்றுவித்திருந்தது.

"இல்லையடி... அவர் என்னைச்சந்திகாமலே இருந்திருக்கலாம் இப்புடி அவர் என்னைப் பிரியிறதுக்கு என்ரை மச்சான் தான் காரணம்..."

"ஏனெடி இப்படியெல்லாம் கதைக்கிறே.. எல்லாம் கொஞ்ச நாளைக்குத்தான் .. பிறகு எல்லாம் சரியாகி விடும்" அவனுடைய ஆற்றாக் கவலையைத் தேற்ற முற்பட்டான் சிநேகிதன். சிலுவைராசாவின் சகோதரியின் கணவனுடன் பொன்ராசாவுக்கு சில நாள்களுக்கு முன்பாக ஏற்பட்ட தகராறே சிலுவைராசாவைப் பிரிந்து அவன் திருமணம் செய்து கொள்ளும் தேவையை உணர்த்தி இருந்தது என்றே எண்ணிக் கொண்டான் இவன்.

பொன்ராசாவின் திருமணம் அவனுடைய சகோதரி முறையான ஒருத்தி வீட்டில் நடந்து முடிந்திருந்தது. திருமண வைபவத்திலும் சிலுவைராசா கலந்து கொண்டான். சுறுசுறுப்பாக கல்யாண வீட்டில் கருமங்களைச் செய்ய ஏனோ அவனது மனம் இடம் கொடுக்கவில்லை?

(43 ஆம் பக்கம் பார்க்க.....)

> என்னதான் புறத்தோற்றங்கள் ஆண்பிள்ளையாகச் சிலுவைராசாவை மற்றவர்களுடைய பார்வையில் சித்திரித்த போதும் உள்ளத்தால் பெண்ணாக வாழ்வதையே அவன் விரும்புகிறான் போலும்? பொன்ராசாவுக்கு அவனுடைய கிடைத்தது ஒரு வரப்பிரசாதந்தான். பொன்ராசாவினுடைய அன்றாடத் தேவைகள் அனைத்தையும் நிறைவேற்றி விடுவதால் திருமணத் தேவையைப் பொன்ராசா மறந்து வாழ்ந்த நாள்கள்தான் எத்தனை?

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



# வேண்டாமே ம(ண)ன முறிவு

எஸ்.மல்லிகா

இனிய இல்லத்தின் தூண்கள், ஆண்கள். அவர்களின் கண்கள், பெண்கள். இவர்கள் தம் கடமையினின்று தவறும் பட்சத்தில், ஆட்டம் காண்கிறது அந்த இல்லம். அதிலும், ஆண் மகன் மதுபோதைக்கு அடிமையாகும் நிலையில், அங்கே பெரிய பூகம்பமே அனுதினம் வெடிக்கிறது. இந்தப் பூகம்பம், கணவன்– மனைவியரை விவாகரத்து வரை கொண்டு சேர்க்கிறது. ஆம்! அநேகமான மன முறிவுகளுக்கும் விவாகரத்துக்களுக்கும் காரணமாக இருப்பது, போதை என்ற அரக்கன் தான் என்று ஆய்வுகள் கூறுகின்றன. போதைப்பொருள் மற்றும் புகைப்பொருள்களுக்கு அடிமையாகும் ஆண்களுக்கு, பாலியல் வீரியத்தன்மை அற்றுப் போகின்றது. அதாவது, பாலியல் பலவீனம் ஏற்படுகின்றது. இவர்களால் பெண்களுக்குத் திருப்திகரமான பாலியல் இன்பத்தை வழங்க முடிவதில்லை. ஆதலால், இப்படிப்பட்ட ஆண்களுடன் வாழ்வதைக் காட்டிலும், பிரிந்து சென்றுவிடலாம் என்ற மனோநிலைக்கு பெண்கள் ஆளாகின்றனர். நாளடைவில் அது விவாகரத்தில் முடிகின்றது.

மனித வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளுள் பாலியல் இன்பமும் ஒன்று. இது உடலியல் மற்றும் உளவியல் ரீதியில் இரு பாலாருக்கும் அதிக நன்மை பயப்பது. இதில் தளம்பல், பூரண திருப்தி கிடைக்காத பட்சத்தில், ஆண்களாயினும் சரி– பெண்களாயினும் சரி– தொட்டதற்கெல்லாம் எரிந்து விழுவார்கள். இவற்றுடன், போதைப் பொருளுக்கு அடிமையாகும் ஒரு குடும்பத் தலைவனால் குடும்பத்தின் தேவைகளையும் வாழ்க்கைச் செலவுகளையும் பூர்த்தி செய்ய முடிவதில்லை. இதனால் அவனுடைய மனைவி, பிள்ளைகளுக்கும் அவனுக்கும் விரிசல் உண்டாகின்றது.

கணவன்– மனைவியர் எனப்படுவோர், பரஸ்பரம் உணர்வுகளைப் புரிந்து வாழ்கின்ற போதுதான் இல்லத்தில் குதூகலம் தவழும். ஆனால், போதையின் சுவைக்குள் தன்னைத் தோய்த்த கணவனால் எப்படித் தன் மனைவியின் உணர்வுகளை– அவளுடைய மனத் தவிப்புக்களைப் புரிந்துகொள்ள முடியும்?

போருக்குப் பின்னரான இலங்கைத் தீவைப் பொறுத்தவரை– அதிலும் யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்தவரை, பெரியவர்– சிறியவர் என்ற பேதமற்று ஆண்மகன்கள் போதைப்பொருட்களுக்கு அடிமையாகி வருவது அதிகரித்து விட்டது. இவர்களைச் சுமக்கும் இல்லங்கள், நாளாந்தம் நரக வேதனையை அனுபவித்து வருகின்றன. இதில் அதிகம் பாதிக்கப் படுவது பிள்ளைகள் உலகம் தான். பிரியம், பாதுகாப்பு உணர்வு என்பன கிடைக்காமையால், அந்த உலகம் அச்சத்தின் வாயிலில் பட்டுப்போய்க் கிடக்கிறது.

"போதைப்பொருள் மற்றும் புகைப்பொருள்களுக்கு அடிமையாகும் ஆண்களுக்கு, பாலியல் வீரியத்தன்மை அற்றுப் போகின்றது. அதாவது, பாலியல் பலவீனம் ஏற்படுகின்றது. இவர்களால் பெண்களுக்குத் திருப்திகரமான பாலியல் இன்பத்தை வழங்க முடிவதில்லை.

# காலத்தால் அழியாத முத்து

"அழகான நேரம் அதை நீதான் கொடுத்தாய் அழியாத சோகம் அதையும் நீதான் கொடுத்தாய்..."

நவீன தமிழ்த் திரையிசையின் குரலாக ஒலித்து வந்த பாடலாசிரியர் நா.முத்துக்குமாரின் அகால மரணம் ரசிகர் உலகத்தை சோகத்தில் தள்ளியிருக்கிறது. கடும் உழைப்பு, நெருக்கடியான பணிகளுக்கு இடையில் வேலை செய்துவந்த முத்துக்குமார், மஞ்சள் காமாலையின் பாதிப்பால் கடந்த 14 ஆம் திகதியன்று காலமாகிவிட்டார். தமிழ் சினிமாவின் 92 இற்கும் மேற்பட்ட படங்களில் 1500 இற்கும் மேற்பட்ட பாடல்களை எழுதிய நா. முத்துக்குமார் எளிய தமிழ், வசன நடையை மக்களிடம் கொண்டு சேர்த்த பெருமைக்குரியவர்.

இயக்குநர் பாலுமகேந்திராவிடம் உதவி இயக்குநராகப் பணியாற்றிய நா.முத்துக்குமார், தனது 'பட்டாம்பூச்சி விற்பவன்' கவிதைத் தொகுதி மூலம் இலக்கிய வட்டத்துக்கு அறிமுகமானார். சுயகேலியும், காதல் மனமும் நிறைந்த எளிய மொழியிலான அவரது கவிதைகள் பெரும் வரவேற்பைப் பெற்றன. "சுவாசிப்பதுபோல் கவிதை வருகிறது இவனிடம்" என்று பாலுமகேந்திரா இவரைப் பாராட்டியிருந்தார்.

2000ஆம் ஆண்டில் சீமான் இயக்கிய 'வீரநடை'படத்தின் மூலம் பாடலாசிரியராக அறிமுகமான முத்துக்குமார், செல்வராகவன் இயக்கிய 'காதல் கொண்டேன்' படத்தின் பாடல்கள் மூலம் தமிழ்த் திரையுலகைத் திரும்பிப் பார்க்கவைத்தார். யுவன் சங்கர் ராஜா இசையில் உருவான அந்தப் பாடல்களில், சுய இரக்கமும் ஆதரவு தேடும் மனமும் கொண்ட இளைஞனின் உணர்வுகளை ஆத்மார்த்தமாகப் பிரதிபலித்தார் முத்துக்குமார். "ஒரு வண்ணத்துப் பூச்சி எந்தன் வழி தேடி வந்தது... அதன் வண்ணங்கள் மட்டும் இன்று விரலோடு உள்ளது" போன்ற வரிகளிலிருந்து, பாடலின் சந்தத்துக்குள் கவித்துவமான வார்த்தைகளைப் பொருத்துவதில் அவருக்கு இருந்த திறன் வெளிப்பட்டது.

தொடர்ந்து செல்வராகவன் – யுவன் ஷங்கர் ராஜா – முத்துக்குமார் கூட்டணியில் வெளியான '7ஜி ரெயின்போ காலனி' படத்தின் பாடல்கள் தமிழ் ரசிகர்களிடம், குறிப்பாக இளைஞர்களிடம் பெரும வரவேற்பைப் பெற்றன. அப்படத்தில் இடம்பெற்ற 'நினைத்து நினைத்துப் பார்த்தேன்' பாடல், 'அமர்ந்து பேசும் மரங்களின் நிழலும் நமது கதையைக் காலமும் சொல்லும்' என்ற வரிகள் எல்லோராலும் பேசப்படுகின்றன.

எம்.எஸ்.விஸ்வநாதன் – கண்ணதாசன், எம்.எஸ். விஸ்வநாதன் – வாலி, இளையராஜா – வைரமுத்து, ஏ.ஆர்.ரஹ்மான் – வைரமுத்து ஆகிய புகழ்பெற்ற இணைகளுக்குப் பின்னர், யுவன் ஷங்கர் ராஜா – முத்துக்குமார் என்ற புதிய இணை, தமிழ்த் திரையுலகில் தனக்கான இடத்தை உருவாக்கிக்கொண்டது.

ஏ.ஆர்.ரஹ்மான், வித்யாசாகர், கார்த்திக்ராஜா, ஹாரிஸ் ஜெயராஜ், இமான், ஜி.வி.பிரகாஷ் போன்ற இசையமைப்பாளர்களுடன் இணைந்தும் முத்துக்குமார் பல சிறந்த பாடல்களை உருவாக்கியுள்ளார். இளையராஜாவிடம் அதிக பாடல்கள் எழுதிய இளம் தலைமுறைப் பாடலாசிரியரும் இவர்தான். இரண்டு தேசிய விருதுகள் (தங்கமீன்கள், சைவம்), ஐந்து மாநில விருதுகள் உட்படப் பல விருதுகளைப் பெற்றவர் அவர்.

சமகாலத் தமிழ் சினிமாவின் சிறந்த பாடலாசிரியர் என்றாலும், முத்துக்குமார் அதன்மூலம் பெரிய அளவில் சம்பாதித்தவர் அல்ல. "ஒரு படத்தில் கதாநாயகனுக்குத் தரப்படுகிற சம்பளத்தில் பத்தில் ஒரு பகுதியைக்கூட இந்தப் பதினைந்து ஆண்டுகள் முழுக்க இரவு பகலாகக் கண் விழித்து அவர் சம்பாதிக்கவில்லை". என்று அவரையறிந்தவர்கள் சொல்கிறார்கள். தமிழ்ச் சூழலில் படைப்பாளிகள் கூடுதலாக ஏழ்மைப்பட்டவர்கள் தான்.

41வயதே ஆன முத்துக்குமாரின் குடும்பத்தினர் ஒரு நல்ல எதிர் காலத்தை இழந்துவிட்டார்கள். தமிழ் ரசிகர்கள் கவித்துவம் மிக்க நூற்றுக்கணக்கான பாடல்களை இழந்து விட்டார்கள். எனினும், முத்துக்குமாரின் வார்த்தைகள் தமிழில் என்றும் நிலைத்திருக்கும்!



# முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பு

# காலத்தின் தேவையா?

## பூனைக்கு மணி கட்டுவது யார்?




அனார்கலி

முஸ்லிம் அரசியல் கட்சிகளையும் முஸ்லிம் தலைமைகளையும் ஒரு கொடியின் கீழ் ஒருங்கிணைத்து, முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பு எனும் அரசியல் அமைப்பொன்று உருவாக்கப்பட வேண்டுமென்ற குரல்கள் முஸ்லிம்கள் மத்தியில் வலுத்து வருகின்றன.

குறிப்பாக, இன்றைய அரசியல் கள நிலவரப்படி- வடக்கு, கிழக்கு சார்ந்த முஸ்லிம் கட்சிகளும், முஸ்லிம் தலைமைகளும் இதில் முக்கியம் இடம் பெறவேண்டுமென்ற ஆதங்கமும் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போன்று முஸ்லிம் அரசியல் கட்சிகள், அரசியல் தலைமைகள் ஒன்றுசேர்ந்து முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பை உருவாக்க வேண்டுமென்ற அவசிய கடப்பாட்டுக் காலம் கனிந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது. தமிழ் மக்களின் ஒற்றுமைக்காகவும், தாங்கள் பிரிந்து தனித்தனியாகச் செயற்படுகின்ற போது தமிழர்களின் அரசியல் சக்தி வலுவிழந்து பேரினவாதிகளுக்கு சாதகமாக அமைந்துவிடும் என்ற காரணத்துக்காகவும், தமக்கிடையிலுள்ள அனைத்துக் கருத்து வேறுபாடுகளையும் களைந்துவிட்டு தமிழ் அரசியல் தலைவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வலுப்படுத்திச் செயற்பட்டு வருகின்றனர்.

இந்தக் கட்டத்தில் தமிழர்களது தியாக அரசியலை, சுயநலமும், பதவி மோகங்களும், மக்களைப் புறந்தள்ளிய செயற்பாடுகளும் கொண்ட இன்றைய முஸ்லிம் அரசியலுடன் ஒப்பிட முடியுமா? என்ற வினாவும் எழாமலில்லை.

### குரல் எழுந்தது

ஏற்கனவே முஸ்லிம் தலைமைகள், முஸ்லிம் கட்சிகள் ஒரு குடையின் கீழ் அணிதிரண்டு சமூகத்தின் உரிமைகளை வென்றெடுக்கவும், சமூக நலனுக்காகச் செயற்படவும் முன்வரவேண்டும் என்ற பெரும் ஆதங்கம் முஸ்லிம் மக்களுக்கு மத்தியில் வந்தபோதிலும் பூனைக்கு மணி கட்டுவது யார்? என்ற நிலைமையே இருந்து வருகிறது.

முக்கியமாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வித்திட்ட தமிழரசுக் கட்சி போல், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமை தாங்கி அனைத்து முஸ்லிம் கட்சிகளையும் ஒருங்கிணைத்து, முஸ்லிம் சமூகத்தின் உரிமைகள் மற்றும் நலன் குறித்த விடயங்களை வரையறுத்து அதனை அடைந்துகொள்ள ஒரு பொது வேலைத்திட்டத்தை வகுத்துச் செயற்பட இதுவரை முயற்சிக்காமை பெரும் கவலை தருவதும், கண்டனத்துக்குரியதுமான விடயமாகும்.

இந்தவகையில், தமிழ்ச் சமூகத்திலுள்ள அரசியல் கட்சிகளுக்கு மத்தியிலான ஒருங்கிணைப்பும், ஒத்துழைப்பும் சமூகநலன் சார்ந்த விடயங்களில் காட்டும் ஒன்றுபட்ட அக்கறையும் விதந்து பாராட்டத்தக்கதாகும்.

### நல்லாட்சியில்

இந்த நாட்டில் இன்றைய நல்லாட்சி மலர்ந்ததை அடுத்து புதிய அரசமைப்பு மாற்றம் கொண்டு வரப்பட்டு அதன் மூலம் புரையோடிப்போன இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை ஏற்படுத்துவதற்கான முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த விடயத்தில் முஸ்லிம் சமூகம் திக்குத் தெரியாத காட்டில் நிற்பதுபோன்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

புதிய அரசியல் யாப்பில் முஸ்லிம்களின் அபிலாசைகள், உரிமைகளை நிலைநிறுத்தல் போன்ற விடயங்களில் பிரதான முஸ்லிம் கட்சிகள் வாய்மூடி மௌனிகளாகவுள்ளன. காளான்கள் போல் முளைத்த சில கட்சிகள் தமது எஜமானர்களைத் திருப்திப்படுத்துவதற்காக சமூகநலன் சார்ந்ததுபோல் பாசாங்கு செய்து துள்ளிக்குதித்துக் கொண்டிருக்கின்றன. இவை நல்லிணக்கத்தையும், இன சௌஜன்யத்தையும் (தமிழ்–முஸ்லிம்) குலைக்கும் வண்ணமாக தன்னிச்சையான அறிக்கைகளை ஊடகங்களில் வெளியிட்ட வண்ணமுள்ளன.

### பைஸர் முஸ்தபா

இந்த நிலைமைகளை சீர்தூக்கிப் பார்த்தோ என்னவோ, மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சர் பைஸர் முஸ்தபா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைமுன்னுதாரணமாகக்கொண்டு செயற்படுமாறு முஸ்லிம் அரச தலைவர்களுக்கு அறிவுரை ஒன்றை அண்மையில் வழங்கியுள்ளார்.

### கிழக்கின் எழுச்சி

கிழக்கின் எழுச்சி அமைப்பின் செயலாளர் நாயகம் சேகு இஸதீன் அஸ்ஸுஹூர் விடுத்துள்ள அறிக்கையொன்றில், முஸ்லிம் அரசியல் தலைமைகளின் கூட்டமைப்பு உருவாக வேண்டுமென வலியுறுத்தி உள்ளார்.

பிரிந்து கிடக்கும் முஸ்லிம் அரசியல் தலைமைகள், இன்றைய முக்கியமான காலகட்டத்தில் மக்கள் நன்மைக்காக ஒற்றுமைப்பட வேண்டுமென்று வலியுறுத்தி முஸ்லிம் தேசியக்கூட்டமைப்பின் உருவாக்கத்துக்கு அழைப்பு விடுத்து அவர் இந்த ஊடக அறிக்கையை விடுத்துள்ளார்.

இந்த முஸ்லிம் தேசியக் கூட்டமைப்புக்கு மறுப்புத் தெரிவித்து ஒற்றுமைப்பட மறுக்கும் சுயநலத் தலைவர்களை மக்கள் தோலுரித்துக்காட்டி முஸ்லிம் ஒற்றுமையின் துரோகிகள் என்று முத்திரை குத்தவும் கிழக்கின் எழுச்சி தயங்காது எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

### ஓரம் கட்டும் முயற்சி

இதேவேளை, கடந்த காலங்களில் முஸ்லிம் காங்கிரஸையும் அதன் தலைவரையும் பலவீனப்படுத்துவதற்காக எடுத்த அத்தனை முயற்சிகளும் தோல்வியடைந்ததனால் அதன் எதிரிகளெல்லாம் ஒன்று சேர்ந்து முஸ்லிம் காங்கிரஸை அழித்து, அதன் தலைவர் ரவூப் ஹக்கீமை ஓரங்கட்டுவதற்கான புதிய முயற்சிதான் முஸ்லிம் தேசிய கூட்டமைப்பா? என்ற கேள்வியும் எழுப்பப்பட்டுள்ளது.

### இருபக்க நியாயம்

ஆனாலும், இரு பக்கத்திலும் நியாயங்களிருப்பதாகவே பலரும் கருதுகின்றனர்.

முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பு உருவாகுவதில் அர்த்தமில்லை. அமைச்சுப் பதவியென வந்துவிட்டால் போட்டா போட்டியே ஏற்படும். அத்தோடு கூட்டமைப்பு சீர்குலையுமென முஸ்லிம் காங்கிரஸ் மூத்த உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

"இல்லை, இந்தக் கூட்டமைப்பு அவசியமானதாகும். நினைத்த நினைத்த மாதிரி அறிக்கை விடுகிறார்கள். அம்பாறை கரையோர மாவட்டமே தேவையில்லையென எமது முஸ்லிம் அரசியல் தலைவர் எனப்படுபவர் கூறுகிறார். எனவே ஓர் அமைப்பில் இவர்களையெல்லாம் கொண்டு வரவேண்டும்" என்று கிழக்கின் மூத்த அரசியல்வாதி ஒருவர் கூறுகிறார்.

### என்ன நடக்கிறது?

ஆனால், கிழக்கில் முஸ்லிம்கள் வாழும் அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸுக்கும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸுக்குமிடையே நீயா நானா என்று நாய்பிடிச் சண்டை நடக்கிறது.

சாய்ந்தமருதுக்கான தனியான உள்ளூராட்சிச்சபை, ஒலுவில் கிராம கடலரிப்பு போன்ற பிரச்சினைகளில் இந்த குடுமிப்பிடிச் சண்டை அந்த இரு முஸ்லிம் கட்சிகளுக்குமிடையில் முற்றி நிற்கிறது.

ஒலுவில் கடலரிப்பு விடயம் தொடர்பில் துறைமுக அபிவிருத்தி கரையோரப் பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகளுடன் பேச்சு நடத்தி, நேரில் சந்திப்பதற்கு ஒரு தினத்தையும் ஒதுக்கி அமைச்சர் ரிஷாத் பதியுதீன் ஊடகங்களில் செய்தி வெளியிடுகின்றார்.

குறித்த தினத்துக்குச் சில தினங்களுக்கு முன்னரே முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ஹக்கீம் உரிய அதிகாரிகளைக் கூட்டிக்கொண்டு ஒலுவில் கடலரிப்பைப் பார்க்கச் சென்று வந்தார்.

இதுபோன்றே சாய்ந்தமருது உள்ளூராட்சி சபை விவகாரமும் தொடர்கிறது. இந்த இலட்சணத்தில், முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பு உருவாக வழியுண்டா? வக்குண்டா?

ஆனாலும், அரசமைப்புச் சீர்திருத்தம், தேர்தல் மாற்றம் போன்ற சமூகத்தின் தலைவிதியை நிர்ணயிக்கும் விடயங்கள் தொடர்பாக முக்கிய தீர்மானங்கள் எடுக்கவுள்ள நிலையில் முஸ்லிம் அரசியல் கூட்டு ஒன்று காலத்தின் தேவையாகவுள்ளது. காலம்தான் பதில் சொல்லவேண்டும்.





# சண்டைக்கு தயாரான சேவல்கள்!

இன்று ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை நடைபெறவுள்ளது. இந்தப் பரீட்சைக்கு மாணவர்கள் தயாராகிவிட்டனர். அவர்களுக்கு எமது வாழ்த்துக்கள். இருப்பினும் இதுவரை அவர்கள் அனுபவித்த கஷ்டங்கள் பற்றி எழுதாமல் விட்டால் எதிர்காலத்திலும் இதே நிலை நீடிக்கும் என்ற ஆதங்கத்தில் எழுத வேண்டியுள்ளது.

ஐந்தாம் ஆண்டு பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு மூன்றாம் ஆண்டிலிருந்தே அதற்கான பயிற்சிகள் வகுப்பு ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களால் ஏற்படுத்தப்படுகின்றன. சில பாடசாலைகளில் தரம் மூன்று தொடக்கம் ஐந்தாம் ஆண்டு வரை ஒரே ஆசிரியரால் கல்வி போதிக்கப்பட்டு பரீட்சைக்குத் தயார்ப்படுத்துவதையும் காணமுடிகிறது. பரீட்சை ஓகஸ்ட் மாதம் நடைபெறும் என்பது அனைவரும் அறிந்த விடயம். ஐந்தாம் தரப் பரீட்சைக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் மாதாந்தம் மாதிரிப் பரீட்சைகள் நடத்தப்பட்டு வருகிறது. அது வரவேற்கத்தக்கது. பாடசாலைகளிலும் தனியார் கல்வி நிலையங்களிலும் விசேட வகுப்புக்கள் நடத்தி பரீட்சைக்குத் தயார்ப்படுத்துகிறார்கள். அதுவும் சரி. ஆனால் பரீட்சையை எதிர்கொள்ள ஒருமாதம் இருக்கையில் அந்த நேரம் தான் நித் திரையிலிருந்து விழித்து எழுபவர்கள்போல் ஒன்றன் பின் ஒன்றாக வழிகாட்டல் வகுப்புகளை நடத்துவது மாணவர்களைக் கடுமையாகப் பாதிக்கும் என்பதை ஏற்பாட்டாளர்கள் அறிவதாகத் தெரிய வில்லை. வகுப்பு ஆசிரியரின் பாடசாலைக் கல்வியுடன் விசேட வகுப்புகள் அதனை விட தனியார் கல்வி நிலையங்களில் மேலதிக வகுப்புக்கள் எனக்கற்று, மாணவர்கள் ஒரு நிலையாக இருக்கும்போது திடீரென கொழும்பு, கண்டி, வவுனியா, பண்டாரவளை, யாழ்ப்பாணம் போன்ற இடங்களிலிருந்து பிரபல்யம்மிக்க ஆசிரியர்களை, வரவழைத்து வழிகாட்டல் கருத்தரங்குகளை நடத்துவது மாணவர்கள் பரீட்சையில் சித்திபெற வழி செய்யுமா? அல்லது அவர்கள் ஒரு வருடமாகக் கற்ற அனைத்தையும் மறக்க வழிவகுக்குமா? நிச்சயமாக அவர்களை ஒரு தளம்பல் நிலைக்குக் கொண்டுசெல்லும் என்பதே தற்பொழுது எழுந்துள்ள பிரச்சினையாகும்.

மாணவர்களுக்கு வழிகாட்டல் கருத்தரங்குகள் நடத்தக்கூடாது என்பது இதன் கருத்தல்ல. பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து மாணவர்களும் தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்பவர்கள் என்று கூறமுடியாது. வறுமை காரணமாகப் பல மாணவர்கள் பாடசாலைக் கல்வியுடன் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர். மாகாண மட்டப் பரீட்சையில் 100க்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற மாணவர்களே வழிகாட்டல் கருத்தரங்குகளுக்கு அழைக்கப்படுகின்றனர்.

100க்குக் குறைந்த புள்ளிகள் பெற்ற மாணவர்களைப் பரீட்சையில் சித்தி பெறவைக்கவேண்டுமென்ற எண்ணம் கருத்தரங்குகளை ஏற்பாடு செய்பவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். ஆனால் அவ்விதம் அவர்கள் செய்வதில்லை. ஒரு வலயத்தைச் சேர்ந்த ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து மாணவர்களும் வழிகாட்டல் கருத்தரங்குக்கு அழைக்கப்படல்வேண்டும். அதனை விடுத்து ஏற்பாட்டாளர்கள் மாகாண மட்டப் பரீட்சையில் 100க்கும்மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற மாணவர்களை மட்டும் அழைத்து கருத்தரங்கில் கலந்து கொள்ளச் செய்வது ஏனைய மாணவர்கள் அதாவது 100க்குக் குறைந்த புள்ளிகள் பெற்ற மாணவர்கள் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெறக்கூடாது அல்லது சித்தி பெறமாட்டார்கள் என்பதை உணர்ந்தவர்களாய் அவர்களுக்குத்தான் வழிகாட்டல்களும் கருத்தரங்குகளும் தேவை என்பதை உணராதவர்களாய் ஏற்பாட்டாளர்கள் செயற்பட்டமை கவலைக்குரியதே.

அனைத்து மாணவர்களும் எமது பிள்ளைகள். அவர்கள் பரீட்சையில் சித்தி பெறவேண்டுமென்ற ஆசை அனைவருக்கும் ஏற்படவேண்டும். அதை விடுத்து மூன்றாம் ஆண்டு தொடக்கம் ஐந்தாம் ஆண்டு வரை தனியார் கல்வி நிலையங்களில் வகுப்புகளுக்கு அனுப்பி கற்பிக்கும் வசதிகூடிய பெற்றோருடன் வசதி குறைந்த பெற்றோரையும் ஒப்பிட்டுக் கணிப்பிடக் கூடாது. தனியார் கல்வி நிலையங்களில் கற்க வசதியற்ற மாணவர்கள் குறைந்த புள்ளிகளைப் பெற்றாலும் அவர்களை ஊக்குவிக்க வேண்டும். அந்த மாணவர்கள் பரீட்சையில் சித்தி பெற்றால் அந்த மாணவனின் உயர் கல்விக்கு அரசினால் வழங்கப்படும் நிதி ஓரளவு உதவியாக இருக்கும். வசதி கூடிய மற்றும் அரச பணிகளில் உள்ளவர்களின் பிள்ளைகள் பரீட்சையில் சித்தி பெற்றாலும் எந்தவொரு அரச உதவியும் கிடைக்காது. இவர்களுக்குக் குறிப்பிட்ட நிதி நிறுவனங்களில் வைப்பிலிடும் சிறுதொகை நிதியே ஒரு தடவை கிடைக்கிறது. மாதிரிப் பரீட்சைகளில் வெட்டுப் புள்ளிக்குக் குறைவான புள்ளிகள் பெறும் மாணவர்களை ஊக்குவித்து அவர்களுக்கு வழிகாட்டல் கருத்தரங்குகள், விசேட வகுப்புக்களை நடத்தி அதன் மூலம் மாணவர்கள் சித்தி பெறுவோர்களாயின் மாணவனின் எதிர்காலக் கல்விக்கு உதவுவதாகக் கொள்ள முடியும். இதனைச் செய்ய ஏன் அனுசரணை வழங்குவோர் தயங்குகிறார்கள் என்பதும் உண்மையே.


இதில் ஒரு வேடிக்கை என்னவெனில் வழிகாட்டல் கருத்தரங்குகளில் பாடசாலைவகுப்புக்களில் கற்பிக்கும் ஆசிரியர்களும் கலந்து கொள்வது தான். இதிலிருந்து அவர்கள் பாடசாலையில் கற்பிப்பதிலும் மாணவர்களைப் பரீட்சைக்குத் தயார்ப்படுத்துவதிலும் ஏதோ திருப்தி அற்ற நிலை உள்ளதாகவே எண்ணத்தோன்றுகின்றது. 10 வயதில் ஒரு பாடத்திட்டத்தை மாணவனுக்கு உட்புகுத்துவது கஷ்டம் என்பது எல்லோருக்கும் தெரியும். பாடத்திட்டத்தைக் கற்பிக்கும் ஆற்றல் நுணுக்கம் ஒவ்வொரு ஆசிரியருக்கும் தெரிந்திருக்கும். அதனைக் கொண்டு அவர்கள் மாணவர்களைத் தயார்ப்படுத்த வேண்டும். ஆன்றால் இவ்வாறு இயலாத சில ஆசிரியர்கள் இவ்வாறான ஆற்றலுள்ள ஒரு சில ஆசிரியர்கள் கற்பிப்பதை ரசிக்கிறார்களே தவிர தன்னாலும் இவ்வாறு படிப்பித்து மாணவர்களைத் தயார்ப்படுத்தலாமென்றஎண்ணம் அவர்களிடம் இல்லாமலேயே உள்ளது.

தகுதிபெற்ற ஆசிரியர்களைக்கொண்டு ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சைக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களும் அவர்தம் கற்பித்தல் நுணுக்கங்களைப் பகிர்ந்து கொண்டால் ஒவ்வொரு வலயத்திலும் பரீட்சையில் சித்திபெறும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்பது எமது எதிர்பார்ப்பாகும்.

*ஒரு வசதி குறைந்த பெற்றோர்*



# மக்களைக் கேடயமாக்கி தப்பிச் செல்லும் ஐ.எஸ்



அதிரன்

சிரியாவின்வடக்குநகரான மன்பிஜ்ஜில் இருந்து ஐ.எஸ். தீவிரவாதிகள், பொதுமக்களைக் கேடயமாகப் பயன்படுத்தி தப்பிச் செல்லும் காட்சிகள் ஊடகங்களில் வெளியாகியுள்ளன.

சிரியா ஜனநாயகப் படையினரால், வானில் இருந்து எடுக்கப்பட்ட இந்தப் புகைப்படங்கள் வெள்ளிக்கிழமை எடுக்கப்பட்டதாகத் கூறப்பட்டுள்ளது. அதில் நுற்றுக்கணக்கான வாகனங்கள் அணிவகுத்துச் செல்வதைக் காண முடிகின்றது.

அந்த வாகனங்கள் ஒவ்வொன்றிலும், பொதுமக்கள் இருந்ததால், அமெரிக்க ஆதரவு பெற்ற குர்து மற்றும் அரபுப் படையினர் அந்த வாகனங்கள் மீது தாக்குதல் நடத்தவில்லை. துருக்கி எல்லையில் உள்ள வடபகுதி நகருக்குத் தீவிரவாதிகள் தப்பிச் சென்றதாக நம்பப்படுகின்றது.

**வாகனங்களுடன் தப்பினர்**

நூற்றுக்கணக்கான ஐ.எஸ் தீவிரவாதிகள் தமது ஆயுதங்கள் மற்றும் வாகனங்கள் சகிதம் தப்பி ஓடி வருகின்றார்கள். அமெரிக்க வேவு விமானங்கள் இதனைக் கண்காணித்துள்ளன. ஆனால் தாக்குதல் நடத்த முடி யாது. காரணம் என்னவென்றால் இவர்கள் தப்பி ஓடும் வேளைகளில் கூட்டம் கூட்டமாக மக்களை மனிதக் கேடயமாகப் பயன்படுத்தி வருகின்றனர். எனவே இவர்கள் மீது தாக்குதல் நடத்தினால், பொதுமக்கள் கொல்லப் படுவார்கள். இதன் காரணமாகவே தாக்குதல் எதனையும் அமெரிக்கா நடத்தவில்லை என்று கூறப்படுகின்றது.

அமெரிக்கக் கூட்டுப்படை மற்றும் சிறப்புப் படையின் உதவியுடன், பத்து வாரங்கள் நடத்திய தாக்குதலுக்குப் பிறகு, சிரியா ஜனநாயகப் படையினர் மன்பிஜ் நகரை மீட்டுள்ளனர்.மன்பிஜ் நகரில் இருந்துஐஎஸ்.தீவிரவாதிகள் வெளியேற்றப்பட்டதை அடுத்து ஆயிரக்கணக்கான மக்கள் தெருக்களில் ஆடிப்பாடி மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளனர்.

உள்நாட்டுப் போரினால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள சிரியாவில், துருக்கி எல்லைப் பகுதி அருகே அமைந்துள்ள மன்பிஜ் நகரம், கடந்த 2014 ஆம் ஆண்டு முதல் ஐ.எஸ். தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது. அரசுப் படைகளுக்கு எதிராகப் போராடும் தீவிரவாதிகள் இந்த நகரில், பொதுமக்களைக் கேடயமாகப் பயன்படுத்தியதாகக் குற்றச்சாட்டு எழுந்தது. இந்நிலையில் மன்பிஜ் நகரின் மீது அமெரிக்க ஆதரவுடன் சிரியா அரசுப் படையினர் தாக்குதல் நடத்தியதை அடுத்து, அந்த நகரம், தீவிரவாதிகளின் பிடியில் இருந்து விடுவிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

**தாக்குதல் நடத்தாத அமெரிக்கப் படை**

மன்பிஜ் நகர் கை நழுவிப் போகின்றது என்பது உறுதியானதும், சுமார் 100 முதல் 200 பேர் வரையான ஐ.எஸ். தீவிரவாதிகள், அவர்களது குடும்பத்தினர், ஆதரவாளர்கள் மற்றும் பிணைக் கைதிகளாக பொதுமக்கள் ஆகியோரை ஓரிடத்தில் திரட்டியதாகப் பக்தாத்தை மையமாகக் கொண்டு செயற்படும் அமெரிக்கக் கூட்டுப் படையின் செய்தித் தொடர்பாளர் கேணல் கிறிஸ் கர்வெர், செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

பின்னர், தீவிரவாதிகளுடன் ஒவ்வொரு வாகனத்திலும் பொதுமக்களும் ஏற்றப்பட்டனர். அந்த வாகனங்கள் பின்னர் வடக்கு நோக்கிச் சென்றன. சிரியா ஜனநாயகப் படைப் போராளிகளும் கூட்டுப் படையினரும் அவர்களைத் தொடர்ந்து கண்காணித்தனர் என்று அவர் தெரிவித்தார்.

அவர்களைப் போரிடாதவர்களாகத் தான் நாங்கள் கருதினோம். அவர்களை நோக்கிச் சுடவில்லை. தொடர்ந்து பார்த்துக் கொண்டிருந்தோம் என்றார் அவர்.

இரு தரப்புக்கும் இடையே போர் நடந்து கொண்டிருந்தபோது, பொதுமக்கள் இழப்பைத் தடுக்கும் வகையில், மன்பிஜ் நகரை விட்டுப் பாதுகாப்பாக வெளியேறத் தீவிரவாதிகளுக்குச் சிரியா ஜனநாயகப் படை அழைப்பு விடுத்த போதிலும் அதை அவர்கள் ஏற்க மறுத்தனர். இரு தரப்புக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை நடந்துகொண்டிருந்தபோது, தீவிரவாதிகள், நடுவில் பொதுமக்களை அனுப்பிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தால் அதை தங்களது பரப்புரைக்காகப் பயன்படுத்திக் கொள்ளவே அவர்கள் இவ்வாறு செய்தனர் எனக் கூறப்படுகின்றது.

ஐ.எஸ். தீவிரவாதிகள், ஈராக்கிய நகரான பலூஜாவை விட்டுக் கடந்த ஜூன் மாதம் வெளியேற முயன்றபோது, ஈராக் மற்றும் கூட்டுப் படையினரின் வான்வழித் தாக்குதலுக்கு இலக்கானார்கள். அதில், 175 வாகனங்கள் நாசமாகியதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன.

**எங்கே செல்கிறார்கள்?**

குறித்த தீவிரவாதிகள் எங்கே செல்கிறார்கள் என்பது போன்ற விவரங்களை அமெரிக்கா திரட்டி வருகின்றது. பலமாக இருந்த பல பகுதிகளைக் கொஞ்சம் கொஞ்சமாக இழந்த ஐ.எஸ் தீவிரவாதிகள் தற்போது பெரும் தோல்வியின் விளிம்பில் உள்ளார்கள். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அவர்களை அடியோடு அழிக்கும் முயற்சியில் அமெரிக்கா இறங்கியிருப்பதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. இதற்காகவே அவர்கள் எங்கே செல்கிறார்கள் என்பதைத் தாக்குதல் நடத்தாமல் அமெரிக்கா அவதானித்துக் கொண்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

**அமெரிக்காவே காரணம்**

இதனிடையே, ஐ.எஸ். அமைப்பு தோன்றக் காரணம் அமெரிக்காதான் என்று ஹிஸ்புல்லா இயக்கம் கருத்து தெரிவித்துள்ளது. லெபனானைச் சேர்ந்த ஹிஸ்புல்லா இயக்கத்தின் தலைவர் ஹஸன் நஸ்ரல்லா இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

அவர் கூறுகையில்,

ஐ.எஸ். இயக்கம் உருவாகக் காரணம் அமெரிக்கா என்று அந்த நாட்டு அதிபர் வேட்பாளரே கூறியிருக்கிறார். அவர் தக்க ஆவண ஆதாரங்களோடு தான் அதைத் தெரிவித்திருக்கிறார். மத்திய கிழக்கு நாடுகளில் அரசியல் ஸ்திரத்தன்மையைக் குலைப்பதற்காக, புதிய இஸ்லாமியப் பயங்கரவாதக் குழுவை அமெரிக்கா உருவாக்கியது.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் பரப்புரையின் போது, ஐ.எஸ். இயக்கத்தை நிறுவியவர் ஒபாமா என்றும், ஹிலாரி கிளின்டன் அதன் துணை நிறுவுனர் என்றும் குடியரசுக் கட்சி வேட்பாளர் டொனால்ட் டிரம்ப் கூறியிருந்தார்.

ஈராக், லிபியா உள்ளிட்ட நாடுகள் தொடர்பாக அமெரிக்கா பின்பற்றிய தவறான வெளியுறவுக் கொள்கைகளால் ஐ.எஸ். பயங்கரவாத இயக்கம் தோன்றியது என்றும் டிரம்ப் கூறியிருந்தார். எனினும், அதை பரிகாசமாகக் கூறினேன் என்று பின்னர் விளக்கமளித்தபோதிலும், அவரது கருத்து பரவலான கண்டனத்தைப் பெற்றுள்ளது. இந்த நிலையில், டொனால்ட் டிரம்ப் கூறிய கருத்து சரிதான் என்று ஹிஸ் புல்லா இயக்கம் தெரிவித்திருப்பது பலரதும் கவனத்தை ஈர்த்துள்ளது.

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



**மேடம்:** திட்டமிட்டு செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்திப்பணி மேற் கொள்வீர்கள். தாராள வருமானம் கிடைக்கும். பணியாளர்களுக்குசலுகைப்பயன்கிடைக்கும்.மனைவி விரும்பிய பொருள் வாங்கிக் கொடுப்பீர்கள்.

**இடபம்:** தாயின் அன்பு, ஆசி பலமாகக் கிடைக்கும். சிறு செயலையும் நேர்த்தியுடன் செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் பண வரவு அதிகரிக்கும். இயன்ற அளவில் அறப் பணி செய்து மகிழ்வீர்கள்.

**மிதுனம்:** எதிலும் நிதானம் பின்பற்றுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட ஆதாயம் குறையலாம். உடல்நலனில் அக்கறை தேவை. பெண்கள் நகை இரவல் கொடுக்க, வாங்கக் கூடாது.

**கடகம்:** பணிவுடன் பேசினால் சிரமம் தவிர்க்கலாம். தொழில், வியாபாரத்தில் விடாமுயற்சி தேவைப்படும். இலாபம் சுமாராக இருக்கும். எதிர்பார்ப்பு நிறைவேறுவதில் தாமதம் உண்டாகும். பயணத்தில் மிதவேகம் நல்லது.

**சிங்கம்:** குடும்ப சந்தோஷத்தால் உற்சாகம் பெறுவீர்கள். பிறருக்கு இயன்ற அளவில் உதவுவீர்கள். தொழில், வியாபாரம் செழிக்க புதிய வாய்ப்பு உருவாகும். தாராள பணவரவு கிடைக்கும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர்.

**கன்னி:** சமூகப்பணி புரிவதில் ஆர்வம் கொள்வீர்கள். தனித்திறமையுடன் செயற்பட்டு ஆதாயம் காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டி குறையும். நிலுவைப் பணம் வசூலாகும். குடும்பத்தில் நிம்மதி நிலைக்கும்.

**துலாம்:** நண்பரின் கருத்தை விமர்சிக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலத்தைப் பாதுகாப்பது நல்லது. ஆதாயம் மிதமாக இருக்கும். பெண்கள் வீட்டுச் செலவுக்காக கடன் வாங்க நேரிடலாம்.

**விருச்சிகம்:** குடும்ப விடயம் பிறரிடம் பேச வேண்டாம். தெய்வ நம்பிக்கையுடன் செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் சுமாரான பணவரவு கிடைக்கும். உடல்நலனில் அக்கறை தேவை.

**தனுசு:** கடந்த கால சிரமம் விலகும். செயல்களில் உற்சாகமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப்பணி இனிதே நிறைவேறும். உபரி வருமானம் கிடைக்கும். இஷ்ட தெய்வ வழிபாடு சிறப்பாக நடந்தேறும்.

**மகரம்:** தன்மானத்திற்கு சோதனை ஏற்படலாம். மன அமைதியை பாதுகாப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் இடையூறு குறுக்கிடலாம். இலாபம் சுமாராக இருக்கும். மின் சாதனங்களை கவனமாகக் கையாளவும்.

**கும்பம்:** நண்பரின் ஆலோசனை வளர்ச்சிக்கு துணைநிற்கும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் வளர்ச்சி ஏற்படும். சேமிக்கும் விதத்தில் தாராள பணவரவு கிடைக்கும். பெண்கள் வீட்டுக்குத் தேவையான பொருள்கள் வாங்குவர்.

**மீனம்:** சிலர் உங்களிடம் உதவி கேட்டு அணுகுவர். தொழில், வியாபாரம் செழிக்க கூடுதல் உழைப்புத் தேவைப்படும். எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். வெளியூர்ப் பயணம் பயன் அறிந்து மேற்கொள்வது நல்லது.

## ஒரேமாதிரியான வேடங்களில் ஸ்ருதிஹாசன்-அக்சராஹாசன்!





'ஏழாம் அறிவு' படத்தை அடுத்து சூர்யா நடித்து வரும் 'எஸ்-3' படத்தில் அவருடன் மீண்டும் இணைந்திருக்கிறார் ஸ்ருதிஹாசன். இந்த படத்தில் அனுஷ்கா, ஸ்ருதிஹாசன் இருவருமே நாயகிகளாக நடிக்கின்றனர். கதைப்படி இந்தப் படத்தில் அனுஷ்கா சூர்யாவின் மனைவியாகி விடுவதால் அவருக்கு நடிப்பதற்கான வசதி அதிகமாக இல்லையாம். ஆனால், ஸ்ருதிஹாசன் படம் முழுக்க சூர்யாவுடன் பயணிக்கும் வேடத்தில் நடித்துள்ளாராம். அந்த வகையில் உளவுத்துறை அதிகாரியாக சூர்யா நடிக்கும் இந்தப் படத்தில் ஸ்ருதிஹாசன் அவருக்கு உதவி செய்யும் இன்னொரு அதிகாரியாக நடித்துள்ளார்.

அதேபோல் அஜித் நடித்து வரும் 57ஆவது படத்தில் சர்வதேச குற்றவாளிகளை புலனாய்வு செய்யும் அதிகாரியாக அஜித் நடிக்கிறார். இந்தப் படத்திலும் அஜித்தின் மனைவியாக காஜல்அகர்வால் நடிக்கிறார். ஆனால், ஸ்ருதிஹாசனின் தங்கையான அக்சராஹாசன் அஜித்துக்கு உதவி செய்யும் அதிகாரியாக நடித்துள்ளார். அந்த வகையில் சூர்யாவுக்கு உதவி செய்யும் அதிகாரியாக ஸ்ருதிஹாசன் நடிப்பது போல் அஜித்துக்கு உதவி செய்யும் அதிகாரியாக அக்சரா ஹாசனும் நடித்து வருகிறார். ஆக, அக்கா-தங்கை இருவருமே கிட்டத்தட்ட ஒரேமாதிரியான வேடத்தில்தான் நடிப்பதாகத் தெரிகிறது.

**அடேய், அந்த நாய்க்கு ஏன்டா கலர் அடிச்சே?**




உன் சேட்டைக்கு அளவே இல்லையா

**உள்ளே வரும்போது 20KMH SPEED ல வருது**



வெளியே போகும்போது 220KMH SPEED ல போகுது.




உங்க ரூத்பேஸ்ட்டில உப்பு, வேம்பு, சீரகம், பெருங்காயம், உள்ளி, இஞ்சி, மிளகு, வெங்காயம், கொத்தமல்லி, புதினா, வெந்தயம், வத்தல், மஞ்சள் இருக்கா..?

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | | | 1 | 7 | | | | 8 |
| | 1 | | 5 | | | | 3 | |
| | | | | | | | 6 | 1 |
| | | 5 | | 4 | | | 7 | 9 |
| | | 8 | | | | 4 | | |
| 2 | 4 | | | 3 | | 8 | | |
| 9 | 2 | | | | | | | |
| | 7 | | | | 5 | | 8 | |
| 5 | | | | 1 | 6 | | | 2 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 5 | 6 | 9 | 8 | 2 | 4 | 7 | 3 |
| 7 | 4 | 8 | 6 | 3 | 5 | 1 | 2 | 9 |
| 2 | 3 | 9 | 4 | 7 | 1 | 5 | 8 | 6 |
| 6 | 2 | 7 | 3 | 5 | 4 | 9 | 1 | 8 |
| 5 | 9 | 3 | 1 | 2 | 8 | 6 | 4 | 7 |
| 8 | 1 | 4 | 7 | 6 | 9 | 3 | 5 | 2 |
| 4 | 7 | 1 | 2 | 9 | 3 | 8 | 6 | 5 |
| 3 | 6 | 5 | 8 | 4 | 7 | 2 | 9 | 1 |
| 9 | 8 | 2 | 5 | 1 | 6 | 7 | 3 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்பவேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனிஎண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

*வாழும் வாழ்க்கையை வலியாய் மட்டுமே பார்ப்பவர்களே! பெண்களின் பேற்று வலியை விடவா உங்களின் வலிகள் பெரிதாய் இருந்து விடப் போகிறது?*










பெண்களுக்கான நவீன பஞ்சாபிகள் அறிமுகமாகியுள்ளன. நீள மானதும், நுட்பமான விதத்தில் கற்கள் பதித்த வேலைப்பாடு களுடன், உடல் அமைப்புக்கு இணங்க வடிவமைக்கப்பட்டுள் ளன. இவை, 4 ஆயிரம் ரூபா வில் இருந்து 8 ஆயிரம் ரூபா வரை விற்பனை செய் யப்படுகின்றன.



## இனிப்பு உளுந்து வடை

**தேவையான பொருள்கள்**

முழு உளுந்து – 150 கிராம்
சர்க்கரை – 100 கிராம்
ஏலக்காய் – 3
உப்பு – ஒரு சிட்டிகை
எண்ணெய் – பொரிப்பதற்குத் தேவையான அளவு

**செய்முறை**


உளுந்தைக் கழுவி மூன்று மணி நேரம் ஊற வைக்கவும். பின் தண்ணீர் வடித்து மிக்ஸியில் சர்க்கரை, ஏலக்காயோடு சேர்த்து தண்ணீர் இல்லாமல் பசையாக அரைக்கவும். தேவைப்பட்டால், தண்ணீரை லேசாகத் தெளித்துக் கொள்ளலாம். மாவை ஒரு பாத்திரத்தில் மாற்றி உப்புச் சேர்த்துக் கலக்கவும். அடுப்பில் சட்டியை வைத்து எண்ணெய் ஊற்றி சூடானதும், தீயை மிதமாக்கவும். இனி, உள்ளங் கையில் தண்ணீர் தொட்டு மாவை எடுத்து, உள்ளங்கையில் வைத்து வடை வடிவத்துக்கு தட்டி எண்ணெயில் போட்டு, இரண்டு பக்கமும் பொன்னி றமாக வேக விட்டு எடுத்து எண்ணெய் வழியும் படி வைக்கவும். இனிப்பு உளுந்து வடை தயார். பரி மாறும்போது வாழைப்பழத்துடன் பரிமாறவும்.

வடை செய்த பிறகு இரண்டு மணி நேரம் கழித்து பரிமாறினால் சுவை அதிகமாகும்.



## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 800 | 800 | 700 |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 400 | 400 | 600 |
| கணவாய் | 600 | 600 | 500 | 600 | 800 | 800 | – |
| பாரை | 550 | 600 | 500 | 800 | 600 | 800 | – |
| சுறா | 500 | 700 | 600 | 800 | 1000 | 800 | 700 |
| சீலா | 300 | 500 | 400 | 600 | 500 | 500 | – |
| விளை | 650 | 600 | 400 | 600 | 500 | 500 | 500 |
| முரல் | 300 | 400 | 350 | 500 | 400 | 400 | – |
| கும்பிளா | 400 | 450 | 300 | 400 | 400 | 500 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | 500 | 600 | – | – |
| ஓரா | 400 | 400 | – | – | 450 | 200 | 400 |
| திரளி | 300 | 300 | 200 | 150 | 300 | 200 | 250 |
| நகரை | 250 | 300 | – | 250 | 400 | 300 | 400 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 200 | 200 | – |
| ஒட்டி | 300 | 250 | 150 | – | 300 | 200 | – |
| திருக்கை | 150 | 350 | 200 | 400 | 400 | 350 | 270 |
| மதனம் | 150 | 200 | 180 | 400 | 300 | – | 300 |
| கொய் | 100 | 200 | 60 | 70 | 100 | 100 | – |
| பாலை | 400 | 200 | 250 | 400 | 400 | 500 | – |
| வாழை | 100 | 150 | 200 | 400 | 300 | – | – |



## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | 50 | 40 | 80 | 80 | 40 | 30 | 20 |
| கத்தரி | 90 | 50 | 80 | 60 | 60 | 60 | 90 | 40 |
| கரட் | 150 | 120 | 80–200 | 140 | 140 | 120 | 110 | 120 |
| மரவள்ளி | 100 | 200 | 100 | 80 | 80 | 80 | 80 | 50 |
| பயிற்றை | 60 | 50 | 100 | 100 | 80 | 40 | 100 | 40 |
| பாகல் | 120 | 80 | 220 | 100 | 120 | 80 | 240 | 100 |
| கருணைக்கிழங்கு | 150 | 120 | 120 | 160 | 120 | 120 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 90 | 80 | 80 | 80 | 80 | 80 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 50 | 60 | 80 | 80 | 60 | 80 | 90 | 60 |
| பூசணி | 50 | 40 | 40 | 50 | 40 | 80 | 70 | 80 |
| தக்காளி | 50 | 60 | 60 | 60 | 40 | 60 | 120 | 50 |
| வாழைக்காய் | 100 | 80 | 80 | 100 | 80 | 40 | 70 | 40 |
| கீரை | 20 | 20 | 30 | 15 | 20 | 20 | 20 | 30 |
| பொன்னாங்காணி | 25 | 30 | 30 | 35 | 20 | 20 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 200 | 150 | 200 | 150 | 160 | 200 | 400 | 160 |
| புடோல் | 40 | 40 | 40 | 60 | 60 | 40 | 70 | 50 |
| கோவா | 120 | 120 | 120 | 120 | 120 | 160 | 90 | 80 |
| வெண்டி | 40 | 50 | 60 | 60 | 40 | 80 | 70 | 50 |
| போஞ்சி | 150 | 160 | 170 | 180 | 140 | 200 | 130 | 180 |
| லீக்ஸ் | 120 | 120 | 100 | 120 | 100 | 120 | 90 | 100 |
| தேங்காய் | 40 | 25 | 40–80 | 25–30 | 30 | 40 | 15–25 | 30 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 100 | 100 | 100 | 100 | 85 | 120 |
| தேசிக்காய் | 100 | 200 | 200 | 240 | 140 | 120 | 120 | 100 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 15 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 150 | 140 | 150 | 180 | 160 | 240 | 200 | 130 |
| இராசவள்ளி | 160 | – | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 80 | 100 | 80 | 40–50 | 80 | 120 | 200 | 80 |



## நாளை

ஆவணி-06
திங்கட்கிழமை
-22.08.2016
திதி: சதுர்த்தி
மு.ப.08.44
நட்சத்திரம்: ரேவதி
மு.இ.08.35
ராகுகாலம்:
07.35-09.05 வரை
சுபநேரம்:
12.05-01.35 வரை

## சமையல் குறிப்புகள்

- மோர்க் குழம்பு வைக்கும் போது அரை நெல்லிக்காய் களை அரைத்துப் போட் டால் சுவை மிகுதியாக இருக்கும்.
- வெங்காயப் பகோடா செய்ய மாப்பிசையும்போது வறுத்த நிலக்கடலையைப் பொடி செய்து மாவுடன் சேர்த்துப் பிசையவும். இத னால் பகோடா மொறுமொற வென்று ருசியாக இருக்கும்.
- சப்பாத்தி செய்து எண் ணெய் வடிகட்டி யில் போட்டு மூடி வைத்தால் அடி யில் உள்ள சப் பாத்தி வேர்த்து, ஈரமாகாமல் இருக்கும்.

# சமியின் சகாப்தம் முடிவுக்கு வருகிறது



மேற்கிந்தியத் தீவுகளின் ரி-20 அணியின் தலைவராக இருந்த சமியின் கிரிக்கெட் வாழ்க்கை, தீவுகளின் கிரிக்கெட் சபையின் அதிகார வர்க்கத்தினால் நன்கு திட்டமிட்டு முடிவுக்குக் கொண்டுவரப்படுவதாகக் கருதப்படுகிறது.

மேற்கிந்தியத் தீவுகளின் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கும் வீரர்களுக்கும் இடையே ஊதிய ஒப்பந்தப் பிரச்சினை எழுந்தது. வீரர்களை ஒப்பந்தம் செய்த தொகையை தீவுகளின் கிரிக்கெட் சபை செலுத்தத் தவறியதையடுத்து இரு தரப்பினருக்கும் இடையில் பனிப்போர் மூண்டது. இதனையடுத்து சமி, பிராவோ, கெய்ல், ரசல், பொலார்ட் போன்ற வீரர்கள் தீவுகளின் கிரிக்கெட் சபையின் சிறுமைத் தன்மையை வெளிப்படையாக விமர்சித்தனர், இதன் எதிரொலியாக டெஸ்ட், ஒருநாள் ஆட்டங்களுக்கான அணிகளிலிருந்து அவர்கள் அதிரடியாக நீக்கப்பட்டனர். ரி-20 ஆட்டங்களுக்கான அணிகளில் மட்டுமே அவர்களுக்கு இடம்கொடுக்கப்பட்டது. 2014 ஆம் ஆண்டு, 2016 ஆம் ஆண்டு நடைபெற்ற ரி-20 உலகக் கிண்ணங்களை வென்ற சமி, தீவுகளின் கிரிக்கெட் சபையின் செயற்பாடுகள் சிலவற்றை அம்பலமாக்கினார்.

குறிப்பாக நடப்பு வருடத்தில் நடைபெற்ற ரி-20 உலகக்கிண்ணத்துக்காக மேற்கிந்தியத் தீவுகளின் அணிக்கு அந்த நாட்டின் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை ஜேர்சி வழங்குவதில்கூட இழுத்தடித்தமையை தனது வெற்றி உரையில் கோடிட்டுக் காட்டினார். இதனையடுத்து இவரது உரைக்குப் பல எதிர்ப்புக்களை வெளிப்படுத்திய தீவுகளின் கிரிக்கெட் சபை, எதிர்வரும் 27 ஆம் திகதி அமெரிக்காவில் நடைபெறவுள்ள இந்தியாவுக்கு எதிரான ரி-20 தொடரில் சமியை தலைமைத்துவத்திலிருந்து நீக்கியதுடன், ஒரு வீரராகவேனும் அவரை அனுமதிக்கவில்லை.

ஒருநாள், டெஸ்ட் ஆட்டங்களுக்கான அணிகளில் ஏற்கனவே புறக்கணிக்கப்பட்டுள்ள சமி ரி-20 தொடரிலிருந்தும் தற்போது புறக்கணிக்கப்பட்டுள்ளார். பன்னாட்டு ஆட்டங்களில் இனி நாம் அந்த ஜாம்பவானைக் காண வாய்ப்பில்லை. மொத்தத்தில் அவரது கிரிக்கெட் வாழ்க்கை அதிகார வர்க்கத்தால் திட்டமிட்டே முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

## கோல்ப் விளையாட்டுக்கு சாவுமணி ரியோ ஒலிம்பிக்குடன் அடிக்கப்படும்

ஓர் தசாப்த காலக் காத்திருப்புக்குப் பின்னர் ரியோ ஒலிம்பிக் தொடரில் கோல்ப் விளையாட்டு முதன்முதல் இடம்பெற்றது. ஆனால் இந்த ஒலிம்பிக் தொடருடன் மீண்டும் கோல்ப் விளையாட்டு புறந்தள்ளப்படக்கூடிய அச்சம் ஏற்பட்டுள்ளது.

1904 ஆம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் தொடரில் கோல்ப் முதல் முறையாக இடம்பெற்றது. அதன்பின்னர் நடைபெற்ற ஒலிம்பிக் தொடர்களில் கோல்ப் புறக்கணிக்கப்பட்டது. ஓர் தசாப்த காலக் காத்திருப்புக்குப் பின்னர் கோல்ப் சம்மேளனங்கள், வீரர்களின் பரிந்துரைக்கு அமைவாகப் பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் நடைபெற்றுவரும் ஒலிம்பிக் தொடரில் கோல்ப் முதல்முறையாக இடம்பெற்றது. ஆனால் இந்தத் தொடருடன் கோல்ப் மீண்டும் இல்லாமல் செய்யக்கூடிய சாத்தியக்கூறுகளும் ஏற்பட்டுள்ளன. இதற்கு பிரதான காரணமாகச் சொல்லப்படுவது, கோல்ப் வீரர்களின் உதாசீனப் போக்குத்தான்.

பிரேஸிலில் பரவிவந்த சிகா வைரஸின் அச்சம் காரணமாக முன்னணி கோல்ப் வீரரர்கள் பலரும் ரியோ ஒலிம்பிக் தொடரிலிருந்து விலகினர்.

பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதல் 10 இடங்களுக்குள் இருப்பவர்களில் இருவர் மட்டுமே ஒலிம்பிக் தொடரில் கலந்துகொண்டனர். இதன் காரணமாக கோல்ப் விளையாட்டு பெரிதளவில் எடுபடவில்லை. மட்டுமல்லாமல் 70 வீதமான நுழைவுச் சீட்டுக்கள் விற்பனையாகவில்லை. எனவே கோல்ப் விளையாட்டு பன்னாட்டுத் தரத்தில் இல்லை என்ற முடிவுக்கு வரவேண்டிய நிலையில் பன்னாட்டு ஒலிம்பிக் சம்மேளனம் உள்ளது. இதன் காரணமாக இந்த ஒலிம்பிக் தொடருடன் மீண்டும் கோல்ப்புக்கு மூடுவிழா நடத்தப்படவும் வாய்ப்புக்கள் உள்ளன.

## கதின்காவுக்கு சவால் கொடுக்கும் அமெரிக்க வீராங்கனை லெடிக்கி

உலகின் சிறந்த நீச்சல் வீராங்கனையாக ஹங்கேரியின் கதின்கா பதிவாகிக் கொண்டிருந்த நிலையில் அவருக்கு மிகப் பெரும் சவாலாக அமெரிக்காவின் கெய்டி லெடிக்கி உருவெடுத்துள்ளார்.

ரியோ ஒலிம்பிக் தொடரில் ஹங்கேரியின் சார்பாக களமிறங்கிய கதின்கா 100 மீற்றர் புற நீச்சல் 200 மீற்றர் நீச்சல், 400 மீற்றர் புற நீச்சல் ஆகியவற்றில் தங்கம் வென்றார். ரியோ ஒலிம்பிக் தொடரில் ஆண்களுக்கான நீச்சல் போட்டியில் அமெரிக்காவின் பெல்ப்ஸ் பெரிதும் அறியப்பட்டிருப்பதைப்போல பெண்கள் பிரிவில் கதின்காவே அதிகம் தூக்கி வைத்துக் கொண்டாடப்பட்டார். ஆனால் கதின்காவின் ஏக ஆதிக்கத்தை அமெரிக்க நீச்சல் வீராங்கனை லெடிக்கி முடிவுக்குக் கொண்டு வந்தார்.

200 மீற்றர் புற நீச்சல், 400 மீற்றர் நீச்சல், 4 வீராங்கனைகள் பங்குபற்றும் 200 மீற்றர் நீச்சல் ஆகியவற்றில் தங்கம் வென்ற லெடிக்கி, கதின்காவிடம் குவிந்திருந்த பன்னாட்டுப் பார்வையை தன்பக்கமாகவும் திருப்பினார். கதின்காவே உலகின் சிறந்த நீச்சல் வீராங்கனை என்ற பொதுவான அபிப்பிராயம் ரியோ ஒலிம்பிக் தொடருடன் மாற்றம் பெற்றுள்ளது. தடகளத்தில் போல்ட், கேத்லின் போட்டியைப் போல இனி நீச்சலில் கதின்கா, லெடிக்கி இருவருக்கும் இடையிலான போட்டி மேலும் விறுவிறுப்பைக் கூட்டும் என்பதில் சந்தேகமில்லை.



# பொய்முகம்

(35 பக்கத் தொடர்ச்சி)

சிநேகிதனுக்கு மனைவியாக வாய்த்தவளின் விழிகள் அவன் மீது பதிந்தாலும் ஏனோ அத்தனை வெறுப்புடன் அந்த விழிகள் வேறுதிசை மீண்டன? ஆரேனும் ஏதேன் மூட்டி வைத்து விட்டார்களோ?

பொன்ராசா தனக்கு மனைவியாகப் போகிறவளின் அழகைப் பிரமாதப்படுத்திச் சிலுவைராசாவுக்குச் சொல்லி இருந்தான். திருமணத்தின்போது மண மகளைக் கண்ட சிலுவைராசாவுக்கு அவள் தன்னையும் விட அழகியாக இருக்க முடியாது என் னும் காழ்ப்புணர்வே தலைதூக்கி இருக்க வேண்டும்.

"என்னேயும் விட அவற்றை பெண்சாதி வடிவாடி..நீ சொல்றதிலதான் எனக்கு நிம்மதியே இருக்கு.."

திருமண விழாவின் கெடுபிடி வேறு சிலுவைராசாவின் மனத்துடிப்பு வேறு. அந்நேரத்திலும் சிநேகிதனிடம் இப்படிக் கேட்டுவைக்கத் தவறவில்லை அவன்.

புதுமணப் பெண்ணின் முகமலரையே ஏக்கத்துடன் பார்த்து நின்ற அவனுடைய உள்ளம் அவளை தனது சகோதரியாக்கிச் சிநேகிதன் துணையானதால் தோழி ஆக்கிக் கொள்ளவும் தான் துடித்துக் கொண்டதோ?

அவனுடைய மனவுணர்வை புரிந்து கொள்ளாத அந்தப் பெண்ணுக்கும் இவன் மீது வெறுப்பும் ஏற்பட்டுவிட்டதா?

மணமகள் இல்லத்தில் சடங்குகள் முடிந்துபெண்ணும் மாப்பிள்ளையும் மணமகன் இல்லத்துக்கு வெளிக் கிட்ட பொழுது அவனும் கூட ஏன் வரவில்லை?

இத்துணை நண்பனாகத் திகழ்ந்த ஒருவனுடைய சந்தோசத்தில் இவனுக்கு அப்படி என்ன துக்கம் நேரிட்டது?

சாதாரண விருந்தாளியாகக் கலந்து கொண்டு வீட்டுக்கு வந்து படுக்கையில் தொப்பென்று விழுந்தவன் தான் துக்க மேலீட்டால் எப்போது நித்தி ரையானோம் என்பதும் அவனுக்குத் தெரியவில்லை.

அதிகாலை விடியற்பொழுதில் கண் விழித்தபோது அவனுக்கு எல்லாமே வெறுமை சூழந்து கொண்டதான பிரமை. இதுவரை நாள்களும் அந்த அறையில் அவனும் பொன்ராசாவும் கண்ட அனுபவங்கள் எத்தனை ? அவை அனைத்தும் அப்புது மணப்பெண் தட்டிச் சென்று விட்டாளா?

என்னிடத்தில் காணாததையா புதுசாக் காணப்போகிறார்.

ஆற்றாமை உள்ளத்தில் இந்தப் பேதலிப்புத்தான் தோன்றியது. பொழுதே அவனுக்கு விடியவில்லை.

சிநேகிதன் ஒருவனைக் கண்டு உணர்வுகளைக் கொட் டித் தீர்த்தான். மனப்பாரம் நீங்கும் போல் பட்டது அவனுக்கு.

என்னதான் சொன்னாலும் என்ரை வாழ்க்கையைக் கெடுத்துக் குட்டிச் சுவராக்கிப் போட்டாரடி அவர்..

மனப்பாரத்தைக் குறைக்கின்ற பிரலாபத்தைக் குறிக்கும் மன ஓலமா இது? உள்ளத்தால் ஆணோடு ஆண்உறவில் நீடித்துவிடலாமென்று மனப்பால் குடித்துக் கொண்டிருக்கலாம் சிலுவைராசா. அது எந்தளவுக்கு உண்மை என்பதை சிநேகிதனின் பிரிவுதான் இவனுக்கு உணர்த்த வேண்டும்.

சிலுவைராசா ஆண்பிள்ளைதான். அதற்கான சான்றுகள் அரும்புகின்ற தாடி மயிரும் துல்லியமாகச் சொண்டின் மீது கோடிடும் மீசையுந்தான். அவனு டைய மேனி அழகான மிருதுவான பெண்ணுக் குடையது. அவன் கதைக்கும்போது தோன்றும் முகபாவங்களும் அங்க அசைவுகளும் அசல் பெண்ணுக்கு உரியவைதாம்.

என்னவும் .. "உமக்கு நான் சந்தோசமா வாழப்போறது பிடிக்கேல்லையா...?"

பொன்ராசாவுக்குத் திருமணப்பேச்சுக்கால் நிகழ்ந்த நாள்களில் சிலுவைராசா எதனையோ கேட்டு விட்டதற்கு பொன்ராசா இப்படிக் கேட்ட வார்த்தைகள் இப்பொழுதும் 'பசுமரத்தாணிபோல்' சிலுவைராசாவின் மனதில் நன்றாகப் பதிந்திருக்கிறது.

அவர் எங்கிருந்தாலும் நல்லா இருக்கட்டும் அவற்றை சந்தோசந்தான் என்ர சந்தோசமும்..

சிநேகிதனின் சந்தோசத்துக்காக தன்னுடைய உரிமை களை விட்டுக் கொடுத்து ஊமையாகிவிட்ட சிலுவை ராசா இப்பொழுது அவை நினைவுக்கு வரவே வாய் விட்டுப் புலம்புகிறான்.

கணவனின் நலத்துக்காக விட்டுக் கொடுக்கும் பெண் ணின் பாங்கினையா சிலுவைராசாவின் பேச்சுகள் வலியுறுத்துகின்றன?

"ஏண்டி அம்மா மனசைப் போட்டுக் குளப்பிக் கொள்றா நீயும் ஒரு கல்யாணத்தைக் கெதியில் முடிச்சாப் போச்சு.."

சிலுவைராசாவுடன் கதைத்துக் கொண்டு நின்ற சிநேகிதன் இவ்விசயத்தை வெளியிட்டதும் அவனுடைய உள்ளுணர்வுகள் விழித்துக் கொண்டனவோ?

எதனையோ இழந்து விட்டதான தவிப்பால் இருள் மண்டிக்கிடந்த முகத்தில் நம்பிக்கை ரேகைகள் கோடிடுகின்றன.

"நீ சென்னேதான் சரி .. அதுக்கு முன்னாலை ஒரு வேலையைத் தேடிக் கொள்ள வேணும்.."

நீண்ட நேரச் சிந்தனைக்குப் பின்னால் வெளிவந்த வார்த்தைகளில் இருந்து அவனுடைய புதிய மாற் றத்தைப்புரிந்து கொண்டான் கூட நின்ற சிநேகிதன். இவ்வளவு காலமும் எங்கேயோ முடங்கிக் கிடந்த அவனுடைய ஆண்மை உணர்வுகள் சிநேகிதன் கூறிய வார்த்தைகளால் வீரியம் அடைந்து கொண்டனவா?

எதிர்கால நம்பிக்கையுடன் நண்பனிடம் இருந்து விடை பெற்றுச் செல்கிறான் அவன். அவனது காலடிகள் பாதையில் அழுத்தமாகப் பதிந்து கோலம் காட்டுகின்றன.

சிலுவைராசா ஆண்பிள்ளைதான்.

## சொற்சிலம்பம் - போட்டி இல: 434

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | ■ | 4 | | 5 |
| 6 | | ■ | 7 | 8 | | ■ | |
| | ■ | 9 | | | ■ | 10 | |
| 11 | 12 | | | ■ | 13 | | |
| ■ | 14 | | ■ | 15 | | | ■ |
| 16 | | ■ | 17 | | ■ | 18 | 19 |
| | ■ | 20 | | | 21 | | |
| 22 | | | | ■ | 23 | | |

அனுப்புபவர் பெயர்:..............................................

பூரணமான தபால் விலாசம்: ....................................

..............................................................

கையொப்பம்:..............................................

### இடமிருந்து வலம்

1. உண்ண உணவளித்தல்
4. அளிக்க
6. எல்லா உயிர்களுக்கும் இது வரும்
7. மூட்டுக்களில் வரும் நோய்
9. ஒரு காட்டு மிருகம்
10. தலையெழுத்து
11. தீவு
13. அரங்கம்
14. மறி
15. பள்ளத்தை தாண்டுவதற்காக அமைப்பது
16. ஒரு ஏவுகணை வகை
17. ஒரு திசையின் சுருக்கம்
18. இல்லம்
20. தனது கணவனைத் தானே தேர்ந்து மாலையி டும் நிகழ்வு
22. கூட்டம்
23. சிராய்

### மேலிருந்து கீழ்

1. எதிர்பாராத திடீர் அவல நிகழ்வு
2. சுவை உணர்வு
3. ஓட்டை
4. நமது
5. வெட்டு
8. கம்பு
9. வஞ்சகத்தனம்
10. ஊடகங்களில் முக்கிய இடம் இதற்கு உண்டு
12. நூற்றுக்குப் பங்கு காணுதல்
12. ஒன்று சேர்
15. மாணவர் படிப்பது இதனை
16. கோணி (ப்பை)
17. நெல் விளைவிப்பது இங்கே
19. பூட்டான் தலைநகர்
20. நல்ல
21. வாழ்

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 432 இற்கான சரியான விடைகள் வருமாறு:-

**இடமிருந்து வலம்**

(1) பிரசவம் (4) வாகு (6) மலை (7) பாட்டு (8) மாதர் (10) வாகடம் (11) தலைக்கனம் (13) கடும் (14) நம் (15) சுளகு (16) மேடு (17) சவம் (18) முருங்கை (20) காடு (21)தாடி (22)குதி

**மேலிருந்து கீழ்**

(1) பிரமாதம் (2) சமர்க்களம் (3) வலை (4) வாட்ட (5) குடும்பம் (7) பாகம் (9) தலை (10) வானம் (12) கடுகு (14) நடுங்கு (15) சுவடு (16) மேரு (17) சகா (18) முடி (19) கைதி

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

**1.வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.**

**2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்**

**3.உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.**

**4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.**

**5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=**

பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலி களது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இல.434 பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்)லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (31.08.2016 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 432 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**
R. வியாகரன்,
இல.71,
முதலாம் குறுக்குத் தெரு,
வவுனியா.

**2 ஆம் பரிசு**
நடராசா திலக்ஜன்,
ஆண்டு -11, வரணி மத்திய கல்லூரி,
வரணி.

**3 ஆம் பரிசு**
தேனுகா செல்வரத்தினம்,
ஏழாலை மத்தி, ஏழாலை.

**4 ஆம் பரிசு**
கே.இராஜகோபால்,
அடைக்கலம் தோட்டம், கந்தசுவாமி கோயிலடி, வட்டுக்கோட்டை.

**5 ஆம் பரிசு**
T.கிஷாந்தினி,
இல.20/5, சென். மேரிஸ் முதலாம் ஒழுங்கை, கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

**பாராட்டுப் பெறுவோர்**

இரா.சந்திரசேகரன்,
மாசியப்புலம் வீதி, ஏழாலை வடக்கு,
ஏழாலை.

ந.பொன்னம்பலம்,
உப தபாலகம், மல்லாகம்.

அ.அலையரசன்,
இல.16/1, மருதடி வீதி,
யாழ்ப்பாணம்.

சொற்சிலம்பம் போட்டி இல.434இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 04.09.2016 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டுவோருக்கான பரிசுக் காசோலைகள் வெற்றி பெற்றோரால் கொடுக்கப்படும் விலாசத்துக்கே அனுப்பி வைக்கப்படும். சரியான தபால் விலாசம் கொடுக்கப்படாமையால் சில சமயம் காசோலைகள் உரிய வெற்றியாளரைச் சென்றடையாமை அவதானிக்கப்பட்டுள்ளது. போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 432இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக் கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

18



# ஏறுமாறாக இருப்பாளேயாமாகில்.!

செ.மகேஷ்

பெண்ணடிமை, பெண்ணடிமை எனப் பேசுகிறார்களே, இந்த ஆண்கள் அடிமைப் பட்டுக் கிடக்கும் சங்கதி ஏனோ மறைக்கப்பட்டே வருகின்றது. ஆண், பெண் இருபாலாருக்கும் பொதுவென்று பேசும் பால்நிலைச் சமத்துவம் என்பதெல்லாம் எனக்குக் குழப்பமாகவே இருக்கிறது! எல்லாத்துறைகளிலும் பெண்களே சிறப்பாக முன்னணியில் பிரகாசிக்கிறார்கள் என்றார் சிவபாதத்தார் செல்லத்தம்பியரோ, சிவபாதத்தார்.சொன்னவை குறித்துச் சிந்தித்தார். கற்பு, கற்பு என்பதெல்லாம் இருபாலாருக்கும் பொதுவென்று போற்றப்படும் காலத்தில் ஏனோ இந்தக் குழப்பம் சிவபாதத்தாரின் பார்வையில் நீடிக்கின்றது. ஆண்களை அச்சுறுத்தும்வகையில்செய்திகளும்பரவிக்கொண்டே இருக்கின்றன. இந்தக் கற்புப் பெண்களைத் தாம் கட்டிப் போட்டிருக்கிறது என்றும் ஆணாதிக்கம் மேலோங்கி நிற்கிறது என்றும் இன்றுலவும் பெண்களில் சிலர் பிதற்றுவதும் கேட்கிறது. செல்லத்தம்பியர் நினைத்துக் கொண்டார்.

ஆணாதிக்கம் அடங்கிப் போய் ஆண்டுகள் பலவாகினாலும், பெண்களின் பெண்ணடிமைக் கூச்சல் குறையவேயில்லை. அதே வேளை ஆணடிமைப்பட்டுக் கிடக்கும் உண்மையை ஆண்வர்க்கம் வெட்கம் கெட்டு வெளியே சொல்லத் தயங்கும் நிலையே நீள்கின்றது. பெண்களால் பாதிப்புற்று மெளனிகளாகிப்போன ஆண்கள் தம்மைக் கேலிக்குள்ளாக்கும் தமது அடிமைநிலையை வெளியே சொல்ல கூச்சப்பட்டே வாழ்கிறார்கள். இதையெல்லாம் செல்லத்தம்பியர் சொல்ல நினைத்தார் சொல்லவேயில்லை.

இன்றைய நாளிலும் ஆண்களை வதை செய்து வாழும் பெண்கள் பற்றிய உண்மையை வெளியே சொன்னால் தமக்கே வெட்கம் என்பதாய் ஆண்கள் ஒடுங்கிப் போயுள்ளார்கள். இன்று நிலவும் இன்பம் விளைவிக்கும் வாழ்க்கை இருபாலாருக்கும் பொதுவானது என்பது உலகறிந்த உண்மை. பெண்கள் பாதுகாப்புப் பற்றிய பேச்சுக்களை ஒலிபெருக்கி போட்டுப் பேசும் நிலையில் இந்த ஆண்கள் அடிமைப்பட்டுப் போய்விட்டார்களோ?

பண்டைய காலந்தொட்டு கணவன் மனைவி என்போரின் புரிந்துணர்வு கொண்ட குடும்ப உறவில் ஏற்றத்தாழ்வுகள் எதுவுமே இருக்கவில்லை. ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுக்கும் வாழ்க்கையில் உள்ள இன்பம் ஆகா அருமையானதுதான். இந்த வாழ்க்கையின் சிறப்புக்கு ஔவையார் விருந்தாளியாகச் சென்றிருந்த ஒரு குடும்பத்தின் தலைவியிடத்திலே கணவன் தனது விருப்பைத் தெரிவிக்க எடுத்துக் கொண்ட உத்திகளை ஔவையாரே கவிதையில் சொல்லுகிறார்.

"இருந்து முகந்திருத்தி ஈரோடு பேன் வாங்கி
விருந்து வந்ததென்று விளம்ப - வருந்திமிக
ஆடினாள் பாடினாள் ஆடிப் பழமுறத்தால்
சாடினாள் ஓடோடத் தான்"

இது ஔவையார் சொன்ன உண்மைக் கதை. இந்த வகைக் குடும்பநிலை இன்றும் எம் மத்தியில் பல மனைகளில் உண்டு. இங்கே அன்று நிலவிய பெண்ணுரிமையின் பெருமையையும் ஆண் வர்க்கத்தின் அடக்கத்தையும் பார்க்கலாம். வீட்டுக்குள்ளே நடப்பவை எதுவுமே வெளியே தெரியாமல் அமைதியாக அவற்றைத் தீர்த்து வைத்துத் தனது கருத்துக்கு மனைவியை இணங்கவைக்க முயலும் ஓர் ஆணுக்குக் கிடைத்த மரியாதையைப் பெண்ணாகிய ஔவையார் இவ்வாறு சொல்லுவதைக் காணுகின்றோம்.

"பத்தாவுக் கேற்ற பதிவிரதை யுண்டானால்
எத்தாலும் கூடி யிருக்கலாம் - சற்றேனும்
ஏறு மாறாக இருப்பாளே யாமாகில்
கூறாமற் சந்நியாசங் கொள்"

## சொல்லத்தான் நினைக்கிறார் செல்லத்தம்பி

இதுவும் பெண்ணென்பவள் ஆணைத் தன்னாணைக்குள் அச்சுறுத்தி வாழ முயன்றமையின் எதிரொலிதாம். ஆனால் பாற்சமத்துவ நிலை பேணப்பட வேண்டும் என்பதில் அன்றும் கருத்து முரண்பாடுகள் இருந்ததில்லை. என்னிலையிலும் மனைவியை அனுசரித்துப் போகத் துணியும் நிலையில் ஆணை அடிமைப்படுத்தும் பெண்ணாதிக்கம் மேலோங்கும் வேளைகளைக் கண்டபோது இத்தகைய சந்நியாசங்கொள்ளும் வழிகாட்டல்களும் முன்வைக்கப்பட்டே வந்திருக்கின்றன. இந்த வகைச் சந்தர்ப்பங்களில் ஆணடிமைப்பட்டு வருந்தும் சங்கதிகளை எவருமே வெளியிற் சொல்வதில்லை. இன்று ஆண்களைப் பார்க்கிலும் சுதந்திரத்தோடு பெண்கள் உலவுவதைக் காண்கின்றோம். அவர்கள் பெற்றுக்கொண்டுள்ள உரிமைகளுக்கும் மேலாக ஆண்கள் எதனையும் பெற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை.

ஆங்காங்கே பெண்களுக்கென்றே சங்கங்கள் முளைத்து அவர்களின் உரிமைகளுக்கும் சுதந்திரத்துக்குமாக மேலும் மேலும் குரல் கொடுக்கின்றன. ஐயோ பாவம்; இந்த ஆண்கள்! பெண்களைக் கண்டே பயப்படுகிறார்கள்! இவர்களால் ஓர் ஆண்கள் சங்கமேனும் உருவாக்க இயலாமற்தானே உள்ளது.

ஒரு சிலர் செய்யும் தவறுகளால் மொத்தமாக இந்த ஆண் குலமே மௌனித்திருக்கிறது. தமது உரிமைகளைப் பறித்துவிட்ட பெண்களைப் பற்றிப் பேசினால், தமக்கு மேலும் அவமானம் என்றெண்ணி மௌனமாகிவிட்டார்களோ என்னவோ? செல்லத்தம்பியரும் மௌனமாகவே இருக்கிறார்.

# மாறுவோமா?

பா.பாலஜினி
பளை

மானிடா
பொய்வேசங்களைத் துறந்துவிட்டு
உண்மையாய் வாழலாம் வாடா

அன்னை தந்த பாலிலே
ஆலகாலம் ஏதடா? உன்
சின்ன இதயத்திலே
சிறுமைகளும் ஏனடா?

எம்மைச் சுமக்கும் பூமியின்று
நினைவிழந்து போகிறதே அவள்
பச்சை வண்ண ஆடைகள்
களவாடப்பட்டுப் போகிறதே

மரங்களை அழித்தோம்
நன்னீரின் மானத்தைப் பறித்தோம்
மண்ணையும் விட்டோமா?
மானபங்கப்படுத்தினோம்.

இனப்பசியும் கொண்டோம்
போரில் இறங்கி
புத்தியையும் இழந்தோம்
அணுகுண்டுப் பாவனைகளால்
அவலமாகிப் போனோமடா

பெண்வெறி கொண்ட
பிசாசுகளாய்ப் போனோமடா
அவர்கள் உணர்வுகளை மிதித்து
உணவாக்கிக் கொண்டோமடா

வணிக உலகத்தில்
வன்முறைகளைக் கையாண்டோம்
அரசியல் களத்திலே
வானரங்களாய் வாழ்கிறோமடா

இத்தனை கொடுமைகள்
இனியும் வேண்டாமே
இனிய உலகை உருவாக்க
இன்றே இணைவோமா?



# தமிழ் மறைமாவட்டங்களுக்கு வெளியே ஒரு தமிழ் ஆயர் மேதகு கலாநிதி இம்மனுவேல் பர்னான்டோ ஆண்டகை

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை
ஊடக வருகை விரிவுரையாளர் – யாழ் பல்கலைக்கழகம்

இலங்கையின் தலைமைமறைமாவட்டமான கொழும்பு மறைமாவட்டத்தின் துணை ஆயராக ஆயர் மேதகு கலாநிதி இம்மனுவேல் பர்னான்டோ ஆண்டகை நான்கு ஆண்டுகளை நிறைவு செய்வதை யொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.

**தமிழ் மறைமாவட்டங்களுக்கு வெளியே ஒரு தமிழ் ஆயர்**

எப்போதும் அன்பும் அமைதியும் கலந்த ஆளுமை, என்றும் புன்சிரிப்பு தவழும் மலர்ந்த முகம், சிரித்தால் எப்போ அடுத்த சிரிப்பு வரும் என ஏங்க வைக்கும் சிரிப்பு, அன்பை அள்ளிக்கொட்டும் அன்பான அணுகுமுறை, யாரையும் புண்படுத்தாத இனியசுபாவம், கால நேர இட வேறுபாடின்றி எல்லேரையும் எந்நேரமும் ஏற்றுக் கொள்ளும் உயர்ந்த பண்பு, அமைதியாக ஆர்ப்பாட்டம் இல்லாமல் அனைத்துப் பணிகளையும் ஆற்றும் மனப்பாங்கு, இவை அனைத்தின் உருவம் ஆயர் மேதகு கலாநிதி இம்மனுவேல் பர்னான்டோ ஆண்டகை. இவரையே இவ்வாக்கத்தின்வழி உதயன் ஞாயிறு கத்தோலிக்கப்பக்க வாசக அன்பு நெஞ்சங்களே நீங்கள் சந்திக்கிறீர்கள். இவர் தமிழ் மறைமாவட்டங்களுக்கு வெளியே ஒரு தமிழ் ஆயர் என்ற பெருமை பெற்றவர். யாழ்ப்பாணம், திருமலை, மட்டுநகர் , மன்னார், ஆகிய நான்கு தமிழ் பேசும் மறைமாவட்டங்களுக்கும் தனியான தமிழ் ஆயர்கள் உள்ளனர். ஆயர் மேதகு கலாநிதி இம்மனுவேல் பர்னான்டோ ஆண்டகை கொழும்பு தாய் மறை மாவட்டத்துக்கே உரியவர் என்றாலும் இலங்கை தமிழ் மறை மாவட்டங்களுக்கு வெளியே ஒரு தமிழ் ஆயர் என்ற பெயரும் பெருமையும் என்றும் அவருக்கே உரியது என்று துணிந்து கூறலாம்.

**ஆயர் மேதகு கலாநிதி இம்மனுவேல் பர்னான்டோ ஆண்டகையின் கல்வியும் பணியும்**

யாழ். நகரில் இறைபக்தி மிகுந்த விசுவாசம் சேவியர் பர்னான்டோ-ஞானசொருபி பர்னான்டோ தம்பதியரின் எட்டாவது மகனாக 1948இல் பிறந்தார். இவரின் தந்தையாரின் பணி நிமித்தம் பல இடங்களுக்கும் இடம்பெயர வேண்டி இருந்தமையால் 1951இல் கிறான்பாஸ் பின்னர் 1955இல் கொட்டாஞ்சேனை எனமாறி அங்கேயே நிரந்தரமாகக் குடியேறினர். ஆரம்பக்கல்வி கொட்டாஞ்சேனை புனித ஆசிர்வாதப்பர் கல்லூரி (1953 - 1964), சிறிய குருமடக்கல்வி புனித அலோசியஸ்சிறிய குருமடம் (1965 - 1966), மெய்யியல் கல்வி கண்டி அம்பிற்றிய தேசிய குருத்துவக் கல்லூரி (1966 - 1969), இறையில் கல்வி உரோமை மறைபரப்புக் கல்லூரி (1969 -1972), இளங்கலை மாணி உரோமை ஊர்பானியா பல்கலைக் கழகம் (1972 - 1973) என கல்வியை முடித்து குருத்துவத்தை உரோமையில் திருத்தந்தை 6ஆம் சினனப்பர் கையால் 19 நாடுகளைச் சேர்ந்த 38 குருக்களுடன் பெற்றார் (1973). முதுகலைமானிப் பட்டம்: உரோமை (1974) எனப் பயிற்சிக்காலம் நிறைவுற்றது. உதவிப் பங்குத்தந்தை: தலுகம (1974 - 1975), உதவிப் பங்குத்தந்தை: கன்வெல்ல (1975 - 1976) எனப் பணியாற்றிய பின்னர் பொதுவாகக் கிடைக்காத வரமாகத் தன்சொந்தப் பங்காகிய கொட்டாஞ்சேனைப் பங்கிலேயே பணியாற்றினார். அக்காலப்பகுதியில் கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆல்யப் பொறுப்புக்குரு (1976 - 1878) ஆகவும் பணியாற்றினார். விரிவுரையாளர்: கண்டி அம்பிற்றிய தேசிய குருத்துவக் கல்லூரி (1978 - 1981), கலாநிதிப்பட்டக்கல்வி: வொசிங்ரன் பல்கலைக்கழகம், பங்குப்பணி: வொசிங்ரன் மற்றும் நியூயோர்க் (1981 - 1987), விரிவுரையாளர்: கண்டி அம்பிற்றிய தேசிய குருத்துவக் கல்லூரி (1987 - 1989), உபஅதிபர்: கண்டி அம்பிற்றிய தேசிய குருத்துவக் கல்லூரி; (1989 - 1991), கண்டி அம்பிற்றிய தேசிய குருத்துவக் கல்லூரி அதிபர் பணியை மூன்றாவது மறைமாவட்டத் குருவாகப் பொறுப்பேற்றார் (1991 - 1998). பங்குப்பணி: நியூயோர்க் றொக்வில் சென்ரர் மறைமாவட்டம் (1998 - 1999), ஆய்வு நிலையப் பொறுப்பாளர்: கொழும்பு தாய்மறைமாவட்டம் (1999 - 2001), மறைக் கோட்ட முதல்வர்: பொலவலான மறைக்கோட்டம் - பங்குத் தந்தை: நீர்கொழும்பு தில்லந்துவ பங்கு (2001 - 2002), மறைக்கோட்ட முதல்வர்: மொறட்டுவ - பங்குத் தந்தை: மொறட்டுவ புனித செபஸ்தியார் ஆலயம் (2002 - 2009) எனப் பணி தொடர்ந்தது.

> கொழும்பு தாய்மறைமாவட்டத்தின் துணை ஆயர்ப் பணியோடு குருமுதல்வர் பணியையும் ஆற்றி வரும் இவர், தமிழ் மக்களின் தேவைகளை நிறைவேற்ற தமிழ்க் குருவான என்.மனோக்குமாரன் அடிகளார் தமிழ் மக்களின் ஆன்மீகப் பணிகளை நிறைவேற்றும் ஆயரின் பிரதிமுதல்வராக அதிகாரபூர்வமாக நியமிக்கப்பட்டிருந்தாலும் – தமிழ் திருப்பலிகளை அதிகாரபூர்வமாக நிறைவேற்றப்பட வேண்டிய தலைவில்லு போன்ற முக்கிய ஸ்தலங்களில் நிறைவேற்றி வருகிறார்.



**இன்னும் தனக்கே சொந்தமாக்கியுள்ளது கொட்டாஞ்சேனைப்பேராலயம்**

2004இல் இருந்து மறைக்கல்வி குடும்ப அப்போஸ்தலிக்க பணிக்கான ஆயரின் பிரதிமுதல்வராகவும் 2006இல் இருந்து தெற்குப் பிராந்திய (மொறட்டுவ - களுத்துறை மறைக்கோட்டம்) ஆயரின் பிரதி முதல்வராகவும் பணியாற்றியுள்ளார். 2009ஆம் ஆண்டில் களுத்துறை தகாம் செவன குருமடத்தில் வதிவிடக் குருவாகவும் ஆன்மிகக் குருவாகவும இருந்து நாகரிக வரலாற்றுத்துறை விரிவுரையாளராகப்பணி ஆற்றியுள்ளார். 2010இல் மாறிஸ் சகோதரர்கள் களுத்துறை திருச்சிலுவைக் கல்லூரியை கொழும்பு தாய் மறை மாவட்டத்துக்குக் கையளித்தபோது அதன் இடைக்கால அதிபராகப் பணியாற்றியுள்ளார். 2010இல் கொழும்பு தாய் மறை மாவட்ட ஆயர் இல்லத்தில் தங்கி இருந்து தமிழ் மக்களின் ஆன்மிகப் பணிகளை நிறைவேற்றும் ஆயரின் பிரதிமுதல்வராகப் பணியாற்றியுள்ளார். தமிழ் இறையில் கல்வியகம் – அக்குவைனஸ் கல்லூரி இறையியல் பிரிவு – சிங்கள தேவதர்ம நிகேந்தனய ஆகிய கல்லூரி களில் விரிவுரையாளராகப் பணியாற்றியபோது 2011இல் துணை ஆயர்ப்பணி இவரைத் தேடிவந்தது. சிறுவனாக மகிழ்வோடு பூசைக்கு உதவவைத்த கொட்டாஞ் சேனைப்பேராலயம், இளைஞனாக மதிப்போடு திருப்பலி ஒப்புக்கொடுக்க வைத்த கொட்டாஞ்சேனைப் பேராலயம், இப்போது ஆயராக மாட்சிமையோடு அமரவைத்த கொட்டாஞ் சேனைப் பேராலயம். தன்மைந்தனை தனக்கே இன்னும் சொந்தமாக்கியுள்ளது.

**யாழ்ப்பாணம் வரும் போதெல்லாம் சொந்த வீட்டுக்கு வருகிறோம் என்ற எண்ணமே வரும்**

ஆயராக திருநிலைப்படுத்தப்பட்ட பின்னர் யாழ் நகருக்கு வருகை தந்த ஆயர் மேதகு கலாநிதி இம்மனுவேல் பர்னான்டோ ஆண்டகையை தமிழ் கத்தோலிக்க செய்தி லங்கா தொலைக்காட்சி (ரீ.சி.என்.எல்.ரீ.வி) சார்பாக நேர்கண்டபோது – யாழ்ப்பாணம் வரும் போதெல்லாம் சொந்த வீட்டுக்கு வருகிறோம் என்ற எண்ணமே எனக்கு வரும் - என்று பெருமையோடும் சொன்ன அவர் - யாழ். மறைமாவட்டத்தில் பணியாற்றி இறந்துபோன எனது சகோதரர் அமரர் ஜோ. பர்னான்டோ அடிகளார் இங்கேயே அடக்கம் செய்யப்பட்டுள்ளார் என்றுஉரிமையோடும் சொன்னார். அமரர் ஜோ. பர்னான்டோ அடிகளார் பற்றி சற்று நோக்குவோம். ஆயர் மேதகு கலாநிதி இம்மனுவேல் பர்னான்டோ ஆண்டகை கண்டி அம்பிற்றிய தேசிய குருத்துவக் கல்லூரி அதிபராகப் பணியாற்றிபோது உரோமை ஊர்பானிய பல்கலைக்கழக இறையில் இளங்கலைமாணிப் பட்டப் படிப்பை நான் அங்கு யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த இராஜேந்திரம் ஸ்ரலின் அடிகளாருடனும் மன்னார் மறை மாவட்டத்தை சேர்ந்த டெஸ்மன் குலாஸ் அடிகளாருடனும் மேற்கொண்ட அனுபவம் மறக்கப்பட முடியாதது.

**கொழும்பு தாய்மறைமாவட்ட துணைஆயர்பணி, குருமுதல்வர் பணி,தமிழ் மக்களின் தேவைகளை கவனிக்கும் பணி**


கொழும்பு தாய்மறைமாவட்டத்தின் துணை ஆயர் பணியோடு குருமுதல்வர் பணியையும் ஆற்றிவரும் இவர், தமிழ் மக்களின் தேவைகளை நிறைவேற்ற தமிழ்க் குருவான என்.மனோக்குமாரன் அடிகளார் தமிழ் மக்களின் ஆன்மிகப் பணிகளை நிறைவேற்றும் ஆயரின் பிரதிமுதல்வராக அதிகாரபூர்வமாக நியமிக்கப்பட்டிருந்தாலும் தமிழ் திருப்பலிகளை அதிகாரபூர்வமாக நிறைவேற்றப்படவேண்டிய தலைவில்லு போன்ற முக்கிய ஸ்தலங்களில் நிறைவேற்றி வருகிறார். இப்பணிகளைவிட கொழும்பு தாய்மறைமாவட்ட துறவிகளின் ஆன்மிக தேவைகளைக் கவனித்து நிர்வகித்து வரும் பொறுப்பும் இவருடையதாகும். 2016ஆம் ஆண்டு முதல் நீர்கொழும்பு பிரதேசத்திற்குப் பொறுப்பான ஆயராகப் பணியாற்றி வரும் ஆயர் மேதகு கலாநிதி இம்மனுவேல் பர்னான்டோ ஆண்டகைநீர்கொழும்பில் உள்ள நீர்கொழும்பு மறைக்கோட்டம், போளவலான மறைக்கோட்டம், கட்டான மறைக்கோட்டம் ஆகிய மூன்று மறைக்கோட்டங்களில் உள்ள 27 கோவில்களை நிர்வகித்து வருகிறார். ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் நீர்கொழும்பில் உள்ள தமது காரியாலயத்தில் தங்கியிருக்கும் இவர் குருக்களைச் சந்தித்தல், இறைமக்களைச் சந்தித்தல், மறைக்கோட்ட கூட்டங்களை நடத்தல், ஆலோசனைகளை வழங்கல் போன்ற பணிகளை ஆற்றுகிறார். ஆயர் பேரவையின் உறுப்பினராக தேசிய ரீதியில் இவர் ஆற்றிவரும் பணிகள் பல. சமயங்களுக்கிடையிலான உரையாடல் மற்றும் கிறிஸ்தவ ஒன்றிப்பு தேசிய ஆணைக்குழுவின் தலைவர் பெறுப்பு இவருடையது. மேலும் குருமடங்கள் குருக்கள் துறவியர் பொது நிலை நிறுவனங்களுக்கான தேசிய ஆணைக்குழுவின் உபதலைவராகவும் (குருக்களின் தொடர் உருவாக்கம்), பொது நிலையினர் தேசிய ஆணைக்குழுவின் உபதலைவராகவும் (அன்பியம்), சமூகத்தொடர்பு தேசிய ஆணைக்குழுவின் உபதலைவராகவும், புலம் பெயர்ந்தோர் சுகாதாரம் சுற்றுலா சிறைச்சாலை தேசிய ஆணைக்குழுவின் உபதலைவராகவும் பணியாற்றுகிறார்.


**எட்டுப் பிள்ளைகளில் நான்குபேர் அர்ப்பண வாழ்வைத் தெரிந்துகொண்டனர்**

இம்மனுவேல் என்றால் கடவுள் நம்மோடு என்பது பொருள். இதனை ஆயர் குடும்பத்து எட்டுப் பிள்ளைகளில் நான்கு பேர் அர்ப்பண வாழ்வைத் தெரிந்து நிரூபித்துள்ளார்கள். இவரின் மூத்த சகோதரர் அமரர் ஜோ. பர்னான்டோ அடிகளார் (1935 - 1980) யாழ் மறை மாவட்டக் குருவாகப் பணியாற்றியவர். 1962ஆம்ஆண்டுமுதல் அடம்பன் - விடத்தல்தீவு (1963), இளவாலை - சேந்தான் குளம் (1964), பண்டிவிரிச்சான் (1965 - 1966), ஆயரின் தனிப்பட்ட செயலர் (1966 - 1969), ஆயர் இல்லம் - மார்ட்டீனார் குருமடம் (1970 - 1971), கரவெட்டி (1971), ஆயர் இல்லம் (1972 - 1973), உதவிப் பங்குத்தந்தை இளவாலை (துங்குமிடம் ஆயர் இல்லம்) (1973 - 1974), பங்குத்தந்தை வசாவிளான் (1975 - 1978) ஆகிய இடங்களில் பணியாற்றி 1980ஆம் ஆண்டு நோய் காரணமாக மறைந்தார். அமரர் ஜோ. பர்னான்டோ அடிகளார் 78 - 80 காலப்பகுதியில் யாழ் மறைமாவட்டத்தில் இருந்து இந்திய குருத்துவக்கல்லூரிகளில் கல்வி கற்றவர்களுக்கான பாஸ்போட் - விசா மற்றும் பயண ஒழுங்குகள் அனைத்தையும் நிறைவேற்றித்தருவார். யாழ். மறைமாவட்டத்தைச் சேர்ந்த இராஜேந்திரம் ஸ்ரலின் அடிகளாரும் நானும் 1980ஆம் ஆண்டு சென்னை பூந்தமல்லி திரு இருதயக் குருத்துவக் கல்லூரியில் இருந்தபோதே ஜோ. பர்னான்டோ அடிகளாரின் இறப்புச்செய்தி கேட்டு அதிர்ந்து போனோம். அமரர் ஜோ. பர்னான்டோ அடிகளாரைத் தொடர்ந்து அருட்சகோதரி டிலெக்ரா (அ.கா) அருட்சகோதரி ஜோயெல்லா (அ.கா) இருவரும் அப்போஸ்தலிக்க கார்மேல் சபைக் கன்னியராகப் பணியாற்றுகின்றனர். இவர்களுக்கு அடுத்தவராக அர்ப்பண வாழ்வைத் தெரிந்த ஆயர் மேதகு கலாநிதி இம்மனுவேல் பர்னான்டோ ஆண்டகைக்கு இறைவன் நிறைவான அருள், நீடித்த ஆயுள், நிம்மதியான சுகவாழ்வு கொடுத்துக்காப்பாராக.

# பெண்களை வாட்டும் கர்ப்பப்பை இறக்கம்/குடல் இறக்கம்

மருத்துவர் கந்தையா குருபரன்



பல வயது முதிர்ந்த பெண்களின் வாழ்க்கையையும் அவர்களின் வாழ்க்கைத் தரத்தையும் பாதிக்கும், ஒரு வெளியில் சொல்ல முடியாத அல்லது வெளியில் சொல்ல விரும்பாத ஒருபிரச்சினையாக கர்ப்பப்பை இறக்கம் உள்ளது.


பொதுவாக பல குழந்தைகளை பிரசவித்த தாய்மாருக்கு இந்தப் பிரச்சினை வரலாம். பிரசவத்தில் ஆயுதம் பாவித்து பிரசவம் ஏற்பட்டிருப்பினும் ஏற்படலாம். மேலும் பெண்களின் வயது கூடும் போதும் இவ்வகை குடல் இறக்கம் ஏற்படும் வாய்ப்பு அதிகம்.

கருப்பை இறக்கம் தனியாகவும் வரலாம். பல வேளைகளில் சிறுநீர்ப்பை மற்றும் பெருங்குடல் ஆகியனவும் சேர்ந்து கர்ப்பப்பையுடன் பிறப்பு வாசல் வழியாக கீழே இறங்கலாம்.

**இயற்கையே இதற்குக் காரணம்**

பெண்களின் உடலமைப்பில் பிள்ளைப் பேற்றுக்காக இடுப்புப் பகுதியின் கீழ்ப்பகுதி என்புகள் அற்று தசை மட்டுமே இருக்கும். இப்பகுதியினூடாகவே சாதாரணமாகப் பிள்ளை பிறக்கும் விதமாக அமைக்கப் பட்டிருக்கும்.

பல பிள்ளைகளைப் பெறும்போது இத்தசை நார்கள் தமது வலிமையை இழக்கும். இதனால் கர்ப்பப்பையை வழமைபோல் தாங்கி வைத்திருக்க முடியாமல் இருக்கும். இதன் விளைவாகக் கர்ப்பப்பை இறக்கம் ஏற்படும். பிள்ளை பெற்றபின் சரியான உடற்பயிற்சியை முறையான வழிகாட்டலின் கீழ் செய்தால் இவ்வகை குடல் இறக்கம் ஏற்படுவதை ஓரளவு தடுக்கலாம்.



**என்ன அறிகுறிகள் ஏற்படலாம்?**

1. பிறப்புவாசலில் ஒருகட்டி எப்போதும் வெளித் தெரியலாம். (irreducible prolapse)
2. சிலருக்கு இருமும் போது ஒரு கட்டி மட்டும் வந்து போகலாம். (reducible prolapse)
3. சிலருக்கு அதிகளவில் இரத்தப்போக்கு, வெள்ளை படுதல் அல்லது சிலவேளைகளில் இரத்தப் போக்கும் ஏற்படலாம்.
4. சிலவேளைகளில் நாரி வலி அல்லது முதுகுவலி இருக்கலாம்.
5. சிறுநீர் சம்பந்தமான அறி குறிகளும் சிலருக்கு இருக்கலாம் உதாரணமாக இருமும் அல்லது தும்மும்போது சிறுநீர் போகலாம். சிலருக்கு அவர்களை அறியாமல் கட்டுப்பாடின்றி சிறுநீர் போகலாம்.

கருப்பை இறக்கம் தனியாகவும் வரலாம். பல வேளைகளில் சிறுநீர்ப்பை மற்றும் பெருங்குடல் ஆகியனவும் சேர்ந்து கர்ப்பப்பையுடன் பிறப்பு வாசல் வழியாக கீழே இறங்கலாம்.

6. மேலும் சிலர் மலச்சிக்கல் அல்லது மலம் கழிக்க முடியாமல் அவதிப்படலாம்.

இதனால் பெண்களின் நாளாந்த வாழ்க்கை பெருமளவில் பாதிக்கப்படலாம். பொதுநிகழ்வுகளில் பங்கு பற்ற முடியாது போகலாம்.

**எவ்வகை சிகிச்சைகள் உள்ளன?**

இவ்வகை அறிகுறி இருப்பவர்கள் கவலைப்பட வேண்டாம்.

இவர்களுக்கு உள்ள பிரச்சினையை சரியாக அறிந்தால் அதற்கு உரிய சிகிச்சையைப் பெற்றுக் கொள்ளலாம்.

1. குறிப்பிட்ட வகையான உடல் பயிற்சிகளை (pelvic floor exercise) செய்வதன் மூலம் சிலருக்கு நோய் அறிகுறிகளை சரி செய்ய முடியும்.
2. சிலருக்கு வளையம் (Pessary) ஒன்றை வைப்பதன் மூலம் தீர்வைப் பெறலாம்.
3. சத்திர சிகிச்சை (Surgery) சிலருக்குத் தேவைப்படலாம்.

நோயாளியின் நோய் அறிகுறிகள், எவ்வகை குடல் இறக்கம் மற்றும் நோயாளிக்கு உள்ள வேறு மருத்துவப் பிரச்சினைகள் என்பவற்றைப் பொறுத்து சிகிச்சை மாறலாம்.

மிக சிறிய அல்லது ஆரம்ப நிலையில் உள்ள குடல் இறக்கம் எனில் உரிய அளவுக்குரிய வளையம் (Pessary) ஒன்றை கர்ப்பப்பை வாசல் அருகே வைப்பதன் மூலம் அவர்களின் சிரமங்களைக் குறைக்கலாம். இவ்வளையத்தை குறைந்தது 6 மாதத்துக்கு ஒருமுறை மாற்ற வேண்டும்.

**வளையம்** (Pessary)

பெரிய அல்லது நோயாளியின் நாளாந்த வாழ்க்கையைப் பாதிக்கும் குடல் இறக்கம் எனில் சத்திர சிகிச்சை (vaginal hysterectomy) மூலமே இதற்கு தீர்வுகாண வேண்டும்.

இவ்வகை சத்திரசிகிச்சை செய்த பின் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு (இரண்டு மாதங்கள்) மிக கடின வேலைகளைத்தவிர்த்தல் வேண்டும்.

மேலும் சிலருக்கு இவ்வகைச் சத்திரசிகிச்சை செய்த பின்னும் பலவருடங்களின் பின் குடல் இறக்கம் மீளவும் ஏற்படக்கூடும்.

பெண்நோயியல்
மகப்பேற்றியல் நிபுணர்,
சிரேஷ்டவிரிவுரையாளர்
மருத்துவபீடம்,
யாழ். போதனா
வைத்தியசாலை.

---

மருத்துவர் எம்.அரவிந்தன்

**கேள்வி:**

**எனது வயது 45 ஆகும். எனக்கு நீரிழிவு நோய் கண்டறியப்பட்டு 4 வருடங்கள் ஆகின்றன. நான் மெற்போமின், கிளிக்கிளசயிட் ஆகிய மருந்துகளைப் பாவித்து வருகின்றேன். எனது கொலஸ்திரோல் அளவு அதிகமாக இருப்பதாக வைத்தியர் கூறுகிறார். இதனைக் கட்டுப்படுத்த குளிசையைப் பயன்படுத்துவது அவசியமானதா?**

**பதில்:**

நீரிழிவு நோயானது உடலின் பல அங்கங்களிலும் பாதிப்பை ஏற்படுத்துகின்ற ஒரு நோயாகும். நீரிழிவு நோயாளருக்கு இருதயம் மற்றும் குருதிக் குழாய்கள் தொடர்பான பிரச்சினைகள் ஏற்படுகின்ற சாத்தியக்கூறு மிக அதிகமாகும். உலகளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி நாற்பது வயதுக்கு மேற்பட்ட எந்தவொரு நீரிழிவு நோயாளியும் STATIN எனப்படுகின்ற கொலஸ்ரோலைக் கட்டுப்படுத்தும் மருந்தை உள்ளெடுத்தல் அவசியமானதாகும். நீரிழிவு நோயாளியொருவரின் கொலஸ்திரோலின் அளவு சாதாரணமாக இருந்தாலும் அவர் சிறிய அளவில் STATIN வகை மருந்தை உள்ளெடுப்பது அவசியமாகும்.

உங்களுடைய கொலஸ்திரோலின் வகை அளவுக்கேற்ப வைத்தியரானவர் தேவையான மருந்தின் அளவை (dose) தீர்மானிப்பார். உணவுக் கட்டுப்பாடு மற்றும் உடற்பயிற்சி போன்றனவும் கொலஸ்திரோலைக் கட்டுப்படுத்துவதற்கு மிகவும் அவசியமானவையாகும்.

இதுபற்றிய மேலதிக விவரங்களை உங்கள் குடும்ப மருத்துவரிடமோ மருத்துவநிபுணரிடமோ நீங்கள் அறிந்து கொள்ள முடியும்.

நீரிழிவு அகஞ்சுரக்கம் தொகுதி,
(ஹோர்மோன்) விசேட மருத்துவ நிபுணர்,
யாழ்.போதனா வைத்தியசாலை.





கிளிநொச்சி முகமாலைப் பகுதியில் போரால் அழிவடைந்த புனித ஆரோக் கியமாதா தேவாலயத்தின் திருச்சொரூ பத்தை அமைப்பதற்கான அடிக்கல், அண்மையில் நடப்பட்டது. அதில் ஆலயப் பங்குத்தந்தை, பங்கு மக்கள், அரச அதி காரிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற)



புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத்தில், பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களுக்கும், வறுமைக்கோட்டுக் குட்பட்ட மாணவர்களுக்கும் அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகனால் சைக்கிள்கள் வழங்கி வைக்கப்பட்டன. (ற)



பலாலி தெற்கு வயாவிளான் சென். ஜேம்ஸ் ஆலயத்தின் வருடாந்த திருவிழா, கடந்த 16ஆம் திகதி பங்குத்தந்தை அருட்பணி ஜெயக்குமார் தலைமையில் ஆரம்பமானது. அதில் பொதுமக்கள், பங்குமக் கள், அருட்பணியாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ற)



அனலைதீவு ஹரிஹர புத்திரர் ஐயனார் ஆலயப் பெருந் திருவிழாவின் தேர்த் திரு விழா கடந்த 18ஆம் திகதி நடைபெற்றது.(ற)



வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் ஊடாக ஆஸ்திரேலியாவில் வசிக்கும் செல்வி த.அர்ச்சனாவின் பங்களிப்புடன் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள பார்வையிழந்த, செவிப்புலன் இழந்த, வாய்பேச முடியாத மாணவர்களைப் பராமரிக்கும் இனிய வாழ்வு இல்லத்தைச் சேர்ந்த 49 சிறார்களுக்குக் காலணிகள் வழங் கப்பட்டன. இந்த நிகழ்வில் இனிய வாழ்வு இல்லச் சிறார்களின் நாட்டியம் மற்றும் கண் பார்வையிழந்த செல்வி தமிழினியின் பாடல் என்பன இடம்பெற்றன. (ற)



வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணலிங்கேஸ்வரர் கண்ணகி அம்மன் ஆலயங்களில் இடம்பெற்ற மகா சங்காபிசேக காட்சிகளின்போது...



ஆடி அமாவாசை தினத்தன்று கீரிமலை புனித கடற்கரையில் அமைந் துள்ள சிவனின் லிங்கோற்பவர் மூர்த்தத்துக்கு பக்தர்கள் கடல் தீர்த்தத்தை குடத்தில் எடுத்து வந்து தமது கைகளாலே அபிசேகம் செய்தனர். (ரி)

# மீண்டும் பொலிஸில் சேவையாற்ற வாய்ப்புக் கிடைத்தமை மகிழ்ச்சி

## முன்னாள் பொலிஸ் பேச்சாளர் பிரசாந்த ஜயக்கொடி தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 21
பொலிஸ் திணைக்களத்தில் மீளவும் சேவையாற்ற அமைச்சரவை அனுமதியளித்துள்ளமை மகிழ்ச்சியளிக்கின்றது. விரைவில் நான் சேவையில் இணைத்துக்கொள்ளப்படுவேன் என எதிர்ப்பார்க்கின்றேன். எனக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நியாயம் வழங்கப்படல் வேண்டும்.

இவ்வாறு முன்னாள் பொலிஸ் பேச்சாளர் பிரசாந்த ஜயக்கொடி தெரிவித்தார்.

பிரசாந்த ஜயக்கொடியைச் சேவையில் இணைத்துக்கொள்ள அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:

கடந்த அரசின் காலத்தில் பல்வேறு அநீதிகளுக்கு உட்பட்டவன் என்ற வகையில் எனக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு எதிராகவும் நியாயம் வழங்கப்படல் வேண்டும். முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் மற்றும் அவரது அமைச்சின் கீழ் செயற்பட்ட ஆயுதக் குழுக்களின் கொலை அச்சுறுத்தல் காரணமாகவே நான் நாட்டை விட்டு வெளியேறி ஆஸ்திரேலியா சென்றேன். அப்போது நாட்டில் இருந்த வெள்ளை வான் கலாசாரம் தொடர்பில் நான் அறிந்திருந்ததால் எனது மகள், மனைவியின் நிலைமையை எண்ணி அந்த முடிவை எடுத்தேன். பொலிஸ் பேச்சளராக இருந்த போது, அசாதாரணமான அறிக்கை வெளியிட வற்புறுத்தப்பட்டேன். அதற்கு நான் மறுத்ததால் அப்பதவியில் இருந்து அகற்றப்பட்டேன். இரத்தினபுரியில் கடமையாற்றும்போதும் சிக்கல்கள் வந்தன. பல்வேறு தொலைபேசி அழைப்புக்கள் ஊடாக உன்னையும் உனது குடும்பத்தினரையும் கொலை செய்வோம். சவப் பெட்டியைத் தயாராக வைத்துக்கொள் என்ற பல்வேறு அச்சுறுத்தல்கள் வந்தன.

அது தொடர்பில் நான் எனது மேலதிகாரிகளுக்கு அறிவித்த போதும் எவ்வித பயனும் இல்லை. அந்தத் தொலைபேசி இலக்கங்களை மையப்படுத்தி விசாரித்துப் பார்த்ததில் அந்த இலக்கங்கள் பாதுகாப்பு அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டவை என்பதை நான் அறிந்துகொண்டேன்.

ஐக்கிய நாடுகள் சபையால் உறுதிப்படுத்தப்பட்ட மனித நேய விடயங்களுக்குள் உள்ள வாழும் உரிமை கூட இல்லாத நிலையில் நான் ஆஸ்திரேலியாவுக்குத் தப்பிச் சென்றேன். சட்ட ரீதியாகவே நான் ஆஸ்திரேலியா சென்று அகதி அந்தஸ்து பெற்றேன்.

அங்கும் என்னைத் தேடி வந்தனர் என்று தகவல் வரவே பல இடங்களில் சென்று வாழ்ந்தேன். ஆஸ்திரேலிய அரசு எனக்கு முழுமையான ஆதரவு தந்தது.

ஆட்சி மாற்றத்தின் பின்னர் நல்லாட்சி அரசு மீது நம்பிக்கை கொண்டு நாடு திரும்பினேன். எனக்கு நியாயம் வேண்டும்.- என்றார். (ந-4)

# வடக்கு மீள்குடியமர்வு இந்த ஆண்டு நிறைவு

## மீள்குடியேற்ற அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 21
வடக்கில் இந்த வருட இறுதிக்குள் மீள் குடியேற்றச் செயற்பாடுகள் நிறைவுறும் என மீள்குடியேற்ற அமைச்சு அறிவித்தது.

அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது–

யாழ்ப்பாணத்தில் காணியற்ற 936 குடும்பங்கள் உள்ளன. அதில் 804 குடும்பங்களுக்கு வீடுகளை அமைக்க அமைச்சரவையால் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் கீரிமலைக்கு அருகில் உள்ள காங்கேசன்துறைப் பகுதியில் இராணுவத்தின் உதவியுடன் வீடுகள் அமைக்கப்படுகின்றன. 104 வீடுகள், பலாலி வடக்குப் பகுதியில் அமைக்கப்படவுள்ளன. அவற்றின் கட்டுமானப் பணிகள் எதிர்வரும் ஒக்ரோபரில் நிறைவு பெறும். காணியற்ற குடும்பங்களை குடியேற்றுவதற்காக 250 காணித் துண்டுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

காங்கேசன்துறை, பளை, வலிகாமம் வடக்கு மற்றும் தையிட்டி ஆகிய இடங்களில் 450 ஏக்கர் நிலத்தை விடுவிக்கப் பேச்சு நடைபெறுகின்றது - என்றுள்ளது. (ந-4)




ஓரியன்ட் நிலையான வைப்புகளுக்கு
சூப்பர் வட்டி




மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள்
கீதிகா - 0777 363 926 / சஞ்சீவ - 0777 712 696

| | நியம வட்டி வீதம் | | | | மூத்த பிரஜைகளுக்கான வட்டி விகிதம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| காலம் | மாதாந்தம் | வ.வ.வீ | முதிர்வில் | வ.வ.வீ | மாதாந்தம் | வ.வ.வீ | முதிர்வில் | வ.வ.வீ |
| 3 மாதங்கள் | - | - | 11.00 | 11.46 | - | - | 12.00 | 12.55 |
| 6 மாதங்கள் | 10.00 | 10.47 | 11.50 | 11.83 | 11.00 | 11.57 | 12.50 | 12.89 |
| 1 வருடம் | 11.50 | 12.13 | 12.00 | 12.00 | 12.50 | 13.24 | 13.00 | 13.00 |
| 2 வருடங்கள் | 12.00 | 12.68 | 13.00 | 12.25 | 13.00 | 13.80 | 14.00 | 13.14 |
| 3 வருடங்கள் | 12.50 | 13.24 | 13.50 | 12.00 | 13.50 | 14.37 | 14.50 | 12.79 |
| 4 வருடங்கள் | 12.50 | 13.24 | 14.50 | 12.12 | 13.50 | 14.37 | 15.50 | 12.82 |
| 5 வருடங்கள் | 12.50 | 13.24 | 15.00 | 11.84 | 13.50 | 14.37 | 16.00 | 12.47 |

பிராந்திய முகாமையாளர்கள்
மேல், மத்திய மாகாணங்கள் - தஹமி 0772 093 993
தென் மாகாணம் - டெரன்ஸ் 0772 178 979
வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் - பிரவீன் 0768 330 255
சப்பிரகமுவ மற்றும் ஊவா மாகணங்கள் - ஏரந்த 0772 612 113

Celebrating 35 Years Orient Finance PLC

ஓரியண்ட் பினான்ஸ் பிஎல்சி
(ஓரியண்ட் பினான்ஸ் பிரதான காரியாலயம்)
இல. 18, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொ.பே: 117 577 685 பெக்ஸ்: 0117 577 678
Orient Finance

இலங்கையின் மத்திய வங்கியின் நாணயச்சபையினால் 2011ன் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் கீழ் உரிமம் அளிக்கப்பட்டது. இணைக்கப்பட்ட திகதி 1981 ஜூலை 24 ஆம் திகதி தகுதிவாய்ந்த வைப்பீட்டாளர்களின் பொறுப்புக்கள் நட்ட ஈட்டிற்கான நாணயச்சபையின் இலங்கை வைப்பீட்டாளர் காப்புறுதி திட்டத்துடன் வைப்பீட்டாளர் ஒருவருக்கு ஆகக் கூடுதலாக ரூ.300,000 என்ற அடிப்படையில் காப்புறுதி செய்யப்படும்.
பணிப்பாளர்கள் சபை உறுப்பினர்கள்: கலாநிதி டி.சி.ஜயசூரிய பி.சீ தலைவர், திரு. பி.ஏ.ஷாப்டர், திரு. ஆர்.ஷாப்டர், திரு. ஏ.டபிள்யூ.அத்துகோரள, திரு. இந்திரஜித் பெர்னாண்டோ, திரு. கே.எம்.ஏ.பீ. தித்தவெல பி.சி, திருமதி. எல்.கே.குணதிலக, செல்வி. பிளேட்டா டி.ஏ.பெரேரா, என்.டி.குணசேகர
31.03.2016 இல் பரிசீலனைக்குட்படுத்தப்பட்ட கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கை : பங்குதாரர்களின் நிதி ரூ. 2,242,981,000/-, வைப்பு மீதான பொறுப்புக்கள் ரூ. 9,249,312,000/-, கடன்கள் ரூ. 4,873,024,000/-, வரிக்கு பிந்திய இலாபம் ரூ. 606,873,000/-

# வீட்டிலிருந்தே எந்தவொரு வலையமைப்பிற்கும் RELOAD செய்திடுங்கள்.

**8822** இற்கு **SMS** செய்து
இருக்கும் இடத்திலிருந்தே தொலைபேசிக்கு
ரீலோட் செய்திட தற்போது சம்பத் Z ரீலோட்.
நீங்கள் எங்கு இருந்தாலும், எந்த நேரத்திலும்,
இருக்கும் இடத்திலிருந்தே உங்களது அல்லது
உங்களது நண்பர்களின் எந்தவொரு தொலைபேசி
வலையமைப்பிற்கும் ரீலோட் செய்ய முடியும்.
நீங்கள் செய்யவேண்டியது.
ரீலோட் செய்யவேண்டிய தொகையை குறிப்பிட்டு
**8822** ற்கு **SMS** செய்யுங்கள்.

வேறொருவரின் தொலைபேசிக்கு ரீலோட்
செய்துகொள்வதற்கு
இரகசிய இலக்கம் (இடைவெளி) தேவையான
பணத்தொகை (இடைவெளி) குறித்த
தொலைபேசி இலக்கத்தைக் குறிப்பிட்டு
8822 ற்கு அனுப்புங்கள்.
உ-ம்: **1234 100 07xxxxxxxx**

airtel Dialog etisalat HUTCH Sri Lanka Telecom Mobitel

மேற்குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி
வலையமைப்புகளுக்கு இச்சேவையை
பெற்றுக்கொள்ள முடியும்.

இச்சேவையை பெற்றுக்கொள்வதற்கு இன்றே
சம்பத் வங்கிக் கிளையில் பதிவு
செய்திடுங்கள்.

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

The Banker Bank of the Year 2015 SRI LANKA

Sampath Reload Z

Like us on facebook.com/Sampathbankplc

## சம்பத் வங்கி
எதிர்காலத்தின் முன்னோடிகள்

Sampath Bank Fitch Ratings A+(lka) 0112 30 30 50 www.sampath.lk






நாளுக்கு நாள்... வருடத்திற்கு வருடம்... காலம் நகர்கின்றது ஆனால், ஒன்றுமட்டும் பரம்பரை பரம்பரையாக காலத்தால் அழியாத நம்பிக்கையின் இருப்பிடமாக திகழ்கின்றது.

**அதுதான் றைனோ**

எதிர்காலத்திலும் இந்த நம்பிக்கை தொடரும் அதுமட்டுமல்ல அனுபவமுடைய தச்சுத்தொழிலாளர்களின் தெரிவும் என்றுமே றைனோதான்

புதிய Colorup MARKETED BY RHINO
ரூபிங் மற்றும் சீலிங் தகடுகள்

உடன் தொடர்புகளுக்கு
011 5748728/5748738

/ RhinoRoofinglk

ரூ. 1,385/= க்கு மேல்

RHINO
றைனோ ரூபிங் புரொடக்ட்ஸ் லிமிட்டட்
752, பேஸ்லைன் வீதி, கொழும்பு 9, இலங்கை.
ஈ-மெயில்: telemarketing@rhino.lk வெப்: www.rhino.lk

கவனத்திற்கு : தயவு செய்து RHINO வை பொருத்துவதற்கான கையேட்டை பெற்றுக்கொண்டு அதன் வழிமுறைகளை பின்பற்றுங்கள்.

நாம் கிறிஸோடைலின் பாதுகாப்பான பாவனைக்கான நம்பத்தகுந்த நிறுவனம்

HOLMES POLLARD & STOTT

# சிறுவர் மீதான துர்நடத்தை குற்றச்சாட்டுகள் 10 ஆயிரம்

## கடந்த ஆண்டில் மட்டும்

கொழும்பு, ஓக. 21
கடந்த வருடத்தில் சிறுவர்கள் மீதான துர்நடத்தைகள் குறித்து நாடு முழுவதும் 10 ஆயிரத்து 732 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. அவற்றில் 74 சிறுவர்களுடன் தொடர்புடைய சம்பவங்கள் பாரதூரமானவை.
இவ்வாறு சிறுவர் மற்றும் பெண்கள் அபிவிருத்தி அமைச்சர் சந்திராணி பண்டார தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
பாரதூரமான விதத்தில் பதிவாகியுள்ள 74 சிறுவர்களுடன் தொடர்புடைய சம்பவங்களுடன் தொடர்புபட்டுள்ளவர்களுக்குப் பல்வேறு வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன. 74 சந்தேக நபர்களும் தொடர்ந்து விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். 176 துர்நடத்தைச் சம்பவங்கள் தொடர்பிலும் சிறுவர் பாதுகாப்புத் தொடர்பான விசேட பொலிஸ் குழு கவனம் செலுத்தி வருகின்றது. குற்றச் செயல்களைக் குறைப்பதற்காக இனிவரும் காலங்களில் மிகக் கடுமையான சட்ட திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும். சிறுவர்களைக் கயவர்களிடம் இருந்து பாதுகாப்பதற்குப் பெற்றோர்களிடம் இருந்து முழுமையான ஆலோசனை தேவை. - என்றார். (ற-4)

# குடி தண்ணீர் போத்தலுக்கு எஸ்.எல்.எஸ். அவசியம்

கொழும்பு, ஓக. 21
எஸ்.எல்.எஸ். சான்றிதழ் இன்றிய குடி தண்ணீர் போத்தல்களைப் பொதியிடல், விநியோகித்தல், எடுத்துச் செல்லுதல், களஞ்சியப்படுத்துதல் மற்றும் விற்பனை செய்தல் ஆகிய அனைத்து நடவடிக்கைகளுக்கும் எதிர்வரும் செப்ரெம்பர் முதலாம் திகதி தொடக்கம் தடை விதிக்கப்படவுள்ளது.
இது தொடர்பான விதிமுறைகள் 2015 ஜூலை மாதம் 11 ஆம் திகதி வெளியான சுற்றறிக்கையில் காணப்படுகின்றன என்று நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது. சுற்றறிக்கை வெளியான தினத்திலிருந்து குறித்த சட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.
சட்டங்களை மீறும் நிறுவனங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படும் எனவும் அதிகார சபை கூறியுள்ளது. (ற-4)







7 நாட்களும் 24 மணித்தியாலங்களும் நீங்கள் நாட்டில் எங்கிருந்தாலும் பணம் பெறுவதற்கான வசதி

பணம் அனுப்புபவர் மற்றும் பெறுபவரின் கையடக்க தொலைபேசிக்கு SMS மூலம் PIN இலக்கமொன்று அனுப்பப்படுவதோடு, நீங்கள் அவ் 2 இலக்கங்களையும் ATM இயந்திரத்தில் பதிவு செய்வதன் பின்னர் பணத்தினை பெற்றுக்கொள்ள முடியும்

பிச் ரேட்டிங் AA-(lka)

ஹற்றன் நஷனல் வங்கி, இலங்கை மத்திய வங்கியினால் உரிமம் அளிக்கப்பட்டு, மேற்பார்வை செய்யப்படும் ஒரு வர்த்தக வங்கி.
Hatton National Bank PLC - PQ 82
HNB
உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி

# நல்லூர் ஆலய சூழலில் திருடர்களை இனங்காண்பதில் பொலிஸார் தீவிரம்

## யாழ். பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.21
நல்லூர்க் கந்தசுவாமி ஆலய சூழலில் திருடர்களை இனங்காண்பதில் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். கடந்த வருடம் திருட்டுக்களில் ஈடுபட்டோரின் புகைப்படங்களை



வைத்து இந்த முறையும் திருடர்கள் இனங்காணப்படுகின்றனர்.
இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சஞ்ஜீவ தர்மரட்ண.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
மஞ்சத் திருவிழாவுக்குப் பின்னர் ஆலயத்துக்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இவ்வாறு வருகைதரும் பக்தர்கள் தங்க ஆபரணங்கள் அணிந்து வருகின்றனர். இதனைக் களவாடிச் செல்வதற்காகவே சிலர் ஆலயத்துக்கு வருகை தருகின்றனர். இதுவரையும் எந்தவித களவுகள் தொடர்பிலும் முறைப்பாடுகள் கிடைக்கபெறவில்லை. இருந்தும் பக்தர்களைப் பாதுகாப்பதற்காக 750 பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவர்கள் சிவில் உடையிலும் பொலிஸ் சீருடையிலும் ஆலயத்தின் உட்புறத்திலும், வெளிப்புறத்திலும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.
மேலும் 25 பாதுகாப்பு கண்காணிப்புக் கமராக்களும் ஆலய வெளிச்சூழலில் பொருத்தப்பட்டுள்ளன. ஆலயச் சூழலில் சந்தேகத்துக்கிடமான யாரும் நடமாடினால் உங்களுக்கு அருகில் கடமையில் ஈடுபட்டுள்ள பொலிஸாருக்கு தகவல் வழங்கமுடியும். அது தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுப்பர். கடந்த வாரம் புத்தளம் மற்றும் வவுனியாப் பகுதியில் இருந்து வருகை தந்த திருட்டுக் குழுவினர் ஒன்று சுன்னாகம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.
கடந்த வருடம் இதே ஆலயத்தில் திருட்டுக்களில் ஈடுபட்டவர்களின் புகைப்படங்கள் பொலிஸாரிடம் உள்ளன. அந்தப் புகைப்படங்கள் மூலம் சந்தேக நபர்களை இனங்காணும் நடவடிக்கையில் புலனாய்வுத் துறையினர் ஈடுபடுகின்றனர். அத்துடன் ஆலயத்திற்கு வரும் பக்தர்கள் வீட்டின் பாதுகாப்புத் தொடர்பில் மிக அவதானமாக இருக்க வேண்டும். ஆலயத்திற்கு வருவதற்கு முன் வீட்டின் கதவுகள் நன்றாக பூட்டப்பட்டுள்ளதா என ஒன்றுக்கு இரண்டு முறை கவனித்துக் கொள்ளுங்கள். குறிப்பாக வீட்டில் யாரையாவது நிறுத்திவிட்டு ஆலயத்திற்கு வருவது பாதுகாப்பானது - என்றார். (வ-107)

---

# 65ஆவது ஆண்டு விழாவைப் புறக்கணிப்போர் கட்சியிலிருந்து விலகியதாகக் கருதப்படுவர்

## சு.க. பொதுச் செயலாளர் எச்சரிக்கை

கொழும்பு, ஓக.21
ஏற்றுக்கொள்ளக் கூடிய நியாயமான காரணங்களின்றி சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 65ஆவது ஆண்டு விழாமாநாட்டைப்புறக்கணிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் அனைவரும் கட்சியை விட்டு விலகியவர்கள் என்று கருதப்படுவார்கள்.
இவ்வாறு அறிவித்தார் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான துமிந்த திஸாநாயக்க.
முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா பண்டாரநாயக்க, மகிந்த ராஜபக்ச உட்பட கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்களுக்கு கட்சியின் மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.
இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ள நிலையில், எந்த நாடாளுமன்ற உறுப்பினர் அல்லது மாகாண சபை உறுப்பினராவது மாநாட்டைப் புறக்கணித்து, செய்தியாளர் சந்திப்புகளை நடத்தி மாநாட்டை, விமர்சித்து, மாற்று மாநாட்டை நடத்துவார்களாயின், அவர்கள் தொடர்ந்தும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் எனக் கருதப்படமாட்டார்கள். கட்சியின் ஒழுக்கம் அனைவருக்கும் பொதுவானது என்றார் அமைச்சர் துமிந்த திசா நாயக்க.
(வ-5)

---

## மரண அறிவித்தல்கள்

### பாக்கியநாதர் கிறிஸ்ரி ஜோசப்

(முன்னாள் நிறைவேற்று அதிகாரி, துறைமுக அதிகாரசபை, இலங்கை, அகில இலங்கை சமாதான நீதிவான்)



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட P.C ஜோசப் கடந்த (16.08.2016) செவ்வாய்க் கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜோசப் பாக்கியநாதர் - திரேசம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான ஜோர்ச் - யோசேப்பின் தம்பதிகளின் அன்பு மருமகனும், ஸ்ரெலா மனோன்மணியின் அன்புக் கணவரும், றம்மியா, சுபாங்கி, பிரபு லோறன்ஸ், சாந்தலேகா, அன்று லக்ஸ்மன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், இம்மானுவல், ஜேம்ஸ் (கனடா), யசிந்தா (இந்தியா), மரிஸ்ரெலா (றோகினி), மரியமலர் (பிள்ளை), காலஞ்சென்றவர்களான அன்ரனி, தோமஸ், புறுனோ (றஞ்சினி) ஆகியோரின் பாசமிகு அண்ணனும், ஹென்றி, லெனி, சித்திரபானு ஆகியோரது அன்பு மாமனும், புஸ்பவதி, பேனடேற், பரமேஸ்வரி, மரியதாஸ், சரஸ்வதி (கனடா), மெதோடியஸ் (இந்தியா), மரியநாயகம், தியாகராஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும், அன்றிகா, ஆஸ்லி, திவ்வியா, லெனாட், ஜெறாட், சாளினி, மைக்கல் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் நாளை (22.08.2016) திங்கட்கிழமை கனடாவில் St.John's Norway Cemetery இல் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.
(J/3930)
(11,17,18)

தகவல்: குடும்பத்தினர்.(றோகினி - சகோதரி )

**076 803 5083, 001 4166 581 144**

---

### திருமதி சிவறஞ்சினி தயாளன்



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவறஞ்சினி தயாளன் 19.08.2016 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான டாக்டர் கந்தசாமி - விசாலட்சுமி தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற பொன்னம்பலம் மற்றும் இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், தயாளன் (முன்னாள் ஊழியர் - பாரதி பதிப்பகம்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஸ்ரீஞானரஞ்சிதம் மற்றும் மனோரஞ்சிதம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான பாலிதராஜா, பத்மநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், கஜன் (வங்கி முகாமையாளர்- சுவிஸ்), சோபிகா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் சிறிய தாயும், தக்ஷாயினி ( Dr.-சுவிஸ்), செந்தூரன் ( Dr.-ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியும், அரண், சிரேஜன், சர்வன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பத்மராணி, ஈஸ்வரன் (கனடா), சயந்தி ஆகியோரின் அன்பு மைத்துனியும், கிருஷ்ணதாசன், கலையரசி (கனடா), கருணாகரன் ஆகியோரின் அன்பு சகலியும், திருமதி தமியா - ராஜிதன் (லண்டன்), மிதுரஜா, அனிதா, கோபிகாந்த் ஆகியோரின் பாசமிகு மாமியும், சோபிகா (கனடா), கீர்த்திகா (கனடா) ஆகியோரின் அன்புச் சிறிய தாயும், ஆரமுதனின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.08.2016) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஆனைக்கோட்டை றோட்,**
**கொக்குவில் மேற்கு,**
**கொக்குவில்.**

தகவல்:
**கணவர்**

**021 490 3423** (Co.3870) (13,18)

---

## மரண அறிவித்தல்கள்

### பரமேஸ்வரி சோமசுந்தரம்



மயிலிட்டி தெற்கு, க்ட்டுவனை பிறப்பிடமாகவும் .தெல்லிப் பழையை வதிவிடமாகவும் கொண்ட பரமேஸ்வரி சோமசுந்தரம் 20.08.2016 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் மற்றும் இராசமணி தம்பதியரின் அன்புமகளும் சிவசுப்பிரமணியம் (ஓய்வு பெற்ற மின்சார சபை ஊழியர்), பாலகிருஷ்ணன் காலஞ்சென்ற செல்வரத்தினம் மற்றும் கணேசரட்ணம் (ஜேர்மனி), விநாயகமூர்த்தி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஜெகதீஸ்வரி, மனோரஞ்சிதம், சுதா, மல்லிகாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.08.2016) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தெல்லிப்பழை கொத்தியாகல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தெல்லிப்பழை சந்தி,**
**தெல்லிப்பழை.**

**தகவல்:**
**சிவசுப்பிரமணியம்**
**(ஓய்வு பெற்ற C.E.B. ஊழியர் - மணியம்)**

---

### முத்தையா தர்மரத்தினம்

(முன்னாள் ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர்- பதவியா, உடவளவை)

பிறப்பு: 07.06.1942    இறப்பு: 18.08.2016



யாழ். வேலணை மணியகாரன் வீட்டியைப் பிறப்பிடமாகவும் கனடா Toronto வை வதிவிடமாகவும் கொண்ட முத்தையா தர்மரத்தினம் 18.08.2016 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான முத்தையா -பாக்கியலட்சுமி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும், காலஞ்சென்ற கந்தையா- பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், துர்காலட்சுமியின் (முன்னாள் கந்தர்மடம் இந்து மகளிர் கல்லூரி ஆசிரியை) பாசமிகு கணவரும், வைதேகி., ஜனார்த்தனன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ் சென்ற வதனேஸ்வரி, செல்வரத்தினம் (கனடா), ஞானரத்தினம் (இந்திரா) (வேலணை), வில்வரத்தினம் (சுவிஸ்), செல்வராணி (வேலணை,) காலஞ்சென்ற வசந்தராணி, லலிதா (டென்மார்க்), ஜெயரத்தினம் (சுவெந்திரன்-வவுனியா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், சஞ்ஜீவன், Farant ஆகியோரின் பாசமிகு மாமனும், காலஞ்சென்றவர்களான தங்கமுத்து, செல்வராஜா மற்றும் மனோன்மணி (சிங்கப்பூர்) தங்கமணி (மலேசியா) தேவகி (கனடா), துரைசாமி (கனடா) நவமணி (மலேசியா) நவரத்தினம் (கனடா) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், Saisha வின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.08.2016) திங்கட்கிழமை Toronto கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**மு. இந்திரா: 0757743081**
**மு. சுவெந்திரன்: 0773509289**
(V/87)
(10,18)

## கண்ணீர் அஞ்சலி



எமது கழக முன்னாள் ஆலோசகரும் ஆர்வலருமான

**கனகரட்ணம் விஜயரட்ணம்**

அவர்கள் காலமான செய்தியைக் கேட்டு ஆறாத்துயரடைவதோடு அவரின் குடும்பத்தினருக்கு எங்கள் அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சம்பியன் லேன்,
கொக்குவில்.

வளர்மதி முன்னேற்றக்கழகமும்,
வளர்மதி நிறைவாழ்வுக்கழகமும்

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையில் 1990 ஆம் ஆண்டு தொடக்கம் 2006 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அதிபராகக் கடமையாற்றி 16.08.2016 அன்று காலமான

**செல்வராசா சிதம்பரநாதன்**

அவர்களின் இழப்பால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யா/ கலட்டி றோ.க.த.க
பாடசாலைச் சமூகம்.

(J 1972)(12.18)



## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர்
**திரு. செல்வநாதன் வினோத்குமார்**
அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி கருணாவதி (சாந்தி) செல்வநாதன்**



அவர்கள் சிவபதமடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். இந்து ஆரம்ப பாடசாலை
சமூகம்.

(C25006)(10.18)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

21.08.2016

**கந்தசாமி இளங்கீரன்**



ஆண்டுகள் மூன்று ஆனாலும் ஆறாதையா உன் பிரிவு
அவனியிலே எமை விட்டு அந்தரத்தில் சென்றாயோ
அலை மோதும் இவ்வுலகில் அந்தரித்துத் தவிக்கின்றோம்.

செட்டிய தெரு,
கட்டைவேலி, கரவெட்டி.

குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவு அழைப்பு



அமரர்
**சபாரட்ணம் தியாகராஜா**
(ஓய்வு பெற்ற நீதிமன்ற முதலியார்)

கடந்த 03.09.2015 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் சபாரட்ணம் தியாகராஜா (ஓய்வு பெற்ற நீதிமன்ற முதலியார்)

அவர்களின் ஓராண்டு நிறைவு நாள் நிகழ்வு நாளை (22.08.2016) திங்கட்கிழமை அன்று எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

இல.136,முதலியார் வளவு,
பண்டாரிக்குளம்,வவுனியா.

குடும்பத்தினர்.
077 9084840, 024 7910992

## ஐ.நாவுடன்...

மைத்திரிபால சிறிசேன, நல்லாட்சி அரசின் ஓராண்டுப் பூர்த்தி நிகழ்வின் போது தெரிவித்திருந்தார். இது தொடர்பில் வினவியபோதே, எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

இலங்கை அரசு ஐ.நா.வுடனும் - பன்னாட்டுச் சமூகத்துடனும் மோதுவதை உடனடியாக நிறுத்த வேண்டும். இலங்கை அரசுடன் வாய்ப் பேச்சுக்களால் மோதுவதை நாங்களும் இப்போது விரும்பவில்லை. ஐ.நா.வுடன் மோதாமல், ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும்.

ஐ.நா.வின் அறிவுரையைக் கேட்டு இலங்கை அரசு செயற்பட்டால் நாம் வரவேற்போம். ஐ.நா. மனித உரிமைகள் சபையால் முன்வைக்கப்பட்ட நியாயங்கள் நாட்டின் நலன் தொடர்பிலானது. நாங்கள் அதனை வரவேற்கின்றோம். இலங்கை அரசும் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

ஒரு விடயத்தை தற்போதைய அரசு புரிந்து கொள்ளவேண்டும். கடந்த அரசு (மகிந்த அரசு) ஐ.நா.வுடனும் - பன்னாட்டுச் சமூகத்துடனும் மோதல் போக்கைக் கடைப்பிடித்தது. இதனால் அந்த அரசு தோல்வியடைந்தது.

தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வு கிடைக்கவேண்டும். அதில் எந்த மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை. தமிழ் மக்களின் உடனடிப் பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும். இந்தக் கருமங்கள் ஒழுங்காக இடம்பெறவேண்டும் - என்றார். (த-5)

## மக்களின்...

கருணாசேன ஹெட்டியாராச்சியினால் விடுவிக்கப்பட்டது. இதன்போது காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்துடன் இணைந்த 60 ஏக்கர் காணியும் பாதுகாப்புத் தரப்பினால் மக்களிடம் கையளிக்கப்பட்டது. எனினும் பொலிஸார் அந்தக் காணியிலிருந்து வெளியேறவில்லை.

அத்துடன் இராணுவத்தினர் பயன்படுத்தி மக்களிடம் கையளிக்கப்பட்ட காணிகளையும், மக்கள் பயன்படுத்த முடியாதவாறு பொலிஸார் பாதுகாப்பு வேலிகள் அமைத்தனர். இந்தக் காணிகளை விடுவிக்குமாறு மக்கள் பல தடவைகள் கோரிக்கை விடுத்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் ஜூலை மாதம் யாழ்ப்பாணம் வந்திருந்தபோது, இந்த விடயம் அவரது கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. பாதுகாப்புச் செயலருடன் எதிர்கட்சித் தலைவர் தொடர்பு கொண்டபோது, இரு வாரங்களுக்குள் அந்தக் காணிகள் மக்களிடம் மீளக் கையளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதன் பின்னர் பாதுகாப்பு அமைச்சின் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி யாழ்ப்பாணத்திற்கு வ்ருகை தந்தபோது, அந்த விடயம் மீளவும் சுட்டிக்காட்டப்பட்டது. இருப்பினும் மக்களிடம் காணி மீளக் கையளிக்கப்படவில்லை.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க இந்த மாதம் யாழ்ப்பாணத்துக்கு வந்தபோது, காங்கேசன்துறை காணி விடயம் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனால் எடுத்துக் கூறப்பட்டது.

இவ்வாறானதொரு நிலையில், யாழ். மாவட்டச் செயலகத்தால், காங்கேசன்துறை பிரதேச சபைக் கட்டடத்துக்கு அருகில் காணி அடையாளப்படுத்தப்பட்டது. அந்தக் காணியை பொலிஸ் திணைக்களத்துக்கு வழங்க இணக்கம் காணப்பட்டது. இதனையடுத்து பொலிஸார், காங்கேசன்துறையில் உள்ள மக்கள் காணிகளை விடுவித்து வெளியேற சம்மதித்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (வ-5)

## அதிகாலை...

செய்துள்ளதாக மதுவரித்திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடற்படையினரும் மதுவரித் திணைக்கள அதிகாரிகளும் நேற்று அதிகாலை நடத்திய சுற்றிவளைப்புத் தேடுதலின்போதே இந்தக் கடத்தல்கள் கண்டறியப்பட்டு முறியடிக்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.

வடமராட்சி கிழக்குக் கடற்கரையோரங்களில் நேற்று அதிகாலை சந்தேகத்துக்கிடமான ஆள் நடமாட்டங்கள் காணப்பட்டன. இதனால் கடற்படையுடன் இணைந்து அங்கு தேடுதல் நடத்தப்பட்டது.

மணற்காடு

மணற்காட்டில் படகு ஒன்றில் ஆள்கள் நடமாட்டம் அவதானிக்கப்பட்டது. இதனால் கடற்படையினர் கரையோரப் பிரதேசங்களில் தேடுதல்களை முடுக்கி விட்டிருந்தனர். இந்தநிலையில் மணற்காடு கரையோரமாகப் படகு ஒன்றிலிருந்து பொருள்கள் இறக்கப்படுவதைக் கடற்படையினர் அவதானித்தனர். உடனடியாக அவர்களும் மதுவரித் திணைக்களத்தினரும் அந்தப் பகுதியைச் சுற்றிவளைத்தனர்.

இதன்போது படகிலிருந்து இறக்கப்பட்ட பொதிகளைப் பரிசோதித்தபோது 100 கிலோகிராமுக்கும் அதிகமான கஞ்சா பொதி செய்யப்பட்ட நிலையில் காணப்பட்டது. கஞ்சாப் பொதிகளையும் படகையும் கைப்பற்றியதாகக் கடற்படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

படகு மூலமாகக் கஞ்சா போதைப் பொதிகளைக் கடத்திய குற்றச்சாட்டில் 3 பேர் கைது செய்யப்பட்டனர். வடமராட்சி, கரவெட்டியைச் சேர்ந்த செல்வராசா கோபிநாத் (வயது-33), வடமராட்சி கிழக்கு, மணற்காட்டைச் சேர்ந்த குருசுமுத்து வின்சன் ஜீவதாஸ் (வயது-57 ), மணற்காடு, குடத்தனை வீதியைச் சேர்ந்த கொன்லஸ் கீதன் (வயது 17) ஆகிய சந்தேகநபர்களே கைது செய்யப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

உடுத்துறை

இதேவேளை, உடுத்துறைப் பகுதியில் இருந்து அதிகாலை 2.30 மணியளவில் இயக்கச்சி நோக்கிக் கடத்தப்படவிருந்த 30 கிலோ கஞ்சா மதுவரித்திணைக்கள அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டதாகப் பருத்தித்துறை மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரி சிறிமான்ன தெரிவித்தார்.

தாழையடிப் பகுதியூடாக இயக்கச்சி நோக்கி கால்நடையாகக் கொண்டு செல்லப்பட்டபோதே கஞ்சாப் பொதிகளைக் கைப்பற்றியதாக அதிகாரிகள் கூறினர். அவற்றைக் கடத்திய குற்றச்சாட்டில் உடுத்துறை, தாழையடிப் பகுதியைச் சேர்ந்தவர்களான நடராசா முருகதாஸ் (வயது -32), துரைசாமி ரமேஸ் (வயது-38) ஆகியோர் கைதுசெய்யப்பட்டனர் என்று மதிவரித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட 5 சந்தேக நபர்களும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். விசாரணையின் பின் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கூறப்பட்டது.

சில வாரங்களாகக் குடாநாட்டில் கஞ்சா போதைப் பொருள்கள் கடத்தப்படுவதும், கைப்பற்றப் படுவது அதிகரித்துள்ளது. இந்த நிலையில் நேற்று மிக அதிக தொகையான கஞ்சா போதைப் பொதிகள் மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-4-109-101-106)

**திருநெல்வேலியில் பெரிய காணியுடன் வீடு விற்பனைக்கு**
(சந்திக்கு அருகில் 6 1/2 பரப்புடன்)
தொடர்பு - 077 7037058
(Hotel, Restaurant, Medical Centre)
(அமைக்கக்கூடியது)

## போராளிகளைச்...

முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வின் போது ஊசி ஏற்றப்பட்டதாகவும், இதனால் போராளிகள் பலர் சாவடைந்ததாகவும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. இதனையடுத்து முன்னாள் போராளிகளுக்கு மருத்துவப் பரிசோதனை மேற்கொள்வதற்கு வடக்கு மாகாண சுகாதார அமைச்சு முடிவெடுத்தது. இந்தத் தகவலை வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் வெளிப்படுத்தினார்.

இதற்காக சிறப்பு மருத்துவர் குழு நியமிக்கப்பட்டது. இந்தக் குழுவினர் கடந்த வாரம் ஓர் ஆலோசனையை முன்வைத்தனர். அதில், வடக்கின் 5 மாவட்டங்களிலிருந்தும் எழுந்தமானமாக 50 முன்னாள் போராளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, அந்த முடிவுகளுக்கு அமைய தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

தற்போது இந்த முடிவில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. புனர்வாழ்வு பெற்று விடுதலையான அனைத்து முன்னாள் போராளிகளுக்கும் மருத்துவப் பரிசோதனை முன்னெடுக்க முடிவெடுக்கப்பட்டது.

வடக்கின் 5 மாவட்டங்களிலும் உள்ள பொது வைத்தியசாலைகளில், முன்னாள் போராளிகளுக்கு தனியான 'கிளினிக்' ஆரம்பிக்கப்பட்டு அவர்களுக்கு சிறப்பு மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை முன்னாள் போராளிகள் மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளக் கூடிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 5 வருடங்களுக்கு தொடர்ச்சியாக இந்தக் 'கிளினிக்' நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (வ-5)

## வடக்கு...

அவர் தெரிவித்ததாவது:-

இரணைமடுப் பிரதேசம் தமிழ் மக்களுக்கு மட்டும் சொந்தமானது என்று அவர்கள் நினைப்பது முட்டாள்தனமானது. விக்னேஸ்வரனுக்கு தேவையான வகையில் ஆட இடமளித்து நாம் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கப் போவதில்லை.

அரச காணியில் இரணைமடுவில் புத்தர் சிலை நிர்மாணிக்கப்படுகிறது. மொத்தச் சனத்தொகையில் 70 வீதமானவர்கள் பௌத்தர்கள் -என்றார். (த-5)

## வவுனியாவில்....

கண்டனர். இது தொடர்பில் உடனடியாகப் பொலிஸாருக்கு அறிவித்தனர். சம்பவ இடத்திற்கு விரைந்த வவுனியா குற்றத்தடுப்பு பொலிஸார் நிர்மாணப்பணியாளர்களை பாதுகாப்பான இடத்துக்கு அழைத்துச் சென்றதுடன் சிறப்பு அதிரடிப் படையினருக்கு அறிவித்தனர்.

சம்பவ இடத்திற்கு விரைந்த அதிரடிப்படையினர் அந்தக் குண்டை மீட்டனர். இந்தக் குண்டு பல வருடங்கள் பழைமை வாய்ந்தது என சிறப்பு அதிரடிப்படையினர் தெரிவித்தனர். (வ-5)

# 6 தாக்குதல் விமானங்களை வழங்குகிறது ரஷ்ய அரசு

கொழும்பு, ஓக.21
இலங்கை விமானப் படைக்கு அதிநவீன 6 தாக்குதல் விமானங்களை வழங்குவதற்கு ரஷ்ய அரசு முன்வந்துள்ளது. அதனைப் பெற்றுக்கொள்ள இலங்கை அரசு தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த விமானங்களைக் கடன் கொடுப்பனவு அடிப்படையில் வழங்க ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் அனுமதி வழங்கியுள்ளார்.

இந்த சுகோய் 31 ரக விமானங்களைவிமானப்படைத் தளபதி ககன் புலத்சிங்கள மற்றும் மொஸ்கோவிலுள்ள இலங்கைத் தூதுவர் அலுவலக விவகாரங்களுக்குப் பொறுப்பான அதிகாரி ஆர்.கே. லியனகமகே ஆகியோர் சுகோய் உற்பத்தி நிறுவனத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டனர்.

இலங்கை விமானப் படையில் தற்பொழுது பாவனையிலுள்ள கிபீர் மற்றும் மிக் 27 ரக தாக்குதல் விமானங்கள் சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ளதனால், அதற்குப் பதிலாகப் புதிய 6 தாக்குதல் விமானங்களைக் கொள்வனவு செய்ய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அனுமதி வழங்கினார்.

இந்த விமானக் கொள்வனவுக்கு அமைச்சரவையும் அனுமதி வழங்கியிருந்தது.

(வ-4)

# நல்லூரில் புத்தகத் திருவிழா

யாழ்ப்பாணம், ஓக. 21
யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் நல்லூர் கோவில் வீதியில் உள்ள கம்பன் கோட்ட மண்டபத்தில் புத்தகத் திருவிழா கடந்த புதன் கிழமை ஆரம்பிக்கப்பட்டது. தமிழ்ச்சங்கத் தலைவர் பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வை தமிழ்ச் சங்க உபதலைவரும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவருமாகிய கலாநிதி ஆறு. திருமுருகன் ஆரம்பித்து வைத்தார்.

ஈழத்துப் புத்தகங்களை மாத்திரம் கொண்டு இந்த நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டது. எதிர்வரும் 03ஆம் திகதி வரை காலை 9 மணி தொடக்கம் 12 மணிவரையும் மாலை 3 மணி தொடக்கம் இரவு 8 மணி வரையும் நடத்தப்படும் புத்தகத் திருவிழாவில் மூத்த எழுத்தாளர்களின் நூல்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. நூற்றுக்கும் மேற்பட்ட நூல்கள் விற்பனைக்காகவும் வைக்கப்பட்டுள்ளன.

(வ-4)

## இலங்கையில் முதலீட்டுக்கு பாக். ஆர்வம்

கொழும்பு, ஓக. 21
இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள பாகிஸ்தான் ஆர்வம் கொண்டுள்ளதாக, இலங்கைக்கான பாகிஸ்தானிய தூதர் செய்ட் கீல் உசைன் தெரிவித்தார்.

விவசாயத்துறை, தகவல் தொழிநுட்பம் மற்றும் கட்டுமானத் துறைகளில் முதலீடுகளை மேற்கொள்ள பாகிஸ்தான் தயாராக இருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க - பாகிஸ்தான் தூதுவர் செய்ட் கீல் உசைன் ஆகியோருக்கிடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

இதன்போது பாகிஸ்தான்- இலங்கை இடையிலான நேரடி வானூர்திப் போக்குவரத்து தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(த-4)

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2793 திகதி: 2016-08-20
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 11 39 46 61 V
போனஸ் இல.: 24
புதன்கிழமை ஜக்போட்: ரூ. 13,142,350/-
2016.08.24 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

**பதவி வெற்றிடம்**

யாழ் நகரில் இயங்கி வரும் DSI மொத்த வியாபார நிலையத்திற்கு D- வகுப்பு சாரதி தேவை. அனுமதி பத்திரம் உடையவர்கள் எதிர்வரும் 27.08.2016 இற்கு முன்பாக தங்களது சுய விவரக் கோவையை கீழ் காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

முகவரி: DSI மொத்த விற்பனை நிலையம் 154, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

**பெண் உதவியாளர் தேவை**

இலக்கம் 46 பிறவுண் வீதியில் (கலட்டிச் சந்திக்கு அருகில்) இயங்கும் யாழ் மிருக வைத்தியசாலையில் பணிபுரிவதற்கு பெண் உதவியாளர் தேவை. இதற்கான நேர்முகத்தேர்வு திங்கட்கிழமை (22.08.2016) முற்பகல் 10மணியளவில் மேற் குறித்த முகவரியில் நடை பெறும். சுயவிவரக் கோவையுடன் சமுகம் தரவும்.

தொடர்பு.021 3202233,0772639573

உ
சிவமயம்

**உடுப்பிட்டி வடக்குநெற்கொழு வைரவர் தேவஸ்தானம் தர்மகர்த்தா சபை பிற்போடப்பட்டுள்ளது**

எம்பெருமான் மெய்யடியார்களே!
சூழ்நிலை காரணமாக ஆவணி 6ஆம் நாள் (22.08,2016) திங்கட்கிழமை நடைபெறவிருந்த பாலஸ்தான நிகழ்வுகள் பாலாலயம் அமைக்கப்பட்டும் வாய்ப்பின்றி தற்காலிகமாக இந்நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளமையை அனைத்து வைரவ பத்த அடியார்களுக்கும் அன்புடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆலய பரிபாலன சபையினர்
தலைவர்: பொ.சுந்தரலிங்கம்
செயலாளர்: இ.பூரணச்சந்திரன்
பொருளாளர்: சு. பத்மசுந்தரம்

**பணியாளர்கள் தேவை**

யாழ் நகரின் மையப்பகுதியில் இயங்கும் ( 70/6, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்) முன்னணி நட்சத்திர Hotel ஆன Tilko Jaffna City Hotel இற்கு பின்வரும் பணியாளர்கள் தேவைப் படுகின்றார்கள்.

- சமையலாளர்
- சமையல் உதவியாளர்
- வரவேற்பு உதவியாளர்
- விடுதிப் பணியாளர்
- பராமரிப்பாளர் (மின்னியல், குழாய் இணைப்பு)
- உதவியாளர் (Restaurant)

❖அனுபவம் மற்றும் வயதுக்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும்.
❖உணவு மற்றும் தங்குமிட வசதிகள் செய்துதரப்படும்.

தொடர்பு: 077 981 7617

**ஊர்க்கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு**

நாள், வார, மாத நல்ல இன ஊர்க்கோழிக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு.

077 245 3673

**அறை வாடகைக்கு உண்டு**

பழைய பூங்கா வீதியில் சுண்டுக்குளி பாடசாலைக்கு அருகில் அறை வாடகைக்கு உண்டு.

077 6722 145

**வீடு விற்பனைக்கு**

கோப்பாய் தெற்கு ஜி.பி.எஸ் வீதி(டச்சு வீதி) கல்வியங்காட்டில் இரண்டரைப் பரப்புடன் உள்ள வீடு விற்பனைக்கு. இருக்கின்றது.

தொடர்பு.0776337307

**வீடு வாடகைக்கு**

கிளிநொச்சி நகரில் A9 இன் பாதையில் இருந்து 500 மீற்றர் தூரத்தில் சகல வசதிகளுடன் உள்ள வீடு வாடகைக்குண்டு.

தொடர்பு.0776337307

**வீடு விற்பனைக்கு**

இலக்கம் 40/18, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தில் நிலப்பரப்பு 01 குளி 1.10 நிலப்பரப்பில் அமைந்த 03 அறைகள், குசினி, கோல், குளியலறை, சுற்றுமதிலுடன் அமைந்த வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு:
076 88 38 116, 077 62 58 246

**உத்தியோகத்தர் தேவை**

கணக்கியல் அறிவும் கணினி அறிவும் உடைய க.பொ.த சா/த. க.பொ.த உயர்தர பரீட்சைகளில் சித்தியடைந்த வடமராட்சியைச் சேர்ந்த பெண் உத்தியோகத்தர் தேவை.

தொடர்பு:
077 8414215

**வேலையாள்கள் தேவை**

சைவ உணவகம் ஒன்றிற்கு மூன்று நேர உணவு, தங்குமிட வசதி, மாதாந்த சம்பளம் நிரந்தர கௌரவமான தொழில் வாய்ப்பு.

1) உணவு பரிமாறுபவர்கள்
2) குசினி வேலையாள்கள்
3) காசாளர்
4) பில்கிளாக்
5) லேடிஸ் ஏரும் சப்பிளையஸ் (பெண்கள்)
6) முகாமையாளர்
7) அலுவலக உதவியாளர் (ஆண்/பெண்)
8) சுத்திகரிப்பாளர்
9) மரக்கறி வெட்டுபவர்கள்
10) ஏனைய உதவி வேலைகள்

தொடர்பு - 021 222 2373, 077 7917753

**வேலையாள்கள் தேவை**

கடையில் வேலைசெய்யக்கூடிய படித்த பெண்பிள்ளைகள் தேவை.
தொடர்பு - 077 1754528

**விற்பனைக்கு**

நல்லின ஊர்க்கோழிக் குஞ்சுகளும் முட்டையிடும் கோழிகளும் பென்றம் இன கோழிகளும் விற்பனைக்கு உண்டு.(4,6 மாதம் நிரம்பிய)

தொடர்பு: 077 7590496

**தேவை**

கோண்டாவில் கே.கே.எஸ் வீதியிலுள்ள புடைவை நிலையம் ஒன்றிற்கு பெண் பிள்ளைகள் தேவை.

தொடர்பு: 077 6079925

**தேவை**

சுன்னாகத்தில் இயங்கும் புடைவை நிலையம் ஒன்றிற்கு ஆண், பெண் இருபாலாரும் தேவை. விற்பனைத் துறையில் அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 1896004

**தேவை**

கோண்டாவிலில் இயங்கும் ஹாட்வெயார் கடை ஒன்றிற்கு வேலை தெரிந்த, மற்றும் பழகவிரும்புவோர் தேவை.

தொடர்பு.0772528957

**மணமகள் தேவை**

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1985இல் பிறந்த கிரகபாவம் 42 உடைய Software Eng. மணமகனுக்கு தகுதியான மணமகள் தேவை.

021 221 6395, 077 559 4191

**விற்பனைக்கு**

பொமேறியன் ஆண், பெண்நாயும் பொக்கட்ஸ் பெனியர் ஆண், பெண் நாயும் ஒரு வருட யமுனாபாறி கிடாய்களும், 1 1/2 வருட JC இன நாம்பன் கன்றும், வெள்ளடியன், சிலக்கி, மணித்தாரா, முயல்

தொடர்பு: மயூரன் பாம் சென்ரர் நீர்வேலி கந்தசாமி கோயிலடி பின்வீதி
077 0158690

**வீடு விற்பனைக்கு/வாடகைக்கு**

K.K.S. றோட்டில் அமைந்துள்ள சம்பியன் ஒழுங்கைக்கு அடுத்த ஒழுங்கையில் அறைகள் இணைந்த குளியலறைகளுடன் முழுதாக மாபிள் பதிக்கப்பட்ட மூன்று மாடி வீடு உடன்டியாக விற்பனைக்குண்டு அல்லது முழுமையாக வாடகைக்கு விடப்படும். தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்:

077 008 5965

**வேலைவாய்ப்பு**

நீங்கள் விரும்பும் தொழிலைச் செய்வதற்கும் நாள், கிழமை, மாதம் சம்பளம் பெறுவதற்கும் 18 - 50 வயதுடைய ஆண், பெண் இருபாலாரும் நண்பர்களாகவும் தனியாகவும் ஒரே இடத்தில் வேலை செய்யலாம் சாரதி (கனரக, இலகுரகவாகனம்) சாரதி உதவியாளர். வரும் நாளிலே வேலை. 1000/=, 1500/= சம்பளம் சகல பிரதேசங்களிலும் இருந்து ஆள்சேர்ப்பு தொழில் அடிப்படையில் தங்குமிடம் சாப்பாடு இலவசம் (மீரிகம, தெமட்டகொட, பேலியகொட, அம்பேவல ஆகிய இடங்களில்) 076 5715251

இலங்கையில் பிரசித்தி பெற்ற ஐஸ்கிறீம், ஜாம், ஜெல்லட், நூடில்ஸ், பால்மா, பிஸ்கட், டொபி இவ்வனைத்து உற்பத்தி செய்யும் இடங்களுக்கு வேலையாள்கள் தேவை. உணவு, தங்குமிடம் இலவசம். ஒருநாள் சம்பளம் ரூபா 1200, கிழமை ரூபா 10 000, மாதம் ரூபா 35000, விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும்.
வயது 18 - 55 வரை
தொடர்பு - 071 1475324, 077 4943502

தொழில் அடிப்படை சம்பளம் ரூபா 55,000 வரை. சகல பிரதேசங்களிலும் ஆள்சேர்ப்பு ஆண், பெண் இருபாலாரும் வயது 18 - 50 வரை உற்பத்தி, பேக்கிங், சாரதி (மென்ரக வாகனம்), சாரதி உதவியாளர் தொழிலுக்கேற்ப சாப்பாடு தங்குமிடம் இலவசம் வரும் நாளிலே வேலை நாள், கிழமை, மாத சம்பளம்
தொடர்பு - 076 9305146, 077 5015666


விமான நிலையம் Catering, Kitchen, Laundary, Cleaning, Securityguard
சம்பளம் ரூபா 35,000 - 75,000 வரை
உணவு, தங்குமிடம் இலவசம்.
076 0251155, 075 7184659


# இந்தியாவுக்கு எதிராக மழை

இந்தியா - மேற்கிந்தியத் தீவுகளுக்கு இடையிலான நான்காவது டெஸ்ட் ஆட்டத்தில் இந்திய அணி, மேற்கிந்தியத் தீவுகள், மழை எனும் இருமுனைப் போராட்டத்தில் சிக்கித் தவிக்கிறது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணி 62-2 என்ற நிலையிலிருந்தபோது மழை குறுக்கிட முதல் நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது. இரண்டாம் நாளிலும் மழை தொடர ஒரு பந்துகூட வீசப்படாமல் நாள் முடிவு கண்டது.

தற்போதைய டெஸ்ட் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ள இந்திய அணி, தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்க வேண்டுமாயின் இந்த ஆட்டத்தில் வெற்றிபெற வேண்டும் என்ற நெருக்கடி நிலை உள்ளது. மாறாக ஆட்டம் சமநிலையில் முடிந்தாலோ அல்லது இந்தியா தோல்வியடைந்தாலோ இந்தியா இரண்டாவது இடத்துக்குப் பின்தள்ளப்பட்டு பாகிஸ்தான் முதலிடத்தைப் பிடிக்கும். எனவே இந்திய அணி, மேற்கிந்தியத் தீவுகள், மழை எனும் இருமுனைப் போராட்டத்தில் ஈடுபடவேண்டிய நெருக்கடி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. (ம)





# கோலூன்றிப் பாய்தலில் தங்கம் வென்றது கிரீஸ்

ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் கிரீஸ் தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றியது.

கிரீஸின் சார்பாகக் களமிறங்கிய ஸ்ரெபான்டி என்ற வீராங்கனை 4 மீற்றர் 85 சென்ரிமீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார். அமெரிக்க வீராங்கனை சான்டி மொறிஸ் 4 மீற்றர் 85 சென்ரிமீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து (அதிகவாய்ப்புக்களின்பின்னர்)வெள்ளிப்பதக்கத்தையும், நியூசிலாந்தின் மெக்கார்ட்டி 4 மீற்றர் 80 சென்ரி மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வெண்கலப் பதக் கத்தையும் கைப்பற்றினர். (ம)

# பூப்பந்தாட்டத் தொடரில் சீன இணைச் சம்பியன்

ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற ஆண்கள் இரட்டையர் பிரிவு பூப்பந்தாட்டப் போட்டியில் சீன இணைச் சம்பியனானது. சீனாவின் (வ்)பு, சாங் இணையை எதிர்த்து மலேசியாவின் ராங், ஹோச் இணை மோதியது. 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனானது சீன இணை. வெண்கலப் பதக்கத்துக்கான ஆட்டத்தில் சீனாவின் பிறிதொரு இணையான சாய், ஹொங்கை எதிர்த்து பிரிட்டனின் எலிஸ், லாங்கிரிச்ட் இணை மோதியது. 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று வெண்கலத்தைக் கைப்பற்றியது பிரிட்டன் இணை. (ம)



# உதயசூரியனின் இறுதியாட்டங்கள்

கரணவாய், ஓக. 21

குரும்பைகட்டி உதயசூரியன் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியாக இரு பிரிவாக நடத்திய துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டங்கள் இன்று நடைபெறவுள்ளன.

11 வீரர்கள் பங்குபற்றும் முறையில் நடத்தப்பட்ட துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வல்வை விளையாட்டுக் கழகமும் 6 வீரர்கள் பங்குபற்றும் முறையில் நடத்தப்பட்ட தொடரின் இறுதியாட்டத்தில் கொக்குவில் பொற்பதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து இணுவில் கலையொளி விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

உதயசூரியனின் மைதானத்தில் பிற்பகல் 3 மணிக்கு முதலாவது இறுதியாட்டமும், தொடர்ந்து இரண்டாவது இறுதியாட்டமும் நடைபெறவுள்ளன. (ம-108-23)



# சிந்துவுக்கு பரிசு மழை

ரியோ ஒலிம்பிக் தொடரில் பெண்கள் பிரிவு பூப்பந்தாட்டப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற இந்திய வீராங்கனை சிந்துவுக்கு அந்த நாட்டின் மாநில அரசுகள் பலவும் தமது பரிசுத் தொகைகளை அறிவித்துள்ளன. இது வரை ஒட்டுமொத்தமாக 4.5 கோடிகள் பரிசுத் தொகையாக அறிவிக்கப்பட்டுள்ளன. பிரதமர் நரேந்திர மோடி, ஜனாதிபதி பிரணாப்முகர்ஜி உட்பட பலரும் தமது வாழ்த்துக்களையும் அவருக்குத் தெரிவித்து வருகின்றனர். (ம)



# தங்கப்பதக்கம் வென்றது பிரான்ஸ் பெண்கள் பிரிவு குத்துச்சண்டையில்

ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற பெண்கள் பிரிவு குத்துச்சண்டையில் (60 கிலோ) பிரான்ஸ் தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றியது.

பிரான்ஸின் சார்பாகக் களமிறங்கிய எஸ்ரெல்லி என்ற வீராங்கனை சீனாவின் ஜின்ஜோகுஹா என்ற வீராங்கனையை வீழ்த்தி தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார். சீனா வீராங்கனைக்கு வெள்ளிப் பதக்கம் கிடைத்தது. ஜின் ஜொகுகாவிடம் அரையிறுதியில் தோல்வியடைந்த பின்லாந்து வீராங்கனை மிராவுக்கும், எஸ்ரெல்லியிடம் அரையிறுதியில் தோல்வியடைந்த ரஷ்ய வீராங்கனை அனெஸ்ரியாவுக்கும் வெண்கலப் பதக்கங்கள் கிடைத்தன. (ம)

# ஆஸ்திரேலியத் தொடர்; இலங்கை அணி தயார்

இன்று ஆரம்பமாகவுள்ள ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரின் முதல் இரு ஆட்டங்களுக்குமான இலங்கை அணி நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது.

இலங்கை, இங்கிலாந்து 19 வயதுக்குட்பட்ட அணிகளுக்கு இடையிலான தொடரின் போது சிறந்த பெறுபேறுகளை வெளிப்படுத்திய ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் அவிஸ்க பெர்ணான்டோ, அமில அபோன்ஸோ ஆகியோர் தேசிய அணியில் இடம்பிடித்துள்ளனர்.





சில தனிப்பட்ட காரணங்களுக்காக இங்கிலாந்துக்கு எதிரான தொடரிலிருந்து விலகிய டில்சான் மீண்டும் அணிக்குத் திரும்பியுள்ளார்.

இலங்கை அணி விவரம் - மத்தியூஸ், திலகரட்ன டில்சான், தனுஸ்க குணதிலக, தினேஸ் சந்திமல், குசல் பெரேரா, குசல் மெண்டிஸ், தனஞ்சய டி சில்வா, மிலிந்த சிறிவர்தன, சீக்குகே பிரசன்னா, சுரங்க லக்மல், நுவான் பிரதீப், திஸார பெரேரா, டில்ருவான் பெரேரா, லக்சன் சண்டகன், அவிஸ்கபெர்ணான்டோ, அமில அப்போன்ஸோ. இன்றைய ஆட்டம் பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகி பகலிரவு ஆட்டமாக நடைபெறும். (ம)

# 50 கி.மீ. வேகநடைப் போட்டி சுலோவாக்கியாவுக்கு தங்கம்

ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற ஆண்களுக்கான 50 கிலோ மீற்றர் வேகநடைப் போட்டியில் சுலோவாக்கியாவுக்குத் தங்கப் பதக்கம் கிடைத்தது.
சுலோவாக்கியாவின் சார்பாகக் களமிறங்கிய மிரேஜ் என்ற வீரர் நிர்ணயிக்கப்பட்ட தூரத்தை 3 மணித்தியாலயம், 40 நிமிடங்கள், 58 செக்கன்களில் அடைந்து தங்கப் பதக்கத்தை வென்றார்.
ஆஸ்திரேலிய வீரர் ஜெரிட் ரலெண்ட் 3 மணித்தியாலயம், 41 நிமிடங்கள், 16 செக்கன்களில் அடைந்து வெள்ளிப் பதக்கத்தையும், ஜப்பான் வீரர் ஹிரோக்கி ஆராய் 3 மணித்தியாலயம், 41 நிமிடங்கள், 24 செக்கன்களில் அடைந்து வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர். (ம)




# ஹற்றிக்கில் ஹற்றிக் படைத்தார் ஜமைக்க புயல் உசைன் போல்ட்

ஓர் ஒலிம்பிக் தொடரில் மூன்று தங்கப் பதக்கங்கள் என தொடர்ச்சியாக மூன்று ஒலிம்பிக் தொடர்களில் கைப்பற்றிச் சாதனை படைத்துள்ளார் உசைன் போல்ட்.
ரியோ ஒலிம்பிக் தொடரில் 100 மீற்றர், 200 மீற்றர் ஓட்டப்போட்டியில் போல்ட் தங்கம் வென்றிருந்தார். நேற்று நடைபெற்ற ஆண்களுக்கான 4 வீரர்கள் பங்குபற்றும் 100 மீற்றர் அஞ்சலோட்டத்தில் 37 செக்கன்கள் 27 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து ஜமைக்கா தங்கம் வென்றது. இந்த அணியில் போல்ட்டும் இடம்பெற்றிருந்தார். அவருக்கு இது மூன்றாவது தங்கப் பதக்கமாகும். எனவே ஓர் ஒலிம்பிக் தொடரில் மூன்று தங்கப் பதக்கங்களாகக் கடந்த மூன்று ஒலிம்பிக் தொடரில் வெற்றிபெற்ற முதல் குறுந்தூர ஓட்டப் பந்தய வீரர் என்ற சாதனையை போல்ட் நிலை நாட்டியுள்ளார். முன்னதாக 2008ஆம் ஆண்டு நடைபெற்ற பீஜிங் ஒலிம்பிக் தொடரிலும், 2012 ஆம் ஆண்டு நடைபெற்ற லண்டன் ஒலிம்பிக் தொடரிலும் போல்ட் ஹற்றிக் பதக்கங்களை வென்றமை குறிப்பிடத்தக்கது.
அஞ்சலோட்டத்தில் அமெரிக்கா இரண்டாவதாக வரும் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும், அந்த அணிக்கு மூன்றாவது இடமே கிடைத்தது. இரண்டாம் இடத்தை ஜப்பான் தனதாக்கியது. (ம)

# பெண்களுக்கான நீர்ப்பந்துப் போட்டி இலகுவாக தங்கம் வென்றது அமெ.



ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற பெண்கள் பிரிவு நீர்ப் பந்துப்போட்டியில் அமெரிக்காவுக்குத் தங்கப் பதக்கம் கிடைத்தது.
நேற்று அதிகாலை நடைபெற்ற இறுதிப்போட்டியில் அமெரிக்காவை எதிர்த்து இத்தாலி மோதியது. இதில் 12:5 என்ற கோல் கணக்கில் அமெரிக்கா தங்கப் பதக்கம் வென்றது. இத்தாலிக்கு வெள்ளிப் பதக்கம் கிடைத்தது. வெண்கலப் பதக்கத்துக்கான ஆட்டத்தில் ரஷ்யாவை எதிர்த்து ஹங்கேரி மோதியது. இதில் 19:18 என்ற கோல்களின் அடிப்படையில் வெண்கலத்தைக் கைப்பற்றியது ஹங்கேரி. (ம)

# பெண்களுக்கான வேகநடை தங்கத்தை வென்றது சீனா



ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற பெண்களுக்கான 20 கிலோமீற்றர் வேகநடைப்போட்டியில் சீனா தங்கப் பதக்கத்தை வென்றது.
சீன வீராங்கனை லியு ஹறாங் ஒரு மணித்தியாலம், 28 நிமிடங்கள் 35 செக்கன்களில் இலக்கை அடைந்து தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார். மெக்சிக்கோ வீராங்கனை [illegible]ரியா ஒரு மணித்தியாலம், 28 நிமிடங்கள், 3[illegible] செக்கன்களில் இலக்கை அடைந்து வெள்ளிப் பதக்கத்தையும், சீனாவின் பிறிதொரு வீராங்கனை [illegible] கியூக்ஸி ஒரு மணித்தியாலம், 28 நிமிடங்கள் 4[illegible] செக்கன்களில் இலக்கை அடைந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம)

# பிரான்ஸ் – பிரிட்டன் தங்கத்துக்கு மோதல்

ரியோ ஒலிம்பிக் தொடரில் ஆண்களுக்கான குத்துச் சண்டைப் போட்டியில் (91 கிலோ) பிரான்ஸின் வீரர் ரொனி ஜோகா, பிரிட்டன் வீரர் ஜொய்ஸ் இருவரும் இன்று தங்கப் பதக்கத்துக்காக மோதுகின்றனர்.
பிரான்ஸின் வீரர் ரொனி ஜோகா தனது அரையிறுதியில் குரோசியாவின் பிலிப்பை வீழ்த்தினார்.



பிரிட்டன் வீரர் ஜொய்ஸ் தனது அரையிறுதியில் கஜகஸ்தானின் இவானை வீழ்த்தினார்.
அரையிறுதியில் தோல்வியடைந்த இருவருக்கும் வெண்கலப் பதக்கம் வழங்கப்பட்ட நிலையில் தங்கப்பதக்கத்துக்கான போட்டி இலங்கை நேரப்படி இன்று இரவு 11.45 மணிக்கு நடைபெறவுள்ளது. (ம)

# பெண்கள் கால்பந்தாட்டத்தில் ஜேர்மனிக்குத் தங்கப்பதக்கம்

ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற பெண்கள் பிரிவு கால்பந்தாட்டத்தில் ஜேர்மனி தங்கப் பதக்கம் வென்றது.
இறுதியாட்டத்தில் ஜேர்மனியை எதிர்த்து சுவீடன் மோதியது. ஆட்டத்தில் 30 ஆவது நிமிடத்தில் ஜேர்மனின் முதல் கோலைப் பதிவு செய்தார் போப். 1:0 என்ற ஜேர்மனியின் ஆதிக்கத்துடன் முதல் பாதி முடிந்தது. இரண்டாம் பாதியின் ஆரம்பத்தில் பதிலடி கொடுத்தது சுவீடன். இருப்பினும் இரண்டாம் பாதியின் 24 ஆவது நிமிடத்தில் இரண்டாவது கோலைப் பதிவு செய்த ஜேர்மனி முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று தங்கப் பதக்கம் வென்றது.
சுவீடனுக்கு வெள்ளிப் பதக்கம் கிடைத்தது. வெண்கலப் பதக்கத்துக்கான ஆட்டத்தில் பிரேஸிலை எதிர்த்து கனடா மோதியது. 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்ற கனடா வெண்கலத்தைக் கொண்டுசென்றது. (ம)



## வேலைவாய்ப்பு

கொழும்பில் இயங்கிவரும் தனியார் நிறுவனமொன்றிற்கு அலுமினிய பிற்றிங், வெல்டிங்வேலை தெரிந்த வேலையாள்களும் உதவியாளர்களும் உடனடியாகத் தேவை. சம்பளம் 45000 - 70000 வரை தங்குமிடவசதி, சாப்பாடு ஒழுங்கு செய்து தரப்படும்.

**077 706 5127** (c 25260) (14.17.18)

நல்லூர் திருவிழாவை முன்னிட்டு
வின்ரிச் இன் விசேட விலைக்கழிவு !!




தமிழில் தொடர்பு கொள்ள : **0773918870**
WINRICH INTERNATIONAL(PVT)LTD No.18,Ground Floor,Lucky Plaza,St.Anthony's Mawatha, Kollupitya,Colombo - 03

# சர்ரேக்காக சங்கா சதம்
# ஓய்வின் பின்பும் அதிரடி



இங்கிலாந்தின் கழக அணிகளுக்கு இடையில் நடைபெற்றுவரும் றோயல் லண்டன் கிண்ணத்துக்கான ஒருநாள் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டமொன்றில் சர்ரேக்காக விளையாடிவரும் சங்கா சதம் விளாசினார்.

நோதாம்ரன்செயர் அணிக்கெதிராக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் சங்காவின் சதம் கைகொடுக்க சர்ரே நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப்பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 279 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சங்கா 130 ஓட்டங்களையும், றோய் 42 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் நோதாம்ரன்செயர் அணியின் சார்பில் வைட், ஹொப் இருவரும் தலா இரு இலக்குகளையும் கெல்வின், ஜெல்சன், அசருல்லா மூவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய நோதாம்ரன்செயர் அணி சகல இலக்குகளையும் இழந்து 276 ஓட்டங்களைப் பெற்றதையடுத்து 3 ஓட்டங்களால் வென்றது சர்ரே. பந்துவீச்சில் சர்ரேயின் சார்பில் டரின்பேர்ச் 4 இலக்குகளையும், கெளரன், மேக்கர் இருவரும் தலா இரு இலக்குகளையும், பேர்கி ஓர் இலக்கையும் வீழ்த்தினர். ஆட்டநாயகனாக சங்கா தெரிவானார். (ம)

## நியூசியின் பந்துவீச்சு வரிசைக்கு பதிலடி கொடுக்கிறார் ஸ்ரெய்ன்

தென்னாபிரிக்கா - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் ஆட்டத்தில் இரு அணிகளதும் பந்துவீச்சாளர்கள் ஆதிக்கம் செலுத்துகிறார்கள்.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்கா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து முதல் நாள் முடிவில் 236-8 என்ற நிலையில் இருந்தது. ரபாடா 14 ஓட்டங்களுடனும் ஸ்ரெய்ன் 2 ஓட்டங்களுடனும் இரண்டாம் நாளுக்காகக் களமிறங்கினர். ஸ்ரெய்னால் மேலதிகமாக ஓர் ஓட்டத்தைத்தானும் பெற முடியவில்லை. போல்ட் செய்தார் சவுத்தி. பியட்டின் ஆட்டம் போல்டால் முடிவுக்கு வர 263 ஓட்டங்களில் சுருண்டது தென்னாபிரிக்கா.

பந்துவீச்சில் நியூசிலாந்தின் சார்பில் வாக்நெர், போல்ட் இருவரும் தலா மூன்று இலக்குகளையும், சான்நெர் இரு இலக்குகளையும், சவுத்தி, பிரேஸ்வெல் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய நியூசிலாந்தின் ஆரம்ப இணையை தகர்த்தெறிந்தார் ஸ்ரெய்ன். 15 ஓட்டங்களுக்கு நியூசிலாந்தின் ஆரம்ப இணை சுருண்டது. மழையின் ஆதிக்கம் குறுக்கிட நாளும் முடிவு கண்டது. (ம)




அயர்லாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரை 1:0 என்ற கணக்கில் கைப்பற்றியது பாகிஸ்தான்.

பாகிஸ்தான் - அயர்லாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ஒருநாள் ஆட்டம் நேற்று நடைபெறுவதாகத் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் மழை காரணமாக ஒருபந்துகூட வீசப்படாத நிலையில் ஆட்டம் கைவிடப்பட்டது. இதனால் முதலாவது ஆட்டத்தை வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி 1:0 என்ற கணக்கில் தொடரையும் வென்றது. முதலாவது ஆட்டத்தில் ஆட்டநாயகனாகத் தெரிவான சர்ஜீல் கான் தொடராட்ட நாயகனாகவும் தெரிவானார். (ம)

## வேலைவாய்ப்பு

சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட எமது DMI (PVT) Ltd ஆனது தனது புதிய கிளைகளை மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய பகுதிகளில் ஆரம்பிக்கவுள்ளது.
அந் நிறுவனத்திற்கான பதவி வெற்றிடங்களாக.

*அலுவலகர்
*மேற்பார்வையாளர்
*உதவி முகாமையாளர்
*முகாமையாளர்

எனும் வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படவுள்ளன.

தகைமை - O/L, A/L, மேல் கல்வி கற்றவர்கள்
குறிப்பு - தங்குமிடம், உணவு வசதிகள் உண்டு.
தொடர்பு - 077 077 1377, 077 2986763, 076 8643505

## எதற்கும் தயாராகவிருந்தேன்; கரோலின் மரின் தெரிவித்தார்

ரியோ ஒலிம்பிக் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவு பூப்பந்தாட்டத்தில் இந்தியாவின் சிந்துவை வீழ்த்தி தங்கம் வென்ற கரோலின் மரின், தான் அனைத்து விதமான சவால்களுக்கும் தயாராக இருந்ததாகத் தெரிவித்தார்.

இறுதிப்போட்டியில் சிந்து மிகப்பெரும் போராட்டத்தை வெளிப்படுத்துவார் என்பதை நன்கு அறிவேன். அவர் பெரும் சவால் தந்தார். குறிப்பாக இறகை களத்தின் முனைகளுக்கே திருப்பிக் கொண்டிருந்தார். மத்திய பகுதிக்கு இறகு வந்தால் என்னால் இலகுவாக புள்ளிகளைப் பெறமுடியும் என்பதை அவர் நன்றாக அறிந்து வைத்திருந்தார். ஆனால் ஒலிம்பிக் இறுதிப்போட்டியென்பது சிறிய விடயமல்ல. எனவே சகல விதமான சவால்களுக்கும் தயாராகவே வந்தேன் என மரின் மேலும் தெரிவித்தார். (ம)

## Job Oppertunities IN Green Grass Hotel & The Valampuri

**We invite applications from the interested candidates for the following positions**

1. Front Office Manager
2. Receptionist
3. Housekeeping staff (Room & Public area)
4. Maintenance Staff (A/C Technician, Plumber)
5. Cooks
6. Kitchen helpers
7. Security Officer

+ Interested applicants may send your CV to hrgreengrass@gmail.com before 31st august 2016

Green Grass Hotel & Restaurant (PVT) Ltd.
NO 33, Aseervatham Lane, Hospital Road, Jaffna




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.08.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.